FORMULA HONDA
உங்களுக்கான வாகனத்தை தேர்வு செய்ய...
ATHEESAN (SHAN) SARVANANTHAN
CELL 416-720-1184
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4.
TEL: 416-754-455 EXT.2705, FAX: 416-754-9465

தாய் வீடு
THAIVEEDU ஜுலை 2010 HOME & LIVING

FREE REAL ESTATE CLASSES
வீடு வாங்க, விற்க மற்றும் வருமான வரி, அடமானக் கடன் சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
SELVA VETTYVEL
Broker of Record
Cell: 416.568.4301
Bus: 905.201.9977
HomeLife Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
"Independently Owned and Operated, REALTOR®"



# வரமா? சாபமா? HST

## தமிழ் விக்கிப்பீடியா: தமிழால் இணைவோம்

## G20, G8 மாநாடுகள்

படம்: கருணா

RAMAN APPLIANCES
Air Conditioning & Heating
எமக்கூடாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
General Contractors For:
• Air Conditioning • Gas Furnaces • Central Vacuum
• Air Cleaners • Gas Fireplaces • Garage Door Openers
• Security Alarm
Tel: 416.332.1989
Cell: 647.893.4414
Raman Chelliah
President
3021 Markham Rd., Unit 51,
Scarborough, ON - M1X 1L8

THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
Dir: 416.948.0693
Bus: 416.291.3000

வீடு வியாபார நிலையம் வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage
Kunasegar Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

PMCI PROPERTY MORTGAGE CANADA INC.
Buying - Selling - Investing
PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300

Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated

இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலத்திற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002


"MAKING YOUR DREAM HOME COME TRUE"
HOMELIFE
HIGHER STANDARDS
மனம் விரும்பியது போல் வீடு வாங்க, விற்க அழையுங்கள்"
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated
31 Progress Avenue Suite 210 • Toronto, Ontario, M1P 4S6
Phone: 416-298-3200 Fax: 416-298-3440
Vasanthy Niranjan
Direct:416-845-8272
Broker
vasanthyne@gmail.com
Kirew Kanagasabai
Office:416-298-3200
Broker of Record
Kirewk@yahoo.com
Warden/Finch
$173,999
3 Bedrooms, 2 Washroom
Largest 3 Br Unit! *Clean *Move-In Condition *Large Walk-Out Balcony *Bright & Spacious *2-Pc Ensuite In Mbr
Meadowvale/Sheppard
$254,000
6+1 Bedrooms, 3+1 Washroom
3 Bedroom Townhouse.Built In 1999.Walk Out To Garage. *Private Drive*.Central Air Conditioner,Lovely Location.
Markham/Denison
$329,900
3+1 Bedrooms, 2 Washrooms
Laminated Flooring ,Cabinets,Den Incl -1 Locker, 2 Parking Spaces Ttc At Doorstep, Shopping & 5 Major Banks & Costco
Mccowan/Denison
$344,900
6+1 Bedrooms, 3+1 Washroom
Great Starter Home! Pre-Inspected! Bright Detached-Link Home With Newer Windows, Newer Roof(04) & Furnace(06).
Middlefield / Steeles
$359,000
3 +1 Bedrooms, 3 Washrooms,
Beautiful Home For 1st Time Buyers. Backs To Public ,Catholic School & Muirlands Park.Close To 410, 407, 404.
Brimley/Steeles
$519,000
4+2 Bedrooms, 4 Washrooms
Spent Alot Of $$$ In Upgrades, Beautiful Home For A 1st Time Buyer. Driveway (2008), 3Brand New Washrooms, 2 New Kitchen.
* 5% Down, 2.10%(Variable) Interest 35 years Amortization
www.Homelifetoday.com
Thinking of a career change?
Or just starting out in Real Estate?
HomeLife Today Realty Ltd., Brokerage* Wants to Talk to YOU
Contact: Kirew Kanagasabai - Broker of Record Tel: 416-298-3200 E: kirewk@yahoo.com
Middlefield/Denison
$439,000
4+2 Bedrooms, 4 Washroom
Absolutely Well Maintained Detached House, Recently Renov Kitchen & Main Floor. Walk To Schools, SS Ice Maker Fridge.


SunCity
SUNCITY PLAZA
2761 MARKHAM RD
FREE
*FREE UPGRADES UP TO $10,000
*WIN FREE MAINTENANCE FEE FOR A YEAR.
*WIN 2 FREE VACATION TO THE DOMINICAN REPUBLIC
* EVENT AT PRINCESS BANQUET HALL JULY-10,11- 10:30 AM 2:30
BUSINESS USES
*ART OR PHOTO STUDIO
*BAKERY
*TRADE SCHOOL / TUITION CENTER
*CAR RENTAL AND LEASING
*ELECTRONICS OUTLET
*GROCERY STORE
*DENTAL OFFICE
*DRY CLEANING
*FINANCIAL INSTITUTION
*MACHINERY SALES AND SERVICES
*MEDICAL OFFICE
*PERSONAL SERVICE SHOPS
*RESTAURANTS
*REPAIR AND SERVICE OF BUSINESS
*EQUIPMENT
*REHABILITATION CENTRE
*PRINTING / COPY SHOPS
*TRAVEL AGENCY
*SPECIALITY SUPPLIES
*SALOON/SPA
*AND MUCH MORE
SIGNAGE
SIGN
CONTACT : KIREW KANAGASABAI
416 903 4663
KIREWK@YAHOO.COM
*PRE CONSTRUCTION SALE
*SOLD MORE THAN 50%
*OCCUPANCY (READY TO MOVE JAN, 2011)

## வலுவளரினரும் நாமும்

அண்மையில் வலுவளர் அமைப்பின் வருடாந்த நிகழ்வு நடைபெற்றது. உடல் - உள நலம், புலன் குறைபாடு உடையவர்கள் எனப் பல்வேறுபட்ட வலுவளர் சவால்களை எதிர்கொள்பவர்களின் நிகழ்வு அது. தமிழ் மாற்றுத்திறனாளிகள் தம்மாலும் சாதிக்க-முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியிருந்தனர்.

முதலாம் உலக நாடுகளில் ஒன்றான கனடாவில் இலட்சக்கணக்கானோர் உடல், உளக் குறைபாடுகளுடன் உள்ளனர். இவர்களிற் பலருக்கு போதுமான அளவு வசதிகள், பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

உடல் மற்றும் உள நலக் குறைபாடுடையவர்கள் ஏனையவர்களால் துர்பிரயோகம் செய்யப்படுகின்றனர். இது ஏனையவர்கள் துர்பிரயோகம் செய்யப்படுவதை விட ஐந்து மடங்கு அதிகமாக கனடாவில் உள்ளது. இவர்களில் பலர் நன்கு தெரிந்த மற்றும் அன்றாடம் பழகுபவர்களாலேயே அதிகம் துர்ப்பிரயோகத்திற்கு ஆளாகின்றார்கள்.

இதுதான் இன்று நாம் வாழும் கனடா போன்ற முதலாம் உலக நாடுகளில் உள்ள நிலை.

இதேவேளை, சில தமிழர் குடும்பங்களில் தமது குழந்தைகள் உடல் ரீதியாக, அல்லது உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதை வெளியில் தெரிவிக்கத் தயங்குகின்றனர். இதற்கு இதுபோன்ற துர்ப்பிரயோகங்களே காரணமாக அமைகின்றன. இதனால் தமது குழந்தை உரிய முறையிலான சிகிச்சை, ஆலோசனை மற்றும் கல்வி வாய்ப்பைப் பெற்று வாழ்-வதற்குத் தடையாக பெற்றோர்கள் உள்ளனர்.

இந்த நேரத்தில் ஈழத்தில் கொடிய போரால் பாதிக்கப்பட்டு உடல் அவயவங்களையும் செவி, விழிப்புலன்களையும் இழந்த பல ஆயிரக்கணக்கானவர்களை நாம் நினைவு கொள்ளவேண்டும்.

ஒரு மூன்றாம் உலக நாடான இலங்கையில், அதிலும் திட்டமிட்ட இனஒழிப்பு அரசின் கீழ் இவர்கள் உள்ளனர். இவர்களுக்கு நாம் என்ன வகையில் உதவப்போகின்றோம்?

இயற்கையாலும் கொடிய போரால் செயற்கையாகவும் பாதிக்கப்பட்டு, வாழ்வதற்காகப் போராடுகின்ற இந்த 25,000ற்கு மேற்பட்ட, வடகிழக்கில் வாழும் எம்மின உறவுகளை நெஞ்சில் சுமந்து செல்வோம். அவர்களின் நல்வாழ்விற்காக இயன்றவரையில் நாமும் பங்கேற்போம்.

III

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

**அட்டைப் படம்**
**வட யோக் பகுதியில் உள்ள R.P Supermarketஇல் சந்திரகிரி உதயஇந்துவிடமிருந்து பொருட்கள் கொள்வனவு செய்யும் தயாபரன் உதயசந்திரிகா, தயாபரன் சௌமியா, தயாபரன் சாகித்தியா ஆகியோர்.**
படம்: கருணா


| | | |
|---|---|---|
| **Publisher & Editor** | : | **P.J. Dilipkumar** |
| பதிப்பாளர், ஆசிரியர் | : | பி.ஜே. டிலிப்குமார் |
| ஆலோசகர் குழு | : | ஞானம் லம்பேட், கருணா, சுந்தர் சின்னத்தம்பி, பொன்னையா விவேகானந்தன், கந்தசாமி கங்காதரன். |
| ஓவியங்கள் | : | ரமணி (இலங்கை), K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து), கருணா (கனடா), சிவாஜினி பாலராஜன் (கனடா). |
| புகைப்படங்கள் | : | கணா ஆறுமுகம், கருணா. |
| தட்டச்சு | : | கௌரி, கௌசலா, ஜீவா, பிரியதர்சினி, மஞ்சுளா ராஜலிங்கம், சாம் டானியல், பிரணவன். |
| ஒப்புநோக்கல் | : | சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி. மஞ்சுளா ராஜலிங்கம். |
| வரைகலை ஆலோசனை | : | கருணா (டிஜி வரைகலை அமையம்) |
| அஞ்சல் முகவரி | : | **Editor P.O.Box #63581 Woodside Square 1571 Sandhurst Cir. Toronto, ON. M1V 1V0** |
| ரொறன்ரோ விநியோகம் | : | கிளி (சிவராஜா) |
| மொன்றியால் தொடர்புகள் | : | சுகுமாரன் சின்னையா **1-514-299-3186** |
| ஒட்டாவா தொடர்புகள் | : | அலெக்ஸ் சிவசம்பு **1-613 -276-7253** |
| **Tel** | : | **416-646-3422, 416-857-6406** |
| **Fax** | : | **416-849-0594** |
| **Web** | : | **www.thaiveedu.com** |
| **E-mail** | : | **info@thaiveedu.com** |


# HST - வரமா? சாபமா?



கருணா கோபாலபிள்ளை

கனடிய அரசினால் ஜுலை 1 முதல் அறிமுகப்படுத்தப்படும் HST (Harmonised Sales Tax) வரியானது பொருட்கள், சேவைகள் வரி மற்றும் மாகாண விற்பனை வரி ஆகிய இருவேறு வரிகள் ஒருமயமாக்கப்பட்டதன் விளைவே.





### வீடும் விடுதலையும்
- செந்தூரன் புனிதவேல்

நீங்கள் விடுமுறைக்கு வீட்டைவிட்டு செல்லுமுன், உங்கள் வீட்டைக் கண்காணிப்பதற்கு தகுதியான ஒருவரை ஏற்பாடு செய்யுங்கள்.




### முதுமையின் அழகு
- புஷ்பா கனகரட்ணம்

முதுமையில் வலிமை, உடல் நோய்கள் சார்ந்த காரணிகளில் தங்கிஇருப்பதைவிட மனவலிமை சார்ந்த காரணிகளில் தான் கூடுதலாக தங்கிஇருக்கிறது. முதுமையின் மகிழ்விற்கும் நிறைவிற்கும் உளநலமே பெரும்பங்கை வகிக்கிறது.




### தமிழ் விக்கிப்பீடியா...
- இ. நற்கீரன்

தமிழ் விக்கிப்பீடியாவின் தமிழ், பண்பாடு, வரலாறு, அறிவியல், தொழில்நுட்பம், கணிதம், புவியியல், சமூகம், நபர்கள் ஆகிய முதன்மைப் பகுப்புகளும் சில துணைப் பகுப்புகளும் அமைந்திருக்கின்றன. யாரும் தமக்குத் தெரிந்த விடயத்தை கட்டுரையாகச் சேர்க்கலாம்.




### G 20, G 8 மாநாடுகள்
- குரு அரவிந்தன்

சர்வதேசப் பொருளாதார நிலைபற்றியும், உலகப் பொருளாதாரச் சந்தைபற்றியும் அதன் சாதக, பாதகங்கள் பற்றியும் ஆராய்வதே இவ் அமைப்புக்களின் முக்கியமான நிகழ்ச்சியாக இருக்கின்றது.


| | |
|---|---|
| **இலங்கையின் குடியேற்றவாத சிந்தனைகளில் மாற்றம்...** அ. கணபதிப்பிள்ளை | 04 |
| **புதிய வீடுகள்** வேலா சுப்ரமணியம் | 07 |
| **உடலில் ஏறிய மென் நஞ்சுகள் (Toxins in the Body)** கந்தையா செந்தில்நாதன் | 09 |
| **'வெள்ளை' என்றால் அழகுராணி... வேறு என்றால்...** கந்தசாமி கங்காதரன் | 11 |
| **சாதாரண விடயம் பெரிது படுத்த வேண்டியதில்லை...** சிவாஜினி பாலராஜன் | 13 |
| **நான்கு மணிப் பூ** செல்லையா சந்திரசேகரி | 14 |
| **தம்பதியரின் உறவில் பரஸ்பர பொறுப்பு** கந்தையா பரநிருபசிங்கம் | 28 |
| **கோடை கால முதலீட்டு ஆலோசனைகள்** மாறன் செல்லையா | 31 |
| **சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரம்** சிவ பஞ்சலிங்கம் | 32 |
| **உங்கள் வெற்றி உங்கள் கையில்** சொக்கலிங்கம் பிரபாகரன் | 42 |
| **வேலை செய்யும் இடங்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்** என். மிலான் | 63 |
| **எம்மிடையே வாழ்ந்த... திறனாய்வாளர் நோத்றொப் ஃப்றை** என்.கே. மகாலிங்கம் | 73 |
| **அந்த மரத்தில் என்பார்** கே. எஸ். பாலச்சந்திரன் | 86 |
| **கைவிடப்பட்ட கப்பல் வழக்கு** தேவகாந்தன் | 91 |
| **ஆச்சரியம்** அ. முத்துலிங்கம் | 95 |
| **ஆயுட் காப்புறுதி...** சிறீதரன் துரைராஜா | 102 |


மேலும் ஆக்க விபரங்கள் 5ம் பக்கம்

# இலங்கையின் குடியேற்றவாத சிந்தனைகளில் மாற்றம் வருமா?

- அ. கணபதிப்பிள்ளை -

கண்டுபிடிப்புகளும் நிலத்தேட்டங்களும் ஐரோப்பாவில் செல்வாக்குச் செலுத்தியதன் விளைவாக ஐரோப்பியர்களே நாகரிகத்தினை அறிமுகப்படுத்தினார்கள். ஐரோப்பியர்களே நாடுகளைக் கண்டுபிடித்தார்கள். அவர்களே புதிய நிலங்களைத் தேடிக்கண்டுபிடித்தார்கள் என்ற கருத்தானது புத்தகங்களிலும் அன்றாடப் பேச்சு வழக்குகளிலும் இடம் பெறுவதைக் காணுகிறோம். அமெரிக்காவைக் கண்டுபிடித்தவர் யார் என்று கேட்கப்படும் பொழுது கொலம்பஸ்தான் என்று அடித்துச் செல்லுவதை இன்னமும் ஒருவரும் தவறென்று சொல்லவில்லை. ஐரோப்பியர்கள் தங்கள் வரலாற்று நூல்களூடாகத் தங்களுடைய மக்களுக்குத் தெரிவித்திருந்த செய்திதான் அது. அமெரிக்கா என்றதொரு தேசம் அதில் சென்று வாழலாம் என்பதை அரசியல் இயந்திரத்தினூடாகச் சொல்லியது தான் இந்தக் கொலம்பஸ். கொலம்பஸ்க்கு முன்பாக எத்தனையோ கடலோடிகள் ஐரோப்பாவிலிருந்தும் சின்னாசியாவிலிருந்தும் அமெரிக்கா சென்றும் அங்கு குடியேறியும் இருந்திருந்தார்களாயினும் அவர்கள் தங்கள் செயலை அரசியல்மயப்படுத்தவில்லை என்பதனால் அவர்களின் கூற்றும் செயலும் வரலாற்றில் முன்னிலைப் படுத்தப் படவில்லை.

இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியலாதிக்கம் கண்டுபிடிப்புக்கும் நிலத்தேட்டத்துக்கும் வழிவகுத்திருந்ததனை எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். அசோகச் சக்கரவர்த்தியும் சோழ மன்னர்களும் தங்களது அதிகார எல்லையினை விருத்தி செய்திருந்தார்கள். அவர்களது முயற்சி பழைய உலகம் முழுவதனையும் ஆக்கிரமித்திருந்தாலும் அது மதம் சார்பானதாக இருந்தமையாலும் மக்களின் மனதில் இடம் பிடிப்பதன்றி பொருளாதாரத்தைச் சுரண்டித் தாய் நாட்டை வளம்படுத்தும் குடியேற்றவாத சிந்தனை அவர்களிடம் இடம் பெறாதிருந்தமையினாலும் அத்தகைய கண்டு பிடிப்புக்களும் நிலத்தோட்டங்களும் உள்ளூர்க் கல்வியாளர்களூடாக குடியேற்றம் என்ற கருத்துடன் மக்களைச் சென்றடையவில்லை.

அராபியர்கள் அரசியல் எழுச்சி பெற்றிருந்த காலகட்டத்தில் அவர்களின் அடிப்படை நோக்கம் வியாபாரமாக இருந்தது. வியாபாரத்தினூடாக வர்த்தக ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்துவதிலும் தாங்கள் சென்ற பகுதிகளில் இஸ்லாமிய மதத்தினை அறிமுகப்படுத்துவதிலும் கவனம் செலுத்தியிருந்தார்கள். இவை ஏற்கனவே அந்த மதத்தில் பற்றுள்ளோர்களின் வாரிசுகளைத் தோற்றுவித்ததுவேயன்றி அரசியலில் குடியேற்றவாதம் என்ற கருத்தை முன் நிறுத்திவைக்கவில்லை. வர்த்தக ஏகாதிபத்தியம் என்ற கருத்தினை முன்வைத்த அராபியர்கள் வர்த்தகத்தையும் குடியேற்ற வாதத்தினையும் இணைக்கவில்லை. ஐரோப்பிய வர்த்தகர்கள் வர்த்தக ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்துவதனையும் அதனை நிலை நிறுத்துவதிலும் தமது நோக்கத்தினை முன் நிறுத்தியிருந்தமையினால் வர்த்தகத்துடன் தமது அரசியலாதிக்கத்தையும் பெரிய அளவில் பிரயோகித்தமையைக் காணமுடிகிறது. இதுவே பண்டைக்கால இந்தியக் குடியேற்றவாதத்திலிருந்து வேறுபட்டமைந்திருந்தது. இந்தியக் குடியேற்றவாதம் மதத்துக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்ததனால் அரசியலாதிக்கம் தாய் நாட்டின் தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக அமைந்திருக்கவில்லை. ஐரோப்பியக் குடியேற்ற வாதம் நிர்வாகத்தேவைக்காக மதத்தை ஆயுதமாகப் பயன்படுத்தியது.

பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தொடங்கிவைக்கப்பட்ட கண்டுபிடிப்புக்களும் அதனைத் தொடர்ந்த ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கப்போட்டிகளும் தங்களுக்குள் ஆசிய ஆபிரிக்க அமெரிக்க நாடுகளைக் கூறுபோட்டு அதிகாரம் செலுத்தும் வகையில் தொடர்ந்திருந்தன. ஆரம்பங்களில் போரும் ஒப்பந்தங்களும் கண்டுப்பிடித்த நாடுகளின் கைமாறுதலுக்கு வழிவகுத்தன. ஆயினும் உள்ளூர்ச் சுதந்திர இயக்கங்களின் செயற்பாடுகளின் விளைவாகக் கண்டுபிடிக்கப்பட்ட நாடுகள் திறைசேகரிக்கும் நாடுகள் என்ற பதத்துக்கு உட்படுத்தும் குடியேற்ற நாடுகளாக மாற்றம் செய்யப்பட்டன. கண்டுபிடித்த நாடுகளிலுள்ளவர்கள் தங்களது குடிமக்கள்தான் என்பதாக இக் குடியேற்றநாடுகள் என்ற சொற்பதம் அமைந்திருந்தது.

> “ வடக்குக் கிழக்குப் பகுதிகளின் பொருளாதார வளங்கள் சிங்களவர்களுக்கு உதவக் கூடும் அதனூடாக, சிங்களக் கலாசாரம் தமிழர்களின் கலாசாரத்துக்கு வலுச்சேர்க்கும் என்ற போக்கானது இலங்கை அரசினால் முன்வைக்கப்படுகின்றது. ”


குடியேற்ற நாடுகளின் அரசியலில் உருவாக்கப்பட்ட சட்டங்கள் ஆதிக்கம்செலுத்தும் சொந்த நாட்டின் சட்டத்தினைப் பிரதிபலித்திருந்தாலும் அச்சட்டங்களைக் குடியேற்ற நாடுகளின் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்துவதற்காகவென மாற்றியமைக்கும் நிலைமையினைப் பின்பற்றியிருந்த தன்மையினையும் காணமுடிந்தது. குடியேற்ற நாட்டுச்சட்டங்கள் மிகவும் கடுமையாக விருந்தனால் மேன்முறையீடு தாய் நாட்டின் தலைவரின் கையில் விடப்பட்டிருந்தது.

19ம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டிலும் குடியேற்ற நாடுகளில் அரசியல் சுதந்திரத்தினை அனுபவித்த அறிவு ஜீவிகளின் அனுசரணையுடன் எழுச்சிபெற்ற சுதந்திர உணர்வுகள் ஐரோப்பிய குடியேற்ற வாதத்துக்கு முற்றுப்புள்ளிவைக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளியது. இந்தக் குடியேற்ற வாதச் சிதந்தனைக்கான முற்றுப்புள்ளியானது அறிவு ஜீவிகளின் போராட்டம் அல்லது ஐரோப்பிய நாடுகளிடையே எழுச்சி பெற்று வந்து கொண்டிருந்த புதிய குடியேற்ற வாத சிந்தனைகளையும் அதனை ஒட்டி எழுந்த முதலாம் இரண்டாம் உலக யுத்தங்களின் விளைவாக ஏற்பட்ட மாற்றம் ஆகிய இரு கருத்து வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

வர்த்தக முதலாளித்துவம், வர்த்தக ஏகாதிபத்தியம் குடியேற்ற வாதம், புதிய குடியேற்ற வாதம் என்ற சிந்தனைகள் இதுவரையில் நடந்த பூகோள அரசியல் நடவடிக்கைகளை இனங்காணுவதற்குப் பயன்படுத்தப்பட்டுவந்த கோட்பாடுகளாகக் கொள்ளப்படுவன. அவற்றின் விளக்கமும் அவற்றின் மீதான கருத்தேற்றமும் எந்தளவுக்கு ஆதிக்கச் செயற்பாடுகளூடாக ஒரு இனமானது மற்றோரு இனத்தினை அடக்குவதனையும் ஒரு பிரதேச மக்கள் மற்றைய பிரதேச மக்களுடைய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதிலும் முக்கியம் பெற்றிருந்தாள் என்பதனை விளக்குவதாக அமைந்திருந்தன.

அரசியற் புவியியலில் 19ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதிகளில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் பூகோள அரசியலில் புதிய தொரு அரசியல் வடிவத்துக்கு வழியேற்படுத்திக் கொடுத்திருந்தன. இதில் ஜேர்மனியின் புவியியலாளரும், கலாசாரவியலாளருமான 'பிரடறிக் றட்செல்' என்பவருடைய பங்களிப்பு மிக முக்கியமானது. விலங்கியல் துறையில் பயின்று மானிடவியலில் கலாசாரவியல் துறையிலும் புவியியலில் அரசியல் கலாசாரத்துறைகளிலும் ஆய்வினை மேற்கொண்டு மனித இனத்தின் வரலாறு என்ற வெளியீட்டின் ஊடாக மனித வரலாற்றுத் தடங்களைத் தெளிவுபடுத்தியிருந்தார். அரசியற் புவியியலின் தந்தை என்று அழைக்கப்படும் இவரது அரசியற்புவியியல் என்ற புத்தகம் 1897ல் வெளியிடப் பட்டிருந்தது. இதில் இவர் வெளியிட்டிருந்த அரசியற் புவியியல் கருதுகோள் 'லெபன்ஸ்றும்' என்பதாகும். இது சமூகக் கூர்ப்பியலாளர்களுக்கும் (டார்வின் கொள்கையாளர்களுக்கும்) மேலும் விளக்கம் கொடுப்பதாக இருந்தது.

லெபன் என்பது வாழ்க்கைவாழுதல் என்றும் றூம் என்பது இடப்பரப்பு என்பதாகவும் கொள்ளலாம். இதுவே வாழுவதற்கான இடப் பரப்பு என்ற கருத்துக்கு அரசியலில் அர்த்தம் கொடுத்துக்கொண்டிருந்தது. இதனை 'மேலதிகமான பிரதேசம்' என்றதாக அகராதிகளில் விபரணம் செய்யப்பட்டிருக்கிறது. லெபன்ஸ்றும் என்ற கருத்து உயிரினப்புவியியலிலும் பயன் படுத்தப்பட்டது போல் இதுவே புவிசார் அரசி-




6ம் பக்கம் பார்க்க...

# HST - வரமா? சாபமா?

தாய்வீடு வாசகர்களுக்கு! மீண்டும் இனிய கோடைகாலத்தில் இணைந்து கொள்வதில் மகிழ்ச்சியும் வணக்கமும். மாற்றங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருப்பது இன்றைய சமுதாயம். இருப்பினும் பழைமை விரும்பிகளும் இல்லாமலில்லை. ஆனால் பழையன கழிதலும் புதியன புகுதலும் இன்று மிகவும் இலகுவாகவும் அதேவேளை விரைவாகவும் இடம்பெறுகின்றது. நிலவிவரும் இன்றைய சூழலில் பரிணாம வளர்ச்சி மிகப் பெரும் அளவில் பெருகி வருகின்றது. ஒவ்வொரு பிரிவின் முன்னேற்றங்களும் அதற்கான விதிமுறைகளை மாற்றிவருகின்றது. இதற்கு அரசாங்கமும் அதன் போக்குகளும் விதிவிலக்கல்ல. நாம் வாழ்ந்துவரும் இக் கனடிய மண்ணில் வர்த்தகங்களுக்கான புதிய அத்தியாயம் ஜீலை 1 முதல் ஆரம்பமாகியுள்ளது. அதன் அறிமுகம் தான் “HST” இவ் HST பற்றிய ஓர் விரிவான விளக்கத்தினை அலசுவதே இன்றைய நோக்கம்.

பொருட்கள் மற்றும் சேவைகள் வரி மற்றும் மாகாண விற்பனை வரி ஆகிய இருவேறு வரிகள் ஒருமயமாக்கப்பட்டதன் விளைவே HST (Harmonised Sales Tax) இம்முறையானது முன்னர் நடைமுறையில் இருந்த PST இன் ஓர் மதிப்புக்கூட்டல் முறையாக கருதப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் அனேக பொருளியல் நிபுணர்களின் கருத்துப்படி PST முறையானது மருவிவருவது அவதானிக்க முடிகின்றது.

“சரி! நீ பெரிய மனுசன் மாதிரித்தான் கதைக்கிறாய். ஏழும் நாலும் எவ்வளவு எண்டு சொல்லு பாப்பம்?”

“பதின் மூண்டு”

“கணக்கு பிழைச்சுப்போச்சுது. பதினொண்டு தான் சரி. பதின் மூண்டு என்னெண்டு வரும்???”

*"HST* எல்லாம் போட்டுக் கூட்டிப் பாருங்கோ. கணக்குச் சரியா வரும்.”

.... ???



GST மற்றும் PSTயை போல HSTயும் அரசாங்கத்தை வலுப்பெற முயற்சி செய்யும் ஒரு வரியாகவே விளங்குகின்றது. பொருளியல் நிபுணர்கள் இவ்வரிக்கு வரவேற்பு அளித்தாலும், பல்வேறு ஆய்வுகளால் நடாத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 74% ஒன்ராறியோவை சார்ந்தவர்களும் 82% பிரிட்டிஸ் கொலம்பிய மாகாணத்தை சார்ந்தவர்களும் இதனை விரும்பவில்லை.

> “ ஒன்ராறியோவில் புதிய வீடுகள் வாங்குவதற்கான *HST* வரி அறவிடப்படும். மீள் விற்பனை *(resale)* வீடுகளுக்கான *HST* வரி அறவிடப்படமாட்டாது. ”

ஏற்கனவே 1996இல் அட்லாண்டிக் பகுதியில் நான்கு மாகாணங்களில் மட்டும் மத்திய அரசால் HST 8%ஆக அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் விளைவு 7% மாகாண வரியும் சேர்த்து மொத்தமாக 15% வரியாக ஏப்ரல் 1, 1991இல் அமல்படுத்தப்பட்டது. பின்னர் ஜுலை 1, 2006இல் GST 6% ஆக குறைக்கப்பட்டதால் HST 14% ஆகவும் மறுபடியும் ஜனவரி 1, 2008இல் 5% ஆக குறைக்கப்பட்டதால் HST 13% ஆகவும் காணப்பட்டது. ஏப்பிரல் 6, 2010இல் நோவாஸ்கொசிய மாகாண அரசு HSTஇன் அளவினை 15%ஆக அமல்படுத்தியது.

HST அமலுக்கு வந்த பின்னர் கிழக்கு மாகாணங்களில் நுகர்வோர் பொருட்களின் விலைக் குறைவு கணிசமாகக் காணப்பட்டது. அட்லாண்டிக் கனடாவிலும் இதனை அவதானிக்க முடிந்தது.

### HSTஆல் ஏற்படும் மாற்றங்கள்:

- பிரிட்டிஸ் கொலம்பியாவில் எரிபொருள் மற்றும் எரிவாயுவிற்கு GST ஆனது சேர்த்து காணப்பட்டதனால் HST அறிமுகத்தினால் மாற்றங்கள் இல்லை. மாறாக ஒன்ராறியோவில் எரிபொருள், டீசல் மற்றும் எரிவாயுவிற்காக வரி HSTயால் 5% இலிருந்து 13% ஆக உயர்த்தப்படும்.
- முடிதிருத்தும் சேவை முதல் துப்புரவு தொழில் ஈறாக இதுவரை காலமும் GST மட்டுமே அறவிடப்பட்ட சேவைகளுக்கு கணிசமான வரி உயர்வு காணப்படும். இருப்பினும் ஒன்ராறியோவில் Fast food, செய்தித்தாழ்கள் போன்ற சேவைகள் $4.00 குறைவாக இருப்பின் HST அறவிடப்பட மாட்டாது.
- ஒன்ராறியோவில் புதிதாக வீடு வாங்குவதற்கான HST வரியானது $400,000 உட்பட்ட வீடுகளுக்கு மீளளிப்பு வளங்கப்படும் மேற்பட்ட தொகைகளுக்கான வீடுகளுக்கு HST அறவிடப்படும்.

இவை சார்பான சில உதாரணங்களையும் வீடு மற்றும் ரியல் எஸ்டேட் இல் HSTஇன் பங்கினையும் பின்வரும் பந்திகளில் காண்போம்.

### பிரிட்டிஷ் கொலம்பியா:

உதாரணமாக, $600,000 மதிப்புள்ள ஓர் புதிய வீட்டினை வாங்குபவர் HST இன்படி 600,000 X 12% அதாவது $72,000 மேலதிகமாக செலவிட நேரிடும். இதில் கழிவுத் தொகையாக $20,000 காணப்படுவதால் மொத்த தொகையாக $652,000 செலுத்த நேரிடும். ஆனால் தற்போதய GST 5% படி பார்த்தால் வரித் தொகையானது $30,000ஆக காணப்படுகின்றது.

HST சேர்த்துக் கொள்ளப்பட்ட சேவைகளை சிலவற்றை அவதானிப்போம்:

### வீடு சார்ந்தவை:

- அடிப்படை தேவைகள் (மின்சாரம்/இயற்கைவாயு போன்றவை)
- இணையதள சேவை.
- தோட்டம் அமைத்தல்.
- உலர் சலவை சேவை (Dry cleaning).
- தரைவிரிப்பு சுத்தம் செய்தல்.
- கிறிஸ்துமஸ் மரங்கள்.
- மின்சாரம் மற்றும் plumping சேவைகள்.
- Snow அகற்றும் சேவைகள்.
- துவிச்சக்கர வண்டிகள்.
- வீடு சீர் செய்வது சம்பந்தமான சேவைகள்.
- மோட்டார் வண்டி திருத்துதல் சேவைகள்.
- $400,000க்கு மேற்பட்ட விலையுடைய புதிய வீடுகள்.
- வர்த்தக நிறுவன குத்தகைகள்.



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனை முகவர் -

### பயணம் மற்றும் பொழுது போக்கு அம்சங்கள்:

- விளையாட்டு மற்றும் உல்லாச விடுதி கட்டணங்கள்.
- திரையரங்கு கட்டணங்கள்.
- வாடகை வண்டி கட்டணங்கள்.
- மாநாடுகள் மற்றும் ஆய்வரங்குகள்.
- உல்லாச விடுதிகள்.
- கோடைகால வெளி விடுதிகள் (இரவு).
- உள்நாட்டு விமான சேவைகள்/புகைவண்டி சேவை/பேருந்து சேவை.
- $4.00க்கு குறைவான அனுமதி சீட்டுக்கள் (நீச்சல் குளம், சறுக்கு விளையாட்டு).

### எரிவாயு மற்றும் மளிகை பொருட்கள்:

- எரிவாயு.
- புகையிலை.
- வைட்டமின் பொருட்கள்.
- அஞ்சல் தலை மற்றும் அஞ்சல் சேவை கட்டணம்.

### சேவைகள்:

- கால்நடை மருத்துவ சேவைகள்.
- தனிப்பட்ட சேவைகள் (முடிதிருத்துதல், மசாஜ், சரும நிவாரணிகள்)
- தொழிற்சார் சேவைகள் (வழக்கறிஞர்கள், கணக்காய்வாளர், இணையதள வடிவமைப்பு).
- உறுப்பினர் கட்டணம் (உடற்பயிற்சி நிலையம், குதூகல விடுதி)
- வீடு விற்பனை தரகு கட்டணம்.
- இறுதிச் சடங்குக்கான கட்டணம்.
- மருத்துவர் மற்றும் பல் மருத்துவர் கட்டணம்.
- செய்தித்தாள் மற்றும் பிற ஊடகங்களின் விளம்பரக் கட்டணம்.

### HST விதிவிலக்கு அளிக்கப்பட்ட சேவைகள்:

#### வீடு சார்ந்தவை:

- மறு/மீள் விற்பனை (புதிய வீடுகள் தவிர்த்தது).
- மாநகராட்சி தண்ணீர் கட்டணம்.
- வீடு காப்பீடு தொகை

30ம் பக்கம் பார்க்க...

## வீட்டினுள்ளே இன்னும் வருபவை...


| தலைப்பு | ஆசிரியர் | பக்கம் |
|---|---|---|
| தலைமை தாங்கும் தாய்க்குலம் | ராகுலன் | 19 |
| இருவிழி போற்றி வாழ்வோமாக | சிவவதனி பிரபாகரன் | 20 |
| உங்கள் வீட்டை விற்பது எப்படி | S.K. பாலேஸ் | 24 |
| மருத்துவக் கேள்வி பதில் | இராஜசேகர் ஆத்தியப்பன் | 26 |
| நலம் காப்போம் | லோகினி பிரஷாந்த் | 29 |
| சந்தேகம், பொறாமை, தாழ்வு மனப்பான்மை | மஞ்சுளா ராஜலிங்கம் | 34 |
| ஒன்ராறியோ அரசின் உதவித்தொகை | ஜெறாட் றட்ணராஜா | 36 |
| காப்புறுதியில் ஏற்படும்... | சக்திவேல் | 40 |
| பங்குச் சந்தையில் முதலிடுவது எப்படி | கண்ணன் காங்கேசு | 44 |
| இடைநிறுத்தப்பட்ட EcoEnergy திட்டம் | பிரபா சின்னா | 46 |
| அழகான உதடுகளுக்கு... ஆலோசனை | சசி நரேன் | 49 |
| திட்டமும் தோட்டமும் | அலன் சிவசம்பு | 50 |
| உறவை மறக்கலாமா? | திரு மகேசன் | 55 |
| transmission பாவனை | அதீசன் சர்வானந்தன் | 56 |
| வலுவளர் நிகழ்வு | நளினி கோடீஸ்வரன், யாழ் ரவி | 57 |
| பொய் சொல்லக் கூடாது, பாப்பா! | உதயணன் | 60 |
| “சரிதானே?” | குமார் புனிதவேல் | 66 |
| சேவைத் தரம் (Quality of Service) | பொன் குலேந்திரன் | 71 |
| பண்டிதர் மா. குமாரசுவாமி வாத்தியார் | ஏ.எஸ். மகாலிங்கம் | 75 |
| உருசியின் இரகசியம் | கதிர் துரைசிங்கம் | 76 |
| செம்மொழி (Classical Language) | முருகேசு பாக்கியநாதன் | 77 |
| கிரேக்க நாடகங்கள். சரித்திரச் சுருக்கம் | ஞானம் லேம்பட் | 79 |
| செல்வம் உங்களுக்குத் துன்பத்தை... | சத்குரு வாசுதேவ | 80 |
| கிணற்றடி வேலியில் கொள்ளை கொள்ளையாய் செம்பருத்திப் பூ | பொ. கனகசபாபதி | 83 |
| வனத்தின் வனப்பு | வி. கந்தவனம் | 96 |
| ‘எழுஞாயிறு’ குழந்தை ம. சண்முகலிங்கம் | ப. ஸ்ரீஸ்கந்தன் | 98 |
| ‘நாடகச்செல்வர்’ எஸ்.ரி. அரசு | சேகர் தம்பிராஜா | 101 |

### 4ம் பக்கத் தொடர்ச்சி...

யலுக்கு அத்திவாரத்தினையும் இட்டது. இன்று அரசியற் புவியியல் என்ற கருத்தினை விடப் புவிசார் அரசியல் என்பதுதான் நாடுகளின் அரசியலையும் அவற்றின் அரசியற் செயற்பாடுகளையும் விளக்குவதற்கு உதவுகின்ற கோட்பாட்டுத்துறையாக இருந்து வருகிறது. ஜேர்மனிய பிரித்தானிய அமெரிக்க புவிசார் திட்டத் திறனைய்வாளர்களினாலும் பின்பற்றப் படுவதாயிருந்து வருகிறது. நிலத்தினூடாக கடலுக்கும், கடலூடாக நிலத்துக்கும் கடலூடாக வானுக்கும் ஆதிக்கம் மாற்றப்பட்டதனை விளக்குவதற்கும் இக் கொள்கை பயன்பட்டது.

றட்செல் கூறியதன்படி இந்த ‘வாழுதலுக்கான இடப்பரப்பு’ என்பது அரசியலையோ பொருளாதாரத்தையோ சார்ந்ததாக அமைந்திருக்க வில்லை. வாழிடப் பரப்புக் கருதுகோள் வரலாற்றடிப்படையில் கலாசாரத்தினை நோக்கி மக்களைத் தள்ளுகின்ற விசையாகவே இருப்பதாக றட்செல் கருதினார். அதற்கு ஏற்பதாகத் தமது வாழிடங்களை மக்கள் விருத்தி செய்த தாகவும் கொள்ளப்பட்டது.

றுட்சலின் மாணவரான சுவீடன் நாட்டைச் சேர்ந்த றூடோவ் ஸெலின் அரசினை ஓர் உயிரின வடிவமாகச் சித்தரித்தார். அரசியலில் எல்லைகள் என்ற கருத்து மாற்றப்படக்கூடிய உயிரியற் கருதுகோளின் விளக்கமாகக் கொள்ளப்பட்டது. எல்லைகளென்பது உயிரினத்தின் தேவைநோக்கிய நகர்வில் தற்காலிக நிறுத்தம் என்பதாகக் கொள்ளப்படுகிறது. ஸெலினுடைய கருதுகோளின் ஐந்து அம்சங்களான றூம் அல்லது வாழிடம், இனம், நிலத்தை மையமாகக்கொண்ட சுயதேவைப் பூர்த்தி, மனிதப்பண்பான கலாசாரத்தொடர்புகள், சமூக பொருளாதார நலனில் அக்கறை கொண்ட இராணுவமும் அரசநிறுவனங்களும் அரசும் ஹிட்லரினால் உள்வாங்கப்பட்டன. ஜேர்மனியினைச் சுற்றியிருந்த அரசியற் பல மற்ற அரசுகளின் வளங்கள் பொருளாதார ரீதியல் ஜேர்மனியர்களுக்கு உதவுக்கூடும். இதனூடாக ஜேர்மனிய கலாசாரம் மற்றைய கலாசாரங்களை வளமாக்கலாம் என்ற நழுவல் போக்கான கருத்தும் மிகைப்படுத்தப்பட்டிருந்தது.

இதே கருத்துடன் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளை நோக்கிய இலங்கை அரசின் கவனமும் திருப்பப்படுவதனை சமகால நிகழ்வுகள் விளக்குவதாக இருக்கிறன. இலங்கையின் மெலிந்த அரசுப் பகுதிகளான வடக்குக் கிழக்குப் பகுதிகளின் பொருளாதாரவளங்கள் சிங்களவர்களுக்கு உதவக் கூடும் அதனூடாகச் சிங்களக் கலாசாரம் தமிழர்களின் கலாசாரத்துக்கு வலுச்சேர்கலாம் என்ற நழுவில் போக்கான தொரு கருத்து பின்பற்றப்பட்டிருப்பதாகக் குறிப்பிடலாம்.

ரட்டலின் லெபன்ஸ்றூம் என்ற கொள்கைக்கு விளக்கங்கொடுத்த ஜெனரல் கார்ள் கௌசோபருடைய கடல்வலுவும் நிலவலுவும் ஒருங்கே கொண்டதே நாட்டின் பலம் என்பதும் எல்லைகள் முக்கியப்படுத்தப்படாத தன்மையும் கொண்ட கருத்தியலானது ஹிட்லரைத் தலைமையாகக்கொண்ட நாசிகளினால் கிழக்கு ஐரோப்ப நாடுகளை ஆக்கிரமிப்பதனையும் அதனூடாக அவற்றின் பொருளாதார வளங் களைப் பெற்றுக் கொள்ளுவதனையும் நியாயப் படுத்துவதற்காகச் சித்தரிக்கப் பெற்றிருந்தது.

உலகம் முழுவதனையும் கட்டுப்பாட்டுக்குட் கொண்டு வர நினைத்த ஹிட்லருடைய கிழக்கு ஐரோப்பாவின் மேலதிக நிலத்தின் மீதான வேட்கையானது யூதர்களின் மீது ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரப் பழிவாங்குதலாக மாற்றம் பெற்றிருந்தமையினால் நோக்கம் சிதறடிக்கப்பட்ட நிலையில் உலக யுத்தமாகப் பரிணாமம் பெற்றிருந்தது.

இலங்கை அரசியற் புவியியலில் மேலதிக நிலம் தேவை என்பது புதிய குடியேற்றங்களை அமைப்பதனூடாக இறுக்கமடைந்து வருகிறது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஹிட்லருடைய படைகள் புகுந்தது போல் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும் அரசபடைகளின் பரவலான ஆதிக்கம் இடம் பெறுகிறது. வடக்கு கிழக்குப் பகுதிகளை நோக்கிய சிங்களவர் குடியேற்றங்கள் தென்னிலங்கை அரசின் சிங்களமக்களது பொருளாதார மேம்பாடு பற்றிய கருத்துக்கு வலுச் சேர்ப்பதாக அமைந்திருப்பினும் தமிழர்களின் கலாசாரப் பரப்பியல் சுருங்கிக் கொண்டே போகிறது என்ற கருத்தையே வெளியிடுவதாக அதன் அரசியற் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

தொழிலாளர் சமூகத்திற்குத் தேவையான முழு உதவிகளும் வழங்கப்படும் பிரதேசத்தில் தான் கலாசாரம் வளர்கிறது என்ற எடுகோட் கருத்தினை முன்வைத்து நோக்கும் பொழுது மக்கள் சுதந்திரமாகவும் தன்னிச்சையாகவும் தொழில் செய்யச் சமூகமும் அரசும் அனுமதிக்கின்ற பொழுதில் நாகரிகம் வளர்ச்சி பெறும் என்பதும், அதனூடாகத்தான் அரசியலில் திடத்தன்மை சாதகமான நிலைமைக்குக் கொண்டு வரப்படும் என்பதும் உறுதியாக இருக்கிறது.

றட்செல் பயன்படுத்திய மேலதிக நிலம் என்ற கருதுகோளினைத் தவறாகப் பயன்படுத்திய ஹிட்லரும் அந்த இராணுவமும் போல் இலங்கையிலும் இலங்கை அரசும் இராணுவமும் அவரின் கொள்கையினைத் தவறாகப் பயன்படுத்த முனைகின்ற பொழுது அதன் அழிவு எதிர்பார்க்கத்தக்கதேயாகும்.

எல்லைகளைக் கடந்தும் தமிழர் பகுதிகளைச் சுருக்கி வைத்துக்கொண்டும் சிங்களமக்களின் பொருளாதார அபிவிருத்திக்காகத் தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் செயற்பாடானது இலங்கையில் உண்மையான அபிவிருத்தியினை ஏற்படுத்தப் போவதில்லை என்பதனை இலங்கை அரசியற்திட்டமிடலாளர்கள் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும். புதிய அரசியற் சிந்தனைகளுடாக பழைய சிந்தனைகளைப் புகுத்த நினைப்பது காலங்காலமாக இடம் பெற்றிருப்பினும்கூட அதுவே மக்களின் முழுத் தேவையினையும் பூர்த்தி செய்யும் சிந்தனையாக அமையப் போவதில்லை.

அபிவிருத்தி என்பது எல்லாத் துறைகளிலும் ஏற்படும் வளர்ச்சியின் பிரதிபலிப்பு. தனியாகக் குடியேற்றத்திட்டங்களை ஏற்படுத்துவதிலும் அவற்றை நோக்கிப் பணத்தினைப் பாயச் செய்வதிலும் கடந்த அறுபது வருடங்களாகக் சிங்கள மக்களுக்குச் சிங்கள அரசு உதவி செய்து வந்தாலும் அது வெறுமனே சிங்களச் சாமானிய மக்களின் நிலப்பசிக்கும் சிங்கள ஆட்சியாளர்களின் வாக்குச் சேகரிப்புப் பசிக்கும் தீர்வாக அமைந்திருந்ததே தவிர உண்மையான அபிவிருத்திக்கு வழியேற்படுத்திக் கொடுத்திருக்கவில்லை.

மக்களின் கலாசாரமும் அரசியல் பொருளாதார நடவடிக்கைகளும் தன்னிச்சையாக செயற்படுகின்ற அளவுக்கு அரசானது ஆக்கப் பணிகளைச் செய்து கொடுக்கின்ற வேளைகளில் தான் உன்மையான வளர்ச்சியும் அதன்மூலமான அபிவிருத்தியும் ஏற்படும்.

‘தன்னிச்சையான’ என்ற பதம் உயிரினப் புவியியலாளரிடையே முக்கியம் பெறுகிறது. ஒரு உயிரினத்தின் வளர்ச்சி பிரதேசமுக்கியத்துவம் கொண்டது. பிரதேசத்துவம் என்பது ஒரு உயிரினம் வாழுவதற்குப் பொருத்தமான தொரு சூழல் அல்லது பிரதேசம் என்பதாக அமையும் அங்கு சூழலுக்கு இனமான உயிரினங்கள் தங்கள் அடையாளத்தினைத் தெளிவுபடுத்தும். இத்தகைய வழிடம்தான் கலாசாரத்திலும் பொருளாதாரத்திலும் வலுவோங்கிநிற்கும். அபிவிருத்திப் பணிகளும் சூழல் வகைக்கேற்றதும் உள்ளூருக்குரியதாகவுமாகவே அமைந்திருக்க வேண்டும். இதுவே இலங்கையில் வழும் எந்தவொரு இனத்துக்கும் பொதுவான கோட்பாடு.

வாழுகின்ற சூழலை நன்றாக அமைத்துக் கொடுக்கின்ற இயற்கையின் செயற்பாட்டினை ஏன் மனிதனது சட்டதிட்டங்கள் மாற்றியமைக்க வேண்டும். சட்டங்கள் இயற்கை விதிகளைப் போன்று அமைய வேண்டும். இயற்கை எவ் வாறு இயங்குகிறதோ அதற்கு ஏற்கவே மனித இனத்தின் வளர்ச்சியும் அமையவேண்டும் றட்சல் போன்ற சூழலாதிக்கவாத சிந்தனையாளர்களின் நல்ல கருத்துக்கள் அரசியலில் ஆதிக்கம் பொறுவதற்குப் பதிலாக அதில் நழுவல் தன்மையான கருத்துக்களைத் தமது செயலுக்கு வலுவேற்றப் பயன்படுத்தும் போக்கானது அரசியலில் ஆபத்தினை ஏற்படுத்தத்தக்கது.

kanapathipillai.a@thaiveedu.com

■ ■ ■



# புதிய வீடுகள்

## புதிய வீடு வாங்குபவர்கள் கவனிக்க வேண்டிய முதல் முக்கிய பத்து அம்சங்கள்:

(சென்ற இதழ் தொடர்ச்சி)

### 05 கொள்வனவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல்:

ஒவ்வொருவரது வாழ் நாளிலும் செய்யக் கூடிய மிகப் பெரிய முதலீடாக அமைவது ஒரு வீட்டைக் கொள்வனவு செய்தல் ஆகும். எனவே மிக ஆழமாகச் சிந்தித்து பலவற்றையும் ஆராய்ந்த பின் கொள்வனவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது தான் சாலச்சிறந்தது. பலரும்



ஆர்வக் கோளாறு காரணமாக முண்டியடித்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு விட்டுப் பின்னர் ஆப்பு இழுத்த குரங்கு போல் அவதிப்படும் பலரைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

ஒரு கொள்வனவு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முன்னர் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பற்றி அறிந்து கொள்வது அவசியம். கொள்வனவு விலையுடன் உள்ளடக்கப் பட்டிருப்பவை எவை? உள்ளடக்கப்படாது இருப்பவை எவை? இது பற்றி அறிய கட்டிட அமைப்பாளர்களிடமிருந்து ஒரு பட்டியலைப் பெறலாம். அப்பட்டியலை ஓர் அனுபவம் வாய்ந்தவரிடம் காட்டி அவற்றின் தரம் பற்றி அறிந்து கொள்ளுதலும், தேவை ஏற்படுமிடத்து சில மாற்றீடுகளைத் தெரிவு செய்வதும் மிக முக்கியமாகும். உதாரணமாக அடிப்படை விலையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் நிலக்கீழ் பகுதியின் யன்னலின் பருமன் உங்களுக்குத் திருப்தியானதாக இல்லாமல் இருந்தால் அவற்றுக்குப் பிரதியீடாக பெரிய யன்னல் போடும் படி கேட்கலாம். இத்தகைய மாற்றங்கள் கொள்வனவு ஒப்பந்தத்தில் சேர்க்கப் பட்டு விட்டால் பின்னர் ஏற்படக்கூடிய பல அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

வீட்டிற்கு தரம் உயர்த்தல் (UPGRADE)

**வீடும் விடியலும் - 53**

செய்யும் போது அதிக கவனம் செலுத்த வேண்டியது மிக அவசியம். பொதுவாக கட்டிட அமைப்பாளர்கள் பலரும் அடிப்படையில் விலையில் தரம் குறைந்த பொருட்களைப் பாவிப்பதும் அவற்றை நாம் தரம் உயர்த்த முற்படும் போது, அவற்றுக்கு பல மடங்கு அதிகமான விலையைப் போட்டு அதிகளவு இலாபத்தைச் சம்பாதிப்பதும் மிகச் சாதாரணமாக உள்ளது. எனவே நாம் தரம் உயர்த்தும் போது எவற்றைச் செய்வது நல்லது எவற்றை வெளியார் மூலம் செய்வது நல்லது என்பதில் அதிக கவனம் செலுத்தினால் கணிசமான இலாபத்தை அடையலாம். தரம் உயர்த்தல் பற்றிய விபரம் பிறிதொரு அத்தியாயத்தில் ஆராயப்படும்.


ஒரு கொள்வனவு ஒப்பந்தத்தை கைச்சாத்திட அத்தகைய ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் அம்சங்கள் பற்றி ஒரு சட்ட வல்லுனரின் அல்லது அனுபவம் உள்ள ஒருவரின் உதவியுடன் மீளாய்வு செய்வது சிறந்தது. குறிப்பாக ஒரு கொண்டோமேனியம் கொள்வனவு செய்ய முன்னர் எத்தகைய கூறுகள் நீங்கள் கொள்வனவு செய்யும் பகுதியுடன் உள்ளடக்கப் பட்டுள்ளது எனவும், எத்தகைய கூறுகள் பொதுவானவை என்பது பற்றியும் ஒரு சட்ட வல்லுனரின் உதவியுடன் கைச்சாத்திடப் போகும் ஒப்பந்தத்தில் எவ்வாறு குறிப்பிடப் பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

### கொள்வனவு ஒப்பந்தம் கைச்சாத்திட முன்னர் கவனிக்க வேண்டிய மேலும் சில முக்கிய குறிப்புகள்:

- மிகக் கவர்ச்சியாகப் பேசி உங்கள் மனதைக் குளிர வைத்த விற்பனை முகவர் தருவதாக வாய் மூலம் அளித்த வாக்குறுதிகள் கொள்வனவு ஒப்பந்தத்தில் எழுத்து வடிவில் உள்ளடக்கப் பட்டுள்ளதா? என்பதை உறுதி செய்தல் மிக அவசியம்.
- நீங்கள் ஒப்பந்தம் செய்யும் வேளை கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் இருந்தால் ஆரம்பிக்கப்பட இருக்கும் திகதி பற்றியும், தாமதம் இருக்கும் பட்சத்தில் எவ்வாறு தொடர்பு கொள்ளப்படும் எனவும் அறிந்து கொள்ள வேண்டும்.
- கொள்வனவு ஒப்பந்தத்தின் போது பகுதியாகவோ அல்லது மொத்தமாகவோ முற்பணம் கட்ட வேண்டி இருக்கும். தனி வீடுகளுக்கு $40,000 டொலர் வரையும், கொண்டோமேனியத்திற்கு 20,000 டொலர் வரையும் செலுத்தப்படும் கட்டணத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது(Tarion).
- உள்ளக, வெளிப்புற வேலைகளின் போது உங்கள் தெரிவுக்கான (Colour selection etc..) ஒழுங்குகள், நடைமுறைகள் பற்றி முதலில் அறிந்து கொள்ளல் வேண்டும்.
- விற்பனைக்குப் பிந்திய சேவை எவ்வாறு இருக்கும், என்பது பற்றியும் அவசர கால நிலை ஏற்பட்டால் யாருடன் தொடர்பு கொள்வது என்பது பற்றியும் முன் கூட்டியே அறிந்து வைத்திருத்தல் நல்லது.
- கொண்டோமேனியம் வாங்கும் போது அதற்குரிய ஆவணத்தினை (Disclosure Statement) மிக கவனமாக வாசித்து முக்கிய அம்சங்களை விளங்கிக் கொள்ள வேண்டியது மிக அவசியம்.

### 06 வீட்டுரிமையாளர் தகவல் கொத்து.
**(Home owner information package)**

உங்களது புது வீட்டுக்குரிய உத்தரவாதம், உத்தரவாத முடிவுத்திகதி, வீட்டுரிமையாளருக்கும், கட்டிட ஒப்பந்தகாரருக்குரிய கடமைகள், பொறுப்புக்கள் பற்றிய சகல விபரங்களும் அடங்கிய தகவல் கொத்து உங்களிடம்




கையளிக்கப்படும். ஆனால் பொதுவாகப் பலரும் இதனை ஒரு பக்கத்தில் போட்டு விடுவது தான் வழமை. ஆனால் இதில் உள்ள விபரங்களை வாசித்து அதிக பலனைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. பொதுவாக இத் தகவல் கொத்து வீட்டைப் பொறுப்பேற்பதற்கு முந்திய பரிசோதனையின் போது (Pre - Delivery Inspection) அல்லது நிறத் தெரிவுக்காக கட்டிட அமைப்பாளர்களைச் சந்திக்கும் போது கையளிக்கப்படும். (இதன் மாதிரிப் படம் மேலே தரப்படுகிறது.)

### 07 வீட்டுடைமைக்கு முந்திய பரிசோதனை (PDI)

ஒரு வீடு உத்தியோக பூர்வமாக உங்களது கைக்கு வரும் திகதி மிகவும் முக்கியமானது. இது Date of possession அல்லது Closing Date என்று அழைக்கப்படும். இத்திகதிக்கு

வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -



முன்னர் பொதுவாக 1 - 3 நாட்களுக்கு முதல் உத்தியோகபூர்வமாக வீட்டைப் பார்வையிடுவதற்கு உங்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப் படும். கட்டிட அமைப்பாளரின் பிரதிநிதியொருவர் வீட்டில், அடியில் இருந்து நுனி வரை ஒவ்வொரு சிறு பகுதியும் எவ்வாறு இருக்கிறது என்பதையும், உபயோகிக்கப்படும் இயந்திர உபகரணங்கள் எவ்வாறு இயக்கப் படலாம் என்பது பற்றியும், பராமரித்தல் பற்றியும் காண்பிப்பார். இதுவே ஆங்கிலத்தில் PDI பரிசோதனை என்று அழைக்கப்படுகிறது.

இப் பரிசோதனையின் போது பூர்த்தி செய்யப் படாதிருக்கும் பகுதிகளும் குறைபாடுடையதாக இருக்கும் பகுதிகளும் உரிய படிவத்தில் குறிக்கப்படும். இத்தகைய குறைபாடுகளை நீங்களாகக் கண்டு பிடித்து கூறுதல் வேண்டும். கட்டிட அமைப்பாளரின் பிரதிநிதியும் வெளிப்படையாகத் தெரியும் குறைபாடுகளை குறிப்பிடுவார். உங்களுக்கு புதிய வீடு பற்றிய அனுபவம் குறைவாக இருக்கும் பட்சத்தில் அனுபவம் உள்ள ஒருவரை நாடலாம். அல்லது ஒரு வீட்டுப் பரிசோதகரின் உதவியையும் பெறலாம். நீங்கள் சமூகமளிக்கச் சந்தர்ப்பம் இல்லாது போனால் உங்கள் சார்பில் ஒரு பிரதிநிதியைச் சட்டரீதியாக நியமிக்கலாம். நீங்கள் வீட்டிற்குள் பிரவேசிக்க முன்னர் வீடு வெறுமையாக இருக்கும் என்பதால் இச் சந்தர்ப்பத்தில் இருக்கக்கூடிய குறைபாடுகளை கண்டு பிடித்தல் மிக இலுகுவாக இருக்கும். அத்துடன் அத்தகைய குறைபாடுகள் ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கப்படுவதால் அவற்றை வெகுசீக்கிரத்தில் பூரணப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் உண்டு.

(PDI பரிசோதனையின் போது எவற்றைக் கவனிக்க வேண்டும் என்பது பற்றிய பட்டியலும் மேலதிக விபரங்களும் பிறிதொரு அத்தியாயத்தில் விரிவாக ஆராயப்படும்.)

### 08 உத்தரவாதத்திற்குரிய படிவங்களைப் பூரணப்படுத்தலும் சமர்ப்பித்தலும்:

கட்டிட நிர்மாணம் செய்பவர்கள் பொதுவாக செவ்வனே வீடுகளைப் பூர்த்தி செய்ய முயற்சி செய்கிறார்கள். ஆனால் தற்காலத்தில் சகல வேலைகளும் உப ஒப்பந்தகாரரின் உதவியுடன் பூர்த்தி செய்யப்படுவதால் பிழைகள் தவறுகள் ஏற்பட நிறையவே வாய்ப்பு இருக்கிறது. ஒன்ராறியோ கட்டிட விதிமுறைகள் அமைவாக கட்டிடங்களை கட்ட வேண்டிய நியதி இருந்தாலும் அத்தகைய விதி முறைகளில் இருந்து தவறிய வற்றைச் சுட்டிக்காட்டி நிவர்த்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது.

ஏதாவது கூறுகள் தவறவிடப்பட்டதாகவோ, அல்லது முறையாக பூர்த்தி செய்யப்படாமலோ அல்லது இயங்காமலோ இருந்தால் அவற்றையும் உத்தரவாதத்தின் கீழ் நிவர்த்தி செய்ய வாய்ப்பு இருக்கிறது. அத்தகைய குறைபாடுகளை கொள்வனவு ஒப்பந்தத்து-

22ம் பக்கம் பார்க்க...







To Buy, Sell & Lease Home, Business & Investment Properties
முதல் பரிசு BMW 300 SERIES CAR
இரண்டாம் பரிசு 2 TICKETS TO CUBA FOR COUPLE
மூன்றாம் பரிசு 42" LCD TV
மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்
நீங்கள் அதிஷ்டசாலி வாடிக்கையாளரா?
எங்களிடம் நீங்கள் வீடு வாங்கி அல்லது விற்றிருந்தால் பெறுமதிமிக்க அதிஷ்ட பரிசுகள் உங்களுக்காக காத்திருக்கின்றன
அதிஷ்ட குலுக்கல்
August 29, 2010 @ GTA SQUARE
Markham / Passmore
$499,800
Ninth Line / 14th Ave
$699,900
Midland / Ellesmere
Gas Station
$2.2 Mil
Good Investment Property
Yonge / Sheppard $720,000
Detached Bungalow house 4 bedroom and 2 full W/Rm Fin Basement. 40 x 120 Lot. Totally Renovated Bungalow Can be Used as Prof. Office.
Markham / Passmore
$465,900
Neilson/Finch
$189,900
Oshawa Uoit
SOLD
$309,900
Middlefield / Finch
$184,900
Salem / Bayley AJAX $379,000
Detached 2 Storey New Home Well Maintained 4 Bedroom with 2 full Washroom, Hardwood Fl and Loads of upgrades to list Location..Location..Location..
Kennedy / Ellesmere
$154,900
Markham / Steeles
$1800
FOR LEASE....
McCowan / Ellesmere
$279,900
Warden/Huntingwood
$729,000
McCowan / Ellesmere $289,000
2 Bedroom Condo 2 Full washrooms Location..... Location Location...... 2 Yr New Condo, 803 Sft, Laminate Floor Step TTC, school & shopping, Minute to 401 Scarborough Town Centre & RT
Markham / Eglinton
$579,800
Gnani & Judy
REAL ESTATE
HOMELIFE
Gnanendran Narasingham
Sales Representative
CELL: 416.937.8090
Judy Gnanendran
Sales Representative
CELL: 416.629.9797
HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 2Y3
OFFICE: 416.321.6969

# உடலில் ஏறிய மென் நஞ்சுகள்

## (Toxins in the Body)

**இதயம் மலர்கிறது - 23**



கந்தையா செந்தில்நாதன்
- Echo - Cardiographer -

உடலினால் உள்வாங்கப்பட்ட நச்சுப் பொருட்களை வன்மையான நஞ்சுகள் (வன்நஞ்சு – Poison), மென்மையான நஞ்சுகள் (மென்நஞ்சு – Toxins) என்று வகைப்படுத்தலாம். வன்நஞ்சுகள் தற்கொலை நோக்குடனோ அல்லது தவறுதலாகவோ உட்கொள்ளப்பட்டால். மனிதரின் உயிருக்கு பெரிய ஆபத்தை விளைவிக்கும். சிகிச்சை நல்ல பலனைக் கொடுப்பதற்கு உடனேயே தகுந்த வைத்தியசாலைக்கு நேரகாலத்துடன் செல்லுதல் வேண்டும். உட்கொள்ளப்பட்ட நஞ்சு என்ன என்பதை அடையாளம் கண்டு கொண்டால் அதற்குரிய முறிமருந்து (Antidote) கொடுப்பது சுலபம். அத்துடன் வாய் மூலமாக மருந்து உட்கொள்ளப்பட்டிருந்தால் அம்மருந்தை வயிறு கழுவுவதன் மூலம் வெளிக்கொணரலாமா அல்லது நிரம்ப விச ஐதாக்கிகளைக் கொடுத்து அதன் தாக்கத்தை ஐதாக்கிவிடலாமா என்று தீர்மானிக்கலாம்.

நஞ்சு பல வழிகளில் எமது உடலை அடையலாம். வாய் வழி, சுவாச வழி, தோல் வழி, ஊசி வழி ஆகிய நான்கு வழிகளில் ஒன்றோ அல்லது பலவோ காரணமாகலாம். எவ்வழி மூலம் நஞ்சு உள்ளே சென்றது என்பதுடன் உள்ளே சென்ற நஞ்சின் அளவும் பிரதானமாகும். தற்கொலை நோக்கில் பொலிடோல், ரமறோன், மின்கல அமிலம், பீனோபாபிற்றோன், அலரிக்கொட்டை போன்ற பல வகையான பொருட்களை உபயோகிப்பார்கள். இந்நஞ்சுகள் வாய் மூலம் உட்கொள்ளப்படுகின்றன. சில சமயங்களில் தற்கொலை நோக்கு அற்ற நிலையிலும் பொலிடோல், ரமறோன் மருந்துகளை வயல்கள், தோட்டங்களிற்குப் பாவிப்பவர்கள் அவர்களின் தோல் மூலமாக நஞ்சு ஊறிய நிலையில் வைத்தியசாலைக்கு வருவார்கள். காற்றுத்திசையில் அல்லாமல் எதிர்ப்புறமாக மருந்தை விசிறும் பொழுது அவை உடலை நனைப்பதனால் தோலின் மூலம் நஞ்சு உடலை அடைகிறது.

பாம்பு தீண்டி வருபவர்கள், கருங்குழவி, தேள் என்பன கொட்டி வருபவர்கள் விடயத்தில் நஞ்சானது தோலினூடாக உடலினுள் ஏற்றப் படுகின்றது. நாகபாம்பின் நஞ்சு நரம்பைத் தாக்கும், புடையன் பாம்பின் நஞ்சு குருதிக் கலங்களைத்தாக்கும். ஒவ்வொரு நஞ்சும் உடலைப் பாதிக்கும் விதங்கள் வேறுபடுகின்றன. அதனால் எப்படிப்பட்ட நஞ்சு உடலைத் தீண்டியது என்பதை அறிந்து கொள்ளுதல் சிகிச்சை முறையை எளிதாக்குவதுடன் கால தாமதமின்றிச் சரியான அணுகுமுறையை உருவாக்கி நோயாளியைக் காப்பாற்றி விடலாம்.

இக்கட்டுரையின் நோக்கம் மென் நஞ்சு பற்றியது என்பதனால் வன்நஞ்சு பற்றிய தகவல்களைக் குறுக்கி மேற்கொண்டு மென்நஞ்சுகள் பற்றிக் கவனிப்போம். வன்நஞ்சு அன்றறுக்கும், மென்நஞ்சு நின்று அறுக்கும் என்று கூறினால் கூட மிகையாகாது. நஞ்சின் தீவிரத் தன்மையை எடுத்துக் காட்டுவதற்காக இதைக் குறிப்பிட்டேன் தவறுதலாக விளங்கிவிடாதீர்கள்.

### மென்நஞ்சுகள் என்றால் என்ன?

எமது உடலின் உடற் தொழிலியலை மந்தப் படுத்தும் அல்லது பங்கப்படுத்தும் எந்தவொரு பொருளும் இதனுள் அடங்கும், “அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்” என்ற பெரியோர் வாக்கு எவ்வளவு உண்மையானது என்பதை விளங்கிக் கொள்வீர்கள். மென்நஞ்சுப் பொருட்கள் நாம் உண்ணும் உணவு வகைகள், குடிக்கும் நீர், சுவாசிக்கும் காற்று, நாம் அன்றாடம் பாவிக்கும் பாவனைப் பொருட்கள், எமது சூழல் என்று பல இடங்களில் காணப்படுகின்றன. தொழிற்சாலைகள் பலவற்றைக் கொண்ட, முன்னேறிய நாடுகளில் இவற்றின் அளவுகள் சற்றுக் கூடுதலாக இருப்பதை அவதானிக்கலாம். எமது குடலில் வாழும் பக்ரீரியாக் கிருமிகள், குடலில் தங்கியுள்ள வட்டப்புழு, கொழுக்கிப் புழு, நாடாப்புழு, சவுக்குப் புழு போன்ற பல உயிரினங்கள் மென்நஞ்சுப் பதார்த்தங்களைச் சுரக்கும் பொழுது அவை எமது குடலினால் உறிஞ்சப்பட்டு எமது உடற் தொழிலியல் செயற்பாட்டைப் பாதிக்கின்றன. இவற்றை சிறு உயிரினங்களால் சுரக்கப்படும் மென்நஞ்சு என்று கூறலாம்.

அன்றாடம் நாம் பாவிக்கும் பொருட்களில் இருந்து அலுமினியம், ஈயம் பாதரசம், ஆசனிக், நிக்கல் போன்ற பல கனரக மூலகங்கள் எமது உடலைச் சென்றடைகின்றன. சிகரட் புகைத்தல் மூலம் கட்மியம், ஈயம் போன்றவையும், அழகுசாதனைப் பொருட்கள், பாத்திரங்கள், தொழிற்சாலைக் கழிவுகள் சேரும் நீரோடையில் பிடிக்கப்படும் கடலுணவுப் பொருட்கள் போன்றவற்றில் பல வகையான மென்நஞ்சுகள் காணப்படும்.

பொலி குளோரினேற்றேட் பைவீனைல் அல்லது PCB என்ற பதார்த்தம், மை வகைகள், உராய்வு நீக்கிகள், வர்ணப் பூச்சுவகைகள், மின் ஒடுக்கிகள், மின் விரிவாக்கிகள் என்பனவற்றில் பாவனையில் இருந்தன. மேற்கூறிய பதார்த்தக் கசிவு உள்ள இடங்களில் ஈரல் புற்று நோய், சீறுநீரக நோய், பிறப்பு ஊனங்கள், குழந்தைகளின் வளர்ச்சியில் பின்னடைவுகள் என்பன கூடுதலாக ஏற்படுவதை வைத்தியர்கள் அவதானித்தார்கள். இதனால் வட அமெரிக்காவில் இப்பதார்த்தம் (PCB) 1970ன் இறுதிப் பகுதியில் தடை செய்யப்பட்டது. எனினும் சுற்றாடலில் விடப்பட்ட PCB கசிவுகள் இலகுலில் அற்றுப் போய்விடாது. இதை கசிவு ஏற்பட்ட இடங்களில் இருந்து அகற்றுவது மிகவும் சிரமமானதும், செலவு கூடியதுமானதாகும். இப்பதார்த்தம் மிகவும் மெதுவாகவே சீரழிந்து போகும். இதனால் இப்பதார்த்தம் பல காலங்களாகக் கசிவு ஏற்பட்ட இடங்களில் இருக்கும். இந்த PCB என்ற பதார்த்தம் தோலினூடாக இலகுவாக உறிஞ்சப்படும். அப்பகுதிகளில் வளரும் மரக்கறிகளில் காணப்படும். மழைகாலங்களில் சிறிது சிறிதாக ஆறுகள், நீர் நிலைகள் என்பனவற்றில் கலப்பதால் அவற்றில் வாழும் மீன்களிலும் காணப்படும். இதன் தீங்கை அறிந்த அரசாங்கம் கசிவுகளால் மாசடைந்த மண்களை வாகனங்களில் ஏற்றி ஒன்ராறியோ மாநிலத்தில் மாத்திரம் 24 இடங்களில் பாதுகாப்பாகச் சேகரித்து வைத்துள்ளனர். பல நாடுகளில் ஏற்படும் சூழல் மாசுபடுதலிற்கு இத்தகைய பொருட்கள் காரணமாகின்றன என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

தினம், தினம் நாம் உண்ணும் உணவுகள், மருந்து வகைகள் என்பனவற்றில் உள்ள நச்சுத்தன்மையை எமது ஈரல் பிரித்தழித்து விடுகின்றது. எமது ஈரல் அண்ணளவாக 2 அவுன்சு அல்லது 60 கிராம் அளவு நச்சுப் பதார்த்தங்களைத் தினமும் சுத்திகரிக்கக் கூடியது. இந்த அளவுக்கு மேலதிகமாக உடலில் சேரும் நச்சுப் பதார்த்தங்கள் ஈரலைத் திணரடிக்க வைத்துவிடும். அளவுக்கு மீறிய மதுபானம், உணவு கெடாமல் இடப்படும் பதார்த்தங்கள், மரக்கறிகள் கெடாமல் பாவிக்கப்படும் பதார்த்தங்கள், நகப் பூச்சு, முகப் பூச்சுக்கள் போன்ற இன்னோரன்ன பொருட்கள் மூலம் எமது உடலை அடையும் தீங்கான பொருட்களை பிரித்தழித்து உடலின் ஏனைய தொழிற்பாடுகள் கெடாமலும், உடலங்கங்களுக்கு அப்பதார்தங்களால் ஊறு நிகழாமலும் ஈரல் எம்மைப் பாதுகாக்கின்றது. ஈரலைப் போல் எமது சிறுநீரகங்கள் இரண்டும் கூட உடலில் உருவாகிய கழிவுகளை அப்புறப்படுத்துகின்றது. தோலின் மூலமும் ஓரளவு கழிவுகள் அகற்றப்படுகின்றன.

ஈரல் நோய்வாய்ப்படும் பொழுது அல்லது உடலில் கூடுதலான நச்சப்பதார்த்தங்கள், மதுகாரம் என்பன அளவு மீறித் தினம் தினம் சேரும் பொழுது ஈரல் அழற்சி ஏற்படுகின்றது. சிறுநீரகங்கள் நோய் வாய்ப்படும் பொழுது யூறியா போன்ற கழிவுப் பொருட்கள் மிதமிஞ்சி உடலில் தேங்கும் பொழுது உடல் நோய் வாய்ப்படுகின்றது.

### மென் நஞ்சுகள் உடலில் சேரும் பொழுது ஏற்படும் குணங்குறிகள்

தசைகள் மூட்டுகளில் பிடிப்பு, தலையிடி, உடல் அசதி, தோல் வியாதி, உடல் உறுப்புக்களில் வீக்கம், உடல் நிறை கூடுதல், உடலில் நோயெதிர்ப்புத் தன்மை குறைவதனால் அடிக்கடி தொற்று நோய்களுக்கு ஆளாகுதல், உரிய வயதைவிடச் சற்று குழப்பமான தோற்றம் என்பன சில முக்கியமான குணங்குறிகளாகும்.

### ஈரலிற்கு ஏன் முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும்?

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று பல வகையான நச்சுப்பொருட்களை பிரித்தழிக்கும் வல்லமை கொண்டது. ஆனால் அளவுக்கு மீறி நச்சுத்தன்மை ஈரலைத் தினம் தினம் அடையும் பொழுது ஈரலிற்கு அவற்றைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது. அப்பொழுது ஈரல் அழற்சி ஏற்பட்டு உடல் நிலை மிகவும் பாதிப்படைகின்றது. ஈரலின் பொறுப்பில் வேறு பல வேலைகளும் உண்டு. அவற்றைக் கூடச் சரிவரச் செய்ய முடியாமல் போய்விடும்.

இருதயமானது ஒவ்வொரு நிமிடமும் சராசரியாக 5 லிற்றர் குருதியை உடலெங்கும் பாச்சுகின்றது. இதில் பெரும் பகுதியானது ஈரலூடாகவும், சிறுநீரகங்கள் ஊடாகவும் சென்று கழிவுகள் அகற்றப்படுகின்றன. ஈரலானது ஏறத்தாள 99 விதமான கழிவுகளையும் கிருமிகளையும் அகற்ற வல்லது. ஒவ்வொரு தடவையும் அதனூடாகக் குருதிபாயும் பொழுது ஆக ஒருவீதமான கழிவு மட்டும் வடிகட்டாமல் விடப்படுகின்றது. குருதி தொடர்ந்து பாய்ந்த வண்ணம் இருப்பதால் தொடர்ந்து வடிகட்டல் நடைபெறுகின்றது. ஒரு நிமிடத்தில் ஈரலினூடாகப் பாயும் குருதியில் உள்ள கழிவுகளின் 99 வீதத்தை நீக்குவது என்பது ஈரலின் வலிமையான செயலை எடுத்துக் காட்டுகின்றது.

அதைவிடத் தினமும் ஈரலினால் பித்த நீர் சுரக்கப்பட்டு பித்தப்பையில் சேகரமாகி அவ்வப்போது சிறுகுடலினுள் விடப்படுகின்றது. பித்தச் சுரப்பில் கொலஸ்ரெறோல் மற்றும் குருதியில் இருந்து அகற்றப்பட்ட மென் நஞ்சுப் பொருட்கள் என்பன காணப்படும். இப்படியாக விடப்பட்ட பொருட்கள் மீண்டும் சிறுகுடலினால் உறிஞ்சப்படாமல் இருப்பதற்கு நார்ப் பொருள் கூடிய உணவை எமது அன்றாட உணவில் சேர்த்துக் கொள்வது நன்மை பயக்கும். நார்ப் பொருள் மலம் கழிவதையும் ஊக்குவிக்கும்.

மேலும் ஈரலானது பல இரசாயனத் தாக்கங்களை ஏற்படுத்தி குருதியில் வரும் நச்சுத்தன்மைகளை நடுநிலைப்படுத்தியும், அவற்றை மூலக்கூறு அமைப்பிற்கு ஏற்ப கொழுப்பு அல்லது நீரில் கரையும் பொருட்களாக மாற்றி முறையே குடலினூடாகவும், சிறுநீரகங்களினூடாகவும் கழியச் செய்கின்றது.

உங்கள் உடலில் மென்நஞ்சுகள் சேர்வதைத் குறைக்கலாமே ஒழிய அவற்றை முற்றாகத் தடை செய்ய முடியாது. நீங்கள் உண்ணும் உணவு, சுற்றாடல் மாசு, உங்கள் வாழ்க்கை முறை என்பனவற்றால் இவை சேர்வதைத் குறைக்கலாம்.

### எம்மை எப்படித் தயார் செய்வது

- புகைப்பதை தவிர்த்தல் அல்லது மட்டுப்படுத்துதல்.
- மதுபானப் பாவனையைத் தவிர்த்தல் அல்லது மட்டுப்படுத்துதல்.
- உடற்பயிற்சி ஒழுங்காகச் செய்தல்.
- சம பல உணவை நன்கு தெரிவு செய்து உட்கொள்ளுதல்.

> “ஈரல் அண்ணளவாக 60 கிராம் அளவு நச்சுப் பதார்த்தங்களைத் தினமும் சுத்திகரிக்கக்கூடியது. இந்த அளவுக்கு மேலதிகமாக உடலில் சேரும் நச்சுப் பதார்த்தங்களான மதுபானம், மாமிசம் மரக்கறிகள் கெடாமல் இடப்படும் பதார்த்தங்கள், நக முகப் பூச்சுக்கள் போன்றவை ஈரலைத் திணரடிக்க வைத்துவிடும்.”

22ம் பக்கம் பார்க்க...

**TO LEARN FIRST AID & CPR IN ENGLISH AND TAMIL**
தமிழிலும் ஆங்கிலத்திலும் முதலுதவி பயிற்சி
**Dr. Kandiah Senthilathan**
● Standard First Aid & CPR Level "C" - 2 Days Program ● Emergency First Aid & CPR Level "A" - 1 Day Program ● CPR Level "A" - 4 Hours Program (Adult)
● CPR Level "C" - 8 Hours Program (Adult, Child, Infant) ● CPR Level "C" - 4 Hours Program - Renewal (Adult, Child, Infant)
பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
Registered Medical Officer (SLMC), Acupuncturist (MAcF), First Aid & CPR Instructor (Certified in Canada)
647-801-9252
416-502-9252
ஆறு மாணவர்களுக்கு மேல் சேருமிடத்தில், உங்கள் இடத்திற்கு வந்து கற்பிக்கப்படும்.

# வீடு வாங்க விற்க



**Kuga Raveendrarajah**
Broker
Direct: **416-843-8585**




**Mathan Selvendarakumaran**
Sales Representative
Direct: **416-625-2870**




**Brimley & Denison**
3+1 Bedrooms 4 Washroom




**Morningside & Finch**
4 Bedrooms 3 Washroom




## HomeLife Today Realty Ltd., Brokerage*

31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6

**Bus: 416-298-3200**

# எமக்கென்று ஒரு தனிக்குழல்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

# 416.438.1688

**Fax: 416 438 1612**

**1421 Kennedy Rd, Scarborough, ON. M1P 2L6**

RBC Financial Group

# ‘வெள்ளை’ என்றால் அழகுராணி... வேறு என்றால் வரும் புரளி

கந்தசாமி கங்காதரன்



எம்மில் பலர் இன்னமும் மேற்கத்தைய கலாசாரத்தை உயர்த்திப் பிடிப்போர் இருக்கின்றோம். "வெள்ளைக்காரர் செய்தால் சரியாகத்தான் இருக்கும்" என்று முதுகு சொறியும் பழக்கமும் எம்மிற் பலருக்குண்டு. நாகரிக மடைந்த நாடுகள் என்று சொல்லிக்கொள்ளும் நாடுகளெல்லாம் உண்மையிலேயே நாகரிகமடைந்தவையா? இல்லை என்பதற்குப் பல சம்பவங்களைச் சொல்லாம். அவற்றுள் ஒன்று அல்ல இரண்டு...

அழகிப்போட்டிகள் இப்போது தமிழகத்தில் கூட கிராமங்களிலும் நடத்தப்படுகின்றன. ஈழத்தில் வடக்கு கிழக்கில் நாமறிந்த வரையில் இதுவரையில் இல்லை. கிராம, மாவட்ட, மாநில மற்றும் மாகாண, மட்டங்களிலும் நாடு தழுவிய வகையிலும் நடைபெறுகின்றன. நாடு தழுவிய வகையில் நடைபெறுகின்ற இப்போட்டியில் அந்நாட்டு அழகியாகத் தேர்வு செய்யப்படுபவர்தான் அந்நாட்டின் சார்பாக உலக அழகிப் போட்டியில் பங்குபற்றுவார் உலக அழகிப் போட்டி Miss World, Miss Universe என்று இரு பெயர்களில் பெரு வணிகமாக்கப்பட்டுள்ளது. Miss Universeஐத் தமிழ்ப்படுத்தி, பிரபஞ்ச அழகியாக்கி பிரபஞ்சம் முழுவதிலிருந்தும் அழகிகள் போட்டியிடுவார்களாவென்று கேட்கக்கூடாது.

நாட்டுக்கு நாடு நடைபெறும் போட்டிகள் ஐக்கிய அமெரிக்காவிலும் Miss USA, Miss America என்று இரு பெயர்களில் யாருக்கோ பணத்தை அள்ளிக்கொட்டுகின்றது. Miss Americaவில் 1980களிலிருந்து இதுவரையில் 7 கறுப்பினப் பெண்கள் Miss America ஆக முடி சூடியிருக்கின்றனர். 2010க்கான Miss America கூட Caressa Cameron என்ற ஒரு கறுப்பினப் பெண். வெள்ளையர் அல்லாதோரை அமெரிக்க சமூகம் உயர் நிலையில் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றது என்பதற்கு 1984இல் முதன்முறையாக Miss America ஆக முடி சூடிய Vanessa Williams என்ற பெண்ணுக்கு எதிராக அரங்கேற்றப்பட்ட நாடகம் ஒரு சிறந்த மாதிரி.

1980களின் தொடக்கத்திலிருந்தே அழகிப் போட்டிகளில் போட்டியிட்ட Vanessa முதலில் 1983இல் Miss New Yorkஆக வெற்றிபெற்றார். செப்டெம்பர் 1983இல் Miss America 1984 ஆகவும் முடிசூடினார் அமெரிக்காவின் இந்த அழகிப்போட்டி வரலாற்றிலேயே முதற்றடவையாக அழகுராணியொருவருக்கு கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. இனவெறுப் புணர்வைத் தூண்டும் கடிதங்களும் வந்தன. முடி சூடிக்கொண்ட 10வது மாதம் Vanessa வுக்கு அநாமதேயத் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அவருடைய நிர்வாணப் படங்கள் வெளிவந்திருப்பதாக அழைத்தவர் கூறினார். அவை நியூயோர்க் நகரத்துப் புகழ் பெற்ற படப்பிடிப்பாளர் 1982இல் இன்னொரு பெண்ணோடு தன்னையும் சேர்த்து எடுத்த படங்கள் என்பது Vanessaவுக்குத் தெரிந்திருந்தது. ஓரினச் சேர்க்கையைப் பிரதிபலிக்கும் படங்களும் எடுக்கப்பட்டிருந்தன. ஆனால் அந்தப் படப்பிடிப்பாளர் சோதனை முயற்சியாக எடுத்த படங்கள் அவை. அப்படித்தான் அவர் Vanessaவுக்குச் சொல்லியிருந்தார். அவருக்கு உதவியாளராகவும் ஒப்பனைக் கலைஞராகவும் பணியாற்றிய காலத்தில் இச் சம்பவம் நிகழ்ந்திருந்தது. அவை வெளியே வருவது தனது அந்தரங்கத்தைப் பாதிக்கும் என்பதும் Vanessaவுக்குத் தெரிந்திருந்தது. எனவே, அவை வெளியிடப்படுவதற்கு அவர் ஒருபோதும் சம்மதித்துக் கையெழுத்திட்டிருக்கவில்லை. சோதனை முயற்சியாக எடுக்கப்பட்ட படங்கள் என்பதால் அவை அழிக்கப்பட்டிருக்கும் என்றுதான் Vanessa நம்பிக் கொண்டிருந்தார்.

உலகப் புகழ் பெற்ற Play Boy இதழின் பதிப்பாளரிடம் அந்தப் படங்கள் சென்ற போது அவற்றை வாங்குவதற்கு மறுத்துவிட்டார் அவர்.

"Vanessa ஓர் அழகான பெண். ஆனால் இந்தப் படங்கள் வெளியிடப்படுவதற்கு அவர்



ஒப்புதல் வழங்கியிருக்கவில்லை. அவரை அவமானப்படுத்துவதற்கென்றே இந்தப் படங்களை வெளியிடச் சிலர் முனைந்தார்கள். நாம் மறுத்துவிட்டோம். Miss America ஆக முடிசூடிய முதலாவது கறுப்பினப் பெண் Vanessa என்பதாலும் நாம் கவனமாக இருந்தோம்" என்றார் பதிப்பாளர் Hugh Hefner. ஆனால் Penthouse சஞ்சிகை Tom Chiapel என்ற அந்தப் படப்பிடிப்பாளரிடமிருந்து 14 மில்லியன் டொலருக்குப் படங்களை வாங்கி செப்டெம்பர் 1984ல் வெளிவிடவிருப்பதாக அறிவித்தது. பெரும்பாலான அமெரிக்க ஊடகங்கள், அமெரிக்க மானமே கப்பலேறி விட்டது போன்று குய்யோ முறையோவென்று குதித்தன. 1985 Miss America அனுசரணையாளர்கள் கொடுத்த அழுத்தத்தினால் தன் மீது, முடிதுறக்குமாறு அழுத்தம் தரப்படுவதாக Vanessa நினைத்தார். ஜூலை 1984இல் ஊடகவியலாளர் மாநாடொன்றில் வைத்து முடிதுறந்தார். இரண்டாமிடத்தைப் பெற்றிருந்த இன்னொரு கறுப்பினப் பெண்ணான Suzette Charles Miss America 1984b ஆக முடி சூட்டப்பட்டார். படப்பிடிப்பாளருக்கும் Penthouse வெளியீட்டாளருக்கும் எதிராக 500 மில்லியன் டொலர் இழப்பீடு கோரி வழக்குத் தாக்கல் செய்தார் Vanessa. பின்னர் தன்னுடைய சொந்த வாழ்க்கையின் கவனம் செலுத்தும் பொருட்டு வழக்கை விலக்கிக் கொண்டு தன் வழியே போய் இசைத்துறையில் புகழ்பெற்றார். ஒரு கறுப்பினப் பெண்ணை வெற்றி கொண்ட திளைப்பில் மூழ்கிப்போனது அமெரிக்க வெள்ளையின மேலாண்மை.

1984 இருந்து வேகமாக ஓடி 2010க்கு வருகிறோம். Miss. Michigan 2009 ஆகத் தேர்வான லெபனானில் பிறந்து அமெரிக்காவில் குடியேறிய Rima Fakih என்ற முஸ்லிம் பெண் Miss USA 2010 ஆக முடி சூடிக்கொண்டார். Miss USA ஆகத் தேர்வான முதலாவது முஸ்லிம் பெண் இவர். இஸ்லாமிய சமூகத்திலும் அமெரிக்க சமூகத்திலும் இவர், Miss USAஇல் பங்குபற்றுவது, வெற்றிபெற்றது தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் நிறைய நிகழ்ந்தன. அவரது இன மத அடையாளம் பேசுபொருளாக்கப்பட்டது. ஓர் இஸ்லாமிய அறிஞர், "Rima ஒரு முஸ்லிம் என்று சொல்வது சரியல்ல. பிகினி ஆடையோடு மேடையில் நின்றுகொண்டு எந்தவொரு முஸ்லிம்



பெண்ணுமே ‘நான் ஒரு முஸ்லிம்’ என்று சொல்லமாட்டாள்" என்று எனது எதிர்ப்பைப் பதிவு செய்தார். இஸ்லாமிய சமூகத்தில் Rima வுக்கு ஆதரவும் இருந்தது.

ஆனால் முடி சூடிக்கொண்ட 24 மணி நேரத்தினுள் Rimaவுக்கெதிராகவும் குற்றச்சாட்டுகள். சாட்சியாகச் சில நிழற்படங்கள். 2007ம் ஆண்டு Detroit நகர வானொலியொன்று ‘Stripper 101’ என்றொரு போட்டியை நடத்தியது. தங்கள் ஆடைகளை ஒவ்வொன்றாகத் தாங்களே களைந்து ஆண்களை உசுப்பிவிடும் வகையில் ஆடப்படும் நடனம் Strip Tease. சில வேளைகளில் கம்பமொன்றைச் சுற்றி அந்தக் கம்பத்தோடு உரசி உரசி நடனமாடுவர். Strippers எனப்படும் தொழில்முறையில் இந்த நடனமாடும் மாதர் (பெண்களுக்காக ஆடும் ஆண் Strippers உம் உள்ளனர்) ஆடிக்காட்ட, அதைப் பார்த்து போட்டிக்கு வந்த பெண் நேயர்கள் ஆடவேண்டும். சிறப்பாக ஆடுபவருக்குப் பரிசு. இந்தப் போட்டியில் Rimaவும் கலந்துகொண்டிருந்தார். அங்கு எடுக்கப்பட்ட படங்கள் பல இணையத்தளங்களில் வெளியாகியிருந்தன.

Miss USA ஆக Rima முடிசூடியதும் யாரோ சில புண்ணியவான்கள் அந்தப் படங்களைத் தேடி எடுத்து புதிய வெளியீடாக வெளியிட பரபரப்பாகின அமெரிக்க, சர்வதேச ஊடகங்கள். புலனாய்வுப் பத்திரிகைகள் போன்று நடந்துகொண்டன பல மதிப்புமிக்க பத்திரிகைகள். யாருக்குமே தெரியாத, மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு விடயத்தைத் தாங்கள்தான் கண்டுபிடித்திருப்பது போன்று படங்களையும் தொடர்பான கட்டுக்கதைகளையும் வெளியிட்டன. இவற்றைக் கவனத்திலெடுத்த Miss USA அமைப்பாளர்கள் வானொலியைத் தொடர்புகொண்டு மேலதிக விபரங்கள், படங்களைக் கோரினர். மோசமான ஆடை என்று யாருமே சொல்லமுடியாத அளவுக்கு Rima ஆடையணிந்து நடனமாடுகின்ற, வெற்றிபெற்ற பின்னர் மேலாடையில் டொலர் தாள்கள் செருகியிருந்த படங்கள் கிடைத்தன. கலாச்சாரக் காவலர்கள் குறை சொல்லுமளவுக்கு எதுவுமேயில்லை.

"அந்தப் போட்டி குதூகலமான ஒரு போட்டி. பெண்கள் மட்டுமே கலந்துகொண்ட போட்டியில் நடனமாடிய எல்லோருமே ஆடையணிந்திருந்தனர். Miss Universe போட்டியில் Detroit நகரத்தையும் ஐக்கிய அமெரிக்காவையும் பிரதிநிதித்துவம் செய்யப்போகும் Rimaவை எமது வானொலி முழுமையாக ஆதரிக்கின்றது. அவர் மீது சேறள்ளி எறிய முனையும் எத்தகைய நடவடிக்கையையும் நாம் ஆதரிக்கவோ ஊக்குவிக்கவோ மாட்டோம்" என்று வானொலி நிலையம் உறுதியாகக் கூறிவிட்டது.

எல்லாச் சதிகளையும் தாண்டி Rima Fakih ஒகஸ்ட் மாதம் 23ம் நாள் நடைபெறவுள்ள Miss Universe 2010இல் கலந்துகொள்கிறார்.

வெவ்வேறு மாநில அழகுராணியர் சிலர் பட்டங்களை இழந்திருக்கின்றனர். அதற்கு வலுவான காரணங்கள் இருந்திருக்கின்றன. ஆனால் Rima, Vanessa விடயத்தில் அவர்களின் சமூகப் பின்னணி காரணமாக திட்டமிட்டே ஒதுக்கப்படுகின்றார்களா... என்ற எண்ணம் ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாமலுள்ளது.

‘ஒரு நாள் இந்த தேசம் உயர்ந்து நின்று அனைத்து மனிதர்களும் சரிசமமாக உருவாக்கப்பட்டவர்கள்’என்பது நிரூபணம் வேண்டாத உண்மையெனப் புரிகிறோம் எனும் கொள்கைக்கேற்ப வாழுமென, அதன் உண்மையான பொருளைப் புரிந்து கொண்டு விடுமெனக் கனவு கண்ட மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் நினைவாக அவரது பிறந்த நாளான ஜனவரி 15ம் நாளை அண்மித்து ஒவ்வொரு ஜனவரி மாதத்து மூன்றாவது திங்கட்கிழமையும் விடுமுறையாம் ஐக்கிய அமெரிக்காவில்...

gangatharan.k@thaiveedu.com

■ ■ ■

Consult Ranjan
Project Management & Construction Services
Consulting | Engineering | Management
KNOWLEDGE THAT GETS RESULTS
Tel.: 416.627.5664
E-mail: ranjan@consultranjan.com
www.consultranjan.com



**Full-time Real Estate Agent**

# Nada G. Nadarajah B.V.Sc

Sales Representative

**Call Me @ 416 616 8751**

"An award-winning realtor with 14 years experiance".

## HomeLife
Landmark Realty Inc., brokerage

*5200 Finch Ave. E, Suite 106*
*Toronto, ON M1S 4Z4*
*Bus: 416 293 5093*
*nanadarajah@trebnet.com*

HOMELIFE HIGHER STANDARDS

$254,990



**Markham & Sheppard**
Condo. Apartment
2 Bedrooms - 2 Washrooms
Close to Schools & Major Plazas

$517,000



**Dufferin & Rutherford**
2-Storey Detached
4+2 Bedrooms - 4 Washrooms
Basement Apartment

$153,900



**McClevin & Neilson**
Condo. Apartment
2 Bedroom - 2 Washroom
Approx. 1000 Sq. Ft

$420,000



**Markham & Steeles**
2 Storey Detached
3+1 Bedrooms - 3 Washrooms
Professionally Finished Basement

$419,500




**McCowan & Steeles**
2 Storey Detached
3+1 Bedrooms - 4 Washrooms
Completed Basement

SOLD



**Kennedy & Eglinton**
Condo. Apartment
2+1 Bedrooms - 2 Washrooms
Luxury Condo. Building

---



416 803 . 7344

JUSTIN WILLIAM *

**Warden & Steeles $379,000**



*Semi Detached *3 Bedrooms *Totally Renovated House. *Huge Back Yard. *Basement Apartment With Sep Entrance

**Mccowan/Bur Oak $484,900**



*Detached House *4 Bedrooms *Super Clean * Approx. 2200 sq ft *Family Size Kitchen

**Middlefield & Finch $199,900**



*2 Bedroom & 2 Full Baths *2 Full Baths Ensuite Laundry * Lots Of Upgrades *Steps To Ttc *Shops And GTA Square



416 817 . 8479

RAVI Raveendran *

## Lucky Draw On August 29, 2010 at GTA Square



**First Prize**



**Second Prize**



**Third Prize**

*Some condition may Apply*

**1st Prize: Brand New BMW 2010 Model 3 series**
**2nd Prize: Vacation Package to CUBA for a week for 2**
**3rd Prize" 42" LCD TV**
**10 Consolation Prizes.**



416 858 . 4828

SASI Chelvaratnam **

*Our way to say thanks to our clients...*

*Lucky draw is Absolutely Free For Our Valuable Clients.*

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife GTA Realty Inc. Brokerage***
**1711 McCowan Rd. Suite 206**
**Scarborough Ont.**
**Office: 416-321-6969**

This is not intended to Solicit seller or Buyer currently Under Contract with Brokers

Independently Owned and Operated*
* Broker ** Sales Representative

# சாதாரண விடயம் பெரிது படுத்த வேண்டியதில்லை...



சிவாஜினி பாலராஜன்

எத்தனை தடவை சொன்னாலும் அதைக் கிரகித்து நடக்காது தான் தோன்றித் தனமாக நடக்கின்றானே இதற்கு என்ன காரணம்? ஒரு பிரச்சினையும் இல்லை ஆனால் கவனக் குறைவு. எதிலும் கவனம் செலுத்த மறுக்கின்றான். எப்ப படிக்க இருந்தாலும் படிப்பில் கவனம் இல்லை ஆனால் விளையாட்டில் அதீத கவனம் இருக்கின்றது. இப்படி எங்கள் வீடுகளில் எப்பவும் பிரச்சினைதான். பிள்ளைகள் எல்லா வீடுகளிலும் இருக்கிறார்கள். ஒரே பெற்றோரது குழந்தைகளாயினும் ஒவ்வொரு பிள்ளைகளும் குணம் நடை பழக்க வழக்கம் கற்றல் திறன் இவ்வாறு ஒவ்வொன்றிலும் வித்தியாசப்பட்டு நிற்கிறார்கள். இதில் நாம் மிகவும் கவனம் செலுத்த வேண்டும்.

சில குழந்தைகளின் நடவடிக்கைகள், கற்றல் அல்லது கிரகிக்கும் ஆற்றல் இவற்றினைப் பார்த்து அக்குழந்தையின் ஆசிரியர் குழந்தையின் பெற்றோரிடம் “உங்கள் குழந்தைக்கு கற்றல் குறைபாடு இருப்பது போல் தெரிகின்றது ஒருதடவை அதனைக் கவனித்துக் கொள்ளுங்கள்” என்று சொல்லி விட்டால் போதும். அந்தப் தாய் அல்லது தந்தை உந்த ஆசிரியருக்கு தலையில் ஏதோ பிசகு எனது பிள்ளையை குறைபாடு உள்ள பிள்ளை எனச் சொல்கிறார் என்று அதனைப் பாரதூரமாக்கி உண்டு இல்லை என்று ஆக்கி விடுவார்கள். இது எங்கள் பெற்றோரிடம் மிகவும் அதிகமாக உண்டு. இதனை நான் சும்மா கூறுகின்றேன் என்று எண்ண வேண்டாம். இது எனது வகுப்பில் இங்கு எனக்கு ஏற்பட்ட அனுபவம் மற்றைய இனத்தவர்களும் ஆசிரியர்களுக்கு சங்கடம் தருவார்கள் ஆனால் பாரதூரமான சங்கடம் இல்லை. தனது குழந்தைக்கு குறைபாடு உண்டு என்பது எந்தப் பெற்றோரினாலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாக இருந்த போதிலும் பெற்றோராகிய நாம் சிறிதளவு சிந்தித்து செயலாற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

கற்றல் குறைபாடு என்பது ஒரு நோயல்ல. இதனை ஒரு குறைபாடு அல்லது தற்குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். Learning disability is not a disease. It is a condition என்கிறார்கள் வைத்திய நிபுணர்கள். இதனால் எங்கள் பிள்ளைக்கு கற்றல் குறைபாடு என்றவுடன் நாங்கள் அதை தாழ்வாக நினைத்து மற்றவர்களுக்கு மறைக்கவோ அல்லது ஒளித்து ஓடவோ தேவையில்லை. இதற்கும் புத்தி சாதுரியத்திற்கும் தொடர்பில்லை. அலெக்சாண்டர் கிரகாம் பெல், வோல்ற் டிஸ்னி, வின்ஸ்ரன் சேர்ச்சில் ஆகியோர் கற்றல் குறைபாடுள்ளவர்கள் தான்.

ஒரு பிள்ளைக்கு கற்றல் குறைபாடு உள்ளது என்பதனை கண்டுபிடிப்பது முக்கியமாக ஆசிரியர்கள் தான். பொதுவாக பிள்ளைகளுக்கு பேச்சு, வாசிப்பு, எழுதுதல், கணித்தலில் பிரச்சினை, கிரகித்தலில் சிரமம் போன்றவை இருப்பின் விளையாட்டில் கவனம் செலுத்துவதால் அவர்கள் இவ்விடயங்களில் கவனம் செலுத்தவில்லை என்னும் ஓர் அனுமானத்தில் நாம் அவர்களைக் கவனியாது விட்டுவிடுவோம். இதனை அனுமானம் இன்று சொல்வதைவிட எங்களை நாங்களே ஏமாற்றுவதற்காக சொல்லிக் கொள்ளும் ஒரு சாக்கு என்று கூடச் சொல்லலாம். ஆனால் பாடசாலையில் இவ்வாறு ஒரு குழந்தையின் செயற்பாடு இருப்பின் அவர்கள் அதனை ஆராய்வதற்கு பிரத்தியேகமாகப் பயிற்றப்பட்ட ஆசிரியர்களைக் கொண்டுவந்து ஆராய்ந்து பார்ப்பார்கள். தாயகத்தில் இதெல்லாவற்றையும் சமாளிப்பது எங்களுக்கு கடினமாக இருக்கும். ஏனெனில் அங்கு வசதிகளும் குறைவு அதேசமயம் மக்களின் மனப்பான்மையும் வித்தியாசம். ஆனால் இங்கு மக்கள் ஓரளவிற்கு மனதளவிலும் சிந்தனையளவிலும் மாற்றம் பெற்றுள்ளார்கள் என்றே சொல்ல வேண்டும். இந்த மண்ணில் அரசாங்கம் பலவிதமான வசதிகளை செய்கின்றது. அவர்கள் செய்யும் இந்த வசதிகளை நாம் பாவித்துக் கொண்டால் பிள்ளைகளுக்கு கற்றலில் சிரமம் இருக்காது. எங்கள் பிள்ளையில் குறைபாடு இருக்கின்றது என்பதை மறைத்து அதற்கு ஆவன செய்யாது போதல் மிகவும் இக்கட்டான ஒரு சூழ்நிலையினை ஏற்படுத்தி எப்போதும் நாம் கவலைப்பட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கிவிடும். பேச்சு பிரச்சினையான பிள்ளைகளுக்கு speech therapy என அனுப்புவார்கள். கற்றல் குறைபாடுள்ளவர்களுக்கும் பல விதமான தெரபிகள் உண்டு. மேலும் சில பிள்ளைகளுக்கு வைத்தியர்கள் சில மருந்துகளைக் கூடக் கொடுப்பார்கள். இம் மருந்துகள் அப் பிள்ளையின் முன்னேற்றத்திற்கு நல்ல உதவியாக இருந்ததை நான் கண்கூடாகக் கண்டிருக்கின்றேன். எனது மாணவியரில் இருவருக்கு இது மிகவும் உதவி செய்திருக்கின்றது. சில பிள்ளைகள் பெரிய வகுப்புக்களுக்குப் போகும் வரையில் அவர்களது கற்றல் குறைபாடு தெரியாமலேயே போய்விடுவதாயும் பின்னர் பெரிய வகுப்புகளில் அவர்கள் சமாளிக்க முடியாது தடுமாறி விடுவதாயும் கூட ஆய்வுகள் கூறுகின்றன. இதனால் இவர்களை பெற்றோரே அடையாளம் காண முற்பட வேண்டும்.

கற்றல் குறைபாடு என்பது மூளையின் தொழிற்பாடுகளான கிரகித்தல், ஆராய்தல், கிரகிக்கப்பட்டு ஆராயப்பட்ட செய்தியினை ஒன்று சேர்த்தல், சேமித்தல் என்பவற்றிலுள்ள பிரச்சினை ஆகும். இதனால் இவர்கள் அறிவு குறைந்தவர்கள் அல்ல. உடனடியாக செய்திகளை கோர்ப்பது கடினம் என்றே சொல்லலாம். அதாவது கற்றல் குறைபாடு அற்ற ஒரு பிள்ளையின் வேகத்திற்கு இந்தப் பிள்ளை தொழிற்படுவது கடினம். கற்றல் குறைபாடு பலவகைப்படும். சில வகையான குறைபாடானது அது உடையவரை ஒன்றிலும் கவனம் செலுத்த விடாது. மனதினை ஒருநிலைப்படுத்த முடியாது கவனம் சிதறி வேறு ஏதாவது விடயங்களில் மனம் சஞ்சரித்துக் கொண்டே இருக்கும்.

### கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளின் பெற்றோரின் கடமை:

சாதாரணமாக எங்கள் பெற்றோர் மற்ற வீட்டுக் குழந்தைகளை ஒப்பிட்டுக் கதைப்பதுண்டு. பிள்ளைக்கு கற்றல் குறைபாடு உண்டோ இல்லையோ இது செய்யக் கூடாத ஒரு விடயம். இருப்பினும் கற்றல் குறைபாடுள்ள பிள்ளைகள் மிகவும் சுலபமாக வெறுப்பும் கோபமும் அடைந்துவிடுவார்கள்.

- இவ்வாறான குழந்தைகளின் பெற்றோர் முதலில் அக்குழந்தைக்கு தன்னம்பிக்கையினை ஊட்டுவதுடன் தாழ்வு மனப்பான்மை வராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். உடனடியாக செய்யமுடியாவிடினும் என்னால் செய்யமுடியும் என்னும் நிலைக்கு அவர்கள் வரவேண்டும்.
- கற்றல் குறைபாடு பற்றி ஆராய்ந்து நீங்களே உங்களுக்கு ஆலோசகராகவேண்டும். இக் குறைபாடு ஏன்வருகின்றது?. குறைபாடு எங்களை வெல்லவிடாது நாம் எவ்வாறு இக்குறைபாட்டினை வெல்லலாம்?. எல்லாவற்றிற்கும் வைத்தியர்களையோ ஆசிரியர்களையோ நம்பியிராது நீங்களே சில கற்பித்தல் வழிமுறைகளை ஆராய்ந்து முயன்று பார்க்கலாம். ஏனெனில் வைத்தியர்கள் ஒரு பொதுவான நடைமுறை அல்லது விளக்கத்தினைத் தான் தரமுடியும். ஆனால் நீங்கள் உங்கள் குழந்தையினை மாத்திரம் அவதானித்து அதற்கேற்ப படிமுறைகள் பயிற்சிகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.
- நீங்களே உங்கள் குழந்தையின் ஆதரவாளராக மாறுங்கள். உங்கள் நடவடிக்கை குழந்தை உங்களைப் பின்பற்றி உங்கள் மீது நம்பிக்கை கொண்டு நீங்கள் என்ன செய்கின்றீர்களோ அதனை விளங்கிக் கொண்டு உங்களை முற்றுமுழுதாக தனது வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ளும்.

### எவ்வாறு சமாளிப்பது?

உங்கள் குழந்தையின் உணவில் அதிக நார்த்தன்மை, பழவகை, புரதம் சேர்த்துக் கொள்ளுங்கள். போதியளவு நித்திரை அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். அதாவது படுக்கைக்கு அவர்களை ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு அனுப்பி எழுப்புவதும் குறிப்பிட்ட நேரத்திற்கு எழுப்ப வேண்டும். நீங்கள் என்னதான் நேரம் கிடையாது மிகவும் இக்கட்டான நிலையில் இருப்பினும் முயன்று இதனைச் சரிசெய்தல் வேண்டும். கிரமமான உடற்பயிற்சி அல்லது களைக்கக் கூடிய வகையில் விளையாடச் செய்யுங்கள். அவர்களது கோபம், வெறுப்பு போன்ற உணர்வுகளுக்கு ஒரு வடிகால் கொடுங்கள். கட்டாயமாக அவர்கள் அந்த உணர்வுகள் உள்ள நேரம் அதனை வெளிக்காட்ட அனுமதித்து பின்னர் அவர்களுக்கு அவர்களது பிழையினை எடுத்துரையுங்கள்.

பாடசாலையுடன் தொடர்பு கொள்ளுங்கள். சில சமயங்களில் பாடசாலைகள் தாங்களாகவே உதவிகளை வழங்க முன்வராத போதிலும் நீங்கள் தொடர்பு கொண்டு அரசாங்கம் செய்யும் உதவிகளை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் எதிர்பார்ப்பினையும் தேவையினையும் பயமின்றி தயக்கமின்றி எடுத்துரையுங்கள்.


உங்கள் குழந்தைக்குரிய கற்றல் படிமுறையினை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். சில குழந்தைகள் பார்வையால் அதாவது படங்கள், வரைதல்களைப் பார்த்து அதன் மூலம் பயிலக் கூடியவர்கள். சிலர் குழந்தைகள் ஒரு இடத்தில் இருக்காது அசைந்தபடியே கற்பார்கள் மேலும் சிலருக்கு திரும்பத்திரும்ப பல தடவை சொல்ல வேண்டி இருக்கும். சிலருக்கு நேருக்கு நேர் பார்ப்பதன் மூலம் பயில முடியும். இதைக் கண்டுகொண்டு அதற்குரிய முறையினைப் பாவியுங்கள்.

முழுமூச்சாக அவர்களது கல்வி வெற்றியை மட்டும் நினையாதீர்கள். அவர்களுடைய வாழ்வின் வெற்றியைப் பற்றிச் சிந்தியுங்கள். ஆவன செய்யுங்கள். Think life success rather than academics success. இதில் வாழ்வின் வெற்றி எனப்படுவது தன்னால் இயலாத

28ம் பக்கம் பார்க்க...

> “உங்கள் பிள்ளைக்கு கற்றலில் குறைபாடு என்று கவலைப்படாதீர்கள், சோர்ந்து விடாதீர்கள். தைரியமாக இருங்கள். இந்தக் குறைபாட்டிலிருந்து நீங்கள் உங்கள் குழந்தையினை வெளிக்கொணரலாம்.”

ARGENTUM LENDING DIRECT CORPORATION
Reg # 10466
3621 Hwy 7 East, Suite # 211 Markham, ON, L3R 0G6
1193 A Brimley Rd, Unit 7, Scarborough, ON M1P 3G9



வீட்டு அடமானக் கடன் பெற்றிட உங்களுக்குத் தேவை நம்பிக்கையான ஒரு முகவர்...

OUR SERVICES:
• 1st & 2nd Mortgage
• Refinancing
• Commercial Loan
• Home Equity Mortgage
• Much more...

Are you a Temporary resident? Self Employed? Bankrupt? New Immigrant? Is Your SIN beginning with 9? Not to worry We will help you




Theven Kankesu, AMP
(Mortgage Agent)
FSCO LIC # M08008755
Direct: 416.939.8786
Fax: 647.343.0135
Email: theven.kankesu@migroup.ca

## அழகிய பூஞ்செடிகள்

# நான்கு மணிப் பூ

## (The 4 ‘O Clock Flower)

### வீட்டுத் தோட்டம் - 29



செல்லையா சந்திரசேகரி

அறிமுகம்:
நான்கு மணிப் பூ (The Four O-Clock Flower) மிராபிலிஸ் (Mirabilis), வெப்பமான இடங்களில், பல நிறப்பூக்களையுடையதாக அலங்கரிக்கப்படும் இனமாக வளர்க்கப்படுகின்றது. லத்தீன் மொழியில் Mirabilis என்பது, அதிசயமானது. Jalapa, மெக்சிகோவில் ஒரு நகரத்தைக் குறிக்கும். அதுவே Mirabilis jalapa எனும் இனம். 1540இல் Peruvian Andes எனும் இடத்திலிருந்து அனுப்பப்பட்டது. பின்னர், தென் அமெரிக்காவின் வெப்ப வலையங்களிலிருந்து அதி வெப்ப, வெப்ப வலையங்களுக்கு பரவியிருக்கின்றன. குளிர்த்தன்மை ஏற்படும் போது செடியானது இறந்துவிடும். இச்செடியின் புதுமை என்னவென்றால், அதே செடியில் வேறுபட்ட நிறப்பூக்கள் ஒரே சமயத்தில் காணப்படுகின்றன. எவரும் தினம் தினம் வேலைக்குச் சென்று திரும்பி வீடு சேரும் நேரங்களில் மலர்ச்சியோடு அவரது களைப்பைப் போக்குமாறு அவ்வேளை மட்டுமே பூக்கள் மலர்வதென்றால் அது ஆபூர்வம் தான். பூக்கள் ஒவ்வொரு நாளும் 4 மணியளவில் மலர்ந்து இரவுவரை விரிந்திருப்பது இன்னொரு பண்பாகும். அத்தோடு மட்டுமல்ல மலர்கள் இரவு நேரங்களை அதி நறுமணமூட்டி வைக்கின்றதையும் நாம் பார்க்கின்றோம்.

### வளரும் சூழல்:

ஓரளவு நிழல் கிடைக்கும் இடங்களில் இதனைப் பயிரிடலாம். இது மெல்லீதான தண்டையுடைய ஓரளவு நீடித்து வாழும் செடியாகும். 2 - 3 அடி உயரமாக வளரும். இது எத்தகைய தரைகளிலும் வாழக்கூடியது. இதனை ‘இரவின் அழகு’ ( Beauty of the Night) என அழைப்பார்கள். சீரான நீர் அவசியம். குளிர் காலங்களில் நீர் ஊற்றுவதைக் குறைக்கவும். செடியானது நன்கு கிளைகள் விட்டு உயரமாகவும் பரந்தும் வளரும். இலைகள் எப்பொழுதும் பச்சை நிறமாகவிருக்கும். செடியினைக் கரையோரமாகவோ அல்லது விரும்பிய தகுந்த இடங்களிலோ நடலாம். வித்துக்கள் மூலம் இலேசாக நாற்றுக்களைப் பெறமுடியும். வித்துக்கள் பத்து நாட்களில் முளைகளைத் தந்துவிடும். இலைதுளிர் காலத்தில் குளிர்த்தன்மை போனபின்னர் நாற்றுக்களைப் பயிரிடுங்கள். பூச்சி கொல்லிகளின் தாக்கம் இருப்பது அரிது. இருந்தும், மயிர்க்கொட்டிகளின் தாக்கம் இருந்தால், மோசமாக இலைகள் அரிக்கப்படலாம். பூச்சி கொல்லி மருந்தாக (Dipel) டிப்பல், சாதாரண இயற்கை மருந்தாக உபயோகிக்கப்படும். நல்ல பயன் கிடைக்கும்.



### எனது அநுபவம்:

நான் சிறு பையனாக இருக்கும்போது வீட்டின் ஒரு ஓரத்தில் அழகிய பூக்களையுடைய இச் செடி வளர்வதை அவதானித்தேன். இதன் கிழங்கினைத் தோண்டி எடுத்து, வீட்டின் முன்பக்கமாக நட்டுவிட்டேன். அடுத்த இளவேனீர்காலத்தில் அங்கு அனேக செடிகளைக் காணக்கூடியதாக இருந்தது. வெப்ப காலத்தில் அழகிய பூக்கள் காணப்பட்டன. ஒவ்வொரு பூவிலிருந்தும் கடினமான கறுத்த வித்து உண்டாகும். செடியை, இலேசாக வித்து மூலம் இனவிருத்தி செய்யலாம்.

### பூக்கள்:

பூக்கள் வழமையாகச் சாயங்காலங்களில் மட்டும் விரிகின்றன. அப்போது பூக்கள், எடுப்பாக இனிமையான நறுமணத்தை வீசுகின்றன. இதனால் சைனா நாட்டில் முதலாகக் குறிக்கப்படும் பெயராக “Shower flower” என அழைக்கப்படுகின்றது. இச்செடியை நோக்கும் போது மெண்டலின் பரிணாம வரலாறு பற்றிய ஞாபகம் வருகின்றது. இவரது ஆட்சியான (Mendel’s Law of Dominance) தத்துவத் கொள்கைக்கு விதிவிலக்காக, நிகழ்வு ஏற்பட்டிருக்கின்றது. ஆராச்சியின்போது கையாண்டுள்ள சிவப்பு நிறப்பூக்களைத் தரும் செடிகள் வெள்ளை நிறப்பூக்களைத் தரும் செடிகளோடு கலப்புச் செய்யும்போது வழமையாக ஏற்படும் சிவப்பு நிறப்பூக்களைத் தரும் செடி கள் கிடையாமல் இரு நிறங்கள் தரும் செடிகள் சமனாகக் கிடைக்கப் பெற்றன. பூக்கள் குழலுருவில் தனியனாகவோ, தொகுப்புகளாகவோ சிவப்பு, மயந்தா, செம் மஞ்சள், மஞ்சள், வெள்ளை நிறங்களில் காணப்படும். இரு நிறப்பூக்களும் காணப்படு கின்றன. பூக்களில் அதிகூடிய தேன் இருப்பதால் பட்டாம் பூச்சிகள், நிலாப் பூச்சிகள், ரீங்காரம் செய்யும் சிறிய பறவைகள், பூக்களை நாடி வருகின்றன.

### செடியின் பயன்:

செடியானது அநேகமான மருத்துவப் பாவனைக்கு உபயோகிக்கப்படும். இந்தியாவில் ஒறிசா மாநிலத்து பழங்குடிமக்கள் செடியின் வேர்களைக் கறுத்தமிளகு சேர்த்து பசையாக அரைத்து, கண்கட்டி, கண்கலங்குதல் போன்ற வருத்தத்திற்கு பாவிப்பார்கள். தோலின் பல வித பங்கசு நோய்களுக்கு இலைகள் பயன் படுகின்றன. பூக்கள், சில உணவுகள் குறிப்பாக கேக் வகைகள், ஜெலி வகைகள் நிறமாக்குவதற்குப் பயன்படும். வித்துக்கள் அரைக்கப்பட்டு முகபாவனைப் பொருட்கள் செய்வதற்கு உபயோகமாகும்.

sekari.s@thaiveedu.comHelvetica

■ ■ ■



Family Vitaceae

# முந்திரிகை (திராட்சை)

**(Botanical name:Vitis vinifera: Eng.Name: Grape Vine)**

திராட்சை/முந்திரிகையானது (Vitis vinifera), மத்திய அமெரிக்கா, தென் மேற்கு ஆசியா, சைனா, ஆபிரிக்கா, இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஆரம்பகாலம் தொடக்கம் பயிரிடப்பட்டாலும், பின்னர் ஏனைய நாடுகளிலும் பெருந்தொகையாக வளர்க்கப்படுகின்றது. இதனது அறிமுகம் 130 - 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னதாக மனிதனோடு தொடர்புகொண்டு இருந்ததாகத் தெரியவருகின்றது. பற்றிப்படரும் கொடியாக வளர்ந்து பல நிற ருசியான பழங்களைத் தந்து மனிதஇனத்தின் ஆரோக்கிய உணவாகவும் மருத்துவத் தீர்வாகவும் இருக்கின்றது.



கொடியானது, வளர்ச்சி அடை யும்போது கிளைகள் மொத்தமாகவருவதால் கொடுக்கும் ஆதரவுகள் பலமாக இருக்குமாறு கவனிக்க வேண்டும். ஆரோக்கியமாகவும் அழகாகவும் செடிகள் இருப்பதற்கு கத்தரித்தல் மிகவும் அவசியமாகிறது.

காலப்போக்கின் விஞ்ஞான வளர்ச்சியால் பல புதிய கைமுறைகள் கையாளப்பட்டு, திராட்சையின் திறமையும், உற்பத்தியும் பெருகி வந்தமை குறிப்பிடக் கூடியதாகும்.

இதனது இலைகள் குருதி பெருகுதல், நோ, வீக்கம் போன்றவற்றிற்கு பாவிக்கப் படும்.

முந்திரிவத்தல் மலச்சிக்கலுக்கு உகந்த மருந்து.
நன்கு முதிர்ந்த முந்திரிகைப்பழம் புற்றுநோய், அம்மைநோய், கண்நோய், ஈரல்நோய், சிறுநீரகநோய் எல்லாவற்றிற்கும் பயன்படும்.

ஜூன் மாதம் முதலாந்திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# SM MEDICAL CENTRE




## WALK-IN & FAMILY PRACTICE

**Dr. Sathiyapooma Manoharan** (MBBS, MD, CCFP)
Family Physician

Open 6 Days a Week - Monday to Saturday
9:00 am to 7:00 pm
Sunday Closed

முன்பதிவு விரும்பத்தக்கது. (Appointment preferred)



கனடாவில் Danforth & Morningside உட்பட
கடந்த 8 வருட சேவையுடன்
வைத்தியத்துறையில் 19 வருடங்கள் சிறந்த அனுபவம் பெற்றவர்.
Blood Test, EKG இவற்றுடன் விசேட மருத்துவ நிபுணர்களின்
சேவையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

6065 Steeles Ave. East, Scarborough, Ontario, M1X 0A8
Tel : 416-754-0003 Fax : 416-754-0005

# இலகுவாக மோட்கேஜ்

கடினமான இலக்குகளையும் நாம் இலகுவாக்குவோம்

## Mortgages

- First Time Buyers
- Refinaning
- Renewal
- Self Employed
- Pre-Aproval
- Bankruptcies
- Bad Credit
- Debt Consultant
- Non-verifiable Income
- New immigrant



### We Will

- Simplify the entire process of mortgage financing
- Save you money and time
- Get you the most competitive rates
- Offer you the widest selection of mortgage options including variable rate, fixed rate, capped variable rate, step, secured lines etc. for all situations including self-employed, no down payment ....
- Counsel you on credit and mortgage qualifications
- Provide maximum flexibility in financing choices
- Assist you every step of the way

**Best Rates**

VERICO TMP

**Siva Ratnasingam**
Lic: M08002133
Brokerage # 11156
SENIOR MORTGAGE CONSULTANT
*2005,2006,2007,2008 Diamond Award Winner*
416.520.1214



We can get you a mortgage in most situations regardless of your circumstances. Where traditional financial institutions have given the answer "No", We routinely says "Yes" and gets you a product that suits your needs at an extremely competitive rate.

**Nanthini Singarajah, AMP**

**VERICO**

MORTGAGE AGENT

License #: M08005294

THE MORTGAGE PRACTICE INC.

Brokerage #: 11156

TMP

THE MORTGAGE PRACTICE

*"Quick and easy answer to your lending needs"*

Tel: (905) 787-2027
Fax: (866) 903-4664

Cell: (416) 704-4006
Email: nsingarajah@vtmp.ca

30 Via Renzo Drive,
Suite 200, Richmond Hill,
ON L4S 0B8
**(Leslie/Elgin Mills)**

**HO:** 2425 Matheson Blvd E.,
8th Floor,
Mississauga,
ON L4W 5K4.

**Other Services**
- Income Tax
  - Personal
  - Business
  - Corporate
- Life Insurance
- RRSP
- RESP

**Specialize In**
- Residential Mortgage
- 1st Mortgage
- 2nd Mortgage
- Refinancing
- HELO (home equity line of credit)

Services available all over Canada

Alphaweb 416-2387222

**RAPID SECURITY**

WE PROTECT YOU

"We'll Beat any Quote"

**Indoor & Outdoor Guard for**
Commercial
Residential
Retail
Healthcare
Finance Institution



S101-880 Ellesmere Rd, Toronto ON M1P 2W6 **Office:** (416) 321-6777 **Tel:** (416) 841-1415

**New Midwest auto collision**

**"Quality & service First"**

- Specialized in insurance claims
- FULL Service All-in-One Body Shop
- Free Estimate Available
- We repair all makes & models
- Free towing Available
- Customer Satisfaction Guaranteed

TOYOTA BENTLEY CHRYSLER DODGE mazda VOLVO CHEVROLET HYUNDAI DAEWOO

**(416) 751-9280**
**260 Midwest Rd, Unit 8,**
**Scarborough, ON, M1P 3B4**
**newmidwestauto@gmail.com**

**Contact Person:**
**Ruban or Shan**





Alphaweb 416-238 7222


Sesan Flooring Centre
உங்கள் அனைத்து
Hardwood, Laminate, Stairs, Tiles, Natural Stones & Kitchen
தேவைகளுக்கு
HARDWOOD
RED OAK (S&B)
MAPLE
(S&B)
LAMINATE
8.3mm
12.3MM
TILES
MOSAIC
GLASS
CRYSTAL
STAINLESS
TILES
எங்கள் காட்சியறைக்கு ஒரு முறை வாருங்கள் !!!
WE ARE THE OFFICIAL DEALER FOR
Muskoka
Satin Finish
Sunca
COSWICK
Solid Hardwood Floors
WE ARE SPECIALIZED IN MOSAIC STONES
9909 Highway 48, Unit #10. Markham. L6E 0B7
Tel: 905-554-9199 | www.sesanflooring.com


வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...
$178,000
Keele & Finch
4 Bedrooms 2 Washroom
$238,500
25th Siderd & Rose Ln
3 Bedrooms 2 Washroom
$294,900
Victoria Park & St Clair
2 Bedrooms 3 Washroom
$319,900
Midland & St Clair
3+2 Bedrooms 3 Washroom
$379,900
Taunton & Garden
4 Bedrooms 3 Washroom
$394,900
Taunton & Garden
3 Bedrooms 3 Washroom
$399,999
Brimley & Denison
3+1 Bedrooms 4 Washroom
$429,900
Middlefield & Elson
3+2 Bedrooms 4 Washroom
$429,900
Morningside & Finch
4+2 Bedrooms 4 Washroom
Finished & Sep Ent. Basement
$444,900
Morningside & Finch
4 Bedrooms 3 Washroom
$459,900
McCowan & Steeles
4 Bedrooms 3 Washroom
$499,900
McCowan & Highglen
4 Bedrooms 3 Washroom
Please Contact Us...
Ravi Logarajah
Tharsi Rajenthiram
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Today Realty Ltd., Brokerage*
Call: 416-843-7474
BUS: 416-298-3200 / FAX: 416-298-3440


R & S AUTO SALES
TOP QUALITY USED CAR DEALER
வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்
34 வருட அனுபவம்
• We Sell Bank Reposssed Cars
• Accident Vehicle Repair
• Computerized Painting
• Motor Vehicle Accident
• Traffic Tickets
HONDA
TOYOTA
GM-MINI VANS
தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha
R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
5310 Finch Ave. East, Unit 23
Scarborough, ON M1S 5E8
416-412-3838
416-836-5825


வீடோ, வியாபாரமோ?
விசயம் தெரிந்தவர்களை நாடுங்கள்
HOMELIFE
Homelife/Future
Realty inc. Brokerage
Higher Standard Agents... Higher Results!
Vivek Subramaniam
Sales Representative
Direct: 416 898 4846
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated

# தலைமை தாங்கும் தாய்க்குலம்

மேற்குலக நாடுகளில் ஒரு முக்கிய மாற்றம் ஒன்று நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. நாம் அறிந்த பல குடும்பங்களில் பெண்கள் முதன்மையான உழைப்பாளியாக இருக்க ஆண்கள் அவரை வேலைக்கு வாகனம் செலுத்துனர் ஆகவும் வீட்டு வேலைகளான பிள்ளைப் பராமரிப்பு சமையல் போன்றவற்றில் நிபுணத்துவம் பெற்றவர்களாகவும் மாறிவருவதைப் பார்க்கிறோம். அத்துடன் படித்த படிப்பை விடக் குறைந்த வேலையைச் செய்பவர்களாகவும் இருக்கிறார்கள். பெண்களும் நுட்பம் தேர்வு என்பன நிறைந்த வேலைகளான வரைகலை, மருத்துவம், சட்டத் துறை, வங்கி என்பனவற்றில் தலைமைத்துவத்தை ஏற்படுத்தி வருகிறார்கள். இவர்களுடைய கணவர்கள் எல்லாம் பெரிதாக விரும்பி வரவேற்காமலே வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க வேண்டி வந்து விட்டது.

ஆனால் முப்பது வருடங்களுக்கு முன் கதை வேறு. வீட்டிலே சாப்பிட்ட கோப்பையைக் கழுவ ஒரு ஆள் தேவை. முதன்மையான உழைப்பாளியாக இருப்பதால் செல்வாக்கே தனி. இதன் அடிப்படையிலும் பிள்ளை வரம் கொடுக்கும் அதீத திறமையினாலும் சீதனம் வாங்கும் விலை கூடிக் கொண்டே சென்றது. தற்போது நடக்கும் இந்த மாற்றம் நிரந்தரமானதா? ஒவ்வொரு வயது குழுவிலும் ஒவ்வொரு வருமான கட்டத்திலும் பிரதான உழைப்பாளியாக இருக்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொன்டே வருகிறது. இதற்குக் காரணம் கூடுதலாக பெண்கள் வேலைக்குப் புறப்பட்டது அல்ல. ஆண்கள் வேலை செய்வதைக் குறைத்துக் கொண்டதே ஆகும். 2008ல் அமெரிக்க பொருளாதாரப் பின்னிடைவினால் பாதிக்கப்பட்டது 75 வீதமான ஆண்களே. அவர்கள் மேலாதிக்கம் செலுத்தும் கட்டுமான வேலைகள், தொழிற்சாலை உற்பத்தி வேலைகள், வங்கித்துறை வேலைகள் என்பன பாதிக்கப்பட்டன. பெரும்பாலான இந்த வேலைகள் திரும்பி வரப்போவதில்லை. உருக்கு நகரம் எனப்பட்ட ஹமில்ரனில் இன்று இரு வீதமானவர்கள் மட்டுமே உருக்குத் தொழிலில் இருக்கிறார்கள். முன்பொரு காலத்தில் சட்(B)பெரியில் இன்கோவில்வேலை செய்த 12,000 பேரில் தற்போது 3,300 பேரே அந்தத் தொழில் இருக்கிறார்கள்.

2007 கனடாவில் ஒரு பெரிய மாற்றம் நடந்தது. அதற்கு பெரிதாக எவரும் ஆலாவரணம் செய்யவில்லை. மேற்கு நாடுகளில் முதல் தடவையாக, கனடாவில் வேலை செய்யும் மக்கள் தொகையில் பெண்கள் தொகை பெரும்பான்மையாக வந்தது. ஆரம்பத்தில் இந்த வித்தியாசம் மிகவும் சிறியது. 0.5 வீதம், 2009ல் இது 3.5 வீதம். இந்த ஆண்டு சனவரி மாதம் அமெரிக்க உழைப்பாளிகளில் பெண்கள் தொகை பெரும்பான்மையை அடைந்தது.

இந்த உழைக்கும், காப்புக் கரங்களின் மேலாதிக்கம் இனிமேல் நிரந்தரம் என்றே தகவல்களும் ஆய்வுகளும் தெரிவிக்கின்றன. 2008ல் வேலையிழந்த தந்தையரது மகன்கள் பல்கலைக் கழகங்களுக்கு சென்றிருந்தால் கதை வேறை. ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. ஆக 18 வீதமான 18 – 21 வயதுக் குழுவில் அடங்கும் ஆண்களே பல் கலைக்கழகங்களில் படிக்கிறார்கள். ஆவர்களது சகோதரிகள் மிகவும் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறார்கள். படிப்பில் அண்ணாமாரைவிட மிகவும் பிடிப்பாக இருப்பதால் நல்ல மதிப்பெண்கள் வாங்குகிறார்கள். இதனால் நல்ல வேலைகளையும் அண்ணா மாரின் போட்டியின்றி பெற்றுக்கொள்ளத் தயாராகின்றார்கள்.

BA பட்டம் அடிப்படையான ஒரு நல்ல வேலைக்கு ஆதாரம் என எல்லோருக்கும் தெரியும். ஆனால் தற்போதைய BA பட்டதாரிகளில் 58 வீதமானவர்கள் பெண்கள்.




அடுத்து வரும் இரு தசாப்தங்களில் எல்லா வகையான வேலைகளிலும் பெண்களின் பாகம் அதிகரித்துச் செல்லப் போகிறது சுத்தமாக்கும் (Janitorial) துறையைத் தவிர.

இந்த மாற்றங்களினால் சமூக கலாச்சார விழுமியங்களில் பாரதூரமான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. மேற்கு நாடுகளில் பெற்றோர் பெண் குழந்தைகளை விரும்பும் நிலை ஏற்படக்கூடிய சூழல் ஏற்பட்டு வருகிறது. மனித குலச் சரித்திரத்தில் பெயரையும் பரம்பரைப் பெருமையையும் நிலைநாட்ட ஆண் குழந்தைகள் விரும்பப்பட்டார்கள். அமெரிக்க நகரங்களில் இருந்து சீன நகரங்கள் வரைக்கும் பெண் குழந்தைகளை விரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போதய கேள்வி என்னவென்றால் இந்தப் பொருளாதாரச் சூழல் பெண்களுக்கு ஆதாரத்தைக் கொடுக்கிறதா என்பதே.

இந்தக் கேள்விக்கு ஆமாம் என்பதே பதிலாக இருக்க முடியும். இந்த நவீன கைத்தொழில் பொருளாதாரத்திற்குப் பின்னால் மன எழுச்சியுடன் கூடிய புத்திக்கூர்மையைப் பாவித்து சிக்கலான சமூக உறவுகளை கட்டி எழுப்பும் நிலையில் வளைந்து கொடுக்கக்கூடியவர்களால் வெற்றி பெறமுடியும். அத்துடன் நன்றாகத் தொடர்புகளை மேற்கொள்ளக்கூடியவர்களுடன் துல்லியமாக தெளிவாகக் குவியப்படுத்தி கருமங்களை ஆற்றக்கூடியவர்கள் இலகுவில் வேலைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்த வேலைகளுக்கு ஆண் பெண் பாகுபாடு இல்லை. அதீத பலத்தினால் செய்யப்படும் வேலைகள் குறைவடைந்த போதிலும் ஆண்களுக்கு அரிவரி ஆசிரியராகப் பணிபுரியும் ஆர்வம் ஏற்படுவதில்லை.

அத்துடன் ஆண்களுக்கு நீண்ட படிப்புடன் நேரத்தை ஈடுபடுத்துவதிலும் விருப்பம் இருப்பதில்லை. அதனால்தான் பல்கலைக்கழகங் களிலும் பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது. ஆண்களும் பெண்களும் வித்தியாசமான பழக்கங்களை உடையவர்கள். முதலாவது ஆண்டில் ஆண்கள் விளையாட்டு உடல் பயிற்சி தொலைக்காட்சி கொண்டாட்டம். ஆனால் பெண்களோ படிப்பு... படிப்புத்தான்.

ராகுலன்
- Accountant -



ஆண்கள் சந்தர்ப்பத்திற்கேற்ப பொருளாதார உணர்வுடன் செயல் படுவார்களேயானல் பல்கலைக்கழகப்படிப்பில் கவனம் செலுத்துவார்கள். ஆனால் எல்லோரும் எல்லா நேரத்திலும் சரியாக சிந்திப்பதில்லை. இதனால், திசையின்றி அலையும் வேலைக்கு தகுதியற்ற ஆண் வர்க்கம் உருவாகி வருகிறது.

இனிவரும் காலங்களில் ஆணுக்கும் பெண்ணுக்குமான உறவில் எப்படிப்பட்ட மாற்றம் ஏற்படும்? மீண்டும் தமது இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள ஆண்கள் என்ன செய்யப் போகிறார்கள்? யாருக்கும் தெரியாது. ஆனால் ஒன்றும் மட்டும் உறுதி இதுவரை காலமும் சமுதாயத்தில் முக்கியமாக இருந்த பல சட்டங்களுக்கு இனி பலம் இருக்கப் போவதில்லை.

ragulan@thaiveedu.com

■ ■ ■




உங்கள் நிகழ்வுகளைப் பார்ப்பதற்கும் பதிவதற்கும்
www.inayam.net

# இருவிழி போற்றி வாழ்வோமாக



சிவவதனி பிரபாகரன்

உலகம் உறவுகளின் பிணைப்பினால் இயங்கிக் கொண்டிருக்கின்றது. மனிதவாழ்வினை மகத்துவப்படுத்தும் விடயங்களில் உறவும் ஒன்றாகத் திகழ்கின்றது. உறவுகளில் உயர்ந்தது பெற்றோர் பிள்ளைகளிடையேயுள்ள உறவு. குறிப்பாக தாய் தந்தையரின் அன்பிற்கு உலகில் வேறொன்றும் இணையாக முடியாது. எதையும் எதிர்பார்க்காது தம்மையே ஈகம் செய்யும் இவ்விணையற்ற அன்புடையோராதலால் பெற்றோர் இறைவனையும் மிஞ்சுபவராய் போற்றப்படுகின்றனர். 'மாதா பிதா குரு தெய்வம்' என்னும் வரிசையில் முதன்மை நிலையில் போற்றப்படுபவர்கள் பெற்றோராவர். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், எனக் கொன்றைவேந்தனில் ஔவையார் கூறியது போல் உலகில் தாய் தந்தையர்க்கு இணையான உறவு வேறொன்றுமில்லை. கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்குவதை விட குடியிருந்த கோவிலான அன்னையை தொழுவது சிறப்பு.

ஈன்று புறந்தருதலும் சான்றோர் ஆக்குதலும் தம் கடனெனப் போற்றிப் பிள்ளைகளை வளர்ப்பதையே தவமெனக் கொண்டேற்பவர்கள் பெற்றோர். அன்னையும் தந்தையும் நாம் கண்ணால் காணும் தெய்வங்கள். இவ்விருவரும் எம்மிரு விழிகளுக்கும் ஒப்பானவர்கள். இத்தகைய தாய் தந்தையரின் சிறப்பை ஔவையாரும் கொன்றை வேந்தனில்...

'தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை'

என எடுத்தியம்புகின்றார். இத்தகைய மேன்மை கொண்ட தாய் தந்தையரை போற்றி வணங்கி கீழ்ப்படிந்து நடப்பதுவே ஒரு நல்ல பிள்ளையின் தலையாய கடன் ஆகும். பார்ப்பவர்கள் "இந்த கிடைத்தற்கரிய பேறான சிறந்த பிள்ளையைப் பெற்றவர்கள் யாரோ? அவர்கள் பெரும் பாக்கியசாலிகள அன்றோ!" என வியந்து போற்றும் படியாக வாழ்வதுவே பெற்றோருக்குப் பிள்ளைகள் செய்யவேண்டிய பெரும் உதவியாகும். இதனையே வள்ளுவரும்

"மகன் தந்தைக்காற்றும் உதவி
இவன்தந்தை
என் நோற்றான் கொல்எனும் சொல்"

என்கின்றார். ஒரு பிள்ளையை பத்துமாதம் சுமந்து பகலிரவாய் விழித்திருந்து கடுந்தவம் ஆற்றிப் பெறுகின்றாள் தாய். அவள் பட்ட வலியையெல்லாம் மறந்து மண்ணில் பிறக்கும் சேயை கைகளில் அள்ளி அணைக்கையிலே அளவில்லாத ஆனந்தம் அடைகின்றாள். எனினும் அதைவிட அதிக இன்பத்தை அவளுக்குக் கொடுக்க அவளின் பிள்ளை விரும்புமேயாயின் அதற்கு அப்பிள்ளை 'சான்றோன்' எனப் பிறரால் போற்றப்படும் உயர்நிலையை எய்த வேண்டும். அங்ஙனம் தன் பிள்ளை வையகத்தோரால் போற்றப்படுகையில் தாயானவள் தான் அப்பிள்ளையைப் பெற்றபோது அடைந்த பேரின்பத்தை மிஞ்சும் வண்ணம் பெரு மகிழ்ச்சியடைகின்றாள். இதனை வள்ளுவர் இக்குறளூடாக மிக அழகாகக் கூறுகின்றார்.

"ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும்
தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்டதாய்"

உலக உறவுகளெல்லாம் ஏதேனும் ஒரு பொழுதில் உடைந்து போகலாம். உறவு முறிவுகளுக்கு உறவுகளிடையே ஏற்படும் காழ்ப்புணர்வே காரணமாகும். ஆனால் எந்த வேளையிலுமே எந்த ஒரு தாய்க்கும் தன் குழந்தைமேல் வெறுப்பு உருவாவதேயில்லை. இதற்கு ஆறறிவு கொண்ட மனிதன் மட்டுமல்ல ஐந்தறிவுடைய மிருகங்களும் விதிவிலக்காக முடியாது. உலகமே திரண்டுவந்து ஒருவனை வெறுத்து ஒதுக்கி தூக்கி எறிந்தாலும், வாழ்க்கையின் ஓரத்திற்கே சென்று வாழ வழியின்றி, இழிநிலையுற்று தாழ்வெய்தினாலும் அன்னையின் இதயபீடத்தில் மட்டும் அம்மகவுக்கான அரியணை உயர்நிலையிலேயே என்றும் இருக்கும். அவ்வன்னையின் உயிருள்ளவரை அத்தாயின் இதயம் அவனை ஏந்திச் சுமக்கும். ஏனெனில் தன் மகவுக்காக மட்டுமே துடிக்கத் தெரிந்தது தாயின் இதயம்! உலகமே வெறுத்தாலும் அன்னைக்குத் தன் பிள்ளை என்றுமே உயர்வானவனே! இதனையே "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்னும் பழமொழி கூறுகின்றது. அன்பு காட்ட மட்டுமே தெரிந்தவள் 'அம்மா' அக்கறை மிக்கவர் 'அப்பா' இதனை பிள்ளைகள் மனமார உணர்ந்து அவர்களைப் போற்றி நடப்பதே வெற்றிவாழ்வின் முதலப்படி. அன்னை தந்தையரை வணங்கிப் பேணுபவர் வாழ்வு நிச்சயம் உயர்வெய்தும்.

> "தாய் தந்தையர் உயிரோடு இருக்கும் போது அவர்களைப் போற்றிப் அன்பு காட்டாமல் தனிமைப்படுத்தி வேதனையுறச் செய்துவிட்டு அவர்கள் இறந்த பின் சடங்குகள் சம்பிரதாயங்கள் என ஆடம்பரமாக செய்கையில் வேதனை எழுகின்றது."

தாய் தந்தையர் உயிரோடு இருக்கும் போது அவர்களைப் போற்றிப் பேணாமல் மதியாமல் அன்பு காட்டாமல் தனிமைப்படுத்தி வேதனையுறச் செய்துவிட்டு அவர்கள் இறந்த பின் சடங்குகள் சம்பிரதாயங்களை உலகம் போற்ற வேண்டும் என ஆடம்பரமாக செய்யும் இன்றைய பல பிள்ளைகளைக் காண்கையில் வேதனை எழுகின்றது.

ஒரு குட்டிக்கதை ஞாபகம் வருகிறது. ஒரு பூங்காவிற்கு ஒரு தந்தையை அழைத்துச் செல்கின்றார் ஒரு மகன். அத்தந்தை ஒரு விடயத்தைப் பற்றி ஆயிரம் கேள்விகளைக் கேட்டுத் துளைத்தெடுக்க மகன் சினமுற்று எரிந்து விழுந்து தந்தையைக் கடுமையாகப் பேசுகின்றான். தந்தையின் முகம் வாடுகின்றது. தந்தை மிகுந்த வேதனையோடு மகனிடம் சொல்கிறார் "நீ சிறுவனாக இருக்கும் போது நாம் இந்தப் பூங்காவிற்கு அடிக்கடி வருவோம். நீ என்னிடம் இதுபோல் பல்லாயிரம் கேள்விகள் கேட்பாய் நான் புன்னகையோடு பதில் கூறுவேன். ஒரு நாளும் உன்போல் சினமுற்று நான் உன்மேல் எரிந்து விழுந்ததில்லை. உன்னை வெறுத்ததேயில்லை. மாறாக உன் அறிவு வளர்ச்சியைக் கண்டு பூரிப்பேன். இரசிப்பேன். பொறுமையாக பதில் தருவேன். ஆனால் நீ ஏன் என்னை வெறுக்கின்றாய்? ஏன் என்மீது சிறுசிறு விடயங்களுக்கும் கோபம் கொள்கின்றாய்?"

இது ஒரு சிறிய சம்பவம் தான். ஆனால் மிகப்பெரிய உண்மை இதனுள் ஒளிந்திருக்கின்றது. வாசித்தவுடன் நெஞ்சம் நெகிழ்கின்றதல்லவா? முதுமையெய்தும் போது பெற்றவர்களும் குழந்தைகள் போன்றே மாறுகின்றனர் என்பதை பிள்ளைகள் எண்ணிப்பார்க்க வேண்டும். பெற்றோர் மீது அன்பும் அக்கறையும் காட்டி மனமகிழ்வோடு அவர்களை வைத்திருக்க வேண்டும். பெற்றோர் அருகிருப்பது ஆண்டவனே உடனிருப்பதற்குச் சமமாகும். அப்பேறை உணர்ந்து பெற்றோரை மதித்து அவர்கள் கருத்துகளை மதித்து அவர்கள் உணர்வுகளை மதித்து அன்போடு போற்ற வேண்டும்.

அன்பைக் கொட்டி வளர்த்த தம் பிள்ளைகளிடமிருந்து கடுகளவேனும் முகமலர்ச்சியுடனான அன்பு கிடையாதா என ஏங்கும் பெற்றோர் பலரை இன்றைய அவசர உலகில் காண்கையிலே மனம் வேதனையடைகின்றது. குறிப்பாக புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்களில் பலர் இவ்வண்ணம் அறியாமையால் தவறிழைத்துக் கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது. பெற்றோர் இறந்த பின் அழுது புலம்பிப் பயனில்லை. உயிரோடு இருக்கின்ற போது அவர்களை மகிழ்வாக அன்பாக வைத்திருக்க என்ன செய்தோம் என நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இறந்த பின் கிரியைகள் சடங்குகள் சாந்திகள் செய்வதைவிட இருக்கும் வரை பெற்றோரை அன்பாக அரவணைத்துப் பேணுவதே பிள்ளைகள் செய்ய வேண்டிய தலையாய கடனாகும். சாந்தி என்பது இறந்தவருக்குச் செய்வதில்லை, உயிரோடு உள்ளவர்கள் நாடும் பெரும் செல்வமாகும். பெற்றோருக்கு மனச்சாந்தி தரும் பிள்ளைகளாக இன்று எம்மில் எத்தனை பேர் வாழ்கின்றனர்? அங்ஙனம் அவர்கள் மனம் போற்ற வாழ்வோமேயானால் அவர்களது வாழ்வில் இன்பமன்றி துன்பமெனவேதுமில்லை.


இளவயதில் தன்னலம் மறந்து தம் பிள்ளைகள் நலனுக்காக பாடுபட்டு பல அர்ப்பணிப்புகளைச் செய்த பெற்றோர்கள் முதுமையின் இயலாமையில் குழந்தைகள் போல் தம் பிள்ளைகளில் தங்கி வாழும் நிலை உருவாக நேரிடின் அவர்களை பாரமாக எண்ணுவதே மாபெரும் பாவம். அவர்களின் அடிப்படைத் தேவை அன்பொன்றே என்பதை பிள்ளைகள் புரிந்து நடக்கவேண்டும். சில பிள்ளைகள் அவசர உலகில் தம் முது பெற்றோர்க்கு தேவையான உணவு, உடை, உறைவிடம் போன்றவற்றை வழங்குகின்றோம் தானே. அவர்களுக்கு என்ன குறை? சும்மா சும்மா எம்மைக் குறைகூறுகின்றார்கள் எனக் கூறிக் கொண்டு அவர்களுடன் ஒரு பொழுதேனும் நின்று நிதானித்து மனம்விட்டு பேசி அன்பு காட்டாது போகின்றனர். இது பெருந்தவறு. வயதான பெற்றோர் பிள்ளைகளிடம் எதிர்பார்ப்பது ஒரு சாண் வயிற்றினை நிரப்புவதற்கு தேவையான உணவையல்ல. கடலளவு அன்பைக் கொட்டி வளர்த்த தம் பிள்ளையிடமிருந்து கடுகளவோனும் முகமலர்சியுடனான அன்பு கிடையாதா என ஏங்கும் பெற்றோர் பலரை குறிப்பாக புலம் பெயர்ந்த நாடுகளில் காண்கையிலே மனம் மிகவும் வேதனையடைகின்றது.

சில பிள்ளைகள் 'அவர்கள் எங்கள் பெற்றோர்கள் தானே பெரிது படுத்தமாட்டார்கள்' என்னும் எண்ணத்தில் தமது மன உழைச்சல்களை 'சிடு சிடு' என இயலாத முதுபெற்றோரிடம் கொட்டி விடுகின்றனர்.

பிள்ளைகள் என்னதான் பெரியவர்களானாலும் பெற்றோரின் விழிகளுக்கு அவர்கள் என்றுமே சிறு குழந்தைகள் தான். தம் பிள்ளைகள் குழந்தைகளாக இருந்தபோது பிஞ்சுப்பாதங்களால் தம் மார்பில் எட்டி உதைத்த வேளைகளில் அவர்களின் மலர்ப்பாதங்களை அள்ளி யெடுத்து கொஞ்சிய பெற்றோரல்லவா? எத்தனை வலிகளை பிள்ளைகள் தந்தாலும் பொறுத்துப் போவதோடு பிள்ளைகளின் நலன் குறித்தே வருந்தும் தெய்வீக மனம் கொண்டவர்கள் பெற்றோர்கள். ஒரு நாட்டுக்கே தலைவனானாலும் தாயின் கண்களுக்கு தன் பிள்ளை என்றுமே பச்சிளம் சிசுவாகவே காட்சி தரும். அதனால் தான் தம் பிள்ளைகளின் தவறுகளையும் உதாசீனத்தையும் பிள்ளைக் குணத்தில் செய்தான் என பொறுத்துக்

22ம் பக்கம் பார்க்க...

ALL YOUR FINANCIAL NEEDS



V.S. Thurairajah
President, Commissioner of Oaths
COMMUNITY
FINANCIAL SERVICE GROUP INC.
Serving You, For Your Secure Future
416-548-7300 / 647-829-4044
2100 Ellesmere Road, Unit 105,
Scarborough, ON. M1H 3B7
@ Markham & Ellesmere (North West Corner)

ALL YOUR MORTGAGE NEEDS
RBC
RBC Royal Bank
Logi Thurairajah
Mobile Mortgage Specialist
Royal Bank of Canada
1761 Victoria Street East,
Whitby, ON L1N 9W4
logi.thurairajah@rbc.com
Cell : 416-278-2972
Fax : 416-548-7865

# MORTGAGE

- 1st & 2nd Mortgages
- New Immigrants / Self Employed
- Refinance
- Equity Line of Credit
- Renewal
- All other Financial Arrangement

**Kethes Sivasubramaniyam**

Mortgage Agent - (Lic # M08006105)

**Cell : 416.873.5780**

Via Financial (Lic # 10669) Services Inc.

5200 Finch Ave. E, Suite 304, Scarborough, ON. M1S 4Z5

Tel : 416-548-8005 Fax : 416-548-8006

Head Office : 120 Traders Blvd. Suite 206, Mississauga, ON. L4Z 2H7



# வருமானவரிச்சேவையில் பலவருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால் நம்பிக்கையான சேவை

- Personal Tax
- Small Business Tax
- E-File Services
- Arrange RRSP
- Maximum Refund
- Tax Saving Advice




**KETVAR**

**TAX & ACCOUNTING**

304-5200 Finch Ave.E, (Middlefield & Finch)

Toronto, ON M1S 4Z5

**Tel : 416-873-5780 / 416-548-8005**

Email : ketvar@gmail.com

# மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்...

வீடு வாங்கவும் விற்கவும்
குறைந்த வட்டி வீதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்


**Ravi. Paramu**


Broker

**Direct: 416-262-4176**


"The best compliment you can give me is the referral of your family and friends"

Thank you for your trust




**Neilson / Finch**
4+1 Bedrooms
3 Washroom Finished Basement




**Mccowan/16th**
4+2 Bedrooms 4 Washroom

CONVENIENCE/VARIETY
$95,000
Plus Stock
IN OSHAWA



**HomeLife Today Realty Ltd., Brokerage***

**Bus: 416-298-3200**

31 Progress Ave., Suite 210,
Toronto, ON, M1P 4S6

# வீடும் விடுதலையும்



செந்தூரன் புனிதவேல்
காப்புறுதி முகவர் -

கோடை காலம் ஆரம்பித்துவிட்டது. அத்துடன் விடுமுறைக்கு நிண்ட தூர பயணங்கள் மேற்கொள்வதும் இயல்பானதே. குறிப்பாக இவ்வருடம் நெடிய காலத்தின் பின் இலங்கையில் மக்கள் சுதந்திரமாக, போர் அபாயம் இல்லாத நிலையில் பயணிக்கக்கூடியதாய் உள்ளதால் எல்லோரும் இரண்டு வாரம் மூன்று வாரம் என்று நெடிய பயணங்கள் மேற்கொள்கிறார் கள். இது வரவேற்கத்தக்கதே. ஆனால் வரவேற்கத்தகாக விடயம் நீங்கள் வீட்டைப் பூட்டி விடுதலையில் சென்றிருக்கும் வேளை உங்கள் வீட்டுப்பொருட்களை திருடர் திருடிச் செல்வதே. எனவே இத்தகைய திருட்டுகளும் அவற்றை குறைக்க சில வழிவகைகளையும் ஆராய்ந்து பார்ப்போம்.

வீடுகளில் களவுபோகும் வேளைகளில் காப்புறுதி செய்திருந்தால் கட்டாயம் நட்ட ஈடு கிடைக்கும். ஆனால் அப்படி வீட்டில் திருட்டு நடந்தவர்களிடம் கேட்டால் அவர்கள் அந்த வீட்டில் வசிக்கவே விருப்பமில்லாததாக இருப்பதாக குறிப்பிடுவர். களவுபோன பொருட்களிலும் களவுபோன மன அமைதியே கூடிய வேதனை தரும். எனவே எந்த விதங்களில் இவ்வேதனையை தவிர்க்கலாம் என்று பார்ப்போம்.

வீடுகளை அலங்கரிக்கும் வேளைகளில் விலை கூடிய தொலைகாட்சி (Television) போன்றவற்றை யன்னலுக்கு அருகில் வெளியில் தெரியும் வண்ணம் வைக்கவேண்டாம். வியாபார அமைப்புகள் நல்ல அழகான விலை உயர்ந்த விற்பனைப் பொருள்களை யன்னலுக்கு அருகில் வெளியில் தெரியும் வண்ணம் வைப்பதன் நோக்கம் மற்றவர்களை கவர்வதற்காகவே. நீங்கள் அப்படி யன்னலுக்கு அருகில் வெளியில் தெரிய வைப்பதனால் கள்வரை கவர்ந்து அழைப்பவராவீர்கள். ஒரு கள்ளனும் கஷ்டப்பட்டு வீட்டிற்குள் களவுக்கு புகுந்தபின் அங்கு 1990களில் தயாரிக்கப்பட்ட யானைபோல் பருத்த ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை கண்டால் உண்மையாகவே வேதனைப்படுவான். எனவே வீட்டை அலங்கரிக்கும் வேளைகளில் அவதானமாக விலை உயர்ந்த பெருட்களை யன்னல் ஊடாக தெரியாத மறைவான இடங்களில் வையுங்கள்.

உங்கள் விடுமுறை வாரக்கணக்கில் இருக்குமானால் கட்டாயம் அயலவருடன் நல்ல உறவு இருந்தால் அவர்களை உங்கள் வீட்டு வாசலில் எறியப்படும் பயனற்ற விளம்பரங்கள், பத்திரிகைகளை அப்புறப்படுத்தி விடுமாறு கேட்டுக்கொள்ளுங்கள் அல்லது உங்கள் உறவினர் ஒருவரிடம் அந்தப் பொறுப்பை கொடுங்கள்.

உங்கள் வீட்டு வாசலில் இப்படியான பத்திரிகைகள், விளம்பரங்கள் இருக்கும் போது திருடருக்கு வீட்டில் யாருமில்லை என தெரிந்து விடும். பத்திரிகைகள் தினசரி வாங்குபவரானால் எட்டு பத்திரிகை வாசலில் இருந்தால் வீட்டில் எட்டு நாட்களாக இல்லை என்று தெரிந்துகொள்ள ஒரு பெரும் விஞ்ஞனி தேவை இல்லை.

தாபால் பெட்டிகளையும் இரண்டொரு தினத்திற்கு ஒருமுறை தபால்களை அப்புறப்படுத்தி வைக்கச் சொல்லுங்கள். தபால்காரர் துப்பறியும் மன்னராக தன்னை எண்ணிக் கொண்டு இன்னெருவரிடம் எட்டு நாளாக இந்த வீட்டில் யாருமில்லை என்று சொல்ல அது தவறானவர் காதில் எட்டினால் பெரும் இழப்பு ஏற்படும். கள்ளர்கள் படுசோம்பேறிகள் அவர்கள் வீட்டில் யாரும் இல்லாவிட்டால் சிரமமில்லாமல் திருட்டு செய்யலாம் என்று எண்ணுபவர்கள். எனவே வீட்டில் யாருமில்லை என்பதை காட்டிக்கொடுக்காது இருப்பதுதான் புத்திசாலித்தனம்.

'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்' என்ற வாக்கிற்கமைய பலரும் ஒளித்துத்தேடி விளையாடும் பழக்கத்தை விடுவதில்லை. ஈஸ்டரில் முட்டை ஒளித்து விளையாடிய பழக்கம் தமது வீட்டுச் சாவியையும் ஒளித்து வைத்து நண்பரிடம் தேடித் திறக்குமாறு சொல்லுவார்கள். இப்படி ஒளித்து தேடி விளையாடுவதற்கு அதிகமாக வாசலில் இருக்கும் கால்துடைக்கும் கம்பளம், பூச்சட்டி, அல்லது ஒரு பெரியகல் இவைதான் பாவிக்கப்படும். இதில் சுவையான சமாச்சரம் என்னவென்றால் கள்வரும் முதலில் தேடுவது இந்த மூன்று இடத்திலும் தான்! இது எப்படி இருக்கிறது என்றால் திருடன் கதவை உடைத்து பின் அதனை கஷ்டப்பட்டு திருத்துவதிலும் சாவியைக் கொடுத்துவிட்டால் கதவு திருத்தும் செலவு மிஞ்சும் என்பது போல் உள்ளது. நடக்காத ஒரு விடயத்தை நான் கூறவில்லை. உங்களில் பலர் சாவியை இப்படி பல சந்தர்ப்பங்களில் செய்துள்ளீர்கள் என்பதை மறுக்கமுடியாது.

இன்னுபொரு சுவையான உட்புகுவாசல் 'Sliding door' அதாவது வாசல் பூட்டி இருக்கும், ஆனால் பக்கத்தால் வந்தால் 'Sliding door' சும்மா மூடி இருக்கும் தள்ளித்திறந்து கொண்டு வரலாம் என்று விட்டுவிடுவர். இந்த சமாச்சாரம் உங்களுக்கு மட்டுமல்ல திருடருக்கும் தெரியும். எனவே எழிதாக உள்வருவதற்கு எழிதாக பக்கக்கதவை திறந்து வைக்காதீர்கள் அதனிலும் மடமை இல்லை.

> “ நீங்கள் இல்லாத நாட்களில்
> உங்கள் வீட்டிற்கு, தொடர்ந்து 5 நாட்களுக்கு மேல்
> ஒருவரும் உட்செல்லாதிருந்தால்,
> வீட்டிற்கான உங்கள் காப்புறுதி
> செல்லுபடியாகாததாகிவிடும். ”

விடுதலையில் செல்வதற்கு செய்யும் ஆயத்தங்களில் நீங்கள் உங்கள் காப்புறுதி முகவரிடமும் அறிவித்தால் அவர்கள் உங்களுக்கு இன்னுமொரு விடயத்தை தெளிவுபடுத்துவார். அதாவது உங்கள் வீட்டிற்கு தொடர்ந்து 5 நாட்களுக்கு மேல் ஒருவரும் உட்செல்லாதிருந்தால் காப்புறுதி செல்லுபடியாகாதெனும் தகவல். எனவே உங்கள் உறவினரிடமோ அல்லது நண்பரிடமோ உங்கள் வீட்டுச் சாவியை கொடுத்து ஒன்று விட்டு மறுநாள் வீட்டிற்கு சென்று கதவைத் திறந்து எல்லாம் சரியாக இருக்கிறதா எனக் கவணித்து வரச் சொல்லுங்கள்.

அன்மைக் காலத்தில் வீட்டுத்திருட்டு அதிகரித்து வருகிறது. காரணம் வியாபார அமைப்புகளில் விஞ்ஞான வளர்ச்சியால் நல்ல Alarm, Motion delections, Video Camara's போன்ற கருவிகள் இடப்படுவதனால் திருடர்கள் அகப் படச் சந்தர்ப்பம் அதிகம். மேலும் வீட்டுத் திருட்டுகளில் 13% தான் திருடர்களைப் பொலிசார் பிடிக்க கூடியதாயுள்ளது. பல வருடங்களுக்குப் பின் தாயகம் திரும்பும் நீங்கள் திரும்பி வரும்போது உங்கள் வீடு உங்களை வரவேற்க எனது வாழ்துகளை முன்பே தெரிவித்துக்கொண்டு விடைபெறுகின்றேன்.

senthuran.punithavel@thaiveedu.com

■ ■ ■

# புதிய வீடுகள்...

7ம் பக்கத் தொடர்ச்சி...

டனும், PDI படிவத்துடனும் ஒப்பிட்டுப் பார்த்து உறுதி செய்த பின், வீடு உடைமையாக்கப் பட்ட நாளில் இருந்து 30 நாட்களுக்குள் உரிய படிவத்தினை பூரணமாகப் பூர்த்தி செய்து உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் உத்தரவாதத்தைப் பெற்றுக் கொள்ளலாம். படிவங்கள் உரிய முறையில் சரியாக நிரப்பப்பட்டு உரிய நேரத்தில் அனுப்பபட வேண்டியது மிக முக்கிய அம்சமாகும். உரிய நேரத்தில் கிடைக்கப் பெறாத விண்ணப்பங்கள் Tarion ஆல் நிராகரிக்கப்பட்டு விடும். அத்தகைய தாமதத்தினால் உத்தரவாதம் இல்லாமல் போவதை அறிந்து கொள்ளும் கட்டிட அமைப் பாளர்கள் மேலதிக செலவு செய்து திருத்த வேலைகளைச் செய்து தருவார்களா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.

எம்மவர்கள் பலர் புது வீடுகளை வாங்கிய போதும் இத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றாமல் விட்டு விடுவதால் கட்டிட அமைப்பாளர்கள் அதனைத் தமக்கு அனுகூலமாக்கிக் கொள்கிறார்கள். முடிவில் பலர் பல ஆயிரங்களைச் செலவு செய்து சில வேலைகளை பூர்த்தி செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள். இயந்திர வாழ்க்கையில் அல்லற்படுபவர்கள் ஒரு சிறு தொகைப் பணத்தைச் செலவு செய்து தொழில்சார் வல்லுநர்களை (Home Inspectors) அணுகி பலனைப் பெறுவதை விடுத்து, முடிவில் பல ஆயிரம் டொலர்களை செலவு செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள் என்பது ஒரு வேதனைக்குரிய விடயமாகவே இருக்கிறது.

velasubramaniam@thaiveedu.com

■ ■ ■

# உடலில் ஏறிய...

9ம் பக்கத் தொடர்ச்சி...

- கிழமைக்கு ஒரு நாள் விரதமிருத்தல், உணவை அளவாக உண்ணுதல். (நோயாளிகள் வைத்திய ஆலேசனைப்படி பின்பற்றவும்.)
- கிழமைக்கு ஒரு தடவை 15 நிமிட நேரம் ஆழ்நிலைத் தியானம் இருத்தல்.
- வருடம் இருமுறையாவது Laxative என்று கூறப்படும் மென்பேதியைக் குடித்து வயிற்றில் உள்ள அழுக்குகளை அகற்றுதல்.

ரொறொன்ரோ பொது சுகாதாரத் திணைக்களம் மிகவும் பிரதானமாகக் கருதப்படும் 25 நச்சுப்பொருட்களை அடையாளம் கண்டுள்ளது. இப்பதார்த்தங்கள் தொழிற்சாலைகளில், வர்த்தக நிறுவனங்களில் பாவளைப் பொருட்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. வட அமெரிக்காவில் இப்பொருட்களின் பாவனையை மிகவும் குறைப்பதற்கு பொது சுகாதாரத்திணைக்களம் வியாபார நிலையங்கள், குடிமக்கள் மற்றும் சன சமூக ஆயத்தனங்கள் என்பனவற்றுடன் கலந்து ஆலேசித்து முடிவுகள் எடுத்துள்ளது.

இரசாயனப் பொருட்கள் அல்லது தொழிற்சாலைக் கழிவு இரசாயனப் பொருட்கள் சுற்றாடலை மாசுபடுத்துமாயின் அவை பொது சுகாதாரத் திணைக்களத்திற்கு அறிவிக்கப் படுதல் வேண்டும். Acetaldehyde, Cadmium, குளோரபோம், பாதரசம், ஈயம், மங்கனீஸ், வைனைல்குளோரைட், ஆவியாகும் சேதனச் சேர்க்கைகள், நிக்கல் போன்றவை மேலே குறிப்பிட்ட 25 பொருட்களுள் சிலவாகும்.

உடலில் இத்தகைய பதார்த்தங்கள் சிறிது சிறிதாகச் சேரும் பொழுது எமது உடலும் அதை நீக்கிய வண்ணம் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும். எமது வாழ்க்கை முறையை எப்படி அமைத்துக் கொள்கிறோமோ அதற்கேற்ப இதன் அளவுகள் வேறுபடும்.

சில வழி முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் உடலில் ஏற்கனவே சேர்ந்துள்ள மென் நஞ்சுகளைப் படிப்படியாக அகற்றி, மேலும் மென் நஞ்சுகள் எமது உடலில் சேராதவண்ணம் எமது வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்ளலாம். பலரிற்கு நான் இதற்குரிய அறிவுறுத்தல்களையும் அதற்குரிய சிகிச்சை முறைகளையும் வளங்கியுள்ளேன்.

senthilnathan.kandiah@thaiveedu.com

■ ■ ■

# இருவிழி போற்றி...

20ம் பக்கத் தொடர்ச்சி...

கொள்கின்றார்கள். ஆனால் முழுமனிதனாக வளர்ந்த பின்னும் பிள்ளைகள் இவ்வாறு பெற்றோரை காயப்படுத்துவார்களேயானால் அவர்களிற்கு ஒருபோதுமே மன்னிப்பில்லை.

பெற்றோரின் அதீத பொறுமை பல சமயங்களில் பல பிள்ளைகளை வளர்ந்த பின்பும் பக்குவம் இன்றி பெற்றோருடன் பொறுமையின்றி சிடு சிடுவெனப் பேசும் பிள்ளைகளாக வாழ வைக்கின்றது. ஆனால் மனிதத்தின் முழுமையை பெறவேண்டுமானால் எந்த மனிதரும் "நா காக்கக்" கற்றுக் கொள்ள வேண்டும். பெற்றவரேயானலும் அவர்களுக்கும் உணர்வுகள் உண்டு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அறுத்தெறிந்தாலும் தம் பிள்ளையின் நலத்துக்காக மட்டுமே துடிக்கத் தெரிந்தது அன்னையின் இதயம். அதற்காக அதனைத் தனக்கனுகூலமாக்கிக் கொண்டு தினம் தினம் வார்த்தைகளால் அவர்களை வதைப்பது பெரும்பாவம் மட்டுமல்ல மன்னிக்க முடியாத குற்றமும் ஆகும்.

'தீயினால் சுட்டபுண் உன்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு'

என வள்ளுவர் சொன்னது போல் நாவீசும் வார்த்தைகளால் ஏற்படும் வடுவை போக்க ஒருபோதும் முடியாது. அன்பான இன்சொல் என்னும் கனியிருக்க எதற்காக இன்னாச் சொல்லென்னும் காய்தனை நாம் நாட வேண்டும்? நோயற்ற வாழ்வை மன மகிழ்வோடு பெற்றோர் வாழ வேண்டுமானால் பிள்ளைகள் தம் அன்பினால் அவர்களை அரவணைத்துப் போற்ற வேண்டும். அன்பெனும் அருமருந்திருக்க மாத்திரைகள் தேவையில்லை அவர்களை நீடுழி வாழவைக்க. அரவணைப்பென்னும் ஊட்டத்தைத் தவிர வேறென்ன ஊட்டச்சத்து தேவை அவர்களுக்கு?

அத்தகைய உள ஆரோக்கியத்தோடு தம் பெற்றோரை வாழவைப்பதே ஒரு பிள்ளை தன் தாய் தந்தையருக்கு ஆற்றக் கூடிய அதி சிறந்த கடன். இருவிழிகளாம் அன்னை தந்தையரின் அருகாமையை விட வேறென்ன பேறுகிட்டும் இவ்வுலகவாழ்வில்? அன்னை தந்தையரை எம் இரு விழிகள் எனப்போற்றி வணங்கிப் பேணி உயர்வாழ்வு வாழ்வோமாக.

sivavathani.p@thaiveedu.com

■ ■ ■



வாழ்க்கை சுவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...
Elaguppllai (Mike) Srinathan B.Sc
Sales Representative
Dir: 416-276-1225 Off: 905-470-9800
Email: esrinathan@trebnet.com
RE/MAX
SOLD
Mccowan/Hwy 401
$189,900
Condo Apt. Bed rooms 1, Washrooms 1, 24 Hr Concierge And Security, All Modern Amenities And Close To All Popular Restaurants.
Brimley/Eglinton
$299,000
Detached Bungalow Bed rooms 3+3, Washrooms 2 Beautiful Bunglow With Sep Enterance. Newly Renovated, Shows Well. Close To Ttc.
Markham/Eglinton
$329,900
Townhouse 3 Story Bed rooms 3, Washroom 3 Lees Than 6 Years Old No Maintenances Fee Close To School, All Other Amenities.
Kennedy/Denison
$339,000
Link 2 story, Bed rooms 3+2 Washrooms 2, Steps To Schools,Shops And Malls.Fresh Paint,Interlock Driveway
Steeles And Markham Rd
$369,900
Townhouse 2 Story Bedrooms 3+1, Washrooms 4, Immaculate Freehold Town Home In Demand Location Finished Basement
Mccowan/Major Mackenzie
$389,000
Link 2 Story, Bedrooms 3, Wasroom 3 Great School Zone. Hardwood Floors On Main With Matching Oak Staircase
Hooverpark- 9th Line
$393,500
Detached 2 Story, Bed rooms 3 Washromss 3, Brand New Home Under Construction!10 Min Walk To Go Station! South Facing Yard.
Markham/Denison
$397,500
Semi Detached 2 Story, Bed rooms 4 Washrooms 3 This 5 Yr New Home Has An Enclosed Glass Porch, Double Door Entry
Bur Oak Ave/Markham Rd
$399,000
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3 Spacious Front Porch, Direct Access From Garage, Close To Schools,.Go Train, Park
9th Line & 19
$399,800
Detached 2 story, Bed rooms 3 Washrooms 3, 3 Years New, Family Sized Kitchen Has Walkout To Deck, Close To Shopping
Mccowan/Steeles
$419,900
Link 2 Story, Bedrooms 4+2, Washrooms 4, Separate Entrance To Bsmt. Vacant Property
Markham Rd/16th
$419, 900
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3 Beautifully Upgraded Home, Fully Fenced Backyard, Gas Fireplace
Middlefield/Denison
$429,900
Link 2 Story, Bedrooms 3+1, Washrooms 4, Absolutely Well Maintained Home, Prof Finished Basement, Close To Schools And All Amenities.
Hwy 48/Hoover Park
$430,000
Detached 2 Story, Bedrooms 3 Washrooms 3, Bright With Lots Of Natural Sunlight, Close To Schools, Shops, And All Amenities
9th. Line / Castlemore/Bur
$445,000
Detached 2 Story, Bedrooms 4, Washroom 3, Upgraded Kitchen, Hardwood Floors Fully Fenced Yard. Access From House To Garage,
Sheppard/Meadowvale
$529,900
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, 5 1/2 Yr Old Hardwood Floors In Liv/Din Area.Close To All Conveniences, Close To School
14th Ave & 9th Line
$453,000
Detached 2 Story, Bedrooms 3 Washrooms 3 Than 3 Years New.Approx 2000Sf. Basement Has Cold Room & 3Pc Rough In Bath
16th Ave. & 9th Line
$499,000
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Lovely Tile Front Porch, Upgraded Cabinets. All Upgraded Appliances.
Mccowan/N 16th/Bur Oak
$499,900
Detached 2 Story Bed rooms 3, Washrooms 3, Modern Kitchen, Fully Fenced Back Yard, Minutes From 24 Hr Sobeys And All Amenities.
Hoover Park/Sandiford
$529,900
Detached 2 Story Bed rooms 4, Washrooms 3, Loads Of Upgrades Incl. Kitchen Has Solid Maple Cabinets, Beautiful Landscaping Inc
Port Union / 401
$564,900
Detached 2 Story. Bed rooms 4, Washrooms 4, Almost 3000Sq Ft.Great Location,Custom Interior Design
Sales of Business
sale of business with property 2 acres parcel of land Esso Gas station, Country Style drive-thru, restaurant, convenience
1.3 million dollars
Sales of Business
sale of business with propertyGas station, convenience,Auto repair garage, 3 bedroom bungalow, 30 minutes away from toronto
RE/MAX
Realtron Realty Inc. Brokerage
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham ON L3R 2N7
'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'

# உங்கள் வீட்டை விற்பது எப்படி?

**'How to sell your Home' என்னும் 'OREA'வினால் வெளியிடப்பட்ட நூலினை மூலமாகக்கெண்டு வாசகர்களின் நன்மை கருதித் தொகுக்கப்பட்ட தொடர் இது.**

## அலகு - 9



**S.K. பாலேஸ்**
- வீடு விற்பனை முகவர் -

உங்கள் விற்பனை முகவரிடம் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள். நீங்கள் உங்கள் விற்பனை முகவரைத் தேர்ந்தெடுத்து, வீடு விற்கும் விலையும் தீர்மானித்து பட்டியலிட்ட ஒப்பந்தமும் கைச்சாத்திட்டாயிற்று, இனிமேல் என்ன நடக்கும்? அடுத்து வரும் அலகுகளில் அவற்றைப் பற்றிச் சுருக்கமாக விளக்கப்படும்.

உங்களுடைய வீடு விசேட 'லிஸ்ரிங்'கில் விற்கப்படவில்லையென எண்ணி உங்கள் முகவர் அந்த லிஸ்ரிங்கின் ஒரு பிரதியை பன்முக லிஸ்ரிங் சேவையினருக்கு அனுப்பி வைப்பார். அதனால் உங்களுடைய வீடு அதிகபட்ச விளம்பரத்தை உங்கள் சமூகத்தினிடையே வீடு வாங்க விரும்புபவர்களிடம் விரைவில் சென்றடைகின்றது. உங்கள் வீட்டை எப்படி விற்பனைக்குத் தயார் செய்ய வேண்டும் என்று அவர் ஆலோசனை வழங்குவார்.

"வீடு விற்பனைக்கு" என்று ஒரு அறிவிப்பு பலகை ஒரு வீட்டின் முன் வைக்கப்படும். ஒரு வீட்டை வாங்க விரும்புவர்களுக்கு உங்கள் வீட்டைச் சந்தைப்படுத்தும் முயற்சியில் உங்கள் முகவர் ஈடுபடுவார். இவற்றுள் பத்திரிகை விளம்பரம் மற்றும் பிற ஊடகங்களில் விளம்பரம் செய்தல் ஆகியவை இடம் பெறும். உள்ளூர் முகவர்களிற்காக 'Open House' காட்சிக்கும் ஏற்பாடு செய்வார். வீட்டை வாங்க விரும்புபவர்களுக்குக் காண்பிப்பதுடன், ஏனைய முகவர்களுடன் தொடர்பு கொண்டு அவர்கள் அழைத்துச் சென்று காண்பித்து வீடுவாங்க விரும்புபவர்களின் எண்ணத்தையும் முடிவையும் தொடர்ந்து விசாரித்து அவர்களிற்கு மேலதிக விபரங்களையும் கொடுத்து உதவுவார்.

நீங்கள் லிஸ்ரிங் ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்ட விநாடியிலிருந்து உங்கள் முகவர் உங்களுடன் தொடர்பு வைத்துக்கொள்வார். வீடு யார் யாருக்கு காண்பிக்கப்பட்டது, அதன் பலாபலன்கள் என்ன மற்றும் முக்கியமான விடயங்கள் வீட்டுச் சந்தை நிலவரம் உட்பட உங்கள் பார்வைக்கு உடனுக்குடன் அனுப்பி வைப்பார். அது மட்டுமல்ல உங்களுடைய முகவர் நீங்கள் கேட்கும் எந்த கேள்விக்கும் பதில் சொல்லவும் எந்த விடயத்தையும் உடனுக்குடன் கவனிக்கவும் தயாராக இருப்பார்.

### நீங்கள் எப்படி உதவலாம்?

உங்கள் முகவர், உங்கள் வீடு விற்பனை முதலான சகல வேலைகளையும் தானே செய்தாலும், உங்கள் வீடு விற்பனை விடயத்தில் நீங்களும் சில உதவிகள் செய்யலாம். உங்கள் வீட்டை வாங்க விரும்பும் நபர்களும், மற்றைய முகவர்களும் உங்கள் வீட்டைப் பார்க்கும் போது உங்கள் வீடு மிகவும் சிறப்பாக காட்சி அளிக்க வேண்டும். வீடு மிகவும் சுத்தமாகவும், அழகாகவும் இருக்கவேண்டும். படுக்கைகள் நன்றக ஒழுங்கு செய்யப்பட்டு, பாத்திரங்கள் ஒழுங்காக அவையவை இருக்க வேண்டிய இடத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன், உங்கள் வீட்டின் அழகை அதிகரிக்கக்கூடிய சில சிறு அலங்காரங்களையும், அலங்காரம்



பொருட்களையும் பொருத்தமான இடத்தில் வைத்து உங்கள் வீட்டின் அழகை அதிகரிக்கச் செய்யலாம்.

உங்கள் வீட்டைப் பார்க்க விரும்புவர்கள் அவர்களிற்கு வசதியான நேரத்தில் பார்வையிட அனுமதிப்பது நன்று. அந்த நேரம் நீங்கள் அங்கு இல்லாவிடின் வீட்டிற்குள் நுழைவதற்கு வசதியாக அவர்களை அழைத்து வரும் முகவரிடம் வீட்டின் சாவியைக் கொடுத்து வைக்கலாம். நீண்ட நேரம் வேலை செய்பவர்கள் மாலையில் வீட்டைப் பார்வையிடவே விரும்புவார்கள். எனவே வீட்டைப் பார்ப்பவர்களின் விருப்பத்தை நாம் பூர்த்தி செய்வதே நன்று.

வீட்டைப் பார்ப்பவர்கள் உங்களுக்கு முன்கூட்டியே அறிவித்து விட்டு வருவார்கள். அச்சமயத்தில் நீங்கள் வீட்டிற்கு வெளியே நிற்பது நன்று. உங்கள் வளர்ப்புப் பிராணியையும் உங்களுடன் அழைத்துச் செல்வது நன்று.

உங்கள் முகவர் உங்களை சந்திக்கும் எந்நேரமும் சந்திக்க கூடிய விதமாக நீங்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும். நீங்கள் எங்காவது போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், உடனே உங்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தை உங்கள் முகவரிடம் கொடுத்து விட்டுச் செல்லவும். நல்ல விலை அல்லது வீட்டின் விலையில் சிறியளவு மாற்றம், அல்லது வீட்டைப் பற்றிய வேறு ஏதாவது விபரம் வீட்டைப் பார்ப்பவர்க்கு தேவைப்பட்டால் உங்களுடன் கலந்தாலோசிக்க உங்களின் பிரசன்னம் அவசியம்.

சில வேளைகளில் காரில் உங்கள் வீட்டைத் தாண்டிச் செல்பவர்கள் விரைவாகப் பார்த்துச் செல்ல விரும்பி உங்கள் வீட்டுக் கதவை தட்டக்கூடும் நீங்கள் அதை விரும்பினாலும் அவர்களை வீட்டுக்குள் அனுமதிக்கக் கூடாது. மாறாக அவர்களுக்கு நன்றி கூறி அவர்கள் பெயர் தொலைபேசி எண் முதலியவற்றைப் பெற்று இந்த விபரங்களை உங்களுடைய முகவருக்கு உடனடியாக அறிவிப்பதாகக் கூறி முகவருடைய அறிமுக அட்டையையும் கொடுத்து அனுப்பிவிடவும்.

நீங்கள் ஒரு முகவரை நியமித்தது, வீட்டை வாங்க விரும்பும் அனைவருக்கும் வீட்டைப் பார்ப்பதற்குமுன் வீட்டைப்பற்றிய விபரங்களைக் கூறுவதற்கே. இது உங்கள் பாதுகாப்பு உட்பட பல காரணங்களுக்காக சிறந்தது. மேலும் உங்களுடைய முகவர் வீடு வாங்கத் தகுதியும் விருப்பமும் உள்ள நபர்களை தன்னுடைய திறமையினாலும் அனுபவத்தினாலும் திறமையாகச் சமாளிப்பார். எனவே உங்கள் ஆர்வத்தின் காரணமாக நீங்களே இந்த நன்மைகளை உங்களுக்கு கிடைக்காமல் செய்து விடாதீர்கள். மேலும் உங்கள் நண்பர்கள் அல்லது உறவினர்கள் மூலம் வீடு வாங்க விரும்புவர்களின் விபரங்கள் கிடைத்தால் அவ் விபரங்களை உங்கள் முகவருக்கு அனுப்பி வையுங்கள்.

### முக்கியமான பத்திரங்களைச் சேகரித்தல்:

உங்கள் வீட்டைப்பற்றிய விபரங்கள் அடங்கிய பத்திரங்களை உங்கள் முகவருக்கு கொடுத்து வைக்கவும் பின்வரும் பத்திரங்கள் சாதாரணமாக தேவைப்படும்.

### வீட்டு உறுதிப் பத்திரம்:

உங்கள் வீட்டை நீங்கள் வாங்கிய போது உங்களுக்கு தரப்பட்ட உரிமைப் பத்திரம். இது உங்களிடம் அல்லது வழக்கறிஞரிடம், அல்லது mortgage நிறுவனத்திடம் இருக்கலாம்.

### வீடு ஈட்டு பத்திரம்:

இவை உங்களுடைய ஈட்டைப் பற்றிய விபரத்தையும் பணம் வட்டிக்குக் கொடுத்த விபரங்களையும் குறிப்பிடும் ஒரு முகவருக்கு இந்த விபரங்கள் Listing ஒப்பந்தம் செய்யும் போது தேவைப்படும்.

### வரி மதிப்பீடும் வரிகட்டியதிற்கான பதிவுகளும்:

உங்கள் முகவருக்கு Listing ஒப்பந்தம் தயாரிப்பதற்கு தேவைப்படும்.

### வீட்டுப் பாவனைக்கு வேண்டிய மின், நீர், எரிவாயு போன்ற வற்றின் பதிவுகள்:

கடந்த ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்குரிய பத்திரங்கள் உங்கள் முகவருக்கு அவசியம் தேவைப்படும்.

### ஒன்ராரியோ நில அளவு:

ஒரு தொழில் நுட்ப வல்லுனரால் தயாரிக்கப்பட்ட இந்த பத்திரம் வீடு அமைந்திருக்கும் இடத்தையும் வீட்டின் மொத்தப் பரப்பளவையும் தனித்தனி பகுதிகளின் அளவையும் குறிப்பிடும்.

### கொட்டோமினியம் கூட்டுறவு வீட்டு பத்திரமும்:

கொண்டோமினியம் பற்றிய பத்திரங்கள் அந்த சொத்துக்கள் எப்படி நிர்வகிக்கப்படுகின்றன. அதை நிர்வகிப்பதற்கான உபவிதிகள் என்ன என்பதையும் குறிப்பிடும்.

### வீட்டு உரிமையாளர்கள் சங்கப் பத்திரம்:


சில வீடு அபிவிருத்தித் திட்டங்களில் குடியிருப்போர் அந்த சொத்தில் உள்ள பொது இடங்களை பராமரிப்பது பற்றிய விபரங்களையும் வைத்திருப்பார்கள்.

உங்கள் வீட்டை விற்பதற்கு ஒரு குழுவாக நீங்கள் செயற்பட வேண்டியிருக்கும். அவர்களுக்கிடையில் நல்ல ஒத்துழைப்பு இருக்க வேண்டும். நீங்கள் கொடுக்கும் ஒத்துழைப்பைப் பொறுத்து முகவரின் வெற்றி நிச்சயிக்கப்படுகின்றது.

skbales@thaiveedu.com

■ ■ ■

**Condo Townhouse**
Victoria Park & N Of St. Clair
2 - Bedrooms,
3 - Washrooms







**House for Sale**
Church & Delaney
4 Bedrooms,
3 Washrooms

**Canadian Home Appraisals Inc.**
Residential & Commercial
Appraisals
CHAI
CANADIAN HOME APPRAISALS INC.
S.K.Bales
CRA, CAR, MVA, FRI, CRES
Managing Director
Tel: 905-201-0929
Fax: 905-201-8482
www:chainc.ca
email:.chai@chainc.ca

**MY PROFESSIONAL DESIGNATIONS:**
- CRA (Canadian Residential Appraiser)
  Designation with Real Estate division of University of British Columbia and The Appraisal Institute of Canada
- Car: ( Certified Appraisal Reviewer)
  Designation with Canadian National Association of Real Estate Appraisers.
- MVA( Market Value Appraiser-Residential
  Designation with The Canadian Real Estate Association
- FRI (Fellow of the Real Estate Institute)
  Designation with Real Estate Institute of Canada
- CRES ( Certified Real Estate Specialist)
  Designation with Real Estate Institute of Canada
- RESIDENTIAL AND COMMERCIAL REAL ESTATE BROKER
  Real Estate Broker licence with Real Estate Council of Ontario.

Century 21
Affiliate Realty Inc.



S.K.Bales
CRA, CAR, MVA, FRI, CRES
TEL: 416-290-1200
CELL: 416-801-3219
Commercial Member


HomeLife Future Realty
7 Eastvale Dr #205
Markham, Ontario
L3S 4N8
Office: 905-201-9977
Fax: 905-201-9229
Kennedy/Steeles
$580,000
- 4+2 Bedrooms
- 4 Washrooms
- Fin.Bsmnt w/Two Bdrms
- New Hardwood Flooring
**OPEN HOUSE**
Sandalwood/Queenmary
$379,900
- 3+1 Bedrooms
- 4 Washrooms
- Finshed Bsment w/Sep. Ent.
- Bsmnt Professionally Finished by Builders
June.6th.2010
2pm - 4pm
Midland/Lawrence
$142,900
- 2 Bedrooms
- 1 Washroom
- In Demand Location
- Large Balcony
Making Your Dream Home a Reality
Lokan Sundaram
Broker
416-450-3984
lsundaram@trebnet.com
416-230-6462
kkathir@trebnet.com
Kathir Kandiah
Broker
Independently Owned and Operated. This is not intended to Solicit Properties Currently Listed for Sale.


PROTECTING YOUR FAMILY MAKE SENSE.
$1 Million
Life Insurance
10 year Term Insurance
Elite Non-Smoker Rate
Only $27 Monthly
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life
Canada Protection Plan
KEN KIRUPA
Life Insurance Broker
759 Warden Ave.,
www.familyprotection.ca
CELL 416-830-8191
OFFICE 416759-5453

# மருத்துவக் கேள்வி - பதில்



இராஜசேகர் ஆத்தியப்பன்

**டாக்டர், சர்க்கரை நோய் குறித்த உங்கள் விளக்கங்கள் மிகப் பயன் உள்ளதாக இருக்கின்றது. இதன் உண்மை நிலை என்ன – சரியான மருந்து எது என்று எப்படி அறிந்துகொள்வது?**

- பாண்டுரங்கன்.

உண்மைதான். காலாகாலமாக பயன் பாட்டில் உள்ளவை, புதிய கண்டுபிடிப்புகள் என்று உலக அளவில் சர்க்கரை நோய் தீர பல நூறு வகை மருந்து, மாத்திரைகள் உள்ளன. சமீப காலமாக சர்க்கரை நோய், 40 வயதை தாண்டாதவர்களுக்கு வரக்காரணம், அவர்களின் வாழ்க்கை முறை தான். அதாவது வாழ்க்கை முறையும் இடைநேர உணவுகளும் தான் பிரதான காரணம். இப்படி பாதிக்கப் பட்டவர்களுக்கு, 'திரிபிடி ஜீன் சிண்ட்ரோம்' கோளாறு உள்ளது. இதனால் தான் சர்க்கரை நோய் ஏற்படுகிறது.

**நீண்ட கால நோய்:**

சர்க்கரை நோய், கொடுமையான நோய் அல்ல, நீண்ட காலம் இருக்கும் நோய். நீண்ட காலம் இருப்பதன் மூலம் அது கொடுமையான நோயாக மாறுவதும், மாறாததும் நோயாளியின் சிகிச்சை, உணவு, வாழ்க்கை முறையில் உள்ளது. நீண்டநாள் மருந்து சாப்பிடுவதுடன், உணவு முறையிலும் கட்டுப்பாடு முக்கியம். அப்போது தான், நீண்ட நாள் சர்க்கரை நோய், கொடுமையான நோயாக மாறாமல் இருக்கும்.

**மருந்து எது சரி?:**

பெரும்பாலான மருந்துகள், உடலில் இன்சுலின் சேர்ந்து, ரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை கட்டுப்படுத்தவே பயன்படுகின்றன. ஆனால், கணையத்தில் உள்ள இன்சுலின் சுரப்பி வேலை செய்வதற்கு மருந்துகள் குறைவே. கணையத்தில் சுரக்காத இன்சுலினை மருந்தால் தருவதை விட, கணையத்தில் இன்சுலினை உருவாக்கும் 'பீட்டா' செல்களை செயல்படுத்தி அதன் மூலம் இன்சுலின் உற்பத்தியை பெருக்கவும் மருந்துகள் உள்ளன.

**பீட்டா – ஆல்பா:**

சில வகை மருந்துகள் மட்டும் தான் பீட்டா – ஆல்பா செல்களை ஊக்குவிக்கின்றன. சமீபத்தில் விற்பனைக்கு வந்துள்ளது ஜனோவியா என்ற மருந்து. அமெரிக்காவை சேர்ந்த சர்வதேச நிறுவனம் மெர்க். இதன் இந்திய நிறுவனம் எம்.எஸ்.டி. பார்மசூட்டிக்கல்ஸ் இப்போது இந்த மருந்தை விற்பனைக்கு வெளியிட்டுள்ளது. சர்க்கரை அளவை கட்டுப்படுத்த ஆல்பா செல்லிலும், கணையத்தில் 'பீட்டா' செல்களை ஊக்குவிக்கும் இந்த மருந்து செயல்படுகிறது.

**மருந்து – உணவு – பயிற்சி:**

மருந்தால் மட்டும் சர்க்கரை நோய் போகாது. உணவு, உடற்பயிற்சியும் முக்கியம். இந்த வகையில், ஆல்பா, பீட்டா செல்கள் பாதிக்காமல் செயல்பட மருந்து உதவினாலும், உணவில் கட்டுப்பாடும், நடப்பது உட்பட, உடற்பயிற்சியும் சேர்ந்தால் தான் முழுமையான தீர்வு கிடைக்கும். சர்க்கரை நோய் சிகிச்சைக்கு பல மருந்துகள் வந்த வண்ணம் உள்ளன. இனி வரும் காலங்களில், தரமான சரியான மருந்துகள் உங்களுக்குக் கிடைக்கும் என்பதில் ஐயம் வேண்டாம்.

**எனக்கு வியர்வை நாற்றம் தெரியாத போது, என் மனைவி மட்டும் என்னைக் குற்றம் சொல்கின்றார், ஏன் என்று புரியவில்லை?!**

- லாரென்ஸ்.

உங்கள் மீது நாற்றம் எடுக்கிறதா என்பது உங்களுக்கு தெரியாது. உடல் துர்நாற்றம், அது வெறுக்கத்தக்கதாக இருந்தாலும், வியர்வை வெளியேற்றுபவரை விட, அருகில் இருப்பவருக்கு தான் கஷ்டத்தைத் தரும்! நம் நாற்றம் நமக்குத் தெரியாத வகையில் தான், நம் மூக்கு பழக்கப்பட்டிருக்கிறது. நண்பர்கள், குடும்பத்தினர், காதலர்கள் என யாருமே, வெறுத்து ஓடச் செய்யும் சங்கடமான விஷயம் இது. ஒவ்வொருவருக்கும் தனி வாசம் உண்டு. இந்த வாசம், தனித்துவம் வாய்ந்ததாக இருப்பதால், எளிதில் அடையாளம் காணலாம். குழந்தைகள் வாசங்களைச் சட்டென கிரகித்துக் கொள்வர். பிறக்கும்போதே, தாயின் வாசம் அவற்றுக்கு மிக நன்றாகத் தெரிவதால் தான். தாய் வருவதை இருட்டிலும் உணர்ந்து கொள்வர்.



வியர்வை நாளங்களிலிருந்து தான் வாசனை கிளம்புகின்றது. 'எக்ரைன்' என்ற நாளம், உடல் முழுவதும் உள்ளது. இது உடல் வெப்பநிலையைச் சீராக வைக்க உதவுகிறது. 'அபோக்ரைன்' வியர்வை நாளம், தொடை இடுக்கு மற்றும் அக்குளில் காணப்படுகிறது. இவை, நிறமற்ற, வாசமற்ற நீரைத் தான் வெளியேற்றுகின்றன. ஆனால், காற்றோட்டம் இல்லாத இந்த பகுதிகளில் பாக்டீரியாக்கள் வளர்வதால், அவையே நாற்றத்தை உண்டாக்குகின்றன. வியர்வையை உறிஞ்சாத உடைகள் அணிவதால், வியர்வையை பாக்டீரியாக்கள் சிதைப்பதால், நாற்றம் உருவாகிறது. செபாக்கஸ் கிளாண்டு என்றழைக்கப்படும், சரும மெழுகுச் சுரப்பிகள், உடல் முழுதும் பரவிக் கிடக்கின்றன. இவற்றிலிருந்து வெளியாகும் மெழுகையும், பாக்டீரியா பதம் பார்ப்பதாலும், இறந்த செல்கள், பாக்டீரியாக்களுக்கு உணவாகப் பயன்படுவதாலும், உடலில் நாற்றம் ஏற்படுகிறது. நோய்வாய்ப்பட்டவர்கள் மருந்து உட்கொள்வதால், அவர்களின் உடல் துர்நாற்றம் தனியாகத் தெரியும். கல்லீரல், சிறுநீரகம், நுரையீரல், ஆகியவற்றில் பாதிப்பு, மனநோய், நீரிழிவு நோய், சிறுநீரக பாதையில் தொற்று, புற்றுநோய் உள்ளவர்கள் உடலில், வித்தியாசமான நாற்றம் ஏற்படும். இந்த நாற்றத்தை வைத்தே, எந்த நோய் ஏற்பட்டுள்ளது என மருத்துவர்கள் கண்டறிவர். குழந்தைகளிடம் வியர்வை நாற்றம் அதிகம் ஏற்படாது. ஆனால் தினமும் குளிக்கவில்லை எனில், அழுக்கு சார்ந்த நாற்றம் அவர்களிடம் ஏற்படும். மூக்கொழுகுதல், அடினாய்டு, டான்சிலைட்டிஸ், வாயால் மூச்சு விடுதல், பல்லில் தொற்று, காதில் தொற்று, மூக்கில், காதில், பிறப்புறுப்பில் கல், பெரிய கொட்டைகளைத் தெரியாமல் திணித்துக் கொள்வதால் கூட, குழந்தைகளிடம் துர்நாற்றம் ஏற்படும். சிகரெட் புகைப்பது, மது குடிப்பது ஆகிய பழக்கங்கள் கூட, ஒருவரின் வாசத்தை மாற்றியமைக்கின்றன. மூச்சு, தோல், ஆடை ஆகியவற்றில் இந்த வாசம் தெரியும். இந்த வாசத்திலிருந்து விடுபட, சிகிச்சை உண்டு.

சாதாரண துர்நாற்றம் வாயைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாமை, பல், ஈறுகளில் தொற்று ஆகியவற்றால் ஏற்படுகிறது. தினமும் காலை, மாலை வேளைகளில், பல் துலக்கினால் இந்த துர்நாற்றம் இருக்காது. தினமும் இரண்டு வேளை குளித்தால், உடல் துர்நாற்றத்தை தவிர்க்கலாம். குழந்தைகள் மற்றும் பணிபுரிபவர்களுக்கு இது மிகவும் அவசியம். சமையல் சோடாவை தண்ணீருடன் கலந்து வைத்து, நீக்கோ போன்ற 'டிரைகுளோரெக்சிடைன்' அடங்கிய, பாக்டீரியாவை அழிக்கக் கூடிய சோப்பை தேய்த்து குளிக்கலாம். சோப்பை நேராக உடலில் தேய்க்காமல், பீர்க்கங்காய் நாரில் சோப்பை தேய்த்து, நாரால் உடலை சுத்தம் செய்யலாம். உடலின் வியர்வை இறந்த செல்கள் ஆகியவற்றை நீக்கும். தொடை, அக்குள் போன்ற இடங்களில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்கவும். இதன் மூலம், காற்றுபடாத இந்த இடங்களில் பாக்டீரியாக்கள் வளர்வதும், துர்நாற்றமும் குறையும்.

குளித்த பின், Body Spray பயன்படுத்தலாம். வியர்வை வெளியாவதைத் தடுக்கும் Sprayகள் வியர்வை சுரப்பிகளை அடைத்து, தொற்றுக்களை ஏற்படுத்தும். பவுடர் பூசுவது சருமத்துக்கு நல்லதல்ல. இவையும் தொற்றை உருவாக்குபவை தான். சுத்தமான, துவைத்த பருத்தி ஆடைகளை அணிவது நல்லது. காய்ந்து போன வியர்வை கொண்ட, அழுக்கு துணிகளை அணிவது நல்லதல்ல. வெயில் காலங்களில், காலிலிருந்து வியர்வை நாற்றம் கிளம்பும். பருத்தியினாலான காலுறைகள் (Cotton Socks),அதிகம் மூடப்படாத செருப்பு ஆகியவற்றை அணிவதன் மூலம் இந்த துர்நாற்றத்தை தவிர்க்கலாம்.

**மார்பக புற்று நோய் வராமல் தடுக்க முடியுமா?**

- கதீஜா பேகம்.

குழந்தைகளுக்குத் தாய்ப் பால் கொடுக்க வேண்டும். நன்றாக தாய்ப் பால் சுரந்தால் அதுவே சிறந்த தீர்வு. கருத்தடை மாத்திரைகள் எடுக்கக் கூடாது. தூய்மையான ஒலிவ் எண்ணெயில் காணப்படும் polyphenols மார்பகப் புற்றுநோயைத் தடுப்பதுடன், மார்பகப் புற்றுநோய் இருப்பவர்களுக்கு குணப்படுத்து வதற்கும் உதவும் என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்த polyphenols மார்பகப் புற்றுநோய் செல்களை அழிக்கும் தன்மை கொண்டவை. ஒலிவ் எண்ணெயில் இருந்து பிரித்து வடி கட்டப்பட்டு, பின்னர் திடப் பொருளாக்கப்பட்டதைக் கொண்டு நடத்திய ஆய்வில், மார்பகப் புற்றுநோயை தடுக்கும் ஆற்றல் இருப்பது தெரிய வந்துள்ளது. எனவே மார்பகப் புற்று நோய் வராமலும், அந்நோய் உள்ளவர்கள் அதில் இருந்து நிவாரணம் பெறவும், ஒலிவ் எண்ணெயை உபயோகிக்கலாம்.

**தோல் அழகாக இருக்க, கவர்ச்சி பெருக விட்டமின்ஸ் எடுக்கலாமா?**

- ஆதி சிதம்பரநாதன்.

முதலில் நோய் எதிர்ப்பாற்றல் அவசியம். இரண்டாவது, ஒவ்வாமை இல்லாமல் இருக்க வேண்டும். எளிய உணவு வகைகள், நல்ல ஜீரண சக்தி, கழிவுகள் (வியர்வை, சிறுநீர், மலம் மற்றும் நச்சுப் பொருட்களை) நீங்குதல் அன்றாடம் அவசியம். இதற்கேற்ற உணவு பழங்கள்... பழங்கள்... பழங்கள் மட்டுமே. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரின் உடல் ஆரோக்கியத்தில் முக்கியப் பங்கு வகிப்பவை பழங்கள் எனலாம். பழங்களில் இரும்புச் சத்துடன், பொஸ்பரஸ், கால்சியம் உள்ளிட்ட ஏராளமான ஊட்டச் சத்துக்களும், வைட்டமின்களும் உள்ளன.

அப்பிள் பழத்துடன் தேன், ரோஜா இதழ்கள் கலந்து சாப்பிட்டால் இரத்த சோகை நோய் மற்றும் நரம்புத் தளர்ச்சி நீங்கும். ஆப்பிள் சாறானது, குழந்தைகளின் வயிற்றுப் போக்கை குணமாக்கும். எந்த வயதினரும் எந்த நோயாளியும் சாப்பிடக்கூடிய பழம் தோடம் பழம். இது உடலுக்கு புத்துணர்ச்சியையும், வலுவையும் தருகிறது. சர்க்கரை சேர்க்காத திராட்சைப் பழச்சாறு நீரிழிவு நோயை குணப்படுத்துகிறது. ஒரு அவுன்ஸ் அளவு திராட்சைச் சாறுடன் சிறிது கரட் சாறு சேர்த்து தொடர்ந்து சாப்பிட்டு வர, சிறுநீர்த் தாரைகளில் உண்டாகும் கல் கரையும். இதயம், குடல், சிறுநீரகம் நன்கு இயங்க மாதுளம் பழச்சாறு மிகவும் சிறந்தது. மாதுளம் பழத்தில் குளுக்கோஸ் சக்தி அதிகம் இருப்பதால், உடல் சோர்வை உடனடியாக போக்கும் தன்மை கொண்டது. அன்னாசிப் பழம் இதயத்திற்கு மிகவும் நல்லது. புகை பிடிக்கும் பழக்கத்தை நிறுத்துவதற்கு அன்னாசிப் பழம் பயன்படுகிறது. உடல்சூடு உள்ளவர்களுக்கு அன்னாசிப் பழம் சாலச் சிறந்தது.

சப்போட்டா பழத்தில் அதிகளவில் இரும்புச் சத்து, பொட்டாசியம் சத்து, பொஸ்பரஸ் சத்துக்கள் உள்ளதால், உடலுக்கு புத்துணர்ச்சியை அளிக்கக்கூடியது. சப்போட்டா பழத்துடன் தேன் கலந்து சாப்பிட்டால் உயிரணுக்கள் உற்பத்தி அதிகரிக்கும். பப்பாளிப் பழத்தை துண்டுகளாக்கி சீரகப்பொடி, எலுமிச்சை பழச்சாறு கலந்து சாப்பிட்டால் அஜீரணம் குணமாகும். பப்பாளியுடன் தேன் கலந்து சாப்பிட்டால் நரம்புத் தளர்ச்சி நீங்கும். தாய்ப்பால் அதிகம் சுரக்க பப்பாளிப் பழம் பயன் படுகிறது. வாழைப்பழத்தில் எந்த வகையானாலும், அஜீரணத்தைப் போக்குவதுடன், உடலில் தங்கும் தேவையற்ற பொருட்களை வெளிக்கொண்டு வர பயன்படுகிறது.

இயற்கையான பழங்களை மிகுதியாக உண்ணுங்கள் - கவர்ச்சியாக, பொலிவோடு காணப் படுவீர்கள்.

**டாக்டர், ஏகமுகி என்பது எந்த மூலிகையைக் குறிக்கும், இதன் பயன்பாடு என்ன?**

- தனபாலசிங்கம்.

உருத்திராட்ச கொட்டைகளில், ஒரு முகம் மட்டும் உள்ள கைகளை ஏகமுகி என்றும், ஐந்து முகம் கொண்டவைகளை பஞ்சமுகி என்றும் அழைப்பார்கள். இது நேபாளத்தில் மட்டுமே கிடைக்கக் கூடியது. விலை கொஞ்சம் அதிகம். மன அமைதி மற்றும் ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கவும், எதிரிகளிடத்தில் இருந்து தப்பிக்கவும், திட மனதோடு செயல் பாடவும் இதனை அணிவதாக நம்பப் படுகின்றது. இங்கேயும் கிடைக்கின்றது.

rajasekar.a@thaiveedu.com

■ ■ ■

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

வருடாந்த ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும்

ஜுலை 17 சனிக்கிழமை காலை 10 மணி

மிலிக்கென் பூங்கா
(Milliken Park - Middlefield & Steeles)

| | |
|---|---|
| K. மகேந்திரலிங்கம் | 416 269 3731 |
| நடா G. நடராஜா | 416 616 8751 |
| சார்ல்ஸ் ரூபசிங்கம் | 416 391 5341 |

# கேரளா ஆயுர்வேதா

4005 - Don mils / Steels
Tel: 416 995 0416 / Fax: 416 946 1638
E.mail: ayurvetha@gmail.com / Web: www.ayurvetha.com



## வெண்புள்ளி (இது குஷ்டமல்ல)

ஆங்கிலத்தில், VITILIGO என்றும் LEUCODERMA என்றும் அழைக்கப்படும் நோய் குணமாகப்படக் கூடியது.

ஞான மூலிகைகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட கூட்டு மருந்து குளிசைகள்

- விரைந்த பலன் அளிக்கக்கூடியது.
- பயன் பெற்றோர் பாராட்டுகின்றனர்.
- பொதிகை மலை மூலிகைகள், உடலுக்கும் - மனதுக்கும்.

# யோக ஷேமம்

மன அமைதிக்கு
நலமும் - வளமும் பெற
அமைதியும் ஆனந்தமும் நல்கிடும்
மிக அபூர்வமான ஏகமுகி ருத்ராட்சம்!
உலகத்தின் மிக உயரமான இமய மலையில் இருந்து
உங்களுக்காக.....!!
மிகச் சில காய்களே உள்ளன.

நகைக் கடை, தியானக் கூடம்
மற்றும் திருக் கோயில்களுக்கு
விசேடக் கழிவு விலையில் தரப்படும்.

தொடர்பு கொள்ள: குருஜி ✆ 289 937 1200

# தம்பதியரின் உறவில் பரஸ்பர பொறுப்பு

## (Mutual Responsibility in Spousal Relationship)



கந்தையா
பரநிருபசிங்கம்

ஓர் உளவியல் நிபுணர், அவரை நாடி ஆலோசனை பெறவரும் வாழ்க்கைத் துணைகளில் பெரும்பாலானோர் ஒரு குறித்த பிரச்சினையுடன் வருவதாக அவதானித்தார். அது என்னவெனில்: ஒருவரின் மனைவியோ அல்லது கணவனோ பின்வருமாறு சொல்லுதல், "எனது நடத்தை உங்களுக்கு தொந்தரவு செய்தால் அதையிட்டு எனக்குக் கவலை இல்லை. நீங்கள் அதையிட்டு என்ன உணர்வைக் கொண்டிருந்தாலும் அதற்கு நான் பொறுப்பில்லை."

இப்படிச் சொல்வது எனது நடத்தை சார்பாக நீங்கள் சமாளித்துக் கொள்ளவேண்டும் என்பது போலாகும். இவ்வாறான மனப்போக்கு துரதிஷ்டவசமாக இருவாழ்க்கைத் துணைகளின் உறவில் பாரிய அழுத்தத்தைக் கொடுத்து நிற்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இவ்விடத்தில் தான் ஒரு ஒப்புவமையை (Analogy) கருத்தில் கொள்வது இப்பிரச்சினையின் தாற்பரியத்தை அறிந்துகொள்ள உதவும். உங்களுடைய வாழ்க்கைத்துணை நோய்வாய்ப்பட்டு சக்கரநாற்காலியை உபயோகித்து வருபவராகக் கொள்வோம். இந்நிலையில் உணவு வகைகளும் மற்றும் அவருக்குத் தேவையான பிறவும் அவர் எட்டமுடியாத இடத்தில் வைக்கப்பட்டிருப்பதற்குச் சாத்தியமே இருக்காது. மறுபுறத்தில் அந்த சக்கரநாற்காலியில் இருக்கும் வாழ்க்கைத் துணையைப் பார்த்து மற்றைய துணை பின்வருமாறு சொல்வார் என்பதை நினைத்துப்பார்த்தல் கடினம். "உங்கள் இயலாத்தனத்திற்கு நான் பொறுப்பில்லை. நீங்கள் சமாளித்துக் கொள்ளுங்கள். உணவுப் பண்டங்களும் மற்றையவையும் இருக்கும் இடத்திலேயே இருக்கும்". உண்மையில் இரு வாழ்க்கைத் துணைகளும் இணைந்து ஓர் விட்டுக்கொடுத்தலாற் சமாதானத்தை (Comprise) ஏற்படுத்தியிருப்பார்.

மறுபுறத்தில் சில காரணங்களுக்காக ஒரு வாழ்க்கைத் துணையின் உணர்வுகளுக்கான பொறுப்பை தட்டிக்கழிப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது எனத்தெண்படலாம். இது பிரத்தியேகமாக ஒருதுணை இயல்பாகவே அதிக உணர்ச்சி வயப்பட்டவராகவோ, மனவழுத்தத்தால் பாதிக்கப் பட்டவராகவோ அன்றி அழமாக வேறுன்றியுள்ள பயத்தை கொண்டவராகவோ இருந்தால். ஆனால் இங்கு உண்மையில் கவனிக்கவேண்டியது ஒருவரிடமுள்ள உடல்சார் இயலாத்தன்மைக்கும், உணர்ச்சிசார் இயலாத்தன்மைக்கும் வேறுபாடில்லை. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இருதுணையும் ஒருமித்து மாற்றத்திற்கு உள்ளாவது அவர்கள் பொறுப்பு! ஆனால் சக்கரநாற்காலி போன்ற உதாரணத்தில் சுயாதீனமாக இயங்கக் கூடிய துணை தனது பழக்கவழக்கங்களை மாற்றி பாதிப்புள்ளாகியிருக்கும் துணையின் இயலாத்தன்மைக்கு ஈடுகொடுக்க வேண்டும்.

இங்கு இருவாழ்க்கைத் துணைகளினாலும் (தற்போதைய) புறக்கணிக்கப்படும் எண்ணக்கரு பரஸ்பரதங்கியிருதன்மை (Interdependence). அதாவது ஓர் உறவுத் தொடர்பிலே இரு பாரியார்களும் உள்ளார்ந்த ரீதியாக ஒருவரை ஒருவர் பாதித்துக்கொள்கின்றனர் (impact). ஓர் உறவுத் தொடர்பிலே ஒவ்வொரு பாரியரும் தனது நலன்களைப் பராமரிக்கவேண்டும் என்பதை மறுபதற்கில்லை. ஆனால் அதேநேரம் மற்றைய பாரியாரைப் பராமரிப்பதும், அவரின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வதிலும் சமமான பங்குண்டு. இதை வேறொரு வகையில் பார்த்தால் மற்றையவரின் உணர்வுகளுக்கு பொறுப்பேற்பதுடன் அந்த உறவுத் தொடர்பின் நலன்களுக்கும் முற்றுமுழுதான தரமுள்ள தொடர்பிற்கும் இருவரும் சமமான பொறுப்பேற்க வேண்டும். இந்த வகையில் பார்க்கும்போது, ஒரு மாற்றத்தை நோக்கி நகர்வித்து இருவரும் பொறுப்பேற்க வேண்டும். வெளிப்படையானதும், தீராததுமான உணர்ச்சி சிக்கல்களைக் கொண்டள்ள பாரியார் தான் மாற்றத்திற்கு உள்ளாக வேண்டும் என்று சொல்லிவிடுவது மிகவும் சுலபமானது. ஆனால் மற்றைய பாரியார்தான் உணர்ச்சிச்சிக்கல் உடைய ஒருவருடன் வாழ்ந்துவருவதைத் தெழிவுறவறிந்து (realize) அந்த உறவுத் தொடர்பிற்கான பொறுப்பை ஏற்பதற்காக ஆயத்தமாக வேண்டும்.

பிறிதொரு உளவியல் நிபுணர் பின்வருமாறு கூறிச்செல்கின்றார். "மக்கள் மற்றவர்களில் தங்கியிருக்கும் குழந்தைகளாகவும், சிறு பிள்ளைகளாகவும் தங்கள் வாழ்வை தொடங்குகின்றனர். நாங்கள் முதிர்ச்சியடையும் போது தனித்தியங்கும்படி ஊக்கப்படுத்தப் படுகின்றோம். பெரும்பாலான மக்களைப் பொறுத்தமட்டில் சமூகத்தின் யதார்த்தமற்ற மெச்சுதலை வலுவுள்ள, தனித்தியங்குகின்ற, தாங்களாகவே எல்லாவற்றையும் செய்து கொள்கின்ற மக்கள் பெற்றுக்கொள்வதால் இந்த மனிதத் தொடர்பு விருத்தி ஒரு குருட்டுச் சந்தை (Blind alley) அடைந்துவிடுகின்றது. ஆனால் எமது தொடர்பு விருத்தியில் மூன்றாவது சிக்கலான ஒரு நிலையும் உண்டு. இதுதான் பரஸ்பரதங்குதன்மை (Interdependence).

> "எமது நடத்தை மற்றவர்களைப் பாதிக்கின்றது என்பதை மனப்பூர்வமாக உணர்ந்து கொண்டு, நாங்கள் பொறுப்புள்ளவர்களாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்."

எமது நடத்தை மற்றவர்களைப் பாதிக்கின்றது என்பதை மனப்பூர்வமாக உணர்ந்து கொண்டு, நாங்கள் பொறுப்புள்ளவர்களாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த வகையில் மனநலப் பரிகாரிகள் (Psychotherapists) பொறுப்பேற்றல் (Responsibility) என்பதை பிரதிபலிப்புச் செய்வதற்கான இயலும்தன்மை (response - ability) எனப்பிரித்துக் கூறுவதும் வழக்கம். இதனால் நாம் விளங்கிக் கொள்வது என்னவெனில் நாம் பரஸ்பர தங்குதன்மைக்கு உட்பட்டவர்கள் என மனப்பூர்வமாக உணர்ந்து கொள்ளும்போது அது உண்மையான தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு சந்தர்பத்திற்கு எங்களுடைய பிரதிபலிப்பு செய்வதற்கான இயலும் தன்மையாக அமையும்.

பூரணபுரிதல் (Empathy), இரக்கம் (sympathy), வலுவான தன்னுணர்வு (Strong sense of self) ஆகியவை பரஸ்பரதங்கு தன்மையின் உயர் தரக் குறியீடுகளாகும். இந்தப் பண்புகளை எம்மில் விருத்தி செய்யும் பொழுது எம்மைச் சூழவுள்ள பிரச்சினைத் தாக்கங்களுக்கு அதீத பிரிதிபலிப்புகளைக் கொடுப்பவர்களாக மாறிக் கொள்வோம். இவ்வாறு, ஒரு குறித்த உணர்ச்சிச் சிக்கலுடன் வாழ்ந்துவரும் பாரியாரின் விடையத்தில் நாம் அவரின் பக்கத்திலிருந்து விடையங்களை அணுகலாம். இந்தவகையான பிரதிபலிப்பிற்கான இயலுதன்மையை இரு பக்கங்களில் (இருபாரியாரிலும்) இருந்து மேலதிக உரையாடல், சமரசம் ஆகியவற்றிற்கான வாசலைத்திறந்து வைக்கும். ஒரு பாரியாரின் மேல் முற்றுமுழுதான பொறுப்பைத்திணித்து விடுதல் உறவுத் தொடர்பிற்கு எதுவித நன்மையையும் பயக்காது. இருபாரியாரும் பரஸ்பர தங்கு தன்மையை உணர்ந்து கொள்ளும் போது எந்தவித பிரச்சினைக்குரிய தீர்வும் இலகுவாக வந்துவிடுவதுடன் அது அவர்களுக்கு ஒரு சுமையாகவே தென்படாது.

எனவே வாழ்க்கைத்துணைகள் (தற்போதைய) தங்கள் பரஸ்பரதங்குதன்மையை தெளிவுறவறிந்து தங்கள் உறவுக்தொடர்பிற்கு இருவரும் (சமமாகப்) பொறுப்பேற்று அதனை நலமானதாகவும், தரமானதாகவும் பேணி இல்லறவாழ்வில் இன்பம் பெறுக!

paranirubasingam.k@thaiveedu.com

■ ■ ■

# சாதாரண விடயம்...

13ம் பக்கத் தொடர்ச்சி...

ஒன்றிற்கு ஒருவரிடம் உதவி கேட்கும் தன்மை, தோல்வியினை எதிர்கொள்ளும் தன்மை வெற்றியினைத் தேடும் ஆற்றல் மற்றையோருடன் உறவைப் பேணல் போன்றவை.

மிகவும் முக்கியமாக இவற்றை நீங்கள் செய்வதற்கு உங்கள் வாழ்க்கை மிகவும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். பதட்டம், நேரமின்மை, ஓய்வின்மை இவ்வாறான பிரச்சினைகள் உங்களுக்கு இருப்பின் இதனை உங்களால் செய்துமுடிக்க இயலாது. எனவே நீங்களும் உங்களை கவனமாக பார்த்துக் கொண்டு பிள்ளைக்கு உதவுங்கள். உங்கள் கணவருக்கு உங்கள் நிலைமையினையும் பிள்ளையின் நிலைமையினையும் விளக்கி அவரது ஒத்துழைப்பினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## கற்றல் குறைபாட்டினை எவ்வாறு அடையாளம் காணுதல்?

சில பொதுவான கருத்துக்கள்:

சில சமயங்களில் உங்கள் குழந்தை எல்லாப் பாடங்களிலும் மிகவும் சிறப்பாகச் செய்து ஒரு பாடத்தில் மட்டும் மிகவும் குறைவாக இருக்கலாம். இவ்வாறு சிறப்பாக வரும் பாடங்களுக்குரிய மதிப்பெண்களை மட்டும் காட்டும். தான் குறைய மதிப்பெண் எடுக்கும் பாடத்தை சாதாரணமாக கண்டுகொள்ளாமல் அதைப்பற்றியே கதை எடுக்காமல் விட்டுவிட்டால் அந்தச் சந்தர்ப்பத்தில் கவனமாக இருங்கள்.

பரீட்சை என்றவுடன் பயம், தூக்கமின்மை, வயிற்றுப்போக்கு. இதனைப் பொதுவாக test anxiety என்பார்கள். இச்சந்தர்ப்பத்தில் குழந்தையின் ஆசிரியருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பாடசாலைக்குச் செல்லாத சிறு குழந்தை ஆயின் பேச்சு வராத அல்லது சொற்களைத் தொடுத்து பேச முடியாத குழந்தை. பொதுவாக இரண்டு வயது முடிவதற்குள் குழந்தை ஓரளவு வசனங்கள் அமைத்து பேசக்கூடியதாக இருக்க வேண்டும். மூன்று வயதில் தனது சட்டைப் பொத்தான் போடுதல், சப்பாத்து ஒட்டுதல், துள்ளுதல் போன்ற செயல்களைச் செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். நிதானமாக அல்லது ஆர்வமாகக் கேட்டல். மூன்று வயதிற்கும் ஐந்து வயதிற்கும் இடையில் பிள்ளை பொறுமையாக ஆர்வமாக கதை கேட்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

இவை அறிகுறிகளேயன்றி தீர்மானங்கள் அல்ல. எல்லாப்பிள்ளைகளின் உடல் வளர்ச்சியோ அல்லது மனோ வளர்ச்சியோ ஒரே மாதிரியானதல்ல. உங்களுக்கு இவ்வாறான குறைபாடுகள் கண்கூடாகத் தெரியின் குழந்தை வைத்திய நிபுணருடன் கலந்தாலோசியுங்கள். அதிலும் கூட வைத்தியரோ ஆசிரியரோ உங்கள் குழந்தையுடன் கழிக்கும் நேரத்தை விட பெற்றோர் அதிலும் தாய் கழிக்கும் நேரம் கூட என்பதனால் தாய்மார்கள் மிகவும் நுணுக்கமாக இதனை அவதானித்துக் கொள்ள முடியும். உங்கள் பிள்ளைக்கு குறைபாடு என்று கவலைப்படாதீர்கள். சோர்ந்து விடாதீர்கள். இந்தக் குறைபாட்டிலிருந்து நீங்கள் உங்கள் குழந்தையினை வெளிக்கொணரலாம். யார், இக் குறைபாடு அவர்களை வெல்லவிடாது குறைபாட்டினை வெல்கின்றார்களோ, அவர்களுக்கு மிகவும் பிரபல்யமானவர்களாக வருவதற்குரிய திறமை வந்துவிடும். உதாரணமாகக் கூறினால் விஞ்ஞானி அல்பேர்ட் அயன்ஸ்ரைன், தோமஸ் அல்வா எடிசன், கிரகாம் பெல், அமெரிக்காவின் துணை சனாதிபதி நெல்சன் ரொக்பெல்லர், பிரபல விளையாட்டு வீரர் புரூஸ் ஜென்னர் இப்படிப் பல பிரபல்யங்கள் கற்றல் குறைபாடுள்ளவர்கள். உங்கள் குழந்தையினை கற்றல் குறைபாடு வென்றுவிடாது கற்றல் குறைபாட்டினை அவர்கள் வெல்ல உதவுங்கள்.

தொடரும் ……

sivagini.bala@thaiveedu.com

■ ■ ■

அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHO)
துயர் துடைக்க விரும்புவோருக்கான பங்களிக்கும் முறைகள்:
1. தபால் மூல முகவரி: "IMHO Canada", 5637 Finch Avenue East, Unit #7, Scarborough, ON M1B 2T9
2. இணைய தளம் மூலம்: www.imhocanada.org ⟶ Paypal
3. வங்கிக் கிரமக்கழிவு: இணையத்தளத்திலிருந்து அதற்கான படிவத்தை தரவிறக்கி நிரப்பி அனுப்பலாம் (Monthly contribution)
தொடர்புகளுக்கு (416) 321-9555; contact@imhocanada.org

# நலம் காப்போம்



**லோகினி பிரஷாந்த்**

நாங்கள் மட்டும் நலத்துடன் வாழ்ந்தால் போதாது, நம்மவர்களும் நம்மைச் சுற்றி உள்ளவர்களும் நலத்துடன் வாழ உதவி செய்வதே எமது தலையாய பணி என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டு இயங்கி வருவது IMHO எனப்படும் அனைத்துலக மருத்துவ நல அமைப்பு.

இவ்வமைப்பானது 2004ஆம் ஆண்டு அமெரிக்காவிலும், 2008ஆம் ஆண்டு கனடாவிலும் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வமைப்பானது அனைத்துலக, பின்தங்கிய, வறிய மக்களின் சுகாதார மேம்பாட்டிற்காக, சேவை மனப்பான்மை அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு இலாப நோக்கற்ற நிறுவனமாகும். அத்துடன் இது ஒரு மத, இன, அரசியல் சார்பற்ற அமைப்பாகும்.

ஈழத்தில் கடந்த ஆண்டு மிக உக்கிரமாக போர் நடைபெற்ற காலப்பகுதியிலும் அதற்கு முன்னரும் மிகக் காத்திரமான பல பணிகளை இவ்வமைப்பானது எமது உறவுகளுக்காகச் செய்தது பலருக்கும் நினைவிருக்கலாம். அந்த வகையில், ஆரம்ப வைத்திய சேவை / நடமாடும் மருத்துவ முகாம், சத்துணவுத் திட்டம், நீரிழிவு / இருதய சிகிச்சை மையங்கள், மன நல சேவை, இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரண நிதி உதவிகள் (அத்தியாவசிய தேவைகள், உணவு, உடை, குடிநீர், கழிப்பறை வசதிகள், மருந்து போன்றவை) உடல் அங்கம் இழந்தோருக்கான புனர்வாழ்வு மற்றும் இன்னும் பல சேவைகளும் அடங்கும்.

2009ஆம் ஆண்டின் மொத்த நிதி உதவி $601,650. இதில் $421,250 இடம் பெயர்ந்த மக்களுக்கான திட்டங்களுக்காக மட்டுமே செலவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஜூன் மாதம் 5 மற்றும் 6ஆம் திகதிகளில் அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் “நலம் காப்போம்” நிதி சேகரிப்பு நிகழ்வு ஐயப்பன் ஆலய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இலங்கை வடக்கு கிழக்கில் பணியாற்றுகின்ற நான்கு உளநல மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தது இங்கு குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்திலிருந்து டாக்டர் முல்லை பரமேஸ்வரன், கல்முனையிலிருந்து டாக்டர் ஜூடி ஜெயக்குமார், வவுனியாவிலிருந்து டாக்டர் சுதாகரன் மற்றும் வாழைச்சேனையிலிருந்து டாக்டர் டான் சௌந்தராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அனைத்துலக மருத்துவ நல அமைப்பானது இந்த நான்கு மருத்துவர்களுடன் பல தொண்டு நிறுவனங்களுடனும் இணைந்து கடந்த சில



வருடங்களாக பல்வேறு மன நல திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணம், கல்முனை ,வவுனியா ஆகிய இடங்களில் மருத்துவசாலை மனநோயாளர் சிகிச்சைப் பிரிவை நிறுவிப் பராமரித்து வருவதுடன் பல்வேறு கிராமப்புறங்களில் நடமாடும் மனநல மருத்துவ சேவைகளையும் ஆற்றி வருகின்றது.

இலங்கையில் இருந்து வருகை தந்திருந்த நான்கு வைத்தியர்களும் தாங்கள் பட்ட துயரங்களை விபரமாக விளக்கியதுடன், புலம் பெயர் மக்கள் செய்த உதவிகளுக்கு குறிப்பாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பு காலமறிந்து செய்த பொருத்தமான உதவிகளுக்கு நன்றி தெரிவித்தும் உரையாற்றினார்கள். அத்துடன் தத்தமது மாவட்டங்களில் வசிக்கும் மக்களின் மருத்துவ தேவைகளையும் குறிப்பாகப் போரினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றப்பட்ட மக்களின் அத்தியாவசிய, சுகாதார மற்றும் மனநல தேவைகளைப் பற்றி தாங்கள் கொண்டுவந்திருந்த விவரணப்படங்களின் ஊடாக விபரமாக விளக்கினார்கள். குறிப்பாக டாக்டர் ஜூடி அவர்கள் உரையாற்றுகின்றபோது மக்கள் போர்களங்களில் பட்ட அவலங்களையும் தற்போது இடப்பெயர்வினால் மக்கள் படும் துன்பங்களையும் மிக உருக்கமாக நா தளதளக்க அழுதழுது கூறிய கதைகள் மனதை நெகிழ வைக்கும் காட்சியாக இருந்தது. சபையில் இருந்தவர்கள் பலரும் தங்களை அறியாமலே கண்கலங்கினர்.

இந்நிகழ்வானது தாயக உறவுகளின் தற்போதைய தேவைகள் என்ன. அவற்றைப் பூர்த்தி செய்ய அனைத்துலக மருத்துவ நல அமைப்பு உருவாக்கியுள்ள திட்டங்கள் என்ன. அவற்றில் கனடா வாழ் மக்கள் எவ்வாறு பங்கெடுத்து உதவலாம் என்பவற்றை விளக்குவதாக அமைந்திருந்தது. அதிலும் குறிப்பாக ஊர்ச் சங்கங்கள் சில பெருந்தொகைப் பணத்தை நேரடியாக வருகை தந்து அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் தலைவரிடம் கையளித்ததை அவதானிக்க முடிந்தது. அத்துடன் வானொலி அறிவிப்பைக் கேட்டு வியந்த அன்பர் ஒருவர் உடல் அங்கங்களை இழந்தோருக்கான புனர்வாழ்வுத் திட்டத்திற்காக $2,400 அன்பளிப்பாக வழங்க முன்வந்ததையும் குறிப்பிடலாம்.

மேலும் இந்நிகழ்வில் அமெரிக்காவிலிருந்து வருகை தந்து இருந்த டாக்டர்கள் ரகுராஜ், தவம், அஞ்சேலோ மற்றும் ராஜம் ஆகியோர் மிகவும் ஆர்வத்துடன் நிகழ்ச்சிகளில் பங்கு எடுத்திருந்ததை அவதானிக்க முடிந்தது. டாக்டர் வரகுணன் முதல் நாள் நிகழ்வை மிக அழகாகத் தொகுத்து வழங்க இரண்டாம் நாள் நிகழ்வை டாக்டர் லம்போதரன் அவர்கள் கச்சிதமாகத் தொகுத்து வழங்க, டாக்டர் கண்ணா வேலா நன்றியுரையை வழங்கினார்.

மனிதாபிமான உணர்வு கொண்ட ஒவ்வொருவரும் தம்மை அனைத்துலக மருத்துவ அமைப்புடன் இணைத்துக் கொண்டு அல்லற்படும் உறவுகளுக்கு தம்மால் இயன்ற அளவு சிறு தொகையாவது உதவ வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்.

ஒருவரையாவது ஒரு குடும்பம் பராமரிக்க முற்பட்டால் அம்மக்களின் வேதனையை பெருமளவில் குறைக்க முடியும். ஒரு ஆரோக்கிய சமுதாயமாக மாற்ற நாம் முன் வருவோம். நாங்கள் கொடுக்கின்ற ஒவ்வொரு டொலரும் அந்த மக்களின் கைகளில் சென்றடைய வேண்டும். 30 வருடங்களாக தாங்கிப்பிடித்த நாங்கள் அம்மக்களின் வாழ்விற்காக தொடர்ந்து செயற்படுவோம். சர்வதேசத்தால் புறக்கணிக்கப்பட்டு அரசாங்கத்தால் கைவிடப்பட்டு புலம் பெயர் தமிழரை மட்டுமே நம்பி இருக்கும் எம்மக்களை வாழ வைக்க ஒன்றாய்ச்சேர்வோம். “சிறுதுளி பெரு வெள்ளம்” என ஒவ்வொருவரும் சிந்திப்போம்.

எங்கள் மக்களின் விடிவு எம் கையில்
அதை இப்போதே செய்வோம்

lokini.prashaanth@thaiveedu.com

■ ■ ■






# HST - வரமா? சாப...

5ம் பக்கத் தொடர்ச்சி...

- வீடு வாடகை.
- அடுக்குமாடி குடியிருப்பு வாடகை.
- வீட்டுக் கடன் வட்டி.

### பயணம் மற்றும் பொழுபோக்கு அம்சங்கள்:

- வான் வழி/ தரைவழி/ கடல்வழி மூலம் கடைாவிலிருந்து வெளியூர் செல்லும் பயணக் கட்டணம்.

### வரிகள் பற்றி ஒரு சில வரிகள்:

“விற்கத்தெரிந்தவன் தான் வாழ்த்தெரிந்தவன்” எனும் பழமொழியானது நாட்டிற்கும் பொருந்தும். விற்கும் பொருட்களுக்கு வரியை விற்பதற்கு வரிகள் விதிக்கப் படுகின்றன. அந்த வகையில் அறிமுகமாகி பல பரிணாம வளர்ச்சிகளை கண்டிருக்கிறது PST, GST மற்றும் HST.

British Columbia, Soaskatchewan, Manitoba, Ontario, Qubec மற்றும் Prince Edward தீவு ஆகிய மாகாணங்களில் பொருட்களின் விலைகளுக்கு எற்ப விற்பனையில் மாகாணவரி தீர்மானம் செய்யப் பட்டு PSTஆக வழக்கத்தில் இருந்தது.

ஜனவரி 1, 1991 அன்று அமைச்சர் Brian Mulroney மற்றும் நிதித்துறை அமைச்சர் Michael Wilson ஆகியோரால் சேவைசார் வரியின் ஒரு பரிணாமமாக GST அறிமுகமாகியது.

அதுவரை நடைமுறையில் இருந்துவந்த MST (Manufacturing Sales Tax) முறையானது உற்பத்தியாளர்களின் ஏற்றுமதி திறனை பாதிப்பதால், அதனை தவிர்க்க GST அறிமுகப்படுத்தப்பட்டதாக Mulroney கூறினார்.

இன்றளவிலும் GST அறிமுகப்படுத்தப் பட்ட முறையானது சர்ச்சைக்குரியதாகவே இருந்து வருகின்றது.

### மளிகை பொருட்கள்:

- அடிப்படை பொருட்கள் (பால், இறைச்சி, காய்கறி, பதப்படுத்தப்பட்ட பொருட்கள்)
- $4.00க்கு குறைவான உணவு பாதார்த்தங்கள்.
- Diapers.
- பெண்கள் சார்ந்த அழகு சாதன பொருட்கள்.
- செய்தி தாழ்கள் (ஒன்ராறியோ மட்டும்).
- சிறுவர் ஆடை மற்றும் காலணிகள் (அளவு 6க்கு உட்பட்டது).
- புத்தங்கள்.

### சேவைகள்:

- சிகிச்சைகள் (உடற்பயிற்சி)
- இசை பயிற்சிகள்.
- மருந்தாளர் கட்டணம்.
- குழந்தைகள் காப்பக சேவைக் கட்டணம்.
- நிதிசார் சேவைக் கட்டணம்.
- அரசாங்கம் வினியோகிக்கும் அடையாள அட்டைகள்.

### வாகனம் சார்ந்தவை:

- மோட்டார் வண்டி காப்பீட்டு தொகை.
- சிறுவர் இருக்கைகள்.
- ஒட்டுனர் உரிமம் மற்றும் வாகன எண்கள் புதுப்பித்தல்.

மேலே தரப்பட்டவைகள் கனடிய அரசினால் வழங்கப்பட்ட தரவுகளை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்டவையே.

“Rich becomes rich, poor becomes poor” என்று ஓர் கூற்று மேலை நாடுகளிலும், துரிதமாக வளர்ந்துவரும் நாடுகளிலும் பரவலாக காணப்படுகின்றது. புதிதாக அறிமுகமாகியிருக்கும் HST மேற்கூறிய கூற்றினை சார்ந்திருக்குமா அல்லது சற்று ஏழைகளையும் பாதுகாக்குமா என்பதனை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

karunagopalapillai@thaiveedu.com

■ ■ ■

Driving School

ஒட்டுனர் பயிற்சியில் நட்பான அணுகுமுறை, நவீனத்துவமான பயிற்சி முறையுடன் நம்பிகையான வெற்றி G1, G2 தேர்வுப் பயிற்சிகள், போக்குவரத்து வசதிகள், தெளிவான விளக்க வகுப்புகள், வீதித் தேர்வுக்கான வாகன ஒழுங்குகள், வசதிக்கேற்ற தேர்வு நாட்கள்.

நீண்டகால அனுபவத்தின் தனித்துவமான பயிற்சி

General Driving School

Ministry of Transportation Approved Instructor

பேரின்பநாதன் வேந்தன்

416-731-2829



# கோடை கால முதலீட்டு ஆலோசனைகள்



மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -

## இந்தக் கோடை காலத்திற்கான முதலீட்டு ஆலோசனைகள்:

Investment fund instate of Canada வெளியிட்ட தரவுகளின் படி கடந்த மே மாதத்தில் கனடிய முதலீட்டாளர்கள் CAD 1.25 Billion பெறுமதியான முதலீடுகளை Mutual funds இலிருந்து வெளியில் எடுத்து இருக்கிறார்கள். எல்லோரும் Euro நாணய நாடுகளான கிரேக்கம் ஸ்பெயின் போன்ற நாடுகளின் பிரச்சினைகளை இதற்கு குற்றம் சாட்டுகிறார்கள்.

ஆனால் உண்மையில் Bay Streetஇலும் Wall Streetஇலும் நடந்த பணவீக்கத்திற்கும் பணச்சுருக்கத்திற்கும் நடந்த போரே காரணம் என அவதானிகள் கருதுகிறார்கள். பணச்சுருக்கம் என்பது ஒரு கெட்ட வார்த்தை. ஏனென்றால் வீழ்ச்சியடையும் வீடுகளின் விலைகள், வீழ்ச்சியடையும் தாதுப்பொருள் களின் விலை இதனால் குறையும் வருவாய் கள் அதனால் குறையும் சம்பளங்கள். இதைத் தொடர்ந்து முதலீட்டாளருக்கு, இடருக்கு முகம் கொடுக்கும் விருப்புக் குறையும். இது பங்குச் சந்தையின் சுட்டிகளை உயர்த்தும் சரியான சூழல் அல்ல.

முதலீட்டாளர் மத்தியில் ஏற்பட்டுள்ள பயம் அரசாங்கங்கள் தங்களது கடன் கணக்குகளை முடிக்க முயலும் போது ஏற்படக் கூடிய பணச்சுருக்கம் பற்றிய பயமாகும். இதைத் தொடர்ந்து முதலீட்டாளர்கள் தாதுப்பொருட்கள் சம்பந்தமான நிறுவனங்களின் பங்குகள் தாதுப்பொருட்களின் ஏற்றுமதியில் தங்கியுள்ள கனடிய அவுஸ்திரேலிய நாணயங்களில் இருந்து ஓட்டம் எடுத்தார்கள். அங்கிருந்து ஓடி அமெரிக்க பத்து வருட முறியில் பணத்தைப் 'பாக்' (park) பண்ணினார்கள்.

இந்தப் பயம் நிரந்தரமானது அல்ல. இடருக்கு முகம் கொடுக்கும் துணிவு விரைவில் திரும்பும். இந்த நிலைக்கு ஏற்ப சரியான முதலீட்டு முறையை இந்நேரத்தில் தெரிவு செய்வது முக்கியமானது. இதைப்போலவே 1987இலும் 2003இலும் சந்தை உயர்ச்சியடைந்தது. இந்த உயர்வுகள் ஒரு பாரிய வீழ்ச்சியைத் தொடர்ந்து ஏற்படும் எழுச்சி நீண்ட காலத்திற்கு நடப்பதாக இருக்காது. ஆனால் இந்த எழுச்சிகள் நடைபெறும் போது முதலீட்டுக்குப் பங்குகளைத் தெரிவதற்கு பெரிய நிபுணத்துவம் ஒன்றும் தேவையில்லை. ஏனென்றால் எல்லாப் பங்குகளுமே உயர்வடையும். இதுதான் இதுவரை நடந்தது. இந்த உயர்ச்சி முதிர்ச்சியடையும் போது முதலீட்டாளர்கள் துறை தெரிந்து முதலிட நிர்பந்திக்கப்படுகிறார்கள். 2009ன் மத்தியில் முதிர்ச்சியைக் காட்டிய சந்தையில் வட்டி வீதங்களால் பாதிப்படையும் பங்குகள் திசையில்லாமலும் தாதுப்பொருள் பங்குகள் மேல்நோக்கியும் நகரத் தொடங்கின.

விழிப்புடன் இருந்த முதலீட்டாளர்களும் துறை சுழற்சி முறையில் (Sector rotation) முதலிடும் நிர்வாகிகளும் இந்தச் சந்தர்பங்களை நன்கு பாவித்துக்கொள்ள முடியும்.

ஆனால் தற்போது சந்தையில் இந்தத் துறைகளுள் அடங்கும் கூறுகளே வித்தியாசமான பாதையில் செல்லக்கூடிய சந்தர்பங்கள் தெரிகின்றது. உதாரணமாக சத்திவளத்துறையில் பெற்றோல் உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் பங்குகள் ஒரு திசையிலும் இயற்கை வாயு உற்பத்தி செய்பவை ஒரு திசையிலும் செல்கின்றன.

வங்கிகளின் பங்குகள் ஒரு திசையிலும் காப்புறுதி நிறுவனங்களின் பங்குகள் ஒரு திசையிலும் செல்கின்றன. இந்த நிலையில் முதலீட்டாளர்களுக்கு நிறைய அறிவும் ஆலோசனைகளும் தேவை. இந்த நிலையில் இந்த சிக்கல்கள் ஆரம்பமானதற்கான காரணம் எனச் சொல்லப்படும் அமெரிக்க அடைமானக் கடன் பிரச்சினைகள் இன்னும் முழுமையாக சீரடையாத நிலையில் முதலீட்டாளர்கள் தொடர்ந்தும் இடர் மீது அவதானமாக இருப்பது அவசியம்.

இந்நிலையில் சந்தையின் நேரத்தைக் கணித்து முதலிடுவதோ அல்லது அடுத்த பெரிய விடயத்தை தேடுவதோ பொருத்தமில்லாத, செய்யமுடியாத வேலை. இந் நிலையில் பல துறைகளில் முதலீடுகளைச் செய்வதனால் இடர்களைக் குறைத்துக் கொள்ளலாம். ஒரே துறையுள்ளேயும் இரு வித்தியாசமான நிறுவனங்களின் பங்குகளை வாங்குவது பொருத்தமானது.

Systemic Risk எனப்படும் முழுமையாகச் சந்தை வீழ்ச்சியடையும் போது எந்த நிறுவனமும் தப்பாது. இந்த இடர் முழுமையான சந்தையையும் பாதிப்பதால் இதிலிருந்து தப்ப பரந்துபட்டு முதலிடல் (Diversification) உதவாது.

maran.chelliah@thaiveedu.com

■ ■ ■







அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் - கனடாவில் சில தகவல்கள்

# சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரம்

## (International Driving Permit)

**சர்வதேச சாரதி அனுமதி பத்திரத்தினை (International Driving Permit) கனடாவில் பெறுவது எப்படி? ஏனைய நாடு ஒன்றிலிருந்து கனடாவிற்கு சர்வதேச சாரதி அனுமதி பத்திரத்திரத்துடன் வந்தால் என்ன நன்மை?**

1949ம் ஆண்டு ஜெனிவாவில் நடந்த ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஒப்பந்தப்படி (1949, Convention on Road Traffic) ஒரு நாட்டின் சாரதி அனுமதி பத்திரம் வைத்திருப்பவர் இன்னெரு நாட்டுக்குச் செல்லும்போது அந்நாட்டில் தற்காலிகமாக வாகனம் ஒட்டுவதற்காக, பல நாடுகளும் சேர்ந்து கூட்டாக நாடுகளுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட ஒரு ஒப்பந்தமே இதுவாகும். இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்ட ஏராளமான நாடுகள், தங்கள், தங்கள் நாட்டு சாரதி அனுமதி பத்திரங்கள். வைத்திருப்பவர்களுக்கு தங்கள் நாட்டு அதிகார வரம்பிற்குள் நின்று சர்வதேச சாரதி அனுமதி பத்திரங்களை வழக்கி வருகின்றனர். இது ஒரு பாஸ்போர்ட் வடிவத்தில் இருக்கும்:

ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ரஷ்யன், சீனா, ஜேர்மனி, அராபிக், இத்தாலியன், போத்துக்கீஸ், ஸ்கன்டினேவியன். ஆகிய பத்து மொழிகளில் இப்பத்திரத்தின் தகவல்கள் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கப்பட்டதாக இருக்கும். கனடாவில் இச்சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் அதிகாரத்தினை கனடிய மத்திய, மாகாண அரசுகள் கனடா முழுவதும் இயங்கும் Canadian Automobile Association என்னும் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. C.A.A என சுருக்கமாக அழைக்கும் இந்நிறுவனம் கனடாவில் வாகனமோட்டுபவர்களுக்குரிய சகல சேவைகளையும் நூறு ஆண்டுக்கும் மேலாக வழங்கிவருகின்றது. வாகனமோட்டுபவா் இந்நிறுவனத்தில் ஒரு அங்கத்தவராக சேர்ந்தால் பல அனுகூலங்கள், சேவைகள் பெறும் வசதிகள் உண்டு.

ரொரன்ரோவில் இந்நிறுவனத்தின் விசலாசம் இதுவாகும்.

CAA – South Central Ontario
60 Commerce Valley Drive East Thornhill, Ontario L3J TP9.
தொலைபேசி: 416 221 4300 or 1 800 268 3750
இணையத்தளம்: www.caasco.com

இங்கு நேரடியாக அழைத்து, தொடர்பு கொண்டு சர்வதேச சாரதி அனுமதி பத்திரம் பெறும் விண்ணப்பப் படிவத்தினை எடுத்து நிரப்பி வழங்கலாம். கனடாவில் இதனை விண்ணப்பித்து பெற்றுகொள்ள விரும்புவர் பின்வரும் தகைமைக்குள் இருத்தல் வேண்டும்.

- கனடாவில் வலிமையான சாரதி அனுமதி பத்திரம் வைத்திருக்க வேண்டும். விண்ணப்பிக்கும் போது இவ் அனுமதிப்பத்திரத்தின் பிரதிகள் சமா்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பிப்பவர் பதினெட்டு வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- இரு பாஸ்போர்ட் அளவு படங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

### தகவல் தொடர் - 42

- தற்போதுள்ள கட்டணமாக $15 டொலர் செலுத்துதல் வேண்டும்.

இவற்றுடன் சேர்த்து Canadian Automobile Association (CAA) நிறுவனத்தின் சர்வதேச சாரதி அனுமதி பத்திரத்திற்கு மனு செய்யும் விண்ணப்படிவம் (Canadian International Driving Permit Application Form) எடுத்து நிரப்பி கொடுத்தல் வேண்டும்.

### விண்ணப்படிவத்தில் வழங்கப் பட வேண்டிய தகவல்கள்:

- விண்ணப்பிப்பவரின் பெயர்.
- பிறந்த இடம், பிறந்த திகதி, கனடாவில் விலாசம்.
- கனடாவிலுள்ள சாரதி அனுபதிபத்திரம் தொடர்பான விபரங்கள்.
- கனடாவினை விட்டு வெளிநாடு ஒன்றிற்குப் புறப்படும் திகதி.
- எந்த நாட்டில் வாகனம் செலுத்தப் போவது என்ற விபரங்கள்.

இப்படி சில தகவல்கள் வழங்கவேண்டும்.

சர்வதேச சாரதி அனுமதி பத்திரத்துக்குரிய தகவல்களை இந்நிறுவனத்தின் இணையதளத்தினுள் சென்றும் அறிந்து கொள்ளலாம். இணையத்தளத்தின் முகவரி பின்வருமாறு www.caa.ca/travel/travel-permits-e.cfm. விண்ணப்பப் படிவத்தினை பின்வரும் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தும் பெற்றுக் கொள்ளலாம். அதன் முகவரி பின்வருமாறு. www.caa.ca/travel/travel-permits-application-e.shtml.

விண்ணப்பம் தபால் மூலம் அனுப்பினால் மூன்று கிழமைகளில் இச்சர்வதேச சாரதி அனுமதி பத்திரத்தினை தபாலில் அனுப்பிவைப்பார்கள். நேரடியாக அலுவலகத்திற்கு தேவையான தகவல்களுடன் சென்றால் உடனடியாகவே பெற்றுகொள்ளலாம்.

### சில நிபந்தனைகள்:


- கனடாவில் வைத்திருக்கும் சாரதி அனுமதி பத்திரம் வாகனமோட்ட கற்றுகொள்ளும் சாரதி அனுமதி பத்திரமாக (G 1) License) இருந்தால் அதனை வைத்து சர்வதேச சாரதி அனுமதி பத்திரம் பெறமுடியாது.
- சர்வதேச சாரதி அனுமதி பத்திரம் கனடா உட்பட சகல நாடுகளிலும் ஒரு ஆண்டிற்கு மட்டுமே வலிமையுடையதாக வழங்கப்படும். விரும்பினால் இப்பத்திரம் வழங்கப் பட்ட நாட்டில் மட்டும் புதுப்பித்துக் கொள்ளலாம்.
- கனடாவில் சாரதி அனுமதிபத்திரம் தடை செய்யப்பட்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது.
- கனடாவில் வழங்கப்பட்ட சர்வதேச சாரதி அனுமதி பத்திரத்தினை வைத்து கனடாவில் வாகனம் செலுத்த முடியாது.

சர்வதேச சாரதி அனுமதி பத்திரம் என்பது ஒருவர் விஜயம் செய்யும் நாடுகளில் தற்காலிகமாக வாகனம் செலுத்துவதற்கு என அனுமதிக்கும் பத்திரம் ஆகும். நிரந்தரமாக அந்த நாட்டில் வாகனம் செலுத்த விரும்பினால் அந்த நாட்டுக்குரிய சாரதி அனுமதி பத்திரங்களை அந்தந்த நாட்டுக்குரிய ஒழுங்கு விதிகளுக்கு அமைய பெற்றுகொள்ளுதல் வேண்டும்.

கனடாவுக்கு சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரத்துடன் வருபவர்கள் அதன் காலாவதியாகும் திகதி வரை வாடகை வாகனம் செலுத்தலாம். வாகனங்களை வாடகைக்கு வழங்கும் கனடாவின் சகல கம்பனிகளும் சர்வதேச அனுமதி பத்திரம் வைத்ததிருப்பவருக்கு வாடகைக்கு வாகனம் வழங்க தயாராக இருப்பார்கள் என சொல்ல முடியாது. அதுபோல் சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரத்தினை மட்டும் வைத்திருப்பவர் வாகனம் வாங்கி செலுத்த விரும்பினால், சகல வாகன காப்புறுதி நிறுவனங்களும் காப்புறுதி வழங்குவார்கள் எனவும் எதிர்பார்க்க முடியாது.

இவ்வாறு தொடர்ந்து கனடாவில் இருந்து வாகனம் செலுத்த வேண்டிய நிலமை ஏற்பட்டால் அவர்கள் இருக்கும் மாகாணத்தில் காலதாமதம் இல்லாது வீதிப் பரிட்சைக்கு தோற்றும் ஒரு வசதியினை மட்டும் ஏனைய நாட்டு சாரதி அனுமதி பத்திரங்கள் வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படுகிறது.

பின்வரும் நாடுகளின் சாரதி அனுமதி பத்திரங்கள் வைத்திருப்பவர்கள் மட்டும், தொடர்ந்து கனடாவில் குறிப்பாக ஒன்றாரியோ மாகாணத்தில் வசிக்கும் நோக்கம் இருந்தால் எழுத்துப் பரிட்சை வீதிப்பரிட்சை என எதுவுமில்லாது தங்கள் நாட்டு சாரதி அனுமதி பத்திரத்தினை இங்கு கையளித்து ஒன்ராரியோ மாகாண சாரதி அனுமதி பத்திரமாக மாற்றி கொள்ளலாம்.



சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -

அந்நாடுகள் வின்வருமாறு:

- அவுஸ்திரேலியா Australia
- ஆஸ்திரியா Austria
- பெல்ஜியம் Belgium
- பிரான்ஸ் France
- இங்கிலாந்து Great Britain
- ஜேர்மனி Germany
- யப்பான் Japan
- கொறியா Korea
- சுவிர்சலாந்து Switzerland
- ஜஸில் ஒவ் மான் Jsle of Man
- அமெரிக்க U.S.A
- கனடாவின் ஏனைய மாகாணங்கள்

மேற்குறிப்பிட்ட நாடுகளில் இரு ஆண்டு உட்பட்ட அனுபவமுள்ள சாரதி பத்திமாக இருந்தால் G (2) சாரதி அனுமதி பத்திரமாகவும் இரு ஆண்டுக்கு மேலான அனுபவமுள்ள பத்திரமாக இருந்தால் G சாரதி அனுமதி பத்திரமாகவும் எதுவித பிரச்சினைகளுமில்லாது மாற்றியமைத்து வழங்கப்படும்.

siva.panchalingam@thaiveedu.com

■ ■ ■

J & S ACCOUNTING SERVICE
INCOME TAX SPECIALIST
FOR ALL YOUR PROFESSIONAL ACCOUNTING SERVICE
* CORPORATE TAX
* PERSONAL TAX
* BOOKKEEPING
* HST FILING
* PAYROLL SERVICE
* FINANCIAL STATEMENT PREPARATION
* BUSINESS START UP ASSISTANCE
* BUSINESS REGISTRATION
* INCORPORATING A BUSINESS
* PREPARING BUSINESS PROPOSAL
* BUSINESS VALUATION
* CRA AUDIT REPRESENTATION
* GST / PST / WSIB RETURNS
* CORPORATE TAX PLANING AND PREPARATION
INCOME TAX & RRSP
FREE CONSULTATION WITH APPOINTMENT
J&S ACCOUNTING SERVICE
15 YEARS OF EXPERIENCE
PLEASE CALL:
JEYA PILLAI, CGA
OR SUE SRI, CMA
Excellence! SERVICE
Tel: 416-826-5306

உங்கள் சகல காப்புறுதிகளுக்கும்
பல்வேறு வகையான காப்புறுதி கம்பனிகளிலும்
விலைகளை அறியவேண்டுமா
To shop around insurance price please call
Siva Panchalingam, B.Com.
(Licensed Insurance Broker)
Office: 1 888 651 1955
Home: 416-321-0999, Cell: 416-990-4908
400, Bradwick Drive., Suite 102, Concord, ON





Shan Thayaparan
Sales Representative
Dir: 416.567.7675
Bus: 416.321.2228
www.shan123.com
E mail: Shan123@rogers.com
RE/MAX
Above the Crowd!
Vision Realty Inc.
Scarborough
$179,900
SOLD
Largest Unit
Markham
$569,900
SOLD
2800 Sqf. New Starlane Home
Markham
$598,900
2900Sqf. Starlane Home
Call for appointment!!!
Brampton
$389,900
SOLD
Priced to Sell!!!
Brampton
Wanted a House for Sale
Scarborough
$760,000
You Must See to Believe it!!!
Scarborough
$379,900
SOLD
Extra Large/Finished Bsmt
Scarborough
$598,900
Gorgeous House& Great Location
Scarborough
$549,000
$Excellent Value$
Scarborough
Wanted!!! Condos in 100 Mornelle Court for Top Dollars
Scarborough
$439,900
SOLD
Mattamy Built/ 4+2 Bedrooms
Scarborough
Wanted!!! Condos in 180 Markham Road. for Top Dollars
Scarborough
$339,900
McCown/Finch
Scarborough
Wanted!!! Condos in 2500 Bridle Town Cir. for Top Dollars
Wanted a House for Sale
Ajax
$319,900
SOLD
One Year Old Semi
Daisy Mart
$99,000
Real Money Maker
Stouffville
$345,000
SOLD
Beautiful Semi.
Wanted a House for Sale
Scarborough
Wanted!!! Condos in 400,410,430,480 McLevin Ane Top Dollars
RE/MAX
Above the Crowd!
Vision Realty Inc. Brokrage
Viki Velauthan
Sales Representative
Dir: 416.457.7162
Bus: 416.321.2228
E mail: vvelauthan@yahoo.com

# சந்தேகம், பொறாமை, தாழ்வு மனப்பான்மை



மஞ்சுளா ராஜலிங்கம்

பொறாமை, இது ஒரு பொல்லாத வியாதி தான். அதுவும், உறவுநிலையில் உள்ளவர்களின் பொறாமையின் பாதிப்பு அதிகம். பொறாமையின் ஆக்கிரமிப்பிற்குள் வாழ்நாளில் மாட்டாத மனிதரே இருக்க முடியாது. சில சமயங்களில், பொறாமைக்குணம் பெண்களின் இருப்பிடமாக மட்டுமே இருக்க முடியும் என்ற தப்புக்கணக்கு மற்றவர்களின் மனதில் இருப்பதில் நமக்கும் ஒரு சங்கடம். மனிதனாய்ப் பிறந்தவர் ஒவ்வொருவருக்குமே பாரபட்சங்கள் இன்றி வருவது பொறாமை. அதிலும், இன்னவின்னதிற்குத்தான் பொறாமைப்படுவது என்ற காரண காரணிகளும் இல்லை. ஆணுக்கும், பெண்ணிற்கும் பொதுவான குணம் பொறாமை. நம் மனதில் நாம் மற்றவர்களைப் பற்றிய குணங்களை, நமக்கேற்ற விதத்தில், எதிர்மறை விளைவுகளுடன் எதிர்நோக்கும் போது, பொறாமை வெளிப்படுகின்றது. ஒருவரின் முன்னேற்றத்தைப் பார்த்து, அவற்றை மனப்பூர்வமாக நம் மனதில் ஏற்றுக்கொண்டு, அவர்களுக்காகச் சந்தோஷப்படாத விடத்து, பொறாமை நம்மை ஆக்கிரமித்து விடுகின்றது.

பெரும்பாலான பொறாமைக் குணங்களை உறவின் விரிசல்களில் காணக்கூடியதாக இருக்கின்றது. பொறாமை என்ற ஒன்று மனதை ஆக்கிரமிக்கும்போது, இனிமையாகப் போன உறவுகளில் ஒட்டாத்தன்மையும், நிம்மதியற்ற வாழ்க்கையும், சம்பந்தப்பட்டவர்களை மட்டுமல்லாது, அவர்களைச் சுற்றியிருப்பவர்களையும் பாதிக்கின்றது. பொறாமை என்பது அடிக்கடி வருவது அல்ல என்றாலும், அது நம் மனதை விட்டு இலகுவில் அகலக்கூடிய ஒன்றும் அல்ல.

பொறாமைப்படுவதை நிறுத்துவதற்கு வழிவகைகள் எம்மிடம் தான் இருக்கின்றன.

உறவுகளில் போட்டிகள் இருக்கலாம். போட்டிகள் ஆரோக்கியமானதாக இருக்கவேண்டும். ஆரோக்கியமான தன்மை போட்டிகளில் இல்லாமல் போகும்போதுதான் பொறாமைக் குணங்கள் உருவெடுக்கின்றன. வாழ்விலும் பொறாமை கூடிவிட்டால், வாழ்க்கை கரித்து, சுவையே இல்லாத ஒன்றாகப் போய்விடும். உறவின் தொடக்கங்களில், காதல் வயப்படும் போது, அங்கு தோன்றும் ஒவ்வொரு பொறாமைக் குணமும், காதலின் உறுதிப் பிரமாணங்களாம். ஆனால், அதுவே உறவின், ஒவ்வொரு காலகட்டத்திலும், தொடரும்போது, அந்த உறவிற்கே வில்லனாக மாறிவிடுகின்றது. இந்தப் பொறாமைக்குணம் கட்டுப்படுத்த முடியாத உச்சக்கட்டத்தை அடையும்போது, வெறுப்பிற்கு ஆளாகும் நபர், அந்த உறவையே முறித்து, முற்றுப்புள்ளி வைத்துவிட்டுப் போகத் தயங்குவதில்லை. இது தப்பான முடிவா? நிச்சயமாக இல்லை.

பொறாமைக் குணம் கொண்ட ஒருவர், ஏன் அப்படி இருக்கின்றார் என்ற ஆராய்ச்சியில் இறங்கினால், அவரின் வாழ்க்கையின் கடந்த காலங்களில், சோக நிகழ்வுகள் ஏதாவது அமைந்து, அதன் தாக்கத்தின் விளைவில், அவர் பின்னர் தம் வாழ்வில் இணையும் இன்னொரு புதியவரை முற்றிலுமாக நம்பித் தன்னை ஒப்படைக்கத் தயங்குகின்றார். புதியவர் மேல் முழுநம்பிக்கையும் வைக்க முடியாமல், இறந்தகால சம்பவங்கள் பயமுறுத்துகின்றன. ஒருவர் தம் பழைய வாழ்க்கையின் உறவில், தம்மை ஒருவர் ஏமாற்றி, அல்லது நேர்மையற்றவராக நடந்திருந்தால், அவர் பின்னர் தம் வாழ்க்கையில் புதிதாக வரும் ஒருவரை, முழுமையாக நம்பாமல் சந்தேகிக்கத் தலைப்படுகின்றார். பயம் கலந்த சந்தேகத்தில் அதிகப் பாதிப்புக்கள் இல்லை, ஆனால் அதிகளவான பயமும், அதன் விளைவாக ஏற்படும் பொறாமைக் குணங்களும் மிகவும் அபாயகரமானவை.

சின்னதான மனஉளைச்சல்கள், அதிகமான தாழ்வு மனப்பான்மை போன்றவையே பொறாமை போன்ற குணங்களுக்கு அடிக்கற்களாக அமைகின்றன. அதேநேரம், பொறாமைக் குணம் ஒருவரின் மனதில் தாழ்வுமனப்பான்மையையும் உருவாக்கிவிடும். முதலில் தாழ்வு மனப்பான்மைக்கான காரணங்களை நாம் அறிய வேண்டும். உறவில் அடிமைத்தனம் கையாளப்படும்போது, தாழ்வுமனப்பான்மை அதிகரிக்கின்றது. தாழ்வு மனப்பான்மை அதிகரிக்குமிடத்து, பொறாமை தன் பங்கைச் சரியாகச் செய்கின்றது. ஆத்திரம் அதிகரிக்கின்றது. உறவில் விரிசல்கள் ஏற்படுகின்றன.

தாழ்வு மனப்பான்மை அற்றுப்போகுமிடத்து,



நம்பிக்கை பிறக்கின்றது, நம்மைப்பற்றி மட்டுமல்லாமல், மற்றவர்களிலும் அது அதிகரிக்கின்றது.

பொறாமைக் குணத்திலிருந்து விடுபட, முதலில் நாம் மனம் திறந்து, மற்றவர்களிடம் நம் மனதில் ஏற்படும் மனக் கிலேசங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நாம் நம் எண்ணங்களை மற்றவர்களுக்குச் சொல்லாமல் போனால், வாழ்க்கையே திசைதிருப்பக்கூடிய அளவுக்கு பொறாமை தலையெடுக்கும். அதுதான் உண்மை.

உங்கள் மனதில் பொறாமை உணர்ச்சி தலைதூக்குகின்றது என்ன எண்ணம் உங்கள் மனதில் எழுந்தால், முதலில் அமைதியாகுங்கள். அதாவது, சிந்திக்காமல், வார்த்தைகளை அள்ளிக்கொட்டி விட்டுவிடாதீர்கள். விரல் நீட்டி, சுட்டிக்காட்டி குற்றம் சொல்லாதீர்கள். அமைதியாக சிந்தியுங்கள். கண்களை உருட்டி அல்லது அதிருப்தியான ஒரு குணத்தை அந்த இடத்தில் காட்டுதல் நல்லதல்ல. ஒரு பொறாமை கொண்டவர் தன் மனநிலை இருக்கும் நிலையில் என்ன செய்யத் தலைப்படுவாரோ, அதற்கு எதிர் மாறான மனநிலையை நாம் எமக்குள் ஏற்படுத்த வேண்டும். உதாரணமாக, உங்களுக்குப் பரிச்சயமான நண்பர் ஒருவர், தனக்குப் பிடித்த இன்னொரு நண்பருடன் நேரத்தைச் செலவிட விரும்பினால், நீங்கள் தாராளமாக, அவர்கள் போய்வரக்கூடிய ஒரு நல்ல திரைப்படம் அல்லது நல்ல ஒரு உணவகத்தின் பெயரைச் சொல்லி அவர்களை உற்சாகப் படுத்தலாம். இங்கு பொறாமை தலைதூக்கக் கூடாது. உங்கள் பிடித்தவர் இன்னொருவருடன் பேசிக்கொண்டிருக்கின்றாரா, அவரை அவர் போக்கில் விடுங்கள். உங்கள் நிலைமையில், உங்கள் மனதுக்கு உகந்தவர்களை வைத்து, அவர்கள் அப்படி நடந்தால், நீங்கள் எப்படி உணர்வீர்கள் என்பதை நினையுங்கள்.

நியாயத்தைக் கண்டறிய இந்த வழி மிகவும் உகந்தது.

பொறாமை, பெரியதொரு சுற்றுச் சுவரை மனதில் எழுப்பி விடுவது மல்லாமல், ஒரு பெரிய திரையையே இரு மனங்களின் நடுவில் நிரந்தரமாக நிலைநிறுத்தி விடும்.

நம்மை பொறாமை என்ற பொல்லாக்குணம் ஆக்கிரமிக்கையில், நாம் நிச்சயம் மற்றவர் சொல்வதைக் கேட்கவும் தயாரில்லை என்பது தான் உண்மை. ஆனால், நாம் நம்முள் வளர்த்துள்ள மற்றவரைப் பற்றிய நினைப்பை வைத்தே அவரை நாம் சாடுவதற்கு முனைகின்றோம். சாடப்பட்டவர், ஒரு செயலில் இறங்கு முன்பே, நாம் நம் கற்பனையில், அவர் அப்படி ஒரு காரியத்தில் ஈடுபடுகின்றாரோ, அல்லது ஈடுபட்டுவிடுவாரோ என்ற மனப்பான்மையில், நம்மை நாமே சந்தேகப் படுகின்றோம். நம் மனம் நம்மிடம் சொல்வதை உண்மை என்று நம்பி அதை நியாயப் படுத்த, சரியைக் கூட தப்பாக எடுத்துக் கொள்கின்றோம். அப்படியொரு காரியத்தில் ஒருவர் ஈடுபட சந்தர்ப்பங்களோ, மனமோ கூட வராமல் போகலாம்.

ஒருவர் நாம் சந்தேகப்படும் படியான தப்பைச் செய்கின்றார் என்றால்கூட, வருந்த வேண்டியது நாமல்ல. நாம் நாமாகத்தான் இருந்திருக்கின்றோம் என்றவரை பெருமையடைய வேண்டும். மற்றவர் திருந்துவது அவரவர் பொறுப்பு.

வாழ்க்கையில் பிரச்சினைகள் இல்லாதவர், பிரச்சினைகளைச் சந்திக்காதவர் யார்? ஒருவரும் இல்லை. எல்லாம் இருந்துமே, இன்னும், இன்னும் என்று விதவித உணர்வுகளையும், பொருட்களையும் தேடியலையும் மனித வாழ்கை ஒரு புரியாத புதிர்தான். வாழ்க்கை வசதியானதொன்றாக, பணமும், பேரும், புகழும், அழகும், வெற்றியும் படைத்த பிரபல்யமானவர்களின் வாழ்வில் கூட, சாதாரண அடிப்படை வசதிகளுடன் வாழும் மனிதர்கள் வாழ்வில் ஏற்படும் நித்தியச் செயற்பாடுகளும் தோன்றத்தான் செய்கின்றன.

நல்ல நண்பர்கள் நமக்கு அமைந்திருக்கின்றார்கள், இவர்கள் வாழ்வில் ஒரு குறையும் இல்லை என்று நினைத்து, ஒருவருடன் பழக விளையும் நீங்கள், காலப்போக்கில், உங்களைவிட அவருக்கு தாங்கொணாத் துயரங்கள், துன்பங்கள் அவர் வாழ்க்கையில் இருப்பதைப் புரிந்து கொள்வீர்கள். ஆனால் அவர் நம்மைப் போல், பொறாமையில் புழுங்கி, எங்கே தமக்குச் சொந்தமானதை மற்றவர்கள் அபகரித்துக் கொண்டுபோய் விடுவார்களோ என்ற எண்ணத்தில் திளைத்து, அதனால் மற்றவர்கள்மேல் சந்தேகப்பட்டு, தம் வாழ்க்கையைத் தொலைக்க விரும்பாதவர்களாக இருப்பார்கள். அவர்களிடம் இருந்து நாம் கற்றுக் கொள்ளலாம்.

பொறாமை விளையும் இடத்தில், இலகுவாக நம்பிக்கை என்ற ஒன்றும் அற்றுப்போய் விடுகிறது. ஆனால் சற்று சிந்தித்துப் பாருங்கள். நாம் பொறாமை கொள்ளும் அளவிற்கு, சம்பந்தப்பட்ட விடையம் கடந்த காலத்தில் நம் நம்பிக்கையைக் குலைக்கும் விதத்தில் எப்பொழுதாவது நடந்திருக்கின்றதா? இல்லை என்றால், இப்பொழுது மட்டும் ஏன் நாம் இப்படிச் சந்தேகம் கொள்கின்றோம் என்பதை நாம் நம்மிடம்தான் கேட்க வேண்டும். பிரச்சினை தாழ்வு மனப்பான்மை நம் மனதில் தான் இருக்கிறது. மனிதரை மன்னிக்கவும், தேவையற்றவைகளை மறக்கவும் மனிதரான நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நம் மனதில் பெருந்தன்மை இருக்க வேண்டும்.


manjula.rajalingam@thaiveedu.com

■ ■ ■

**தாய்வீடு பத்திரிகை பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.**

***E-mail:thaiveedu@gmail.com***
***Fax: 416-849-0594***
***Tel: 416-646-3422***




ARE YOU
THINKING OF
SELLING
BUYING
OR
INVESTING
IN
REAL ESTATE
MARKET?
THE NAME YOU SHOULD REMEMBER...
SUJAN SHAN
Real Estate Broker
ONE BLOOR
Young & Bloor
65 Storeys
www.1Bloor.info
FIVE CONDOS
Yonge St & St Joseph St
45 Storeys
www.FiveCondo.Ca
LIBRARY DISTRICT
Bathurst St & Fort York Blvd
29 storeys
www.LibraryDistrictCondo.Com
ICE CONDOS
York & Bremner
55 & 65 Storeys
www.IceCondo.com
"The person you can rely on for all your Professional Real Estate Needs"
Dir: 416 402 1040
Bus: 416 321 2228
E mail: sujan.shan@gmail.com
RE/MAX
Vision Realty Inc.
www.NewReleaseCondos.com

# ஒன்றாறியோ அரசின் உதவித்தொகை பெறுவது எப்படி?

நான் கனடிய மத்திய அரசாங்கத்தின் அங்கிகாரம் பெற்ற ஒரு முழு நேர சக்தி ஆலோசகர் ஆக (Certified Energy Advisor) பணியாற்றுவதால், வீட்டு உரிமையாளர்கள் என்னிடம் Energy Audit சம்பந்தமாக பொதுவாகக் கேட்கும் கேள்விகளுக்கான பதில்களை தருவதற்காக 'தாய்வீடு' மூலமாக உங்களை சந்திக்கின்றேன்.

இக்கட்டுரையில் ஒன்றாறியோ அரசு புதிய வீடுகளின், பூரணப்படுத்தப்படாத நிலக்கீழ் பகுதியில் இருக்கும் (Unfinished Basement) Insulationஐ R-24ஆல் அதிகரிக்க வளங்கும் $1250 பண உதவி (Grant) பற்றி விபரமாகப் பார்ப்போம்.

பொதுவாக Ontario மாகாணத்தில் கட்டப்படும் புதிய வீடுகளின் சக்தி வினைத்திறன் (Energy Efficiency) சம்மந்தப்பட்ட பகுதிகள் குறைந்த தரத்துடன் (Minimum Standard) இருப்பதைக் காணலாம். புதிதாகக் கட்டிய வீடுகளின் பூரணப்படுத்தப்படாத நிலக்கீழ் பகுதியின் வெளிச்சுவரின் உட்ப்பகுதியின் பரப்பளவில் சுமார் 50 வீதத்துக்கும் குறைந்த பகுதி மட்டுமே Insulation செய்யப்பட்டு இருப்பதைக் காணலாம்.

ஒரு வீட்டில் ஏற்படும் மொத்த வெப்ப இழப்பில் (Heat loss) மேற்குறிக்கப்பட்ட காரணம் மட்டும். சுமார் 15 வீதத்தில் இருந்து 20 வீதம் வரை உள்ளடக்குவதாக கணிக்கப்பட்டுள்ளது. அதாவது மாதாந்தக் கட்டணமாக $300 டொலர் செலுத்தும் வீட்டு உரிமையாளர் வருடமொன்றிற்கு $540 டொலர் முதல் $720 டொலர் வரை, முறையாக Insulation செய்யப்படாத பகுதியால் இழக்கின்றார்.

எனவே வீட்டின் நிலக்கீழ் பகுதிக்கு மேலதிக Insulationஐ சேர்ப்பதன் மூலம் வெப்ப இழைப்பைக் கட்டுப்படுத்தலாம்.

இதற்கு பயன்படுத்தப்படும் Insulationஐப் பற்றி வீடு உரிமையாளர்களின் இடையே எழும் கேள்விகள் சிலவற்றை விபரமாகப் பார்ப்போம்.

### எத்தகைய Insulationஐ பயன படுத்துவது நல்லது?

பொதுவாக Insulationஇன் தரமானது R-value என்ற அலகை பயன்படுத்தி அளக்கப்படுகிறது. ஆகவே R-value கூடிய Insulation கூடிய அளவு சக்தி விரையைத்தை தடுக்கும்.




உங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள கட்டிட பொருள் விற்கும் கடையில் பார்த்தால் தெரியும் அங்கே R-8, R-12, R-20, R-40 என R- value குறிக்கப்பட்டிருக்கும் Batt Insulation களை காணலாம்.

இதில் ONTARIO அரசின் பண உதவியை பெற வேண்டுமாயின், உங்கள் வீட்டின் நிலக் கீழ் பகுதியில் இருக்கும் Insulaionஐ R-24ஆல் அதிகரிக்க வேண்டும்.

இதில் இருக்கும் சிறுசவால் என்னவென்றால் R-24 'Batt' Insulation விற்க்கப்படுவது குறைவு. இந்நிலையில் நீங்கள் R-12 'Batt' Insulation வேண்டி, இரண்டு படலமாக ஒன்றின் மீது ஒன்றாக வைப்பதன் மூலம் R-24 Insulation தரத்தைப் பெறலாம்.



ஜெறாட் றட்ணராஜா
- Energy Advisor -

### மேலதிக Insulationஐ சேர்ப்பதால் ஏற்படும் நன்மை:

- வீட்டை வெப்பப்படுத்தவும் குளிர் ஊட்டவும் ஏற்படும் செலவு குறையும்.
- மின்சாரப் பாவனையையும், சூழல் மாசடைவதையும் குறைக்க உதவும்.
- வீட்டின் தரத்தை உயர்த்துவதன் மூலம், மீழ் விற்பனை (RE-SALE) பெறுமதியை அதிகரிக்கலாம்.
- இவ்வாறான பல நன்மைகளுடன் அரசின் உதவிப் பணத்தையும் பெறலாம்.

### அரசின் உதவித் தொகையை எப்படிப் பெறுவது?

முதலில் உங்கள் வீட்டிற்கான ஒரு Energy Auditஐ, அரசாங்க அங்கிகாரம் பெற்ற ஒரு சக்தி ஆலோசகர் (Government Certified Energy Advisor) மூலம் செய்ய வேண்டும். பின்பு அந்த சக்தி ஆலோசகர் உங்கள் சார்பாக இதற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, உங்களுக்கு கிடைக்க வேண்டிய உதவித் தொகையைப் பெற்றுத் தருவார்.

gerard.ratnarajah@thaiveedu.com

■ ■ ■

ENERGY AUDIT

Gerard Ratnarajah, P.Eng.
Government Certified Energy Advisor
Tel: 647-206-4494

Retrofit Your Home and Qualify for up to $6,000 in Grants!

| | |
|---|---|
| Energy Audit Fee | $350 |
| Audit Rebate | - $150 |
| Discount (Limited Time Offer) | - $50 |
| Your Cost | $150 |

GST not included

| Retrofit Upgrades | Ontario Grant | Toronto Grant |
|---|---|---|
| Attic | Up to $750 | Up to $200 |
| Air Sealing | $190 plus Bonus $ | |
| Windows and Doors | $40/Opening | |
| Central A/C | $250 | |
| Basement Insulation | Up to $1,250 | Up to $200 |
| Wall Insulation | Up to $1875 | Up to $500 |
| Hot Water Heater | Up to $1,250 | |
| Heating Systems | Up to $4,375 | |
| HRV / ERV | Up to $375 | |
| Toilets | $65 /Toilet | Up to $75 |

ecoHome CONSULTANTS LTD.
GREEN INNOVATIONS FOR LIVING™


To Buy or Sell Real Estate.....
To Buy or Sell your Home for the Right Price please call me...
RED CARPET
Royal Realty Ltd., Brokerage
Bus: 416-284-5555
Free Market Evaluation
Karu Kandiah FRI. CRES,
Real Estate Broker / President
Cell: 416-616-7278
22 YEARS Service
# 1 Team in North America
Looking for a New Real Estate Career
Join a winning team for your success
• Help & guidance for newly licensed agents
• Regular Sales Training from Experts
• Referral leads
• Free Real Estate Classes
Trusted for Service and Respected for Results
$459,000
Middlefield/Denison
4+2 Bedrooms, 4 Washrooms
Hardwood In Main & 2nd Flr
$399,000
Park Lawn/Lake Shore
2 Bedrooms, 2 Washrooms
Very Well-Maintained Property
$99,900
New Price
Keele/Finch
3 Bedrooms, 2 Washrooms
Ideal For 1st Time Buyers.
$129,900
Kennedy/Hwy 401
1+2 Bedrooms, 2 Washrooms
Ideal For First Time Buyers
$365,000
Lawrence/East Ave
3+1 Bedrooms, 3 Washrooms
Super Family Home Quiet Crescent
$309,900
Finch/Birchmount
4+1 Bedrooms, 2 Washrooms
Newly Renovated Bright,Clean
$299,000
Simcoe / Niagara
5 Bedrooms, 3 Washrooms
A Good Investment Opportunity
$184,900
Kingston/Guildwood
2 Bedrooms, 2 Washrooms
View Of The Lake Shows
$349,900
Islington/Finch
3 Bedrooms, 4 Washrooms
Appr. 3 Years Old Newer Home
$359,900
Trethway/Black Creek
3 Bedrooms, 3 Washrooms
Shows Beautiful Liv/Din
$395,000
Port Union/Lawrence
3 Bedrooms, 3 Washrooms
Spectacular Unobstructed View
$344,900
Mavis/Steeles
3+1 Bedrooms, 3 Washrooms
Less Than Two Years Freehold
$399,900
Mississauga
4 Bedrooms, 2 Washrooms
Mostly Hardwood Floors
$232,900
Markham/Sheppard
3 Bedrooms, 2 Washrooms
Fantastic Free Hold Town House
$214,900
Finch/ Middlefield
2+1 Bedroom, 2 Washrooms
Close To All Amenities
$439,000
Whitby
4 Bedrooms, 2 Washrooms
Located In Quiet Neighbourhood

# கடன்தொல்லை?




- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**SRI**

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



digi

# முதுமையின் அழகு

புஷ்பா
கனகரட்ணம்
- உளவியல் நிபுணர் -



> முதுமையில் வலிமை,
> உடல் நோய்கள் சார்ந்த காரணிகளில்
> தங்கி இருப்பதைவிட
> மனவலிமை சார்ந்த காரணிகளில்தான்
> கூடுதலாக தங்கி இருக்கிறது.
> முதுமையின் மகிழ்விற்கும் நிறைவிற்கும்
> உளநலமே பெரும்பங்கு வகிக்கிறது.

"இனி என்ன? எங்கள் வாழ்க்கை முடிந்து விட்டது. இனி பிள்ளைகளுக்காக தான் நாம் வாழவேண்டும்" இப்படி சொல்பவர்கள் பலரை நாம் கண்டிருக்கிறோம். சொல்பவர்களுக்கு 30 அல்லது 40 வயதுதான் இருக்கும். சராசரியாக பார்த்தால் பாதி வாழ்க்கைக் காலம் தான் போயிருக்கும் அவர்களுக்கு. ஆனால் எங்கள் கலாச்சாரத்தில், அதன் நடைமுறையில், இப்படி சிந்திக்க பழக்கப்பட்டு விட்டோம். இப்படி ஆயின் முதியவர்கள் கதி என்ன? முதியவர்கள் அல்லாதவர்கள், முதுமையை அல்லது முதியவர்களை கணிப்பிடும் பொழுது, தம் வயது சார்ந்து தான் கணிப்பிடுகிறார்கள். இது எல்லா வயதினருக்குமே பொருந்தும். 18 வயதுக்கு 50 வயது "பழசு", 50 வயதுக்கு 80 வயது "பழசு". முதுமை என்றால் நோய், துன்பம், தனிமை, மரணம். இப்படித்தான் இணைத்துப் பார்ப்போம். முதுமையின் வலிமை, நம்பிக்கை, தெளிவு, அமைதி, மொத்தத்தில் முதுமையின் அழகை காண தவறிவிடுகிறோம்.

முதியவர்கள் பற்றிய ஆய்வுகள் முதுமையின் வலிமை பற்றி விளக்குகின்றன. அன்பும் காதலும் இளமைக்கு மட்டுமே சொந்தமானதல்ல. முதியவர்களுக்குள் ஏற்படும் அன்புப் பிணைப்புகளின் அழகு பற்றி முதியோர் இல்லங்களில் பணிபுரிபவர்கள் எடுத்துக்கூறி இருக்கிறார்கள். ஆனால் முதியவர்கள் அல்லாத வர்களின் பார்வையில் முதியோர் இல்லங்கள் இறுதி அடைக்கலமாகவும் இறப்புக்கு தயாராகும் இருண்ட இடங்களாகவும் கருதப்படுகின்றன.

முதுமை என்றால் நிச்சயமாக உடல் வலிமை குறைந்து, நோய்கள் இலகுவாக தீண்டும் காலகாட்டம் தான். ஆனால் மனவலிமை என்று பார்க்கும் போது அது எதிர்மாறானதாக இருக்கிறது என ஆய்வுகள், கணிப்புகள், சொல்கின்றன. 70, 80 வயது வரை வாழ்வது என்பது இலகுவானதல்ல. அதற்கு ஒரு தைரியம், துணிவு தேவை. பொதுவாக உடல் வலிமை குறைந்து கொண்டு போனாலும் மனவலிமை முதியவர்களுக்கு மிகப் பெரும் பலமாக இருக்கிறது. அமெரிக்காவில் தாக்கிய Katrina சூறாவளியின் போது பாதிக்கப்பட்டவர்களின் நலனை கவனிக்க சென்ற உளநலத்துறையினர் அவதானித்தது இதைத்தான். உணவு, உடை, நீர், வதிவிடம் என அடிப்படை தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டதும் வயது முதிர்ந்தவர்கள் வெகு விரைவில் தம் பழைய நிலைக்கு திரும்பி விட்டிருந்தார்கள். அதே நேரம் இளையவர்களோ சூறாவளியின் பாதிப்பினால் ஏற்பட்ட மனத்தாக்கத்தை விட்டு எளிதில் மீளமுடியாமல் வைத்திய சாலைகளில் நீண்ட கால பராமரிப்பில் இருக்க வேண்டி இருந்தது. இதற்கு கொடுக்கப்படும் விளக்கம் என்ன எனில் முதியவர்கள் இயல்பாகவே ஏற்படும் வாழ்க்கை அனுபவங்கள், இழப்புகள் என எல்லாவற்றையும் கடந்து வந்ததில் மனவைராக்கியம் உள்ளவர்களாக மாறிவிடுகிறார்கள் என்பது தான்.

மன்னிக்கத் தெரிந்தவன் மனிதன் என்பார்கள். இந்த மன்னிக்கும் தன்மையும் முதியவர்களிடத்தில் மிகக் கூடுதலாக இருக்கிறது. வாழ்க்கையைப் பற்றியும் எதிர்காலத்தை பற்றியும் யதார்த்தமான ஒரு பார்வை இருப்பதால் குற்றம் குறைகள் என மனதில் காழ்ப்புணர்ச்சி கொள்ளாமல் உறவுகளை இணைத்து வாழ விரும்புகிறார்கள். வாழ்க்கையில் நடைபெறும் கொடும் துயரங்களையும் கூட தாங்கிக் கொண்டு உறுதியாக இருக்கிறார்கள். எங்கள் மூளையில் Amygdala என்று ஒரு உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட கட்டமைப்பு இருக்கிறது. ஒரு C.T. Scan ஆய்வின் போது கண்டுபிடித்திருப்பது என்னவெனில், முதியவர்களின் Amygdala எதிர்மறையான உணர்வுகளை கூடுதலாக "வடிகட்டி" எடுத்துவிடுகிறது என்பதுதான். இந்த தன்மை இளையவர்களை விட முதியவர்களில் கூடுதலாக இருந்ததாக அவதானிக்கப்பட்டது. முதியவர்களின் மன வலிமைக்கும் கொடும் துயரங்களில் இருந்து ஒப்பீட்டளவில் இலகுவாக மீண்டு எழும் தன்மைக்கும் இது ஒரு விளக்கமாக இருக்கலாம்.

முதியவர்களின் இந்த மனவலிமைக்கும் அறிகைத்திறனிற்கும் தொடர்பு இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. அறிகைத்திறன் என்பது ஒருவரின் ஞாபகசக்தி, மன ஒருமிப்பு (Concentration), விடயங்களை திட்டமிடல் (planning), முடிவெடுத்தல் (decision making), பல காரியங்களை ஒரே நேரத்தில் மனதில் ஒழுங்குபடுத்தல், நிர்வகித்தல் (Organisation, Multitasking), தீர்வு காணல் (Problem solving) போன்ற மூளையின் இயக்கங்களை குறிக்கும். அறிகைத்திறனை ஆங்கிலத்தில் cognition என்று அழைக்கப்படுகிறது. அறிகைத்திறனிற்கும் மனவலிமைக்கும் நெருங்கிய தொடர்பிருப்ப தாக ஆய்வுகள் கண்டுபிடித்திருக்கின்றன. அதாவது அதிக மனவலிமை உள்ள முதிய வர்களில் அறிகைத்திறன் குறைபாடுகள் குறைவாக இருக்கின்றன. அதே போல் முதுமையைப் பற்றிய ஆரோக்கியமான கண்ணோட்டம் உள்ள முதியவர்களுக்கு நீண்ட ஆரோக்கியமான ஆயுள் இருப்பதாகவும் அறியப்படுகிறது. முதுமையில் அறிகைத்திறனை அதிகரிக்கும் இன்னொரு விடயமாக உடற்பயிற்சி இருக்கிறது. வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் அல்லது அர்த்தம் இருப்பதாக உணரும் முதியவர்களுக்கும் அறிகைத்திறன் சார் நோய் நிலைகள் வரும் சந்தர்ப்பம் குறைவாக இருக்கிறது.

வாழ்க்கையில் அர்த்தத்தை நாம் பலவிதங்களில் தேடுகிறோம். சிலர் குடும்பத்திற்கு, குழந்தைகளுக்கு, தம் வாழ்க்கை பயனுள்ளதாக அமைந்ததாக உணரலாம். சிலர் சமூகத்திற்கு செய்யும் விடயங்களை வைத்து தம் வாழ்வின் பயனை கணிப்பிடலாம். பல முதியவர்கள் தாய்நாட்டில் நம் இனத்தவர்களின் துன்பங்களை தடுக்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் மனத்திருப்தியை காணலாம். அதே போல் கடவுள் நம்பிக்கை அல்லது ஆன்மீகம் வாழ்க்கைக்கு அர்த்தத்தையும் மனதிற்கு வலிமையையும் தரலாம்.

இளவயதில் பலருக்கு கடவுள் நம்பிக்கை இருப்பதில்லை. இருந்தாலும் சிலர் அதற்கு நேரத்தை ஒதுக்குவதில்லை. வயது போகும் போது நம்பிக்கையும் அதிகரிக்கிறது. அதற்குரிய நேரமும் பலருக்கு கிடைக்கிறது. முதுமையில் மனச்சோர்வு (Depression) பற்றிய ஆய்வுகள், ஆன்மீகத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகின்றன. பொதுவாக மருத்துவ சிகிச்சை மனச்சோர்வின் அறிகுறிகளை 50%மாக குறைக்கிறது. இதுகூட மனிதருக்கு மனிதர் மாறுபடலாம். சிலருக்கு மருந்துகள் ஒருவித பலனும் அளிக்காமலும் போகலாம். Chicago நகரத்தில் நடைபெற்ற ஒரு ஆய்வு கண்டுபிடித்திருப்பது என்னவெனில், தம்மை விட பலம் வாய்ந்த ஒரு சக்தி உலகத்தில் இருப்பதாக நம்புபவர்களில் மருந்துகளின் பாவனை 75% பலனை அளிக்கிறது என்பது தான். ஆகவே மதநம்பிக்கை என்று இல்லா விட்டாலும் கூட, நம்மிலும் மேலான ஒரு சக்தியில் நம்பிக்கை வைக்கும் முதியவர்கள் மனச்சோர்விற்கான மருந்துகளால் அதிக பயனை பெறக் கூடியதாக இருக்கும்.

இன்னொரு விடயம் மரணம் சார்ந்த பயம். எங்களுக்குண்டான மரணபயத்தை நாம் பொதுவாக முதியவர்களில் பிரதிபலிக்கிறோம். முதுமை என்றாலே மனச்சோர்வும் மரணபயமும் கொண்ட ஒரு கொடுமையான கால கட்டமாக இருக்கவேண்டும் என்பது நம் எண்ணமே தவிர, உண்மையில் முதியவர்களுடன் பணியாற்றும் பலர் இதற்கு நேர் மறையான கருத்தையே தெரிவிக்கிறார்கள். பல ஆண்டு காலமாக முதியோர் இல்லங்களில் பணிபுரிவர்களின் அனுபவத்தில் ஒரு முதியவர் கூட மரணபயம் பற்றி கதைத்ததோ கவலைப்பட்டதோ இல்லை என்பது தெரிய வருகிறது. இறப்பைப் பற்றி எண்ணங்கள், எதிர் பார்ப்புகள் மற்றும் ஏற்றுக்கொள்ளும் ஒரு மனப்பக்குவத்தைத்தான் மாறாக அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இப்படிப் பார்க்கையில், வாழ்க்கையை யதார்த்த பூர்வமாக நோக்கும் திறன் முதுமைக்கே உரிய ஒரு வலிமையாகத் தான் தெரிகிறது. தனிமை, நோய், இழப்பு என்று எதிர்மறையான கண்ணோட்டத்தில் முதுமையை நோக்காது முதுமைக்கே உரிய தனித்தன்மையாக அது கொடுக்கும் அனுபவங்கள், அறிவு, முதிர்ச்சி என்பவற்றை நாம் கருத்தில் நிறுத்த வேண்டும்.

புலம் பெயர்ந்த எம் சமூகத்தவர் என்று நோக்கும் போது கூட வயது முதிர்ந்தவர்களுக்கு என்று ஒரு தனி இடம் இருக்கிறது. இங்கிருக்கும் இளவயதினருக்கும் தாய்நாட்டு தொடர்பு இல்லாதவர்களுக்கும் குடும்பத்தின் மூத்த உறுப்பினர்களாக முதியவர்கள் இருப்பது தாய்நாட்டை பிரதிதித்துவப்படுத்துவதாக இருக்கிறது. தம் கலாச்சாரத்தின் வேர்களையும், நல்லது கெட்டதுகளையும், அறிந்து கொள்ளவும் அலசி ஆராயவும் இளையவர்களுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமைகிறது. எங்கும் பரந்து வாழும் குடும்ப உறவுகளை இடையிடையேனும் ஒன்று கூடவைக்கும் தருணங்களையும் முதிய உறுப்பினர்கள் ஏற்படுத்தித் தருகிறார்கள்.

இத்தனை தனித்துவம் வாய்ந்த முதுமையையும் முதியவர்களையும் கொண்டாட வேண்டியது அவசியம். எம் சமூகத்தில் மட்டு மல்ல, பல சமூகங்களில் முதியவர்கள் தம் பிள்ளைகளால், குடும்ப உறுப்பினரால், மற்றும் முதியோர் பணி செய்பவர்களால் கொடுமைப் படுத்தப்பட்டும், கைவிடப்பட்டும் துன்பப்படுகிறார்கள். இன்னொரு கண்ணோட்டத்தில் பார்ப்போமானால், மனஇறுக்கமும் தன்னலமும் அதிகாரநோக்கும் கொண்ட முதியவர்களால் இளவயது குடும்பங்களில் பிரச்சினைகளும் தலை தூக்கத் தான் செய்கின்றன. அன்பும், பண்பும், பரந்த நோக்கமும், ஆரோக்கியான எண்ணக் கருத்துகளும் உள்ள முதியவர்கள் எங்கள் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் ஒரு வரப்பிரசாதமாக இருப்பார்கள்.

தனிமனித ஆளுமை, மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும் மனபலம், துன்பங்களை தாங்கும் மற்றும் மீண்டு எழும் தன்மை இவை எல்லாமே முதுமையை ஒரு யதார்த்தத்துடனும் அழகுடனும் எதிர்கொள்ளும் திறமையை கொடுக்கிறது. ஒட்டுமொத்தமாக பார்ப்போமானால் முதுமையில் வலிமை, உடல் நோய்கள் சார்ந்த காரணிகளில் தங்கி இருப்பதைவிட மேற்குறிப்பிட்ட மனவலிமை சார்ந்த காரணி களில் தான் கூடுதலாக தங்கி இருக்கிறது. அதாவது, முதுமையின் மகிழ்வும் நிறைவும் நோயின்றி வாழும் முதியவர்களுக்கு மட்டுமே உரியதல்ல, உளநலமே இதில் பெரும்பங்கை வகிக்கிறது.

Pushpa.kanagaratnam@thaiveedu.com

■ ■ ■



ARE YOU THINKING OF SELLING, BUYING
OR INVESTING IN REAL ESTATE MARKET?

SUJAN SHAN
Real Estate Broker

416 402 1040
Bus: 416 321 2228
E-mail: sujan.shan@gmail.com

RE/MAX
Vision Realty Inc.

www.NewReleaseCondos.com

# காப்புறுதியில் ஏற்படும் குழப்பங்கள்

## கேள்வி - பதில்




**எனது சகோதரிக்கு வயது 56. இதுவரை அவருக்கு மாரடைப்போ, இருதய கோளாறு, புற்றுநோய் என்ற வருத்தங்கள் ஒன்றும் இல்லை. ஆனால் அவர் எங்களோடு இருக்க முடியாது. தொடர்ந்து தாதிமார் கண்காணிப்பில் தான் இருக்க வேண்டும் என்று வைத்தியர்கள் சொல்லி மருத்துவமனையில் அனு-மதிக்கப்பட்டுள்ளார். நாம் வாரம் இரு தடவை அவரை சென்று பார்த்து வருகிறோம். இவருக்கு இந்த நிலை யில் மருத்துவ ரீதியின்றி ஏதாவது ஆயுள்காப்புறுதிக்கு மனுச்செய்ய-லாமா? இவருக்கு உள்ள வருத்தம் Huntington's Chorea.**

இவருக்கு ஒரு நிறுவனமும் காப்புறுதி வழங்க மாட்டாது. காரணம், மருத்துவரீதியின்றி கொடுக்கப்படும் காப்புறுதி விண்ணப்பப் பத்தி-ரத்தில் கேட்கப்படும் கேள்விகளில் 'தற்சமயம் வைத்தியசாலையில் அல்லது தொடர்ந்து படுத்த படுக்கையாக அல்லது சக்கரம் பொருத்திய நாற்காலியின் உதவியுடன் நடமாடுகிறீர்களா?' என்ற கேள்வியும் கேட்கப்படுகிறது. இந்த கேள்விகளில் ஏதாவது ஒரு கேள்விக்கு ஆம் என்ற பதிலளித்தால் உடனே அமுலுக்கு கொண்டு வரும் காப்புறுதி திட்டமோ அல்லது 2 வருடத்திற்கு பின் அமுலுக்கு கொண்டு வரும் காப்புறுதி திட்டமோ வழங்கப்பட மாட்டாது. பதிலாக, இறுதி சடங்குகளுக்கான முழுச் செலவையும் Funeral Home மூலம் ஒரு காப்புறுதி நிறுவனம் வழங்குகிறது. இதில் உங்களுக்கு எந்த திட்டம் (பிரேதப்பெட்டி உட்பட) எத்தனை நாள் பார்வைக்கு வைக்கப்படவேண்டும். எந்தெந்த சலுகைகளோடு தேவை என்று தீர்மானித்து அதற்கான செலவை சாதாரணமாக ஆயுள் காப்புறுதிக்கு மாதாந்த கட்டுப்பணத்தை செலுத்துவது போல ஒழுங்-குகள் செய்யலாம். இப்படி மாதாந்தக் கட்டுப் பணத்தை செலுத்திக் கொண்டு வருகையில் 2 வருடம் தாண்டியதும் மரணம் ஏற்படின் மீதி செலவை காப்புறுதி நிறுவனமே உங்கள் சார்பாக கட்டி முடிப்பார்கள். பதிலாக 2 வருடத்திற்குள் மரணம் ஏற்படின் மீதிப் பணத்தை நீங்களே கட்டி முடிக்க வேண்டும். மருத்துவ ரீதியின்றி அளிக்கப்படும் காப்பு-றுதிக்கான மாதாந்த கட்டுப்பணத்திலும் பார்க்க இந்த திட்டத்திற்கான மாதாந்தக் கட்டுப்பணம் சற்று அதிகம் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மரணம் வெளிநாட்டில் நடந்தால் செலவு இன்னும் அதிகம் என்ப-தையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

**எனது தகப்பனாருக்கு வயது 86. இந்த புரட்டாசி மாதம் அவருக்கு 87 வயதாகப் போகிறது. இவரது காப்புறுதி பற்றி உங்களிடம் ஒரு சில வருடங்களுக்கு முன்னர் விசாரித்தபோது வயது 85 வரை உடனடியாக அமுலுக்கு கொண்டு வரும் காப்புறுதி வழங்கலாம் என்று சொன்னீர்கள். அந்த நேரம் இதை உதாசினப்படுத்தி விட்டேன். இவ-ருக்கு ஏதாவது காப்புறுதித்திட்டம் கொடுக்க முடியுமா?**

முடியும். மேற்கூறிய Funeral Home மூலம் இறுதிச்சடங்குக்கான காப்புறுதி திட்டம் வழங்-கலாம். ஆனால் 85 வயது தாண்டியவருக்கு மாதாந்தம் கட்டுவதற்கு அனுமதிக்கமாட்டார்-கள். பதிலாக முழுச்செலவையும் ஒரு வரு-டத்திற்குள் பகுதி பகுதியாக கட்டி முடிக்க-லாம். இந்த ஒழுங்கு மூலம் உங்களுக்கு கிடைக்கும் மன ஆறுதல் என்னவென்றால் ஆரம்பத்தில் அறவிடும் தொகையில் எதிர் காலத்தில் விலைவாசி அதிகரித்தாலும் ஒரு வித மாற்றமும் இருக்காது. சுருக்கமாக ஆங்கிலத்தில் Inflation Proof என அழைப்-போம். தற்சமயம் ஒரு குறிப்பிட்ட காப்புறுதி நிறுவனம் தங்களுக்கு அதிகப்படியாக விண்-ணப்பப் பத்திரங்களை அனுப்பும் ஒரு சில காப்புறுதி முகவர்களுக்கு, வயது 90 வரை உடனேயே அமுலுக்கு கொண்டு வரும் காப்புறுதி ஒப்பந்தம் வழங்க பரிசீலித்து வரு-கிறார்கள். இந்த விசேட ஒப்பந்தம் கிடைத்-ததும் உங்களுடன் தொடர்பு கொள்வேன் அல்லது நீங்கள் என்னுடன் தொடர்புகொள்-ளலாம்.

**எனது கணவருக்கு வயது 55. இவர் புகையிலை பதார்த்தங்கள் உபயோகப்படுத்துபவர். இவருக்கு சலரோக வியாதி, கொழுப்பு, இடைக் கிடை கை நடுக்கம் ஆகிய வருத் தங்கள் உண்டு. தற்சமயம் அரசாங்க சலுகைபெற்று வருகிறார். மது அருந் துபவர். சென்ற வருடம் மருத்துவ ரீதியின்றி 40,000திற்கு ஆயுள் காப்புறுதிக்கு மனுச்செய்து மாதா மாதம் $238 செலுத்தி வருகிறோம். ஆனால் இந்தக்கட்டுப்பணம் ஆயுள் பூராக அல்லது மரணம் ஏற்படும் வரை செலுத்த வேண்டும். இவரது வயது குறைவு என்ற படியால் மொத்தமாக செலுத்த இருக்கும் பணம் மனுச்செய்த தொகையை தாண்டி விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. இடையில் ஒரு சில காப்புறுதி பிரதிநிதிகள் தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேசிய போது தொடர்பு கொண்ட அத்த னைபேரையும் வீட்டுக்கு அழைத் தார். ஆனால் அவர்கள் மனுச்செய்த சகல காப்புறுதி விண்ணப்பப் பத் திரங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் 40,000திற்கு காப்புறுதி அளித்த நிறுவனத்தை அணுகினோம். மற்ற நிறுவனங்கள் நிராகரித்த ஒரே காரணத்தால் (காரணம் தெரியாது) மேலதிக காப்புறுதி அளிக்க முடியாது என்று பதில் வந்தது. உங்களால் முடியுமா?**

நிச்சயமாக முடியும். இதே கட்டுப்பணத்-திற்கு 40,000 காப்புறுதி தொகைக்கு 20 வருடத்தில் கட்டி முடிக்கும்படியாக ஒரு காப்-புறுதி நிறுவனம் முன்வந்துள்ளது. மிக பிரபல்-யமான இக்காப்புறுதி நிறுவனம் முறையே 3 வருடம், 10 வருடம், 15 வருடத்திற்குள் கட்டி முடிக்கக் கூடிய திட்டங்களையும் வழங்கு

44ம் பக்கம் பார்க்க...


## சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில்
முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 10,000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 160 துரித காப்புறுதி இழப்பீடுகள். :30 நிரந்தர ஊன இழப்பீடுகள்
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors) ,
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services),
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 375,000 வரை காப்புறுதி

### - சக்திவேல் -

தொலைபேசி: **416.706.3530, 905.428.9299, 905.763.8912**
Fax: 905 428 9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**
வாகனக் காப்புறுதி (Car Insurense), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!



## மருத்துவ ரீதியின்றி ஆயுள் காப்புறுதி

**.85 வயதிற்குட்பட்ட எவரும் $375,000 வரை மனுச்செய்யலாம்.**

**.சலரோகம், சலரோக தடுப்பூசி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் (BLOOD PRESSURE), கொழுப்பு சத்து கூடியுள்ளவர்கள் (HIGH CHOLESTEROL).**

**.பகுதி ஊனம், நிரந்தர ஊனம் உள்ளோர்.**

**.மற்ற காப்புறுதி நிறுவனங்களினால் நிராகரிக்கப்பட்டோர்.**

**.நிறை கூடியுள்ளோர் (OVER WEIGHT)**

**.அதிகூடியான கை கால் வலி, மூட்டு வலியுள்ளோர்.**

உங்கள் வருத்தங்களை பொறுத்து, நிலவரத்தை பொறுத்து தகுந்த காப்புறுதி திட்டத்தை நிச்சயமாக அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

## சக்திவேல்
## 416 706 3530

**HomeLife/Future Realty Inc., Brokerage**

Birchmount & Ellesmere
$349,900
4 Bed Rooms
3 Wash Rooms

Brimley & Ellesmere
For Rent
•3 Bed Room
•3 Wash Rooms
•3 Kitchens
•Separate Entrance

Sheppard & Brimley
$119,000
Business Unit

Steeles & Staines
$439,900
•3 Bed Rooms
•3 Wash Rooms

McCown & Eglinton
Call For Price
•3+2 Bed Rooms
•2 Wash Rooms
•2 Kitchens
•Separate Entrance
Newly Renovated

Midland & Lawrence
$157,900
•3 Bed Rooms
•2 Wash Rooms



RAJ NADARAJAH
Sales Representative

வீடு வாங்க விற்க

**Direct: 416-333-6115**
Office: (905)-201-9977
FAX: (905)-201-9229
E-mail: nanohomes@gmail.com

**Buying/Selling Your Home ?**

**Call Now!**
Lets Talk!

**Direct: 416-333-6115**

# NANO COMPUTERS .INC

**Bus. 416-333-6115**

4465 Sheppard Ave E.
**Unit 09**
Scarborough, ON,
M1S-5H9

**Service. Upgrade. Repair**

16 YEARS ... **NaNo Computer** ...



# இலங்கையிலும் கனடாவிலும் தச்சுவேலையில் பல வருடம் அனுபவம் வாய்ந்தவர்களினால்

- **Basement**
  Complete Basement
  Separate Entrance Cutting
  Window Cutting
- **Kitchen**
  Custom Kitchen Cabinets
  Kitchen Modification
  Kitchen Backflash
  Counter tops Granite and Wood
- **Bathroom**
  Custom Bath Cabinets
  Bathroom Modification
  Counter Tops Granite and Wood
- **Floor**
  Hardwood Flooring
  Laminate Flooring
  Vinyl Tiles
  Ceramic Tiling
  Carpet
  Stairs
- **Wall and Ceiling**
  Painting
  Crown Mouldings Work
  Ceiling and Stucco Work
- **Back Yard**
  Custom Deck with Design
  Fence Work
  Storage
- **Repairs**
  Plumbing Repairs
  Basement Repairs
  Kitchen Cabinet Repairs
  Bathroom Repairs
  Floor Sanding and Polishing
  Door and Window
  Replacement & Repair
  Kitchen and Washroom Fan (Exhaust) Changing
  Washing Machine and Dishwasher Fixing

6 Months or 1 Year
No Payment
No Interest




**Arul**
**RENOVATION**
*Expert in Sri Lankan & Canadian Carpentry*

5200 Finch Ave. East, Unit 304,
Toronto, ON. M1S 4Z5
Tel : 416-728-2222/416-268-2993

*Quality • Commitment • Satisfaction*

# உங்கள் வெற்றி உங்கள் கையில்

## தொடர் - 2

சொக்கலிங்கம் பிரபாகரன்
- வீடு விற்பனைப் பிரதிநிதி -



சென்ற தொடரில் பொருளாதர வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படையான 10 கொள்கைகள் பற்றி அறிந்தோம். இனி அவற்றை விரிவாக. ஒவ்வொன்றாக ஆராய்வோம். முதன்மையான அடிப்படைக் கொள்கைகளாவன:

- ஆரம்பித்தல்.
- செயற்படுத்துதல்.
- மேலதிக உதவி பெறல்

போன்றவையாகும். இதனை மேலும் விரிவாக உபபிரிவுகளுடாகப் பார்ப்போம். முதலில் ‘ஆரம்பித்தல்’ என்ற பிரிவின் கீழ் உள்ள 5 உபபிரிவுகளைப் பார்ப்போம்:

- இன்றே ஆரம்பித்தல்.
- நமக்காக நாமே முதலில் முதலிடுதல்.
- நேரத்தை உபயோகித்தலும் அதை தவறாது பின்பற்றலும்.
- அவசரகால நிதியை வளர்த்தல்.
- சரியான வாழ்க்கைக் காப்புறுதியைக் கொண்டிருத்தல்.

இவற்றை இனி இன்னமும் விரிவாக ஆராய் வோம்.

### இன்றே ஆரம்பித்தல்:

முதலீடு என்றவுடன் உங்கள் மனதுள் ஓராயிரம் வினாக்கள் குடைந்து கொண்டெழுவது புரிகின்றது. அவற்றில் சில:

**வினாக்கள்:** முதலிடுவது ஒருபுறம் இருக்கட்டும். ஆனால் எங்கிருந்து பணத்தைப் பெறுவது?

எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கு முதலீடு செய்வதொன்றே சிறந்த வழி எனப் பார்த்தோம். எனினும் முதலிடுவதற்கு பணம் இல்லாத நிலையில் எவ்வாறு முதலிடுவது? மேலதிக வருமானம் இல்லாதவர்கள் எவ்வாறு முதலீட்டுக்குத் தேவையான சேமிப்புத் தொகையை பெறுவது?

**விடைகள்:** உங்களுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்பதைவிட அதில் எவ்வளவு பங்கை சேமிக்கின்றீர்கள் என்பதே முக்கியமான விடயமாகும். எவ்வளவு வந்தாலும் போதாது என்பது தான் இன்றைய பொருளாதரா நிலை. ஆனால் செலவோடு, செலவாக முதலீட்டுக்குத் தேவையான சேமிப்புத் தொகையைச் சேர்த்து வரும் பழக்கம் எம்மில் எத்தனை பேரிடம் உள்ளது? என்னை கேட்டால் மிக மிகக் குறைவு என்றே கூறலாம். எனினும் இப்பழகினத்தை வளர்த்துக் கொள்வது மிக மிக அவசியமாகும்.

வருமானத்தை அதிகரிக்கும் வழிகளை நாம் நாட வேண்டும் என்பது உண்மை. வருமானத்தின் ஒரு பகுதியை கட்டாயமாக முதலீட்டுச் சேமிப்புத் தொகைக்காக ஒதுக்க வேண்டும் என்பது கட்டாயமானதாகும். அவ்வப்போது எமது செலவுகளை மீள ஆய்வு செய்து தேவையற்ற செலவுகளை நிறுத்த வேண்டும். நமக்கான முதலீட்டை முதன்மைப்படுத்துவதே பொருளாதார வளர்ச்சியின் முதலிபடிக்குத் தேவையான முதன்மைத் தேவையாகும்.

### நமக்காக முதல் செலவு:

செலவுகளில்லாத வாழ்வில்லை. செலவுகளே வாழ்வாகிக் கொன்டிருக்கின்றது. ‘வரவு எட்டாணா செலவு பத்தணா’ எனும் பாட்டு அன்றைய காலத்திற்கு மட்டுமல்ல இன்றும் பொருத்தமானது. இன்னமும் சொன்னால் அன்று போலன்றி வரவு ஒரு டொலரானால் செலவு 100 டொலராக மாறியிருக்கும் வாழ்க்கையில் சூழ்நிலைக் கைதிகளாக சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றோம். வரவை மிஞ்சிக் குவியும் billsஐக் கட்ட முன் முதலாவது கட்டணமாக உங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை உங்களுக்காக உங்கள் முதலீட்டுச் சேமிப்புத் தொகைக்காக ஒதுக்கிவிட்டு மிகுதியை வைத்து billsஐ கட்டுங்கள். Billsஐ கட்டவே போதாது பிறகு சேமிப்பது எப்படி என நீங்கள் முணுமுணுப்பது புரிகிறது. அது சரி, என்று தான் உங்கள் வருமானம் உங்களுக்கு போதும் போதுமென்னும் அளவிற்கென வந்துள்ளது? உங்கள் வருமானம் உங்களுக்கென ஒதுக்கிச் சேமிக்கும் தொகையை கழித்து மிகுதியாக வரும் தொகை மட்டும் தான் என எண்ணிப் பாருங்கள். ஏனெனில் இவ்வாறு எண்ணும் வகையை நீங்கள் வளர்த்துக் கொள்ளாவிட்டால் ஒருபோதுமே நீங்கள் சேமிக்க மாட்டீர்கள். எனவே வரும் வருமானத்தில் முதலில் சேமிப்புக்கென எந்தச் சாக்குப் போக்கும் சொல்லாமல் ஒதுக்கி வைப்பதை வழக்கத்தில் கொள்ளுங்கள். இதனை நமக்கான செலவு என்கின்றோம் என்பதற்காக உங்கள் செலவுகளுக்கு பயன்படுத்தலாம் எனும் எண்ணத்தை ஒருபோதும் வளர்க்க வேண்டாம்.

> “ எம் தேவையற்ற தேவைகளை கைவிடுவது பெரும் சவாலாகவே இருக்கும். எனினும், சிக்கனமான திட்டமிடல் மூலம் படிப்படியாக பயின்றால் நிதி நிர்வாகத்தினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். ”

### தேவைகளை மாற்றியமைத்தல்:

எங்கள் தேவைகளில் பெரும்பாலானவை அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக இருப்பதில்லை. தேவையற்றவைகளை தேவையாக்கிக்கொள்ளாமல் அவசியமானவற்றை மட்டும் தேவைகளாக்குங்கள். ஆரம்பத்தில் எம் தேவையற்ற தேவைகளை கைவிடுவது பெரும் சவாலாக இருக்கும். எனினும் சிக்கனமான திட்டமிடல் மூலம் பயின்றால் பயன் தரும் வழி இதுவாகும். நிதி நிர்வாகத்தினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் இம்முயற்சியை படிப்படியாக பயின்றால் நிச்சயம் பயனளிக்கும்.

### நிதித்திட்டமிடல்:

திட்டங்களில் சிறந்தது நிதிநிர்வாகம் குறித்த திட்டங்களாகும். வீண் செலவுகளை தவிர்த்து பணத்தைச் சேமித்து சேமிப்பை வளர்க்கவும் முதலீடுகளில் முதலிடவும் நிதித்திட்டமிடல் உதவுகின்றது. திட்டமிடலின் முதல் பகுதி செயன்முறைத் திட்டம் தீட்டுதல். எனினும் திட்டத்தை நிறைவேற்றுகையில் எதிர் நோக்கும் சவால்களை திடமாக எதிர்கொள்ள திட்டங் களைக் கைவிடாத கொள்கைகளால் வெற்றி காண்பதுவே திட்டமிடலின் முக்கிய பாகமாகும். தீர்மானித்த திட்டவட்டமான திட்டங்களை திட மனதோடு கடைப்பிடித்து நிலையாக பின்பற்றும் திறனை வளர்த்துத் கொள்வோமானால் எத்தகைய திட்டமிடலும் சிறந்த வெற்றியைத் தரும். எங்கள் சேமிப்புத் தொகை சேகரிப்புத் திட்டமும் இதற்கு விதிவிலக்கல்ல.

திட்டமிடலில் சில சமயங்களில் திட்டவட்டமான திட்டம் ஒன்றைக் கடைப்பிடிப்பது சவாலாக இருக்கக் கூடும். எனின் திட்டவட்டமான திட் டமாக இல்லாவிட்டாலும் மேலோட்டமான உதாரண திட்டமொன்று இருந்தல் வேண்டும். தினமும் வரவு செலவுக் கணக்கு எழுதுகின்ற பழக்கத்தை வழக்கமாக்கினோமேயானால் மாதாந்த திட்டமிடல், மாதாந்த செலவு எத்தகைய சிறிய சிறிய காரணிகளால் மாற்றமடைகின்றது என்பதனை அவதானித்து எம்மை நாம் திருத்திக் கொள்ள வாய்ப்பாகும். எதிர் காலத்தில் வீண் செலவுகளை செய்யாதிருக்க இப்பழக்கம் உதவுகின்றது. உதரணமாக வாரம் 1 திரைப்படம் திரையரங்கிற்குக் சென்று பார்ப்பவர்களாக நாம் இருக்கின்றோம் என வைத்துக் கொள்வோம்.

10.00 டொலர் 1 நபருக்கு; $10 x 4 = $40.00 (4 வாரங்களுக்கு, அதாவது 1 மாதத்திற்கு).
2 குடும்ப அங்கத்தவர்களுக்கு (குறைந்த பட்சம் $40.00 x 2 =) $80.00 டொலர்.

இந்த $80 செலவு என்பது தவிர்க்கக்கூடிய ஒரு செலவாகும். ஒருவகையில் அநாவசியச் செலவு என்பதும் எமக்குத் தெரியும். எனின் அதனை ஒரு சில மாதங்களுக்கு தவிர்த்து அந்தத் தொகையை முதலீட்டுக்கு முன்னுரிமைப்படுத்தி சேமிக்க முடியும்.

இவ்வாறாக எம் வாழ்க்கைச் செலவுகளை அன்றாடம் எழுதி வரும் பொழுது இதுபோன்ற பல சின்னச் சின்ன வீண் செலவுகளை நாம் செய்து வருவதை அவதானிக்கலாம். சின்னச் சின்ன மற்றங்களால் சிறுகச் சிறுகச் சேமிக்க முடியும். சிறு துளி பெருவெள்ளமாகும். திட்டமிடலால் எமது தேவைகள் சிறப்புற சரிபார்க்கப்பட்டு வீண் செலவுகள் தவிர்க்கப்பட்டு சேமிப்பு பெருகுகின்றது.

மாதாந்தம் குடும்ப அங்கத்தவர்கள் கூடிக் கதைத்து திட்டமிடல் பற்றியும் செலவுகள் பற்றியும் ஆராய்ந்து செலவுகளை தவிர்க்கும் போது புதிய திட்டங்களை வகுப்பது சாத்தியமாவதோடு குடும்பத்தினரின் சேமிப்பு திட்டமிடல் பற்றிய அறிவும் வளர்கின்றது. உங்கள் பணத்தை நீங்கள் நிர்வகிப்பவராகவும் பயனுள்ள காரியங்களுக்கு பயன்பட வைப்பவராகவும் இருக்க வேண்டும். நீங்கள் எதிர் நோக்கும் செலவுகள் உங்கள் பணத்தை பிறரைக் கையாள வைக்கின்றன. மாறாக பணத்தைச் சேமிக்கவும் நிர்வகிக்கவும் கற்றுக் கொண்டால் செல்வம் உங்களுக்குப் பயன் தரும்.

(தொடரும்..)

prabaharan.s@thaiveedu.com

■ ■ ■







TWO FULL TIME REALTORS
ONLY ONE COMMISSION
Sheppard & Neilson
$ 194,900
2+1 Bedrooms + 2 Washrooms
Mccowan & Steeles
$ 209,900
2+1 Bedrooms + 2 Washrooms
Markham & Denison
$ 279,900
2+1 Bedrooms + 2 Washrooms
Creditview & Crown Victoria
$384,900
3 Bedrooms + 3 Washrooms
Salem & Taunton
$ 379,990
4 Bedrooms + 3 Washrooms
Middlefield & Denison
$ 445,500
4 Bedrooms + 3 Washrooms
Rossland & Rushworth
$ 419,000
4 Bedrooms + 3 Washrooms
Rossland & Salem
$ 479,900
4 Bedrooms + 3 Washrooms
Mccowan & Lawerence
$349,000
3+2 Bedrooms + 2 Washrooms
Birchmount & Finch
$ 193,900
2+1 Bedrooms + 2 Washrooms
Markham & 14th Ave.
$ 619,900
4+2 Bedrooms + 5 Washrooms
Salem & Taunton
$ 599,900
4 Bedrooms + 4 Washrooms
Creditview & Wanless
$ 409,900
3 Bedrooms + 3 Washrooms
Airport & Bovaird
$399,000
3 Bedrooms + 3 Washrooms
Westeny & Rossland
$ 519,000
4 Bedrooms + 4 Washrooms
9th Line & Hoover Park
$518,888
4 Bedrooms + 4 Washrooms
Bur Oak & 9th Line
$ 529,000
4 Bedrooms + 3 Washrooms
Bur Oak & Hwy 48.
$ 559,000
4 Bedrooms + 3 Washrooms
Major Mac. & Mccowan
$559,800
4 Bedrooms + 3 Washrooms
9th Line. & Bur Oak
$ 455,800
3 Bedrooms + 3 Washrooms
Experience, Knowledge, Professionalism, Team work & No Pressure
YOUR HOME
SOLD
GUARANTEED!
LET US YOUR HOME FAST AND
FOR THE BEST PRICE!
Thamil Suberamaniam
Salesrepresentative
Direct: 416-358-6200
Mugunthan Nadarajah
Salesrepresentative
Direct: 416-276-8025
HomeLife/Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr, Suit 205,Markham ON. L3S 4N8
Bus : 905-201-9977 Fax : 905-201-9229
www.RealHouse.ca
*Independently Owned and Operated
SOLD
புதிய முகவரி தேடும் உங்களுடன்
முகவர்களாய் நாங்கள்


# பங்குச் சந்தையில் முதலிடுவது எப்படி?

கண்ணன் காங்கேசு



எல்லோருக்கும் வணக்கம். முதலில் இந்தக் கட்டுரைக்கு ஒவ்வொரு முறையும் ஆதரவு தரும் எல்லா நல்ல உள்ளங்களுக்கும் நன்றி.

தொடர்ச்சியான பங்கு சந்தை பற்றிய இந்த கட்டுரையில் சென்ற மாதம் Candle Stick என்றால் என்ன என்றும் அதன் நான்கு வகையான விலை புள்ளிகளையும் மேலும் வெவ்வேறு வகையான உருவங்களின் மூலம் பங்குச் சந்தையின் ஏற்ற இறக்கங்களை எதிர்வுகூறக் கூடியதாக இருக்கும் என்றும் பார்த்தோம்.




இதன் தொடர்ச்சியாக Hammer என்றால் என்ன என்று பார்ப்போம்.

Hammer என்றால் சுத்தியல் என்று எல்லோருக்கும் தெரியும் அதே சுத்தியல் போன்ற உருவ அமைப்புடன் ஒரு Candle stick உருவாகும் போது அதனை Hammer என்று அழைக்கப்படுகிறது. இந்த Hammerஇல் இரண்டு வகை உள்ளது. ஒன்று Normal Hammer மற்றது Inverted Hammer.


Normal Hammer என்பது பங்கு விலைகளின் குறித்த வீழ்ச்சிக்கு பிறகு ஏற்படும் போது தொடர்ந்து பங்குகளின் விலை உயர்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக இருப்பதாக அனுமானிக்கலாம். அதாவது ஒரு பங்கு தொடங்கிய புள்ளியில் இருந்து நல்ல விலை இறக்கம் ஏற்பட்டு பின்னர் மீண்டும் அதே நாளில் தொடங்கிய புள்ளிக்கு சிறிது மேலேயோ அல்லது சற்று கீழேயோ முடிவடைந்தால் ஏற்படும் உருவம் Normal Hammer எனப்படும்.

Inverted Hammer எனப்படுவது சந்தையில் நல்ல விலை உயரத்திற்கு பின்னர் ஏற்படும் போது விலைகளில் வீழ்ச்சி வருவதற்கான சந்தர்பம் இருப்பதாக எடுத்துக்கொள்ளலாம். அதாவது ஒரு குறித்த நாளில் பங்கு விலை தொடங்கிய புள்ளியில் இருந்து மிக நல்ல விலை ஏற்றத்தின் பின்னர் தொடர்ச்சியான இறக்கம் ஏற்பட்டு தொடங்கிய புள்ளிக்கு சற்று மேலேயோ அல்லது கீழேயோ முடிவடைவது அதாவது தலைகீழாக வைக்கப்பட்டிருக்கும் சுத்தியல் போன்றது.

Bullish Harami எனப்படுவது பங்குகளின் விலை இறக்கத்தில் ஏற்படும் போது பங்குகள் தொடர்ந்து இறங்காமல் அடுத்த நாட்களில் மேலும் விலை ஏற்றம் ஏற்படுவதற்கான சாத்தியம் இருப்பதாக தீர்மானிக்கலாம். இதன் உருவம் ஒரு பெரிய நேற்றைய Candle Stick இன் Body க்கு புதிதாக உருவான Candle Stick முழுவதுமாக அடங்குவதாக காணப்படும். அதாவது முழுமையாக Red Candle stick இன் Bodyஇல் இன்றைய Candle stickஇன் Open, Close high low என்ற நான்கு புள்ளிகளும் உள்ளடங்குவதாக காணப்படும். மேலும் அடுத்த நாள் (மூன்றாம் நாள்) Candle Stick நல்ல விலை ஏற்றத்துடன் ஆரம்பித்து தொடர்ந்து மேலும் விலை ஏற்றத்தோடு அன்றை நாளை முடிவு செய்தால் அது Bullish Harami எனப்படும்.

Bearish Harami எனப்படுவது பங்குகளின் விலை ஏற்றத்தில் ஏற்படும் போது பங்குகள் தொடர்ந்து ஏறாமல் மற்றைய நாட்களில் மேலும் விலை இறங்குவதற்கான Indicator என்று எடுத்துக்கொள்ளலாம். இதன் உருவம் Bullish Harmaiக்கு எதிரானதாக அதாவது பச்சை நிறத்தோடு முதல் நாள் Candle stick முடிவடைந்த பின் அடுத்த நாள் Candle Stickஇன் Body சிவப்பு நிறமாகவும் Open, Close, high, low என்ற 4 புள்ளிகளும் நேற்றைய Candle Stick இதன் அடங்குவதாகவும் காணப்படவேண்டும். மேலும் மூன்றாம் நாள் உருவாகும். Candle Stick இரண்டாம் நாளின் Close புள்ளிக்கு கீழே ஆரம்பித்து மேலும் விலை இறக்கத்துடன் முடிவடைய வேண்டும்.

Engulfing Bull எனப்படுவது முழுவதுமாக விழுங்குவது என்று பொருள் அதாவது சந்தை நல்ல வீழ்ச்சியில் இருக்கும் போது அந்த வீழ்ச்சி முடிவடைந்து தொடர்ந்து பங்குகளின் விலை ஏற்றத்திற்கான அறிகுறி ஒன்று எடுத்துக் கொள்ளலாம். முதல் நாள் ஒரு சிவப்பு நிற Candle உடன் அடுத்த நாள் நல்ல விலை இறக்கத்தில் ஆரம்பித்து அதிகப்படியான Volume உடன் நல்ல விலை ஏற்றத்தை பெறும் போது பச்சை நிறத்துடன் ஒரு Candle நேற்றை Candleஐ முழுவதுமாக மூடி முடிவடைந்து மேலும் 3ம் நாள் நல்ல உயர்வோடு சந்தை ஆரம்பிக்க வேண்டும் இவ்வாறான மாற்றம் ஒரு சந்தை தொடர்ந்து விலை




ஏற்றத்திற்கான Indicator என்று எடுத்துக் கொண்டு மற்றைய Technical Indicatorஐயும் கவனத்தில் எடுத்து பங்குகளை அல்லது Call optionஐ வாங்குவதற்கு தீர்மானிக்கலாம்.

Engulfing Bearish எனப்படுவது Engulfing Bullishக்கு நேர்மாறானது சந்தையின் விலை இறக்கத்தை முன்கூட்டியே தெரியப்படுத்தும் ஒரு Indicator.

எல்லாம் சரிதான் படிக்க இலகுவாக இருக்கிறது பங்குகள் வேண்டினால் பச்சை நிறத்தைக் பார்க்க முடியவில்லை என்று பலர் முணுமுணுப்பது எனக்கும் கேட்கிறது. இப்போது புரிகிறதா "Little knowledge is Dangerous, Lot of Knowledge is Priceless" என்று.

பணம் காய்க்கும் மரம் பக்கத்தில் இருந்தாலும் ஏறிப் பறித்தால் தான் ஏதாவது மிஞ்சும் - மீண்டும் சந்திப்போம்.

kannan.kankesu@thaiveedu.com

■ ■ ■

# காப்புறுதியில் ஏற்...

40ம் பக்கத் தொடர்ச்சி...

கின்றன. பொதுவாக ஒரு காப்புறுதி நிறுவனம் எக்காரணம் கொண்டும் நிராகரித்தால் அல்லது அதிகப்படியாக மாதாந்த அறவீட்டுப்பணத்தை அறவிட்டால் அதற்கான காரணம் என்ன என்பதை எழுதிக் கேட்டால் நிச்சயம் அதற்கான காரணத்தை அந்த நிறுவனம் உங்கள் குடும்ப வைத்தியருக்கு அறிவிக்கும். பொதுவாக காப்புறுதி நிறுவனங்கள் உங்கள் குடும்ப வைத்தியரிலும் பார்க்க மிக நுணுக்கமாக வைத்திய பரிசோதனையை (இழப்பீட்டு தொகையை உடனே கொடுக்க வேண்டும் என்ற காரணத்தால்) செய்வதனால் அவர்கள் செலவில் உங்கள் தேகநிலை பற்றிய முழு விவரத்தை அறியக் கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. அத்துடன் உங்களை அணுகும் காப்புறுதி பிரதிநிதி தனியாக ஒரு நிறுவனத்திற்கு மட்டும் வேலை புரிகிறாரா அல்லது சகல காப்புறுதி நிறுவனங்களுக்கும் பிரதிநிதியா என்பதை ஆரம்பத்திலேயே அறிந்து அவரது காப்புறுதி பற்றிய அறிவு, அவர் பாரபட்சமின்றி உங்கள் தேவையை பூர்த்தி செய்யும் பிரதிநிதியாக தொழில் புரிகிறாரா என்பதை அவருடன் உரையாடும் போதே நீங்கள் ஊகித்து கொள்ளலாம். அத்துடன் இவரைப்பற்றி ஒரு சிலருடன் கலந்து ஆலோசித்து அவர்கள் சிபாரிசு பெற்றவுடன் மேலதிக விண்ணப்பிக்கும் காப்புறுதி பற்றிய தகவல்களை பெற்று விண்ணப்பிக்கலாம். இந்த மாதிரியான அதிகப்படியான வருத்தம் உள்ளவர்க்கு ஒரே நேரத்தில் 4 அல்லது 5 நிறுவனங்களுக்கு ஆரம்பத்தில் பணம் கட்டாமலேயே விண்ணப்பித்து எந்த நிறுவனம் குறைந்த அறவீட்டு கட்டுப்பணத்தை அறவிடுகிறதோ அந்த ஒப்பந்தத்தை ஏற்று அதற்கான கட்டுப்பணத்தை கொடுத்தால் கட்டின அந்த நாளிலிருந்தே காப்புறுதி உடனடியாக அமுலுக்கு வரும்.

## ஒரு காப்புறுதி இழப்பீட்டை பெறுவதற்கு என்னென்ன தகவல்கள் தேவை?

ஒப்பந்தம் அளித்த நாளிலிருந்து 2 வருடத்திற்குள் மரணம் ஏற்படின் உங்கள் வைத்தியரிடமிருந்து உங்கள் தேகநிலை பற்றிய விவரம் (Attending Physicians Report or Family Physicians Report) கொடுக்கப்பட்ட காப்புறுதி ஒப்பந்தம், காப்புறுதி செய்யப்பட்டவரின் கடவுச்சீட்டு (படத்துடன்) அல்லது Canadian Citizenship Card Copy, இறுதிச் சடங்கு செய்யவிருக்கும் நிலையத்தின் உறுதிப்பத்திரம் (Funeral Home Certificate) வாரிசுதாரரின் கடவுச்சீட்டு (படத்துடன்), Social Insurance Number வாரிசுதாரரின் விண்ணப்ப பத்திரம் (Claimant's Report) ஆகும்.


2 வருடம் தாண்டியதும் நிறுவனத்தை பொறுத்து அநேகமாக குடும்ப வைத்தியரிடமிருந்து தகவலை கேட்கமாட்டார்கள். மரணம் அகால மரணமாக இருப்பின் நகர்காவலரின் மூலம் அல்லது சம்பவம் நடந்த இடத்தை உடனே வந்து பார்த்து சென்ற Coroner மூலம் சாட்சிப் பத்திரம் தேவைப்படும். மரணம் நடந்த நாளிலிருந்து காப்புறுதி நிறுவனம் இழப்பீட்டு தொகை வழங்கிய நாள் வரை இந்த காப்புறுதி இழப்பீட்டு தொகை நாள் வீத வட்டியுடன் (Daily Interest) இழப்பீட்டு தொகையை கொடுப்பதனால் இந்த வட்டி மட்டும் வருமானவரிக்கு உட்படுத்தப்படுவதனால் இந்த வட்டியை அந்த வருட முடிவில் வருமான வரி இலாகாவிற்கு நீங்கள் தெரியப்படுத்த வேண்டும். இதன் காரணமாகத்தான் வாரிசுதாரரின் Social Insurance நம்பர் தேவைப்படுகிறது. ஆனால் காப்புறுதி இழப்பீட்டு தொகைக்கு நீங்கள் ஒருபோதும் வரி கட்டத் தேவையில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

saththivel@thaiveedu.com

■ ■ ■

**Non Medical Insurance / Funeral Expense**
**Non Smoker Rate for the Smokers**

$10,000




| Age | Female | Male |
|---|---|---|
| 60 | $36.00 | $61.00 |
| 65 | $47.00 | $71.00 |
| 70 | $62.00 | $89.00 |
| 75 | $83.00 | $117.00 |

Call us
for more details
905.470.0063


MORTGAGE PRE-APPROVAL CALL 416-414-2374
Century 21
Affiliate Realty Inc. Brokerage*
First & Second Mortgage Refinancing
Old Finch & Morningside
4 Bedrooms, 2 Bastment Apt.
$449,900
Neilson & McLevin
3 Bedroom, Finished Bsmt.
$249,900
Meadowvale & Sheppard
4 Bedroom, Bsmt. Apt.
$399,900
Neilson & Finch
3 Bedroom, Finished Bsmt.
$264,900
Morningside & Old Finch
Freehold Town House
$239,900
Morningside & Staines
5 Bedroom, New House
$429,900
Neilson & Finch
4 Bedroom Finished Bsmt.
$259,900
For Your House
PUNCH SOCKALINGAM - 416-786-2463
Broker


Kannan Kankesu
Real Estate & Mortgage Broker
Mortgage/Refinance
Cell: 416 418 5189
Bus: 416 284 5555
RED CARPET.
880 Ellesmere Road, Suit 204, Toronto, ON
Morningside &Staines
$439,000
4 Bedroom
2000-2500 Sqf
3 Washrooms
Warden/Steeles
$428,000
FinishedBasement
3 Bedroom
3 Washrooms
Markham/Steeles
Dundas/Ontario
Markham/Finch
$270,000
Finished Basement
4 Bedroom
2 Washrooms
Birchmount/Finch
$309,900
Finished Basement
3 Washrooms
Immediate Possession
EASY TRADING ACADEMY
Free Seminar Stocks Option & Forex
Most Powerful Trading Techniques
Learn exactly when to Buy or when to Sell
Life Time Support
Kannan Kankesu
416-418-5189

## இடைநிறுத்தப்பட்ட

# EcoEnergy திட்டம் தொடருமா?

பிரபா
சின்னா



கடந்த கட்டுரையில் சில ஆண்டுகளுக்கு முன்பு Federal அரசினால் தொடங்கப்பட்டு நடைமுறையில் இருந்து வந்த Ecoenergy வேலைத் திட்டம், கடந்த மார்ச் 31, 2010இல் இருந்து Federal அரசு தனது பணப்பற்றாக்குறையைக் காரணம் காட்டி இடை நிறுத்தியிருதமையை நான் அறியத் தந்திருந்தேன். ஆனாலும் கூட இத்திட்டத்தை Provincial அரசு தொடர்ந்தும் நடைமுறையில் வைத்திருக்கிறது. எனவே வீட்டு உரிமையாளர்கள் இப்போழுதும் கூட இத்திட்டத்தில் பங்கெடுத்து பயன்பெற முடியும்.

கடந்த கட்டுரைகளில் சக்தி விரயத்தைக் கட்டுப்படுத்தி பணத்தைச் சேமிக்கக்கூடிய வழிவகைகளை ஆராய்ந்திருந்தோம். இக்கட்டுரையில் சக்தி விரையத்தோடு அதிகம் தொடர்புடைய Air leakage (வளி கசிவு) பற்றி ஆராய்வோம்.

Air Leakageஐக் கட்டுப்படுத்துவது என்பது Eco Energy திட்டத்தில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய முதன்மைப் பகுதியாகும். இது பல வழிகளில் ஒரு வீட்டுக்கு நன்மை பயக்கின்றது.

- வீட்டின் சொகுசு தன்மையைக் கூட்டுகிறது.
- வெப்பம் வெளியேறல் மற்றும் உட்செல்லல் தடைசெய்யப் படுகிறது.
- வீட்டு கட்டடத்தின் உறுதியைப் பாதுகாக்கிறது.
- ஒலி உட்செல்லுதல் மற்றும் வெளியேறல் தடைசெய்யப் படுகின்றது.
- தூசு போன்ற மாசுக்கள் வீட்டினுள் புகாது தடுக்கின்றது.
- சுகாதாரமாக வாழ வழிசெய்கின்றது.

Comprehensive Air leakage Control

ஒழுங்கு முறையாக அடையாளம் காணப்பட்டு எவ்வளவுக்கு எவ்வளவு கூடுதலான துவாரங்களை அடைக்க முடியுமோ அவற்றை அடைத்தலே Comprehensive Air leakage ஆகும். கதவு, ஜன்னல், Electrical outlet போன்றவற்றைச் சுற்றியுள்ள துவாரங்கள் கண்ணுக்கு புலப்படக் கூடியவை, சிம்னி, plumbing stacks, கூரை போன்றவற்றில் உள்ள துவாரங்கள் கண்ணுக்கு புலப்பட மாட்டாதவை. இத்துவாரங்களை இதற்கெனத் தேர்ச்சி பெற்ற பரிசோதகரை அணுகுவதன் மூலம் கண்டு பிடிக்கக்கூடியதாக இருக்கும். துவாரங்களை Coulking, weather stripping, gasket, tape மூலம் அடைக்கலாம். ஒவ்வொரு முறை insulation செய்யும் போதும் முதன்மையாக Air leakage கவனத்தில் எடுத்து, முதலில் அதைத் திருத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் நீங்கள் insulationஇன் முழுப் பயனையும் அடைவதோடு, கட்டிடச் சுவர்களுக்குள் நீராவி புகாமற் தடுப்பதையும் உறுதி செய்து கொள்ளலாம்.

Air leakageஐக் கட்டுப்படுத்தும் பொழுது வீட்டின் காற்றோட்டம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். துவாரங்களை அடைக்கும் பொழுது வீட்டினுள் வளி நுளைவது தடுக்கப்படுகின்றது. ஆனால் Furnace, fire place, stove போன்றவை வேலை செய்வதற்கு வளி தேவைப்படுகின்றது. வளியானது கருவிகள் தொழிற்படுவதற்கு மட்டுமல்லாது, அவற்றிலிருந்து வெளியேறுகின்ற நச்சு வாயுக்களை ஐதாக்கி வெளியேற்றுவதற்கும் உதவுகின்றது. வீட்டின் Air leakageஐக் கட்டுப்படுத்தப்படும் பொழுது தீய வாயுக்களும் ஈரப்பதனும் வீட்டினுள் அளவுக்கு அதிகமாகி தீய விளைவுகளை ஏற்படுத்தும். வீட்டினுள் தேங்கும் மேலதிக நீராவி கூரை, சுவர்கள் மற்றும் சுவர்களுக்கு உள்ளும் படிந்து பூஞ்சணம் ஏற்பட வாய்ப்பாகின்றது. அத்துடன் கட்டட நிர்மாணப் பொருட்களுக்கும் தாக்கங்களை ஏற்படுத்தி அதனுடைய உறுதித்தன்மையைக் குறைக்கின்றது. ஆகவே Air Leakageஐக் கட்டுப்படுத்தும் பொழுது நாம் வீட்டினுள் சிறந்த காற்றோட்டத்தை ஏற்படுத்தக் கூடிய

> “ காற்றோட்டத்தைக் கூட்டுவதனால்,
> நீராவியுடன் சேர்ந்து வெப்பமும் வெளியேற்ற,
> மின்கட்டணம் அதிகமாகும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.
> ஆகவே, நீராவி வீட்டினுள் வராதவாறு தடுப்பதே
> சிறந்த முறையாகும். ”

மற்றும் காற்றின் ஈரப்பதத்தைச் சமப்படுத்தக் கூடிய HRV (Heaty recovery ventilator) போன்ற கருவிகளைப் பாவித்தல் சாலச்சிறந்ததாகும்.

இக்கட்டுரையின் மூலம் Air leakageஐக் கட்டுப்படுத்துவதன் முதன்மைத்துவத்தையும் அதன் பயன்கள் பற்றியும் விளக்கம் அடைந்திருப்பீர்கள் என நம்புகின்றேன். முதலில் ஈரப்பதன் விளைவுகள், கட்டுப்பாடுகள் பற்றி ஆராய்வோம்.

### ஈரப்பதனும் கட்டுப்படுத்தலும்:

ஒரு வீட்டில் ஈரப்பதப் பிரச்சினை உள்ளதைப் பின்வரும் கட்புலனால் அறியக்கூடிய காரணிகளால் அறிந்து கொள்ளலாம்.

- பூஞ்சணம் பிடித்தல்.
- துர்நாற்றம் வரல்.
- யன்னல்களில் நீராவி படிந்திருந்தல்.
- பலகைகள் உக்கியிருத்தல்.
- பூச்சுக்கள் ஊதி, உரிந்திருத்தல்.
- மேல் சுவரில் கரும்புள்ளிகள் விழுதல்.
- நிலக்கிழ் அறையில் நீர் உட்புகுதல்.
- ஈரப்பதன் அனேகமாக 55%க்கும் கூடவிருத்தல்.

### வீட்டினுள் ஈரப்பதன் கூடும் போது ஏற்படும் விளைவுகள்:

- யன்னல்களில் நீராவிபடிவதனால் கண்ணாடி மங்கலடைந்து வெளிப்புறத்தைப் பார்க்க முடியாமல் போவதோடு அதைச் சுற்றி இருக்கும் சட்டம், சுவர் முதலியன சேதமடையும்.
- பூஞ்சணம் பிடித்து விடுவதனால் closetsஇல் உடுப்புகள், புத்தகங்கள் முதலிவைற்றைப் பாதுகாக்க முடியாமலும், கம்பளவிரிப்புகள், தளபாடங்கள் சேதமடைவதோடு துர்நாற்றமும் வீசும். அத்தோடு சுவாசக்குழாய் தொடர்பான நோய்களும் ஏற்படும்.
- சுவர்களுக்குள் புகும் ஈரப்பதன் சுவரின் மேற்பூச்சுக்களை உப்புவிப்பதோடு (buckle) அதை உரியவும் செய்யும் இதைத் திருத்துவதற்கு பெருமளவு பணம் தேவைப்படலாம்.
- மேற்கூரையினுள் புகும் நீராவி அங்கே ஒடுங்கி நீர்த்திலைகளாக மாறி மரப்பலகைகளை உக்கச்செய்வாதோடு சில வேளைகளில் ceilingஇல் கறையையும் படிவிக்கும்.

மேற்கூறிய விளைவுகள் உள்ள வீடு அதிகளவு வெப்பத்தை வெளியெற்றுவதனால் மின்கட்டணம் உயர்வாக இருக்கும் வீடு விற்கப்படும் பொழுது அதன் பெறுமதி குறைவாகவும் இருக்கும்.

### ஈரப்பதனைக் குறைக்கும் வளிமுறைகள்:

வீட்டினுள் எவ்வாறு ஈரப்பதனைக் குறைக்கலாம் என்பது பற்றி ஆராய்வோம்.

காற்றோட்டத்தைக் கூட்டுவதனால். ஈரப்பதனைக் குறைக்கலாம். எனினும் நீராவியுடன் சேர்ந்து வெப்பமும் வெளியேற்றப்படுவதால் மின்கட்டணம் கூடவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. ஆகவே நீராவி வீட்டினுள் வராதவாறு தடுப்பதே சிறந்த முறையாகும்.

பின்வரும் முறைகளில் நீராவி கூடுவதைக் குறைக்கக்கூடியதாக இருக்கும்.

- வீட்டினுள் உடுப்புகளைக் காயப்போடுவதைத் தவிர்த்தல்.
- Clothes dryerஇல் இருந்து வெளியேறும் நீராவி வீட்டுக்கு வெளியே வெளியேறுமாறு குழாய்களை அமைத்தல்.
- நிலத்தில் இருந்து Basementஇல் நீராவி உட்புகாது நில விரிப்புக்களை விரித்தல்.
- ஈரப்பதன் 30%இலும் குறைவாக இருந்தாலொழிய Humifidiers பாவிக்காது விடல்.
- Fire placeஇற்குப் பாவிக்கும் விறகுகளை வீட்டினுள் காயப்போடாதிருத்தல்.
- குளியலறை, சமையலறை வீசிறிகளை தேவைப்படும் போதோல்லாம் பாவிப்பதோடு, இவை வெளிப்புறத்தில் வெளியேற்றப்படக் கூடியதாக இணைக்கப்பட்டிருக்கின்றதா என்பதையும் உறுதி செய்தல்.
- குளிர்காலங்களில் carpetsஐ நீராவியால் துப்பரவு செய்யக்கூடாது.
- Closetsஇன் வெளிப்புற மூலையில் Thermal bridgeஐப் பொருத்துவதோடு கற்றோட்டத்தையும் ஏற்படுத்தல்.
- சிறிது அதிக பணம் செலவில் வெளிப்புற மூலைகளிலும், நிலக்கீழ்ச் சுவர்களிலும், Insulationஇன் உற்புறமாக Polyethylene இதனால் ஆன Air barrierஐப் பொருத்த வேண்டும்.

ஈரப்பதனானது, மேற்கூறிய கட்டுப்பாடுகளையும் மீறி அதிகளவில் இருக்கும் பட்சத்தில் சிறந்த மேலதிக காற்றோட்டத்தை ஏற்படுத்தக் கூடிய கருவியைப் பொருத்த வேண்டும். மிகவும் சிறந்தது Heat Recovery Ventilator (HRV) ஆகும். இது அதிகளவு சக்தி விரயமாகாது தொடர்ச்சியான காற்றோட்டத்தை ஏற்படுத்துவதோடு, வெளியேறும் வளியிலுள்ள வெப்பத்தை உட்புகும் வளியைச் சூடாக்குவதற்குப் பயன்படுத்தக் கூடிய வகையில் தொழிற்படுகிறது.

ஒரு புதிய வீட்டிற்கு முதல் ஒருவருடம் மிகச் சிறந்த காற்றோட்டத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. ஏனெனில் கட்டடவேலைக்குப் பயன்படுத்தப்பட்ட கொங்கிறீற், மரங்கள் போன்றவற்றில் ஈரப்பதன் கூடுதலாக இருக்கின்றமையால், இவற்றின் ஈரப்பதன் காயப்படப் பண்ண வேண்டும்.

சுற்றுப்புறச் சூழல் குளிராகவும் ஈரப்பதனாகவும் மழையாகவும் கடற்கரைப் பிரசேமாகவும் இருக்கும் வேளைகளில் காற்றோட்டத்தைக் கூட்டுவது உசிதமாகாது. ஏனெனில் உட்புகும் வளியில் ஈரப்பதன் கூடுதலாக இருப்பதனால் வீட்டினுள் மேலும் ஈரப்பதன் கூட்டப்படலாம். கோடைகாலத்தல் வீட்டினுள் ஊறி இருக்கும் நீராவி இலையுதிர் காலத்தில் படிப்படியாக வெளியேறத் தொடங்கும் ஆகவே பனிக்காலம் வருவதற்கு முன் இலையுதிர் காலத்தில் கூடியளவு காற்றோட்டத்தை ஏற்படுத்தி நீராவியை வெளியேற்றுவதற்காக யன்னல்களைத் முழுமையாகத் திறந்து வைத்துருத்தல் சாலச்சிறந்ததாகும்.

இக்கட்டுரையில், வீட்டின் Air Leakage மற்றும் ஈரப்பதன் போன்ற விடயங்களை ஒரளவு பார்த்தோம். வீட்டின் ஈரப்பதத்தன்மை வீட்டுக்கு வீடு பல காரணங்களால் மாறுபடலாம். இதை முழுமையாக நிவர்த்தி செய்வதற்கு, இத் துறையில் தேர்ச்சி பெற்ற பரிசோதகரை அனுகி அதற்குரிய அறிவுரைகளைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

அடுத்த கட்டுரையில் மேலும் பல விடயங்களுடன் சந்திப்போம்.

prabha.sinna@thaiveedu.com

■ ■ ■

First step to receiving Provicial and Toronto rebates is an

ENERGY AUDIT

Prabha Sinna

Tel: 416.655.9464

Do the pre-audit > Do the retrofit > Do the post-audit > Get the cheque in the mail


வீடு வியாபார நிலையம் வாங்க விற்க...
$469,000
Steeles/Middlefield
$139,000
Midland/Lawrence
$572,900
Yonge/Sheppard
$249,000
Yonge/Major Mac
Sale Of Business
Franchise Restaurant
In Richmond Hill
$379,000
$199,000
Finch/Middlefield
$275,000
Markham/Denision
$94,900
Markham/Mcnicoll
$205,000
BANK SALE
Kennedy/Eglinton
$349,900
Birchmount/Ellesmere
$359,900
Brimley/Lawrence
$367,500
Bank Sale
Steeles/Jane
$750.00
Lease
Markham/Mcnicoll
$535,000
Steeles/Staines
$299,000
Finch/Mccowan
$449,900
Markham/Steeles
More Houses Visit
www.krishome.ca
HOMELIFE
HIGHER STANDARDS
Krish Sivapatham
Sales Representative
Full Time Realtor
Direct : 416-895-4457
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Dr, Markham, ON, L3S 4N7
Bus:905-201-9977 Fax: 905-201-9229
Independly Owned and Operated, REALTOR
WWW.NewCondoInGTA.com
New Condos Call Krish
VIP Price & Floor PLan


வீடு வாங்கவும், விற்கவும்.......
Listing of the Week!
$459,900
9th Line/North Of 407
4 Bedrooms, 3 Washrooms
Beautiful 4 Years All Brick Home,
Detached Double Garage,
Double Door Entry, 9 Ft Ceiling,
Hardwood Floors, Lot Of Pot Lights,
Newly Painted, Great Location,
Close To Hwy 7/407,
Schools, Shopping.
$579,900
14th And 9th Line
4 Bedrooms, 4 Washrooms
Built Less Than 5 Years By Starlane
$99,900
Nelson / Sheppard
2 Bedrooms, 2 Washrooms
Ideal For First Time Buyers
$329,999
Markham/Eglinton
2+1 Bedroom, 2 Washrooms
5 Years Old Town Home
$129,900
Kennedy/Hwy 401
1+2 Bedrooms, 2 Washrooms
Ideal For First Time Buyers
சகல விதமான
படிவங்களும்
நிரப்பிக்
கொடுக்கப்படும்
இரஞ்சன் or
செல்வா
416.816.1220
RED CARPET.
Royal Realty Ltd., Brokerage
Real Estate Services
RANJAN FRANCIS XAVIER
Sales Representative
Cell: 416.816.1220
Office: 416.284.5555
880 Ellesmere Road, Suite 204, Scarborough, ON.
வளமான வாழ்விற்கு வதிவிடம் வாங்கிட......



Arajen Beauty Centre - Toronto
2605 Eglinton Ave. East, Unit A, Scarborough Ontario
Grant wedding Show, Exhibition
&
Certificate awarding
Live in 30 Different Hair styles
75 Different Models in Stage
Exibition
Cakes
Flower Arrangements
Paintings
Dresses
Jewelleries
Handicrafts
JULY 11
4PM-10PM
EVEREST BANQUET HALL & CONVENTION CENTRE
1199 Kennady Road, Scarborough, ON. M1P 2L2
For all your beauty & skin needs please call: 416 269 0019 / 416 477 9211




Arajen Beauty Centre
• Make Up
• Hair Style & Hair Care
- Dying & Highlighting
• Bridal Make Up & Arangetram
• Skin Care (All Kind of Facial)
- Threading & Waxing
• Skin Treatment
• Nail Art
• Dress Making (Saree & Blouse)
• Permanent Hair Removal
• Pedicure, Manicure
• Mehindi
• Bouquet, Sadainagam
• Cryotherapy
• Micro Dermabrasion
Beauty Classes
அழகியல் கலையை கற்க
விரும்புகிறீர்களா? எங்களது கலை
வகுப்புகளில் இணைந்து
கொள்ளுங்கள்
Certificate Courses & Seminars
அரஜன் அழகு நிலையம்
2605-A Eglinton Ave. E.,Scarborough, ON M1K 2S2
(இரா சுப்பர் மார்க்கட் மேல் மாடியில்)
Tel: 416.509.7978
Web: www.arajenbeauty.ca, E-mail: sasi@arajenbeauty.ca
இப்போது ஆண்களுக்கான சேவைகளும்

நாம் அழகாய் இருக்க

# அழகான உதடுகளுக்கு இயற்கை முறை ஆலோசனை

**தொடர் 10**



சசி நரேன்
Cosmetologist & Aestheticia

முக அழகின் முழுமையை வெளிப்படுத்துவதில் கண்களுக்கு இணையாக உதடுகளுக்கும் முக்கியத்துவம் உண்டு உடலிலுள்ள சருமம் 28 நாட்களுக்கொரு முறை வெளித் தோலை உதிர்க்கிறது. அதுவே உதடுகளில் உள்ள சருமம் உதிர மாதக்கணக்கில் ஆகும். சரியான பராமரிப்பு இல்லாததால் தான் உதடுகள் தோலுரிந்தும், வறண்டும் காணப் படுகின்றன.

உதடுகளைப் பராபரிக்க சில ஆலோசனைகள்…

### பொதுவான ஆலோசனைகள்:

- தினசரி பெட்ரோலியம் ஜெல்லியை உதட்டில் தடவி வந்தால் உதடுகள் மென்மையாக மாறும்.
- வாரம் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு உதடுகளை வெதுவெதுப்பான மற்றும் குளிர்ந்த தண்ணீரால் ஒத்தடம் கொடுத்து வந்தால் அவை ரோஜா போல மென்மையாக மாறும்.
- உதடுகளைக் கடிக்கும் பழக்கம் சிலருக்கு உண்டு. அது தவிர்க்கப்படவேண்டிய பழக்கம். அதனால் உதடுகள் வறண்டு போகவும். நிறம் மாறி அசிங்கமாகக் காட்சியளிக்கவும் கூடும். எனவே இது தவிர்க்கப்பட வேண்டும்.
- மற்றவர்கள் உபயோகிக்கும் லிப்ஸ்டிக்குகளைப் பகிர்ந்து கொள்ளக் கூடாது. அதனால் தொற்றுக் கிருமிகள் பரவ வாய்ப்புண்டு. இப்போது மேட் பினிஷ் லிப்ஸ்டிக்குகள் மிகவும் பிரபலம். ஆனால் அவற்றில் ஈரப்பதம் குறைவு என்பதால் உதடுகளில் உள்ள இயற்கையான எண்ணெய்களை அழித்து விடும். எனவே அவற்றை எப்போதாவது தான் உபயோகிக்க வேண்டும்.
- தரமானதாக இல்லாத பட்சத்தில் தினசரி லிப்ஸ்டிக் உபயோகிப்பதால் உதடுகள் கருத்தும், வறண்டும் போகக்கூடும். எனவே தரமான லிப்ஸ்டிக்குகளாகப் பார்த்து உபயோகிக்க வேண்டும்.
- லிப்ஸ்டிக் போட உபயோகிக்கும் பிரஷ்ஷை உடனுக்குடன் சுத்தப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் மறுபடி அதை உபயோகிக்கும்போது தொற்றுக் கிருமிகள் பரவ வாய்ப்புண்டு.
- இரவு படுக்கச் செல்வதற்கு முன்பாக உதடுகளில் உள்ள லிப்ஸ்டிக்கை சுத்தமாக அகற்றி விட வேண்டியது மிக முக்கியம்.
- லிப்ஸ்டிக்கை நேரடியாக அப்படியே தடவக்கூடாது. அது உதடுகளின் முழுமையான அழகை வெளிப்படுத்தாது. எனவே லிப் பிரஷ்ஷின் உதவியாலேயே லிப்ஸ்டிக் போட வேண்டும்.

### இயற்யை முறையில் உதடுகளைப் பராபரிக்க:

- முட்டையின் வெள்ளைக் கருவோடு தேன் கலந்து உதடுகளில் தடவி வந்தால் அவை அழகு பெறும்.



- தினமும் நெய் அல்லது வெண்ணெயை உதடுகளில் தடவி வர அவற்றில் உள்ள வெடிப்புகள் நீங்கி, உதடுகள் வழவழப்பாகும்.
- முட்டையின் வெள்ளைக் கருவோடு அரை ஸ்பூன் பாதாம் பவுடரைக் கலந்து அத்துடன் கொஞ்சம் பாலாடையையும் சேர்த்து உதடுகளில் தடவி வர வறண்ட உதடுகள் குணமாகும்.
- இரண்டு டீஸ்பூன் ஒலிவ் எண்ணெயுடன் இரண்டு கிராம் தேன் மெழுகும், பன்னீரும் கலந்து உதடுகளில் தடவிவந்தால் அவை சிவப்பாகவும், மென்மையாகவும் மாறும்.
- கொத்தமல்லிச் சாற்றை உதடுகளில் தினமும் தடவிவந்தால் அவை இயற்கையிலேயே சிவப்பு நிறத்தைப்பெறும்.
- லிப்ஸ்டிக் போடுவதற்கு முன்பாக உதடுகளில் ஐஸ் கட்டிகளை ஒற்றி எடுத்தால், லிப்ஸ்டிக் நீண்ட நேரத்திற்கு அப்படியே இருக்கும்.
- உடல்நலக் கோளாறுகள் இருந்தாலும் உதடுகள் பொலிவிழந்து காணப்படும். உதாரணத்திற்கு விட்டமின் B குறைபாடு உள்ளவர்களுக்கு உதடுகளின் ஓரங்களில் புண்கள் மாதிரி காணப்படும். அதற்கு சிகிச்சை எடுத்துக்கொண்டாலே உதடுகள் சரியாகிவிடும்.

### உதடுகளுக்கு முக அலங்காரம் செய்யும் போது கவனிக்க வேண்டிய சில விடயங்கள்:

- முதலில் பவுண்டேஷன் தடவி விட்டு பிறகு லிப்ஸ்டிக் போட்டால் லிப்ஸ்டிக் நீண்ட நேரம் அப்படியே இருக்கும்.
- லிப்ஸ்டிக் உபயோகித்துப் பழக்கமில்லாதவர்கள் லிப்குளோஸ் உபயோகிக்கலாம். அதே மாதிரி பல வண்ண நிறங்களில் இப்போது வாசலின் வந்துள்ளது. அதையும் உபயோகிக்கலாம்.
- லிப்ஸ்டிக் உபயோகிக்காமல் நேரடியாக லிப்கிளாஸ் தடவிக்கொள்ளும் பழக்கம் சிலருக்கு உண்டு. இது தவிர்க்கப்பட வேண்டிய விஷயம். லிப்ஸ்டிக்கின் மேல்தான் லிப்கிளாஸ் தடவப்படவேண்டும்.
- லிப்பேஸ் தடவிவிட்டு அதன் மேல் லிப்ஸ்டிக் தடவினாலும் லிப்ஸ்டிக் நீண்ட நேரத்திற்கு அப்படியே இருக்கும். லிப்ஸ்டிப் போடும் போது லிப்ஸ்டிக்களின் நிறத்திற்கு ஏற்றதாக லிப் லைனரின் நிறம் இருக்க வேண்டும். இல்லையென்றால் உதட்டின் அழகு கெட்டுவிடும். அதற்காக ஒவ்வொரு லிப்ஸ்டிக் வாங்கும் போதும் அதற்கேற்ற லிப்லைனர் வாங்க வேண்டும் என்று அவசியமில்லை. லிப்ஸ்டிக்கின் நிறத்தைச் சார்ந்த நிறமாக இருந்தாலும் போதுமானது.
- சிவப்ப நிறத்தைச் சார்ந்த லிப்ஸ்டிக்குகளுக்கு சிவப்பு நிற லிப்லைனரும், பிரவுன் நிறத்தை சார்ந்த லிப்ஸ்டிக்குகளுக்கு பிரவுன் லிப்லைனரும் உபயோகிக்கலாம். தேவைப்பட்டால் லிப் லைனரைக் கூட லிப்ஸ்டிக்காக பயன்படுத்தலாம்.
- மொய்ஸ்ரைசர் இல்லாத லிப்லைனரை லிப்ஸ்டிக்காக பயன்படுத்தினால், மறக்காமல் சிறிதளவு க்ரீம் தடவேண்டும். இது உதடுகள் காய்ந்து வெடிக்காமல் இருக்க உதவும்.

sasi.naren@thaiveedu.com

■ ■ ■

KESAVAN LAW OFFICE

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும்
சந்திக்கலாம்

- Real Estate
- Business Law
- Immigration Law
- Family Law
- Last Wills
- Power of Attorney
- Affidavits



சட்டம் சம்பந்தமான சகல
தேவைகளுக்கும்
கேசவன் சட்ட நிறுவனம்

THANGAVEL M. KESAVAN
(Barrister & Solicitor)

Tel: 416-754-9843
Fax: 416-754-2362

5200 Finch Ave. East, Unit 302,
Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
Web: www.lawyers.com/kesavanlaw
E-Mail: kesavanlawoffice@bellnet.ca

SP Electronics
TV, VCR, DVD, Players-Telephone-Computers
உங்களுக்குத்தேவையான அனைத்துத் தமிழ்
வானொலிகளுக்கும், திருத்த வேலைகளுக்கும்
416 264 6400
2641 Eglinton Avenue East ( Brimley & Eglinton)

# திட்டமும் தோட்டமும்



அலன் சிவசம்பு
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

நாம் எந்த ஒரு வேலையைச் செய்வதென்றாலும் அவற்றிக்குச் சரியான திட்டம் அவசியமாகும்.

உதாரணமாக ஒரு தோட்டம் ஒன்றைச் செய்வதென்றாலும் அதற்குச் சரியான Garden Plan அவசியம். நமது விட்டில் உள்ள back yardஐ அழகுபடுத்தும் முன்பு தெரிந்தவர்கள், சிநேகிதர்கள் அல்லது Garden Magazine போன்றவற்றைப் பார்ப்பதன் மூலம் எமக்குப் பிடித்த திட்டத்தை வரைந்து எமக்குப் பிடித்த தோட்டத்தை அமைக்க முடியும்.

பொதுவாக நாம் திட்டம் ஒன்றைப் போடும் முன்பு எமது தோட்டத்தில், எமது திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு உபயோகமான வற்றை அறிதல் வேண்டும்.

உதாரணமாக வளர்ந்த மரங்கள் எமது தோட்டத்தில் இருந்தால் அதை எமது planல் உள்ளடக்கலாம். அதே போல் எமது திட்டத்திற்குத் தேவையற்ற அல்லது சரிசெய்ய வேண்டியவையையும் அறிதல் வேண்டும். உதாரணமாக உடைந்த Patio Stone அல்லது Poor drainage இருந்தால் அவற்றைச் சரி செய்து கொள்ளவேண்டும். பின்பு விட்டின் முன்பகுதி, பின்பகுதிகளைச் சரியாக அளந்து கொள்ளுதல் வேண்டும். அத்துடன் நீச்சல் தடாகம், பக்கத்து வீட்டு வளர்ந்த மரங்கள் போன்றவற்றையும் கருத்தில் எடுத்தல் நல்ல தாகும். பக்கத்து விட்டு மரங்களின் நிழல்கள் எமது பகுதியில் நடும் சில மரங்களுக்கு உகந்ததாக இருக்கமாட்டாது. மேலும் வீடடுத் தோட்டத்தில். ஏற்கனவே படிகள், Walkways (நடைபாதைகள்) Patio போன்ற வற்றை உங்களது திட்டத்திற்கு ஏற்றவாறு ஒடுக்கியோ அல்லது அகட்டியோ சரிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். சரியான பாதையை அமைத்தால் நாம் எமது பூந்தோட்டத்தினுள் நடந்து திரிவதற்கு மட்டும் அல்லாது தோட்டத்தைப் பராமரிப்பதற்கும் உதவியாக இருக்கும்.

தொடர்ந்து தோட்டத்தைச் சரியாக உபயோகிப்பதற்கு எமது திட்டத்தினுள் Out door cooking area dining table போன்ற தேவைகளையும் உள்ளடக்குதல் வேண்டும். அதே நேரத்தில் dining table, Cookerற்கு அருகில் சில வேளைகளில் புதிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான திட்டத்தையும் உள்ளடக்குதல் வேண்டும். உதாரணமாக அமைதியாக இருந்து புத்தகம், பத்திரிகைகள் வாசிப்பதற்குத் தேவையான பகுதியை எடுத்துக் கொள்ளலாம். அத்தோடு தோட்டத்தை அழகு படுத்தும் சில features போன்ற, Fencing with decorative arch panels போன்ற பல



இல்லாது இருப்பது நல்லது. அது மட்டும் அல்லாது குழந்தைகள் விளையாடும் பகுதி, Garbage போடும் பகுதி போன்ற பல இடங்களையும் உள்ளடக்கலாம்.

அடுத்தாக இடத்தின் வசதியைப் பொறுத்து அழகுபடுத்தும் பொருட்களை சிந்தித்துத் திட்டத்தினுள் உள்ளடக்குதல் வேண்டும். சில தோட்டங்களில் வெளியில் நின்று குளிப்பதற்குத் தேவையான வசதியையும் உள்ளடக்குவார்கள்.

பின்பு உங்களது திட்டத்தில் எல்லாவற்றையும் பதிந்த பின்பு மரங்களின் கிழைகளை வெட்டியும், புதிய மரங்கள் ஐந்து Metreஐ விட உயரமானால் அவற்றை தோட்டத்தின் கரைகளில் நட்டும் உங்களது தோட்ட வேலையைக் தொடங்கலாம். அதுமட்டும் அல்லாது சில மரங்கள் உங்களது விட்டின் Structureஐப் பாதிக்குமானால் அவற்றை அதற்குத் தகுதியான இடத்தில் நடுதல் வேண்டும் பின்பு planting beds எவ்விடத்தில் அமையும் என திட்டத்தினுள் போடுவது மட்டும் அல்லாது எவ்வகையான மரங்கள். இவ்விடத்தில் வளரும் அத்துடன் அழகைக் கொடுக்கக் கூடியது என்பதையும் கவனத்தில் எடுக்கவும். முடிவாக Electrical power உங்களது தோட்டத்திற்கு ஒளியையும் அழகையும் கொடுப்பதற்கு தேவைப்படும். அதைச் சரியான முறையிலும், பாதுகாப்பான முறையிலும் அமைத்தல் வேண்டும். மேலும் Pond அமைப்பதானால் water pumpயும் cooking appliances என்பவற்றையும் உள்ளடக்கலாம். பெரிய தோட்டமாக இருந்தால் செடிகளுக்கு தண்ணீர் விடுவதற்கான வழிகளையும் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஆகவே மேற்குறிக்கப்பட்ட தகவல்களுடன், நிங்கள் உங்கள் தேவைக்கும் வசதிக்கும் ஏற்ப்ப ஒரு சரியான Garden planஐ வரைந்து பின்பு ஒரு தோட்டத்தை அமைத்தால், நீண்ட காலத்திற்குச் சந்தோசமாக உங்கள் தோட்டத்தை அனுபவிக்க உதவும்.

alan.sivasambu@thaiveedu.com

■ ■ ■

Law Office
T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)
Off: 416 • 266 • 6154
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677
2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

INPROBUS REALTY CORPORATION
Specialty Investment, Property and Business Brokers
Men's clothing store
For sale
22yrs in Business
---
Office space for lease
close to Subway.
Good location for Mississauga, Etobicoke and Down town clients.
Inprobus Realty Corporation
Call : Alan 647-504-2536




# CREDIT **RECOVERY** CANADA

- வங்கிக்கடனில் 25% மட்டும் செலுத்தி உங்கள் கடன் சுமையிலிருந்து விடுபடல்!
- COLLECTION AGENCY களின் தொலைபேசித் தொல்லைகளையும் சட்ட நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துதல்!
- சம்பளப்பணத்தை பறிமுதல் செய்வதை தவிர்த்தல்!
- உங்கள் RRSP, RESP மற்றும் வீடு வாகனங்களை பாதுகாத்தல்!
- சிறிய மாதாந்த கட்டுப்பணத்தின் மூலம் BANKRUPTCY செல்வதை தடுத்தல்!

## கடன் சுமையிலிருந்து உடனடியாக மீளுங்கள்..!



**Suren Sornalingam**
*Certified Credit Counsellor*

## இலவச ஆலோசனைகள்
## CALL: (416) 264 1272

55 TOWN CENTRE COURT SUITE 700 - SCARBOROUGH, ONTARIO
INFO@CREDITRECOVERYCANADA.COM - WWW.CREDITRECOVERYCANADA.COM

STSADS 416 985 7379

# வீடு வாங்கவும், விற்கவும்...



**Barrie**
4 Bedroom
3 Washroom
Light Airy Decor, Neutral Tones and 9' Ceilings
$349,900



**Oakville**
4 Bedroom
3 Washroom
Fantastic Premium Lot Greepark Home
$599,900



**Win.Church/ Britannia**
3 Bedroom
2 Washroom
Beautifull All Brick Semi-Detached Home
$340,000



**Mccowan /16th** 5 Bedroom
5 Washroom
9" Ceiling, Oak Staircase, Open Concept
$599,000



**9th/Hooverpark**
3 Bedroom
3 Washroom
Fabulous Detached Home In Most Desirable Area Of Stoufville
$394,900



**Jane/Major Mac**
Established South Asian Grocery, Fish, and Video Store
$125,000 Plus Stock



**9th/14 Ave**
Established South Beautiful Well Maintained Arista Built Detached Home With Charming Porch
$479,900



**Jane/Major Mac**
Restaurent For Sale. Easy To Manage, Right Next Across Wonderland
$224,000



**Morningside / Finch**
4+2 Bedroom
4 Washroom
Basement Finished With Two Bedrooms With Seperate EntranceHome
$439,900



**Finch/ Morningside**
4 Bedroom
3 Washroom
Brazillian Cherry Hardwood Floors, & Fenced Yard.
$449,500

**NO**
- Pressure
- Commitment
- Cost



**Ganesh Thangarajah**
Real Estate Broker
416-994-9046

**Raj Ariyanayagam**
Real Estate Broker
416-930-4663



HOMELIFE
HIGHER STANDARDS

**HOMELIFE TODAY REALTY LTD., BROKERAGE**
Independently Owned And Operated
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6 • Office: 416-298-3200


NEW LISTINGS EVERYDAY
www.iwishtomove.com
ITS FAMOUS FOR HOME BUYERS AND SELLERS
Ahilan Thanabalasingham
Sales Representative
416.617.1767
Office: 905.471.0002
Fax: 905.471.7441
RE/MAX
Dynasty Realty Inc., Brokerage
Independently owned and operated
- digi Media -


Toronto - London - Doha - Colombo
From $990 + Tax
QATAR AIRWAYS
Toronto - London - Colombo
From $1330 + Tax
SriLankan
Toronto - Abudhabi - Colobmbo
From $1270 + Tax
ETIHAD
Toronto - Brussels - Chennai
$900 + Tax
JET AIRWAYS
Toronto - Abudhabi - Chennai
$820 + Tax
ETIHAD
Toronto - Dubai - Chennai
$1145 + Tax
Emirates
Toronto - London - Colombo - Chennai
$1330 + Tax
SriLankan
Colombo - Jaffna
Expo Aviation Tickets Avialble Here
SPECIAL GUIDED TOURS
India • Malaysia • Thailand • Cambodia • Indonesia • Vietnam • Laos • Myanmar • Hongkong • China • Korea • Japan
- digi Media -
TICO 50012691
IATA
www.serandibtravel.com
Serandib Travel
Your satisfaction is our success
2075 Lawrence Ave, E, Suite 202,
Toronto, ON
(Warden & Lawrence)
416.750.0009
7 Eastvale Drive, Unit 207
Markham, ON
(Markham & Steeles)
905.201.6660
Montréal : 514-448-1389, Calgary: 403-770-9647, Ottawa: 613-482-6590
Vancouver: 604-625-0495, Mississagua: 905-564-7564
* Above fares are seat sale fares. Certain conditions and restrictions apply. Prices are subject to availability of the seats. Taxes vary from $325 - $400.

# உறவை மறக்கலாமா?



திரு மகேசன்

இழப்புக்கள் தாங்க முடியாதவை. எத்தனையோ இழப்புக்களை நம்மில் பலர் கண்டாகி விட்டது. வேதனைகள், வடுக்கள், விழுப் புண்கள் என்பவை இலகுவில் மனதைவிட்டு நகரமுடியாதவை. எடுத்ததெற்கெல்லாம் ‘கடவுளே’ என்று மண்டையைப் போட்டு பிய்த்துக் கொள்வது நமக்கு பழக்கமாகி விட்டதொரு வழமை.

கால ஒட்டத்தில் கூட மறந்துவிட முடியாத இழப்புக்கள் எத்தனையோ இருக்கின்றன என்று பொய்யைப் போட்டு மூடி மறைத்துவிட முடியாது. அமைதி திரும்பிவிட்டது என்று மனதை ஆறப்போட்டு வைக்க முடியாது. இன்றைக்கு எங்கே திரும்பினாலும் இழப்புக் களைச் சந்தித்தவர்கள் ஏராளம் ஏராளம். இழப்பு என்பதற்கு வரைவிலக்கணமே இல்லை. உடமையை இழந்தோம். உரிமையை இழந்தோம் உறவை மறக்கலாமா?

இன்றைக்கு நம் மண்ணை நோக்கி பயணப் பட்டுக் கொண்டிருப்பவர்களைத்தான் சொல்ல வருகின்றேன். மனதை நம் மண்ணுக்கு போகும் போது பலமாக வைத்திருக்க வேண்டிய கால கட்டம் இது. ஏதோ விடுமுறைக்காக கடற்கரைக்காக போகும் பயணமல்ல நம்முடையது. நாம் போகும் பயண மானது இம்முறை நிச்சயமாக வேதனைகளையும், வடுக்களையும் நெஞ்சில் சுமந்து வரும் பயணமாகத்தான் இருக்கப்போகின்றது. இதுவொன்றும் புதினமல்ல. எல்லோருமே நாடு நோக்கிப் பயணப்பட டிக்கட் வாங்க முன் மனதில் தோன்றியது தான்.

நாம் ஓடி விளையாடிய மண் இன்று நம் கண்ணும் பார்க்க கூடிய நிலையிலா இருக்கின்றது. நம்மோடு நம் உணவு முதல் உணர்ச்சிகளை பகிர்ந்து கொண்ட உறவுகள் எப்படி இருக்கப் போகின்றார்கள் என்பது ஒரு கேள்விக்குறி.

தாயைப் பிரிந்து எத்தனையே ஆண்டுகளுக்கும் பின் தாயைப் பார்க்கப் போகும் உணர்வோடுதான் பலரும் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நெஞ்சில் பாரம் அழுத்து கின்றது. என்ன தான் தமது குடும்பம் பாதுகாப்போடும், சந்தோசத்தோடும் இருந்தாலும் எங்கோ ஒரு உறவு நிச்சயம் சிறகு ஒடிந்து போய் வேதனைப் பாடலுடன் இருக்கத்தான் போகின்றது.

அது நம்மைக் கைபிடித்து அழைத்துச் சென்ற உறவாக இருக்கலாம். அல்லது பள்ளிப் படிப்பில் ஒன்றாக ஓடி விளையாடிய உறவாக இருக்கலாம். கோயில் திருவிழாக்களில் பல இரவுகளில் சுவாமி காவும் போது கூடவே தோள் கொடுத்த உறவாக இருக்கலாம், ஆனால் அது நெருங்கிய உறவாகத் தான் இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. நம் மொழியைப் பேசி நம்மோடு வாழ்ந்த குற்றத்திற்காக நொந்து போன உறவாக இருக்கலாம் எப்படிப் பார்க்கப் போகின்றோம் இந்த உறவுகளை.

முன்னர் எல்லாம் ஒரு காலத்தில் உல்லாசப் பிரயணம் போவது என்றால் மனதில் மகிழ்ச்சிப் பிரவாகம் ஊற்றெடுத்துப் பாயும். அது அந்தக் காலம். மகிழ்ச்சியான யுத்தமற்ற ஆயுதமற்ற பூமி தந்த மகிழ்ச்சியான நாட்கள் நெஞ்சை விட்டு அகலாதவை. தாங்க முடியாத மகிழ்ச்சியில் திளைத்துப் போய்விடுவோம் உல்லாசப் பயணம் போவதென்றால் அதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே நாம் அதற்கான பட்டியல் தயாரிக்கும் வேலை ஆரம்பமாகிவிடும். கூடிக் கும்மாளம் அடிக்கப் போகின்றோமே என்பதை நினைத்து சிலிர்த்துப் போவோம். அப்படி ஒரு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி.

தமிழர்கள் நாங்கள் எல்லாம் நம் மண்ணில் எந்தக் குறைகளும் இன்றி வாழ்ந்தவர்கள் தான். உயர் பதவிகள் உல்லாச வாழ்க்கை வாழ ஆடம்பர வீடுகள். இலங்கை முழுவதும் பரந்து வாழ்ந்த நாம் எத்தவொரு குறையும் இன்றியே வாழ்ந்தோம். வாழ்வதில் என்ன குறை இருந்தது நமக்கு. இதனால்தான் கீரிமலை தொடக்கம் சிகிரியா வரை நாம் கால்பதித்து நடந்த விடுமுறைக் காலங்கள் இன்னும் நெஞ்சில் பதிந்திருக்கின்றது.

மாம்பழமரம் முதல் பலா மரம் வரை இனித்துச் சுவைத்த சுவையை எப்படி செல்வது. இருந்த, படித்த பள்ளிக்கூடங்களை நினைக்கும் போது



சிலிர்க்கிறது. பள்ளக்கூட மணிச்சத்தம் இன்னமும் காதில் கேட்கிறது.

இப்படி எல்லாம் சந்தோச வாழ்வு வாழ்ந்த நமக்கு என்ன கண் பட்டதோ ஏன் இந்த சந்தோசங்களில் எல்லாம் ஒரு பெரும் கரும் புள்ளி விழுந்ததோ? நெஞ்சை வலி தாக்கும் போது வருடிவிட முடியாதபடி வலி இருக்கின்றது.

இந்த நேரத்தில் தான் நாம் நம் மண் நோக்கிப் பயணிக்கின்றோம். பல்வலி வரும் போது வலிக்கும் பல்லை நாக்கால் தடவினால் இன்னும் வலிக்கும் என்று தெரிந்தும் நாக்கால் வருடுவதை நிறுத்தமாட்டோம். அதே போல் மனதில் வலிக்கும் பகுதிகளை என்றோ சிந்திய கண்ணீரை, யார் மீதோ இருந்த வெறுப்பை, புறக்கணிப்பை பத்திரமாக வைத்து அவ்வப்போது எண்ணத்தால் தொட்டுப் பார்த்து ஸ்... வலிக்கிறதே என்று சொல்வதில் ஒரு நெஞ்சைச் சுடும் சுகம் நமக்கு.

மனதினுள் இருக்கும் குப்பைகளை நீக்க ஒரு யப்பானிய பராம்பரிய முறையை அங்கே கடைப்பிடிக்கின்றார்கள். ‘சுமோ’ என்று அந்த முறைக்குப் பெயர். Shut up and Move on என்பது தான் அந்த முறையின் விரிவாக்கம் மனசுக்குள் மண்டிக்கிடக்கும் காடுகளை அழிக்க ஒரே வழி அவற்றை எப்படியே தள்ளி, யாரிடமும் ஏன் நமக்குள்ளேயே கூட அதைப் பற்றிப் பேசாமல் புலம்பாமல் அடுத்த வேலையைப் பார்க்கும் பயிற்சி தான் இது.

எங்கே செய்யலாமா? செய்வோமா? மனசுக் குள்ளே என்ன கசப்பு இருக்கிறது ‘20 ஆண்டுகளுக்கு முன்னாலே என்னை பக்கத்து விட்டுக்காரன் மதிக்கவில்லை’ “என்னுடைய வேலியை மாமா 10 அடி தள்ளி அடைத்தார்” “முதலியார் குடும்பம் என்மகனுக்கு மகளைக் கட்டிக் கொடுக்க மறுத்தது” இப்படி அன்றைக்கு நடந்ததை எல்லாம் மனதில் அடைத்து வைத்துக் கொண்டுதான், நம் பணத்தை தள்ளி விடு இன்றைக்கு போய் ஒரு முடிவு காணுகின்றேன் என்ற வெறியோடு புறப்படுவதால் யாருக்கு என்ன லாபம்? இன்னமும் குத்திக் கிள்றி குதறி அடிக்க போகின்றோமா?

Fridge இலிருந்தும் பழைய Hand Bag இல் இருந்தும் பழையவைற்றை நாம் தூக்கி எறிவது இல்லையா? அதுமாதிரி நாமும் ஏன் மனதில் இருக்கும் குப்பைகளை தூக்கி எறிந்துவிட்டு போகக்கூடாது, மனசு லேசாகி விடாதா?

வயதான ஒரு ஜென் குருவும் அவருடன் ஒரு இளம் துறவியும் பயணம் போனார்கள். பாதிப் பயணத்தில் ஒரு இடத்தில் நிறையச் சேறு நீளமான வெள்ளை கவுண் அணிந்த அழகான பெண் ஒருத்தி சேற்றில் நடந்தால் ஆடை அழுக்காகிவிடுமோ என்று தயங்கி, நிற்க முதிய துறவி சற்றும் எதிர்பார்க்காமல் அந்தப் பெண்ணை தூக்கி அவள் உடலில் கறை இல்லாமல் மறுபக்கம் இறக்கிவிட்டாராம் இதைக் கண்டு இளம் துறவி கொதித்து விட்டான். ஒரு பெண்ணை தொட்டு தூக்கி இந்தச் சாமியார் நம்மடத்தின் மகிமையை கெடுத்துவிட்டாரே என்றான்.

பல நாட்கள் பயணம் செய்து மடம் வந்து சேர்ந்ததும் வழியில் நடந்ததை அங்கே இருந்த மற்றைய துறவிகளிடம் சொல்லி முதிய துறவியை திட்டித்தீர்த்தான்.

முதிய துறவியோ எதற்கும் கவலைப்படாமல் சொன்னார் “நான் அந்த பெண்ணை அங்கே இறக்கிவிட்டேனே நீ இன்னுமா சுமந்து கொண்டிருக்கிறாய்” என்று. எத்தகைய உணர்வு. எத்தனை பணிவு. எத்துணை அடக்கம்.

யாருக்கு வரும் இந்த அறிவு. இதுதான் ஆக்கபூர்வமான சிந்தனை. ஆத்திரத்தில் துறவி இந்த இளைய துறவியை அடிக்கவில்லை ஆத்திரப்படவில்லை. நாமும் அந்த இளம் துறவி போல்தான். எங்கங்கே விட்டுவிட்டு வரவேண்டிய பல விஷயங்களை வாழ்க்கை முழுக்கச் சுமந்து கொண்டு உழன்று கொண்டிருக்கின்றோம். செத்தாலும் மறக்காத கோபம் எல்லாம் மனசு நிறைய மண்டிக்கிடக்கிறதே. ஏமாற்றங்கள், வேதனைகளை முடிச்சுப் போட்டு கட்டி முட்டையாக வைத்தவையெல்லாம் ஊரில்போய் அவிழ்க்கப்படலாம்.


நம் வாழ்க்கையில் இங்கே இந்த நாட்டிலே எத்தனையோ வழிகளில் முன்னேற ஆயிரம் வாசல்கள் இருக்கின்றது. ஆனால் நம் உறவுகள் நாளைக்கு நம் மண்ணிலே நிலைக்கப் போகின்றார்களோ என்பது கேள்விக்குறி. இன்னமும் வடிந்த கண்ணீர் வற்றிவிடவில்லை. எம் உடன் பிறப்புகளாய் இல்லாவிட்டாலும் மனித நேயத்தோடு சிந்திப்போம் அவர்களும் ஏதோ ஒரு வகையில் உறவுகள் தான்.

இவ்வளவு பணம் கொடுத்து டிக்கட் வாங்கிப் போகின்றோமே அங்கே இருக்கும் உறவில் ஒரு கீறல் கூட நம்கையில் பட்டுவிடக்கூடாது. நம் வார்த்தைகளால் அவர் இதயங்கள் நெந்து விடக்கூடாது.

அன்றைக்கு நடந்த எல்லைச் சண்டை, காணிச் சண்டை, சொத்துச் சண்டை, உறவுச் சண்டையெல்லாம் இங்கேயே மறந்து முட்டைகட்டி வைத்து விட்டு, கட்டிக் அணைத்து கண்ணீர் துடைத்து, உறவுகளை உறவாடி மகிழ்வித்து, உணவு அருந்தி, நாம் அங்கே இருக்கும் நாட்களிலாவது அவர்களை மகிழ்ச்சியோடு வைத்திருந்து விட்டு நாடு திரும்புவதோடு, நல்லதையே நினைப்போம். நல்லதையே செய்வோம்.

mahesan.thiru@thaiveedu.com

■ ■ ■



## வாகனப் பராமரிப்பு

# Transmission பாவனை



அதீசன் சர்வானந்தன்


### clutch (Manual Transmission) சறுக்க ஆரம்பித்து விட்டால் என்ன செய்யவேண்டும்?

clutch குறைவான மைல்கள் தான் இயக்கப் பட்டுள்ளதா (40,000 மைல் / 65,000 km அல்லது அதற்கு குறைவானது) என்பதை பொறுத்த விடயம் இது. Clutch, இயந்திரத்தின் பகுதியில் சரியாக இணைக்கப்படாமல் இருந்தாலோ அல்லது அதில் எண்ணெய் அழுக்குகள் அதிகமாக படிந்திருந்தாலோ சறுக்கல் ஏற்ப டும். உங்கள் clutch அதிக எண்ணிக்கை யான மைல்கள் (60,000 / 96,000 km அல்லது அதற்கு மேலானது) இயக்கப்பட்டிருந்தாலும், அதன் பாகங்கள் தேய்ந்து போயிருக்கும். அப்படியானால் புதிதாக Clutch மாற்ற வேண்டும்.

என்ஜினின் கீழ்புற பகுதியை சோதனை செய்யுங்கள் எண்ணெய் கசிந்துள்ளதா என்பதை பாருங்கள். Oil pan அல்லது bell housing மீது எண்ணெய் தென்பட்டால், கீழ்புற பகுதியிலுள்ள பிரதான oil sealல் எண்ணெய் கசிகிறது என்பதை அறிந்து கொள்ளலாம். எண்ணெய் கசியும் வேறு இடங்கள் எவை எனில் என்ஜினின் பின்புறம் இருக்கும் mani fold மற்றும் valve cover gasketகள், அத்துடன் உள் இயக்கத்தை கடத்தும் shaft seal ஆகியன வாகும்.

எதனால் எண்ணெய் கசிந்தொழுகிறது என்பதை தெரிந்து கொள்வதற்கு முன் நீங்கள் clutchஐ மாற்றாதீர்கள். clutchliningகளில் அதிக அளவு எண்ணெய் அழுக்குகள் படிந்திருந்தால். அவற்றை சுத்தம் செய்யமுடியாது என்பதால் நீங்கள் புதிதாக ஒரு clutch diskஐ பொருத்துவதுதான் ஒரேவழி. அப்போது தான் clutch சரியாக இயங்கும். எண்ணெய் கசியவில்லை என்றால் clutch இணைக்கப்பட்ட பகுதியை சோதனை செய்யுங்கள் அனேக கார்களில் clutch மிக சரியாக இயங்குவதற்கு ஒரு cable இணைப்புடன் கூடிய தானே இயங்கும் செயல் நுட்பம் வடிவமைக்கப்பட்டிருக்கும். அந்த cable tight ஆக இருப்பதை விட loose ஆக இருக்கும் படிதான் பொருத்தப்பட்டிருக்கும் தவறான இயக்கத்தால் அது tight ஆகிவிட்டால் clutchன் இணைப்பு பகுதியில் கோளாறு ஏற்பட்டு விடும். Hydraulic இணைப்பு முறைகள் உள்ள வாகனங்களிலும் இதே மாதிரி ஏற்படும். Clutchஐ யாராவது தவறாக இயக்கினால் இந்த இணைப்பு பகுதி மோசமாகி சறுக்கல் ஏற்படும்.

Facingகள் தேய்ந்துவிட்டாலோ அல்லது Pressure plateல் spring tension போய் விட்டாலோ சறுக்கல் உண்டாகும். Clutch தவறாகவோ அல்லது அதிக எண்ணிக்கையிலான மைல்கள் இயக்கப்பட்டிருந்தாலோ தான் pressure plate சேதமடைய நேரிடலாம். நாட்பட்ட இயக்கம் clutch diskன் facingகளை தேய்த்து போக வைக்கும். அதனால் அவை fly wheelன் மீது சரியான அழுத்தத்தை தரமுடியாது. இதற்கு clutch diskஐ மாற்றவேண்டும்.

Clutch மற்றும் fly wheelஐ பரிசோதிக்கும் போது pressure plate சேதமடைந்துள்ளதா என்பதையும் கவனிக்கவேண்டும். Fly wheelன் friction surface எப்போதும் நன்றாக இருக்க வேண்டும். அது flat ஆகவும், நேர்த்தியாகவும், சுத்தமாகவும் மற்றும் உடையாமலும் இருப்பது அவசியம் இல்லையென்றால் fly wheelஐ reface செய்யவேண்டும். Fly wheel உஷ்ணத்தால் நிறம் மாறிப்போயிருந்தாலோ, அதில் ஏதாவது பள்ளங்கள் ஏற்பட்டிருந்தாலோ, அல்ல அது சேதமடைந்திருந்தாலோ அதை resurface செய்யவோ அல்லது புதிதாக மாற்றவோ செய்யவேண்டும்.

### எத்தனை தடவைகள் automatic transmission fluidஐ மாற்ற வேண்டும்?

அது அவசியமில்லை என்று தயாரிப்பாளரின் குறிப்பு புத்தகங்கள் குறிப்பிடுகின்றன. அதனால் தான் என்னவோ, transmission கடைகள் automatic transmissionகளை அதிக அளவில் விற்று லாபம் சம்பாதிக்கின்றன. ஆயினும் உங்கள் பாதுகாப்பிற்கு ஒவ்வொரு 30,000 மைல்(48,000 km) களுக்கு ஒருமுறை fluid மற்றும் filterஐ மாற்றுவது சிறந்த தீர்வு. மேலும் உங்களுடைய வாகனம் புதியது மற்றும் அதில் Dexron III ATF நிரப்பப்பட்டுள்ளது என்றால் அது 100,000 மைல் (160,000 km)கள் வரை நன்றாக ஓடும் என்று நிச்சயமாக நம்பலாம்.

### Why ATF (தானே இயக்கத்தை கடத்தும் கருவி) தேய்ந்து போகிறது?

உராய்வினால் தானே இயக்கத்தை கடத்தும் கருவியின் உட்பக்கம் அதிக அளவு உஷ்ணமடைகிறது. Torque converterன் உள்ளே சுழலும் fluid உண்டு பண்ணும் உராய்வு (Fricition), Clutch plateகள் வேலை செய்யும் போது உருவாகும் உராய்வு மற்றும் gearகள் மற்றும் bearingகள் இயங்கும் போது ஏற்படும்



உராய்வு ஆகியன ATFஐ விரைவில் உஷ்ணப்படுத்திவிடுகின்றன. சாதாரண வாகன ஓட்டத்திலேயே fluid வெப்பநிலை 175 டிகிரிக்கு உயர்ந்து விடுகிறது. வழக்கமாக இந்த உஷ்ண நிலையில் தான் அனேகமான fluidகள் வேலை செய்யுமாறு உருவாக்கப்பட்டுள்ளன. இதனால் ATF 100,000 மைல்கள் வரை நிச்சயமாக நீடித்து உழைக்கும். அனால் fluid வெப்ப நிலை மிக அதிகமாக உயர்ந்து விட்டால் fluidஇன் ஆயுள் ஊசல் ஆடத் தொடங்கி விடும். சாதாரண வாகன ஓட்டத்திலேயே fluid வெப்ப நிலைகள் பாதுகாப்பு அளவுகளையும் தாண்டி அதிகரிக்கலாம். அதனால் கோளாறு உருவாக நேரிடலாம். மிக அதிகமான வெப்ப நிலைகளில் இயங்கும் போது ATF, பிராண வாயுவினால் எரியூட்டப்பட்டு (Oxidizes) பழுப்பு நிறமாக மாறி, ஒரு கருகிய வாடையை வெளியேற்றும். உஷ்ணம் fluidஇன் வழவழப்பான பசைத் தன்மைகளையும் மற்றும் உராய்தல் இயல்புகளையும் அழித்துவிடும் போது valve body போன்ற உட்புற பகுதிகளின் மீது Varnish படிய ஆரம்பித்து விடும். அது transmissionஇன் இயக்கத்தை தடைசெய்யும். வெப்பநிலை 250 Degrees Fஐ விட அதிகரித்தால் rubber sealகள் கடினமாகிவிடும். அதனால் கசிவுகள் மற்றும் அழுத்தக்குறைவுகள் ஆகியன ஏற்படும். மேலும் transmission சறுக்க ஆரம்பித்து, உஷ்ணம் மிக அதிக அளவு உயர்ந்து விடும். இதன் காரணமாக clutchகள் எரிந்துவிடும் மற்றும் transmission வேலையை நிறுத்திவிடும். இதனால் ஏற்படும் சேதத்தை. பாகங்களை பிரித்தெடுத்து முழுதும் பழுதுபார்ப்பதன் மூலமே சரி செய்ய முடியும். ஒரு பழைய model front wheel drive car அல்லது ஒரு mini vanஐ பழுது பார்த்து ஓட வைப்பதற்கு சமம் தான் இதுவும்.

175 degreeக்கும் மேலாக அதிகரிக்கும் ஒவ்வொரு 20 degree வெப்ப நிலையும் fluidன் ஆயுளை பாதியாக ஆக்கிவிடும் என்பது தான் பொதுவான நியதி. உதாரணமாக 195 degrees வெப்ப நிலையின் போது fluidன் ஆயுள் 50,000 மைல்களுக்கு குறைக்கப்பட்டுவிடும் பல transmissionகள் வழக்கமாக 220 degrees என்ற நிலையில் தான் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. அதனால் fluid சுமார் 25,000 மைல் (40,000 km) கள் மட்டுமே இயங்க முடியும் 240 degrees Fல் fluid 10,000 மைல் (16,000 km)களுக்கு மேல் இயங்காது. இன்னும் 20 degrees கூடிவிட்டால், fluidன் ஆயுள் 5,000 மைல்(8,000 km)களுக்கு குறைந்துவிடும். 295 அல்லது 300 degrees F வரும் போது 1000 முதல் 1500 மைல்(1,600 - 2,400km)கள் வரை தான் இயங்கும். அந்த நிலையில் transmission ஒருவேளை எரிந்தாலும் எரிந்து விடும்.

அதிக அளவு fluidஐ விற்பனை செய்வதற்கு ATF உற்பத்தியாளர்கள் செய்யும் வியாபார தந்திரம் இது என்று ஒருவேளை நீங்கள் நினைக்கலாம். அப்படியானால் அனைத்து transmission கோளாறுகளில் 90 சதவீதம் அதிக அளவு உஷ்ணத்தினால் மட்டுமே ஏற்படுகின்றன என்று Automatic Transmission REbuilders Association வெளியிட்ட அறிக்கையை சிந்தித்துப்பாருங்கள். எனவே தேய்ந்து போன fluidக்கு பதிலாக புதியதை மாற்றுவது தான் சிறந்த தீர்வு.

அனேகமான வாகனங்களில், radiatorஇன் அடிப்பகுதியில் அல்லது அதன் மூலையில் உள்ள tankல் ஒரு சிறிய heat exchanger பொருத்தப்பட்டிருக்கும். அது தான் automatic transmission fluidஐ குளிர்ச்சி அடைய வைக்கும். ஒரு குறுகிய pipe வழியேனுடும் மிக சூடான ATF இவ்வாறு பிரத்தியேகமான முறையில் குளிரவைக்கப்படுகிறது. ஏனென்றால் radiator 180 முதல் 220 degrees வெப்ப நிலையில் இயங்கி கொண்டிருக்கும்.

சாதாரண Oil cooler கருவி வெப்ப நிலையை மிகக் குறைந்த அளவில் மட்டுமே குறைக்க உதவுகிறது என்று பரிசோதனை முடிவுகள் சுட்டிக் காட்டியுள்ளன. 300 degrees வெப்ப நிலையில் உள்ள ATF, radiator coolerக்குள் நுழைந்து வெளியேறும் போது அதன் வெப்ப நிலை 240 முதல் 270 degrees Fஆக இருக்கும். வெப்ப நிலை 10 முதல் 20 சதவீதம் தான் குறைக்கப்படும். Fluid ஆயுளுக்கு இது மிக உகந்ததாக இல்லை. ஒரு trailerஐ வாகனத்தில் இழுத்துச் செல்லுதல், மலைப் பகுதியில் வாகனம் ஓட்டுதல், உஷ்ணமான கால நிலையில் வெகு வேகமாக வாகனம் ஓட்டுதல், போக்குவரத்து நெரிசலில் அடிக்கடி வாகனத்தை நிறுத்தி நின்று நின்று போகுதல், சேற்றில் அல்லது பனியில் tire (ரயர்) புதைந்து விட்டால் வாகனத்தை பின்னால் செலுத்துவதற்கு அதிவேகமாக்குதல் போன்ற காரணங்களினால் ATFஇன் குளிர்ச்சயடையும் திறன் குறைந்துவிடுகிறது. மேலும் குறைபாடுள்ள cooling fan, fan clutch, thermostat அல்லது Water pump மற்றும் radiatorஇல் ஏற்பட்டுள்ள அடைப்பு ஆகியவற்றாலும் ATF அதிக அளவில் உஷ்ண மடையும். எற்கனவே transmission coolerகளுக்கு துணை cooler உபகரணம் மிக அவசியம்.

### Auxiliary Cooling (துணை குளிர்ச்சியூட்டும் உபகரணம்):

ஒரு Auxiliary transmission fluid coolerஐ பொருத்துவதினால், fluid இயங்குவதற்கான சாதகமான வெப்ப நிலைகளை மிக சுலபமாக உருவாக்க முடியும். Plate மற்றும் fin ரக cooler, tube மற்றும் fin வடிவமைப்பை விட அதிக திறன் வாய்ந்தது. ஏற்கனவே இருக்கும் coolerக்கு துணையாக இரண்டில் ஏதேனுமொன்ற பொருத்துவதில் மூலம் fluid வெப்ப நிலைகளை 80 முதல் 140 degrees வரை குறைக்க முடியும். சாதாரணமாக குளிர்ச்சியடைய வைக்கும் இதன் திறன் 35 முதல் 50 சதவீதம் என்ற அளவில் இருக்கும்.

### ATF fluid வகைகள்:

உங்கள் transmissionல் எந்த வகை automatic transmission fluidஐ நீங்கள் பயன்படுத்த வேண்டும்? இதற்கான பதிலை உங்கள் தயாரிப்பாளரின் குறிப்பு புத்தகத்திலோ அல்லது transmission dipstickல் அச்சடிக்கப்பட்ட எழுத்துக்களையோ பாருங்கள்.

**குறிப்பு:** மின்னனு உபகரணத்தால் கட்டுப்படுத்தப்படும் transmissionகள் உள்ள சில நவீன வாகனங்களுக்கு Dexron II அல்லது Dexron III fluid தேவைப்படும். பழைய வாகனங்களுக்கும் Dexron IIக்கு பதிலாக Dexron III fluid மிக உகந்தது என்று GM சிபாரிசு செய்கிறது.

**எச்சரிக்கை:** Fluidஐ ஜாக்கிரதையாக பயன்படுத்த வேண்டும். தவறான வகை fluid என்றால் transmission shiftகள் சரியாக நடைபெறாது. Dexron II தேவை என்றால் அதற்கு பதிலாக Type F fluidஐ பயன்படுத்தினால் Transmission shift மிக கடினமாக ஆகிவிடும். அது போன்று Type F fluid தேவை என்றால் அதற்கு பதிலாக Dexron IIஐ பயன்படுத்தினால் கனத்த பாரத்தை ஏற்றிச் செல்லும் போது transmission சறுக்கலாகி clutch விரைவில் தேய்ந்துவிடும்.

**எச்சரிக்கை:** Transmission fluidஐ மாற்றும்போது அதிக அளவு நிரப்பாதீர்கள். மிதமிஞ்சிய fluid நுரைக்க ஆரம்பித்து விடும். அதன் காரணமாக ஒழுங்கில்லாத shifting oil தட்டுப்பாடு மற்றும் transmission சேதம் ஆகியன ஏற்படும். மேலும் transmission sealகள் வழியே ATF கசிய ஆரம்பித்து விடும். முதலில் அரை quart ஊற்றுங்கள் fluid சூடாகி இருக்கும் போது dip stickஇன் அளவுகோலை பார்க்க வேண்டும் என்பதால் என்ஜினை வெறுமனே ஓடவிடுங்கள். பிறகு வாகனத்தை சிறிது தூரம் ஓட்டி fluid அளவை மீண்டும் சோதனை செய்யுங்கள். பின்னர் dip stick முழு அளவையும் காட்டுவது வரை fluid ஐ ஊற்றி நிரப்புங்கள்.

atheesan.s@thaiveedu.com

■ ■ ■

# வலுவளர் நிகழ்வு

கனடிய தமிழர் வலுவளர் அமைப்பானது 1997ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2002ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட ஓர் இலாப நோக்க மற்ற அமைப்பாகும். 7 உறுப்பினர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இவ் அமைப்பானது இன்று உடற்க்குறைபாடு உடையவர்கள், உள நலம் பாதிக்கப்பட்டவர்கள், புலன் சேதமடைந்தவர்கள் என பல்வேறுபட்ட வலுவளர் சவால் களை எதிர்கொள்பவர்களையும், அவர்களது குடும்பத்தினர்களையும், நலன் விரும்பிகளையும், உள்ளடக்கிய நூற்றுக்கு மேற்ப்பட்ட அங்கத்தவர்களுடன் திகழ்கின்றது.

கனடியத் தமிழ் மாற்றுத்திறனாளிகளுக்கு என முதல் முதல் ஆரம்பிக்கப்பட்ட இவ் அமைப்பின் நோக்கம் என்ன? தேவை என்ன? சேவை என்ன? அல்லது இப்படிப்பட்ட ஓர் அமைப்பு கனடாவில் அவசியம்தானா? என பல் வேறுபட்ட கேள்விகளை 'தாய்வீடு' வாசகர்களாகிய உங்கள் மனம் அலசுவதை நாமும் அறிவோம்.

இக் கேள்விகளுக்கு மட்டுமன்றி பல சுவை யான தரமான ஆக்கங்களுடன் வலுவளர் அமைப்பின் அங்கத்தவர்களில் பலர் தாய்வீட்டு வாசல் கதவை தட்டுவார்கள் என்ற நம்பிக்கையுடன், இன்றய இதழில் ஜுன் மாதம் 19ம் திகதி நடந்த கலை நிகழ்வு பற்றிய சில குறிப்புகளை பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

இக்கலை நிகழ்வை வலுவளர் அமைப்பு நடாத்துவதன் முக்கிய நோக்கங்கள் இரண்டு. அவையாவன:

- காலம் காலமாக ஊனத்தை, ஊனமாக்கிய எமது சமூகத்திற்கு விளிப்புணர்வை ஏற்படுத்ததுதல்.
- மாற்றுத்திறனாளிகளின் திறமைகளை வளர்த்து அவர்களையும் சமூகத்தின் மதிப்பிற்குரிய அங்கத்தவர்களாக மாற்றுதல்.

இக்கலை நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளையும் அவர்களது குடும்பத்தினரையும் நண்பர்களையும் உள்ளடக்கிய நூற்றுக்கு மேற்பட்ட பங்காளர்கள் பங்கேற்றனர். இதற்கு Canadian Hearing Societyஇல் இருந்து Susan Mathews என்பவர் சிறப்புவிருந்தினராக வருகை தந்திருந்தார்.

மேலும், வில்லுப் பாட்டு, விவாத மேடை, நாடகம், நடனம் என பல்வேறுபட்ட நிகழ்வுகளில் பெரும்பாலானவற்றை திருமதி விஜீதா தர்மலிங்கம் தொகுத்தளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

- நளினி கோடீஸ்வரன்

> **“ இழந்துவிட்டோம் என்று இருந்துவிடாமல் எழுந்துவிட்டோம் எனும் அறைகூவல் விடுத்த கலைவிழா. ”**

குறைபாடுகள்தான் நிறைவைத்தேடி ஓடிக் கொண்டிருக்கும். ஆனால் இங்கே இவர்கள் நிறைவாகவே இந்த விழைவை நிறைவு செய்துகொண்டதுதான் மிகவும் போற்றுதற்கும், பெருமைக்கும் உரிய விடயமாகவே பார்க்கவேண்டும்.

எத்தனை குறைகள், எத்தனை இயலாமைகள், எத்தனை மனிதாபிகள் என அத்தனை பேரும் அந்த மேடையை அழகாக அலங்கரித்து தங்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்திய வேகம், விவேகம், மென்மை ஆகிய நிறைவுகள்தான் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கைக்கு நிறைவைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன எனும் உண்மைமை வெளி உலகிற்கு எடுத்துக் கூறப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அழகான சொல்லாடல், அவை அடக்கம், ஆற்றல் திறமை, ஆக்கத்திறமை, நடிப்பத் தன்மை, நடன நளினங்கள், பாடல் இனிமைகள் அனைத்தும் நிறைந்துள்ள குடும்ப அமைப்புத்தான் இந்த வலு வளர் அமைப்பு.

இழந்துவிட்டோம் என்று வெறுமனே இருந்து விடாமல் எழுந்துவிட்டோம் எனும் அறை கூவலை மற்றையோருக்கு எடுத்துரைக்கும் விழா இந்த வருடாந்தக் கலை விழா.

இந்த அமைப்பினர் விழாவோடு நின்றுவிடாமல், வருடம் ஒரு தடவை நடை பவனியும் செய்து, ஒன்று கூடல் நிகழ்வும் நடாத்திக் கொண்டு இந்த வலுவளர் சவால்களை எதிர்கொள்ளும் எங்கள் உறவுகளை ஒன்று கூட்டி, ஒன்றுபட்டு அவர்களின் மன ஆற்றலுக்கும், இதயக்களிப்பிற்கும் ஒழுங்கு செய்து தங்களை நிலை நிறுத்திக்கொண்டு மற்றவர் களையும் நிறைவு கொள்ள வைக்கின்றனர்.

மற்றவர்களை சிந்திக்க வைப்பதாக சிறுவர் களின் உரையாடல் நாடகம் அமைந்திருந்தது. இந்தப் பசுமை நிறைந்த பூமிப்பந்தில் நிறை வாய் நிறைந்திருக்கும் உயிரினங்கள் அத்தனையும் வாழப்பிறந்த அரிய பொக்கிசங்கள். அத்தனை உயிரினங்களும் வாழ்ந்தே தங்கள் வாழ்நாட்களை முடிக்க நாங்கள் அவைகளுக்கு உறுதுணையாக இருக்கவேண்டிய அவசியத்தையும், பொறுப்பினையும் எடுத்துச் சொன்ன பாங்கு போற்றுதற்குரியது.

யதார்த்தம் எனும் நாடகம் இன்றைய இளையோரின் மனதில் மிகப்பெரிய பொறுப்பினை விதைத்துச் சென்றுள்ளது. மனிதாபிமானத்தை வாழவைக்க வேண்டிய பாங்கும், பொறுப்பும் ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்கவேண்டும் எனும் அரிய செயலுக்குரிய வழியைச் சொல்லித்தந்துள்ளது.

விவாத மேடை ஒன்றும் அங்கே அரங்கேறியது. இன்றைய சினிமா உலகில் வலு வளர் சவால்களை எதிர்நோக்கும் மானிடரை இழிவு செய்கின்றதா, ஏற்றி விடுகின்றதா எனும் தலைப்பில் நடந்த விவாத மேடையில் பக்கு கொண்ட இரு அணியினரும் மிகவும் திறமையாக வாதாடினார்கள். நடுவர் அவர்கள் தனது தீர்ப்பை தீர்மானித்துக்கொள்ள முடியாமல் அங்கு பார்வையாளர்கள் மத்தியில் கை தட்டல் மூலம் ஆதரவு எடுத்து தீர்ப்பினை லாவகமாக கையாண்டு விவாத மேடையை முடிவுக்கு கொண்டு வந்தது மிகவும் சாதுரியமான செயலாகவே கருதவேண்டும்.


மொத்தத்தில் நிறைவாய் நடைபெற்ற விழாவில் நானும் பங்குகொண்டேன் எனும் மனத் திருப்தியுடன் இந்த இதழை உங்கள் பார்வைக்காக தந்துள்ளேன்.

இனி வரும் காலங்களில் இவர்கள் நடாத்தும் எந்த செயல்பாடானாலும் உங்கள் பாதங்களையும் அவர்கள் பாதையில் நடாத்தி, உங்கள் கைகள் அவர்களை நோக்கி நீள்கின்ற நல்ல நாட்களாக அமைய வேண்டி கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கின்றோம்.

- யாழ் ரவி

nalini.koodeswaran@thaiveedu.com

■ ■ ■



# தமிழ் விக்கிப்பீடியா:
# தமிழால் இணைவோம் அறிவால் வெல்வோம்



இ.நற்கீரன்

ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு அறிவு ஓர் அடிப்படைக் கருவி ஆகும். அச் சமூகத்தின் மொழியில் தகவல்களும் அறிவும் பகிரப்படும் பொழுது அம் மொழி சார்ந்த சமூகம் வலுப் பெறுகிறது. தமிழ் விக்கிப்பீடியா (www.ta.wikipedia.org) உலகளாவிய தமிழ்ச் சமூகத்துக்கு தேவையான அறிவை கூட்டாக உருவாக்கிப் பகிர்வதற்கான செயற்திட்டம் ஆகும்.

தமிழ் விக்கிப்பீடியா ஒரு கட்டற்ற கலைக்களஞ்சியம். கலைக்களஞ்சியம் என்பது பல் துறைத் தகவல்களின், அறிவின் தொகுப்பாகும். உலக வரலாற்றில் புரட்சிகர முன்னேற்றங்களுக்கு கலைக்களஞ்சியங்கள் உதவி உள்ளன. முதலாவது விரிவான தற்காலக் கலைக்களஞ்சியம் பிரான்சிய மொழியில் 1751ம் ஆண்டு வெளிவந்த என்சைக்கிளோப்பீடியா ஆகும். பல்துறைத் தகவல்களையும், அறிவொளிக் காலச் சிந்தனைகளையும் உள்ளடக்கி இக் கலைக்களஞ்சியம் வெளிவந்தது. இதுவே முடியாட்சிக்கு எதிராகவும், சமவுரிமை - சகோதரத்துவம் - விடுதலை என்ற கோட்பாட்டுக்குச் சார்பாகவும் நிகழ்ந்த பிரான்சிய மக்கள் புரட்சிக்கு (1789-1799) வித்திட்ட அறிவுப் பின்புலம் ஆகும். [2]

பிரான்சிய என்சைக்ளோப்பீடியா பிரித்தானியாவில் என்சைக்ளோப்பீடியா ஓப் பிரித்தானிக்கா வெளிவர உந்துதலாக அமைந்தது. இது முதன் முதலில் 1768இல் வெளிவந்தது. 18 தொகுதிகளைக் கொண்ட விரிவான வெளியீடு 1797இல் நிகழ்ந்தது. 18, 19ம் நூற்றாண்டுகளில் பிரித்தானியாவில் நிகழ்ந்த தொழிற்துறைப் புரட்சிக்கு பிரித்தானிக்கா கலைக்களஞ்சியமும், அதற்கு முன்னர் வெளிவந்த சைக்ளோப்பீடியா (Cyclopaedia) ஆகிய இரண்டும் பெரிதும் உதவின[3]. இவற்றின் மூலம் அறிவு இலகுவாக விரைவாகப் பகிரப் பட்டது. யேர்மன் கலைக்களஞ்சியம் (Oekonomische Encyklopädie - 1773). உருசிய கலைக்களஞ்சியம் (Brockhaus and Efron Encyclopedic Dictionary - 1890) ஆகிய கலைக்களஞ்சியங்கள் அந்த அந்த நாடுகளின் எழுச்சிக்கு உதவின.

தமிழ் மொழி நீண்ட இலக்கிய வரலாற்றையும், தொகையான இலக்கியப் படைப்புக்களையும் கொண்டது. எனினும் அறிவியல் தொழில்நுட்ப விடயங்களைத் தொகுத்த நூல்கள் மிகச் சிலவே. தொல்காப்பியம், திருக்குறள், பெரிய புராணம் போன்ற நூல்களில் பலவகைச் செய்திகள் காணப்படினும் அவை அறிவியல் தொழில்நுட்பம் பற்றி விடய நோக்கில் விளக்கவில்லை. தமிழில் வெளிவந்த முதல் கலைக்களஞ்சியங்கள் இலக்கிய கலைக்களஞ்சியங்களே. யாழ்ப்பாணத்தில் 1902ம் ஆண்டு வெளியிடப்பட்ட அபிதானகோசம் கலைக்களஞ்சிய வடிவில் வெளிவந்த முதல் தமிழ்ப் படைப்பு ஆகும். அதை அடுத்து ஆ. சிங்காரவேலு அவர்களின் முயற்சியால் அபிதான சிந்தாமணி என்ற கலைக்களஞ்சியம் 1910ம் ஆண்டு வெளிவந்தது. இதுவும் ஒரு இலக்கிய கலைக்களஞ்சியம் ஆகும்.

தமிழின் முதல் விரிவான பல்துறைக் கலைக்களஞ்சியம் 1954 - 1968ம் ஆண்டுக் காலப் பகுதில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் வெளியிடப்பட்ட தமிழ்க் கலைக்களஞ்சியம் ஆகும். பல நூறு அறிஞர்கள், பேராசிரியர்கள், பதிப்பாசிரியர்கள் பல குழுக்களாக பணி செய்து இது உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தஞ்சாவூர் பல்கலைக்கழகம் 17 தொகுதிகளைக் கொண்ட அறிவியல் கலைக்களஞ்சியத்தையும், 14 தொகுதிகள் கொண்ட வாழ்வியல் கலைக்களஞ்சியத்தையும் வெளியிட்டது. 2004ம் ஆண்டு விகடன் பதிப்பகம் ஆங்கில பிரித்தானியக் கலைக்களஞ்சியத்தின் சுருங்கிய பதிப்பைத் தமிழில் மொழிபெயர்த்து மூன்று தொகுதிகளாக வெளியிட்டது. இதில் 28,000 கட்டுரைகளும், 2,400 ஒளிப்படங்களும் உள்ளன. தமிழ்க் கலைக்களஞ்சியம் தற்போது அச்சில் இல்லை. மேற்கூறிய எந்த தமிழ்க் களஞ்சியமும் எண்மிய வடிவில் இல்லை.

விக்கிப்பீடியா எண்மிய வடிவில் உள்ள, இணையத்தின் மூலம் பயன்படுத்த வல்ல கட்டற்ற பன்மொழிக் கலைக்களஞ்சியத் திட்டம் ஆகும். விக்கிப்பீடியா பயனர்களால் கூட்டுழைப்பாக ஆக்கிப் பயன்படுத்தப்படுகிறது. 2001ம் ஆண்டு இத்திட்டத்தை சிம்மி வேல்சு, லாரி சங்கர் ஆகிய இரு அமெரிக்கர்கள் தொடங்கினர். இன்று உலகில் அதிகம் பயன்படுத்தப்படும் வலைத்தளங்களில் ஐந்தாம் (மாதாந்தம் 340 மில்லியன் பயனர்கள்) இடத்தில் இது உள்ளது. இத் திட்டத்தில் 270 மொழிகளில் விக்கிப்பீடியாக்களும், அவற்றில் 14 மில்லியனுக்கு மேற்பட்ட கட்டுரைகளும் (சனவரி 2010) உள்ளன. இவற்றோடு விக்சனரி, விக்கி செய்திகள், விக்கி நூல்கள், விக்கி மூலம் போன்றும் மேலும் பல உறவுத் திட்டங்களும் உள்ளன. இத் திட்டங்கள் இலாப நோக்கமற்றவை, அரசியல் சமய வர்க்க சார்பற்றவை.



தமிழ் விக்கிப்பீடியா இத் திட்டத்தின் ஓர் அலகாகும். தமிழ் விக்கிப்பீடியா 2003 நவம்பரில் ஐக்கிய அரபு அமீரகத்தில் கட்டடவியல் கலைஞராகப் பணிபுரியும் ஈழத் தமிழர் மயூரநாதனால் தொடங்கப்பட்டது. இன்று (யூன் 2010) தமிழ் விக்கிப்பீடியாவில் 22,800க்கும் மேற்பட்ட கட்டுரைகள் உள்ளன. 18,700 [4] மேற்பட்ட பதிவு செய்த பயனர்களும், 14 நிர்வாகிகளும் உள்ளனர். தமிழ் விக்கிப்பீடியா ஒவ்வொரு நாளும் 62,977 முறை பாக்கப்படுகிறது[5]. தமிழ் விக்கிப்பீடியாவுக்கு இலங்கை, இந்தியா, அவுத்திரேலியா, மலேசியா, கனடா, யேர்மனி, நோர்வே, பிரித்தானியா, அமெரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் என பல நாடுகளில் இருக்கும் தமிழர்கள் பங்களிக்கிறார்கள்.

மாணவர்கள், ஆசிரியர்கள், ஆராச்சியாளர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், பொது வாசகர்கள் என பலதரப்பட்டோருக்கும் தமிழ் விக்கிப்பீடியா பயன்படுகிறது.

எடுத்துக்காட்டாக: தமிழ்நாட்டில் புதுக்கோட்டை மாவட்டம் மாங்குடி ஊராட்சி ஒன்றிய தமிழக அரசு நடுநிலைப்பள்ளியில் மாணவர்கள் தமிழ் விக்கிப்பீடியாவை பாட வேலைக்குப் பயன் படுத்துகிறார்கள். "தமிழ் விக்கிபீடியா ஸ்டுடண்ஸுக்கு ரொம்ப உபயோகமா இருக்குங்க. பாடப்புத்தகத்துலே நாங்க பாடம் நடத்தி முடிச்சதும் அந்தப் பாடம் சம்பந்தமா அவங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தா விக்கிபீடியாவில் பார்த்து தெரிஞ்சுக்குறாங்க. ஆசிரியர்களோட வேலைப்பளு இதனால குறையுது" என்று தலைமை ஆசிரியர் ஜோதிமணி கூறுகிறார்.[6]

தமிழ் விக்கிப்பீடியாவில் இருந்து பல தகவல்களைப் பெற்றும், தமிழ் விக்கிப்பீடியாவின் நடையை அலசியும் முனை.ரெ.கார்த்திகேசு "தமிழ் மின்னூடகங்களும் அச்சு ஊடகங்களும்: இன்றைய நிலையும் அறைகூவல்களும்" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை எழுதியுள்ளார்.[7]

தமிழ் விக்கிப்பீடியாவின் தமிழ், பண்பாடு, வரலாறு, அறிவியல், தொழில்நுட்பம், கணிதம், புவியியல், சமூகம், நபர்கள் ஆகிய முதன்மைப் பகுப்புகள் உள்ளன. இந்தப் பகுப்புகளுக்குள் மேலும் சில துணைப் பகுப்புகள் என்றும் அமைந்திருக்கின்றன. யாரும் தமக்குத் தெரிந்த விடயத்தை கட்டுரையாக விக்கியில் சேக்கலாம். பிறர் எழுதிய கட்டுரைகளில் விளக்கம் குறைவாக இருந்தால் நாம் புதிய, விரிந்த விளக்கங்களைத் தரலாம். படங்களை, வரைபடங்களை, புள்ளி விவரங்களை இணைக்கலாம். இவ்வாறு கூட்டாக தமிழ் விக்கிப்பீடியா உருவாகின்றது. இதைப் பயன்படுத்த, அல்லது இதற்கு பங்களிக்க உங்களுக்கு சிக்கல்கள் இருந்தால் விக்கிப்பீடியர்களைத் தொடர்பு கொள்ளவும். அவர்கள் இயன்ற வரை உங்களுக்கு உதவுவார்கள்.

*[1] Paul Romer. (2009). A Theory of History with an Application. Fora.tv. http://fora.tv/2009/05/18/Paul_Romer_A_Theory_of_History_with_an_Application*

*[2] Encyclopédie. (2010, January 6). In Wikipedia, The Free Encyclopedia. Retrieved 03:06, January 7, 2010, from http://en.wikipedia.org/w/index.php?title=Encyclop%C3%A9die&oldid=336215549*

*[3] Industrial Revolution. (2010, January 7). In Wikipedia, The Free Encyclopedia. Retrieved 03:08, January 7, 2010, from http://en.wikipedia.org/w/index.php?title=Industrial_Revolution&oldid=336313698*

*[4]http://meta.wikimedia.org/wiki/List_of_Wikipedias*

*[5] http://wikistics.falsikon.de/latest/*

*[6]http://infinityholes.blogspot.com/2009/10/blog-post.html* மாங்குடி மாறிய கதை

*[7]* தமிழ் மின்னூடகங்களும் அச்சு ஊடகங்களும்: இன்றைய நிலையும் அறைகூவல்களும்", பன்னாட்டுத் தமிழ் மொழியியல் மாநாடு, குவால லும்பூர்: மலாயாப் பல்கலைக் கழகம், 23-24 அக்டோபர் 2009.

natkeeran@thaiveedu.com

■ ■ ■

நடந்த உண்மைகளை
இறந்தவர்களாலும் சொல்ல முடியாது
இழப்புகளுக்குள் வாழ்பவர்களாலும் சொல்ல முடியாது
உங்களால் மட்டும்தான் முடியும்!
ஆவணப்படுத்த அழையுங்கள்
CENTRE FOR WAR VICTIMS & HUMAN RIGHTS
போரால் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவம்
416-628-1408 www.cwvhr.org

### பாரிஸ் நகரில்
### கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் மாணவன்

# கலைஞர் ஏ. ரகுநாதன் அவர்களின் ‘பவளவிழா’

ஈழத்தின் மூத்த திரைப்பட - நாடகக் கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்களின் பவளவிழா ஜுலை மாதம் 25ம் திகதி பாரீஸில் நடைபெறுகிறது. உலகத்தமிழ்க் கலையகம் இந்த விழாவினை ஏற்பாடு செய்துள்ளது.

கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் ஒரு சிறந்த மாணவனாக விளங்கிய ஏ.ரகுநாதன் அவர்கள் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் இயக்கிய பல நாடகங்களில் நடித்து பாராட்டுக்கள் பெற்றவர். கலையரசுவின் அடியொற்றி பின்னர் பல இதிகாசநாடகங்களை மேடையேற்றியவர். அவற்றில் ஒன்றான “தேரோட்டி மகன்” இதிகாசநாடகத்தில் முக்கியபாத்திரத்தில் கர்ணனாக அவர் நடிக்க, குழந்தை சண்முகலிங்கம் (அர்ச்சுனன்), பிரான்சிஸ் ஜெனம் (குந்தி), சிவபாலன் (துரியோதனன்), ரி.ராஜேஸ்வரன் (சாத்தகேசி) ஆகிய சிறந்த நடிகர்களோடு என்னையும் கிருஷ்ணன் பாத்திரத்தில் நடிக்க வைத்தவர். நான் நடித்த முதலாவது இதிகாசநாடகம் இதுவேயாகும்.

கலைஞர் ஏ.ரகுநாதன் அவர்கள் கடமையின் எல்லை என்ற திரைப்படத்தின் மூலம் ஈழத்துத் திரைப்படத் துறையில் கால்பதித்து, தொடர்ந்து இலங்கையில் தயாரான தமிழ்ப்படங்களில் தரமானது என்று குறிப்பிட்டுக் கூறக்கூடிய “நிர்மலா” திரைப்படத்தை தயாரித்து அதில் நடித்தவர். “நெஞ்சுக்குநீதி” “புதியகாற்று” திரைப்படங்களிலும் நடித்தவர். ஈழத்தில் முதன் முதலில் தயாரான சினிமாஸ்கோப் திரைப்படமான “தெய்வம்தந்தவீடு” படத்தில் கதாநாயகனாக நாதஸ்வரவித்வானாக நடித்திருந்தார்.



தற்போது பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்துவரும் கலைஞர் ஏ.ரகுநாதன் புலம்பெயர்நாடுகளில் உருவாகும் கலைப் படைப்புகளில் தொடர்ந்தும் உற்சாகமாக பங்களித்து, வளரும் கலைஞர்களுக்கு ஆர்வம் அளிப்பதில் அக்கறையுடன் செயல்பட்டு வருகிறார். நாடு, நாடாகச் சென்று அங்குள்ள நல்ல கலைஞர்களை இனம்கண்டு, அவர்களின் குறுந்திரைப்படங்களில் நடிப்பதோடு அவற்றை மற்றய நாடுகளிலும் அறிமுகம் செய்துவைக்கும் கலைத் தூதுவராக களைப்பின்றி செயல்பட்டுவருபவர். பலநாடுகளில் வாழும் கலைஞர்களையும் இணைத்து தரமான படைப்புக்கள் வரவேண்டுமென்ற கனவுடன் வாழ்பவர். அதற்கான முயற்சியில் தளராமல் ஈடுபட்டுவரும் அவர் இதற்காகவே பல ஐரோப்பியநாடுகளுக்கும், கனடா அவுஸ்திரேலியா, போன்ற நாடுகளுக்கும் பயணம் மேற்கொண்டதை நான் அறிவேன்.

நல்லதை நல்லதென்று தயங்காமல், பாசாங்கின்றி சொல்லி தட்டிக்கொடுத்து வளர்த்துவிடும் அவரது நற்பண்பினால் பயன்பெற்ற ஏராளமான கலைஞர்களில் நானும் ஒருவன் என்ற பெருமிதத்துடன், இம்மாதம் 25ந்திகதி பிரான்ஸ் நாட்டில், பாரிஸ் மாநாகரில் நடக்கவிருக்கும் அவரது பவளவிழா கோலாகலமாக நடக்கவேண்டுமென்று என் சார்பிலும், ‘தாய்வீடு’ பத்திரிகை சார்பிலும் வாழ்த்துவதோடு, இவ்விழாவை ஏற்பாடுசெய்துள்ள உலகத்தமிழ் கலையகத்திற்கு எங்கள் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

- கே.எஸ். பாலச்சந்திரன்


JRS COLLEGE
OUR COMMITMENT IS QUALITY TRAINING

Scarborough Campus
English Class (Business Communication)
Starts on Apr 18th 2010 @ 1.00 PM (Sunday)
Cashier Training
Starts on May 2nd @ 9.00 AM (Sunday)
Food Handler Training


FREE COMPUTER BASIC CLASS
Etobicoke Campus Starts on Mar 27th @ 10:00 AM

Are you unemployed or laid off ?
Please call for more Info.
(416) 292-2455

DIPLOMA PROGRAMS
Office Assistant

Computerized Accounting

Accounting and Payroll Administration

Health Office Administrator (HOA)


CERTIFICATE COURSES
- MS Office
- Business Communication
- Payroll
- QuickBooks
- Accpac
- Bank Teller
- Cahier
- Food handling
- Tax Class
- Simply Accounting

SCARBOROUGH CAMPUS
(Midland & Finch)
PH 16-4168 Finch Ave East
Scarborough, ON M1S 5H6
☎: 416-292-2455

ETOBICOKE CAMPUS
(Kipling & Dundas)
300-5359 Dundas St West
Etobicoke, ON M9B 1B1
☎: 416-207-9975

* Some Courses are not available in Etobicoke

# பொய் சொல்லக்கூடாது பாப்பா!



உதயணன்

ஒரு நாள் பேரப் பிள்ளைகள் வினோவையும் சிநேகாவையும் பார்த்துவிட்டு பஸ்ஸில் வந்து Finch & Birchmount சந்தியில் இறங்கினேன். நல்ல பசி. பசி வந்திடப் பத்தும் பறந்திடும் என்பார்கள். பத்தும் பறப்பதற்கு முன்னால் பசியைப் பறக்க வைக்க வேண்டும் என்று எண்ணிச் சுற்றும் முற்றும் பார்த்தேன். 'சுவையகம்' என்னும் உணவகத்தின் பெயர்ப்பலகை கண்ணில் பட்டது. உள்ளே போனேன். மகாசனங்கள் வரிசையாக நின்றுகொண்டிருந்தார்கள். "இன்றைக்குக் கனடாவில் நீ 'சோத்து'க்காகக் கைகட்டிக்கொண்டு 'கியூ'வில் நிற்பாய்" என்று எனது தலையில் கடவுள் 'கிளீய'ராக எழுதியிருக்கிறார் என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது. எனக்குப் பின்னால் இன்னும் இரண்டு மூன்று பேர் வந்து நின்றதும் ஒரு தென்பும் தைரியமும் மனதில் வந்தன. "உலகத்தில் இதெல்லாம் சகஜமப்பா!" என்று எனக்கு நானே சொல்லி எனது முதுகில் நானே தட்டிக் கொண்டேன். வரிசையில் முதல் ஆளாக நின்றவர், "மூன்று மட்டன் பிரியாணி" என்று சொல்லிவிட்டு எங்களையெல்லாம் பெருமையுடன் திரும்பிப் பார்த்தார். மூன்று ஆட்டுப் பண்ணைகளையே முழுதாக விலை பேசிய பெருமிதம் அவருடைய பார்வையில் ஜொலித்தது. இந்த அற்ப சந்தோஷம் அவருக்கு முழுமையாகக் கிடைக்கட்டும் என்று உள்ளூரா ஆசீர்வதித்து விட்டு அப்பாவி போல முகத்தை வைத்துக் கொண்டு நின்றிருந்தேன்.

இப்படித்தான் பிரான்ஸுக்குப் போனபோது, ஒரு முறை பாரிஸில் சாமுண்டீஸ்வரி சாப்பாட்டுக் கடைக்குப் போய் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தேன். பருப்புச் சட்டியுடன் எனது மேசையை நோக்கி வந்த பாஸ்கரனைப் பார்த்ததும் பதைத்துப் போய்விட்டேன். ஏனென்றால் பாஸ்கரன் என்னிடம் படித்த மாணவன். என்னிடம் படித்த மாணவர்களை நான் வழக்கமாக 'நீ ஒரு நாளும் உருப்படமாட்டாய்' என்று வாழ்த்துவது உண்டு. அதனால் அவர்களுக்கு ரோசம் வந்து உருப்பட்டு ஓகோ என்று உயரத்துக்குப் போய்விடுவார்கள். இந்த பாஸ்கரன் மட்டும் எனது வாக்கை வேதவாக்காக எடுத்துக் கொண்டு உருப்படாமலே பருப்புச் சட்டியையும் பாயசச் சட்டியையும் தூக்கிக்கொண்டு அலைகிறான். எனக்கென்னவோ அவனைக் கட்டிப்பிடித்து, "ஏன்டா, என் பேச்சைக் கேட்டு இப்படி கெட்டுப் போனாய்" என்று ஒரு பாட்டம் அழ வேண்டும் போல இருந்தது. சூழ்நிலை சரியில்லாததால் அழவில்லை.

சாப்பிட்டுக் கொண்டு இருக்கும்போது அந்தப் பக்கமாக வந்த பாஸ்கரனைக் கூப்பிட்டு, "பாஸ்கரன், பொரித்த மோர் மிளகாய் இரண்டு தருவாயா?" என்று கேட்டேன். அவன் என்னைப் பார்த்து லேசாகச் சிரித்தான். "இந்த நாட்களில் போய் மோர் மிளகாய் கேட்கிறாயே, ஊம், நீயும் ஒரு வாத்தியார்!" என்று அவன் கேட்பதாக மனப் பக்குவத்தோடு அந்தச் சிரிப்பை நான் எடுத்துக் கொண்டேன். "இல்லை சேர், உங்களுக்கு எங்கேயும் மோர் மிளகாய் கிடைக்காது. பொரித்த நீர் மிளகாய் இருக்கிறது. தரட்டுமா?" என்று கேட்டான்.

"அதென்னப்பா, நீர் மிளகாய்?"

"அந்தக் காலத்தில் சுத்தமான மோரில் சில 'சங்கதி'களைப் போட்டுக் கலக்கி, அதில் நுனி கிள்ளிய பச்சை மிளகாயை நன்கு ஊறவைத்துப் பின்னர் நன்கு காய வைத்து மோர் மிளகாய் தயாரிப்பார்கள். அந்த மோர் மிளகாய் முக்தியடைந்து முப்பது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இப்பொழுது பச்சைத் தண்ணீரில் நிறைய உப்பை அள்ளிப் போட்டு, அதிலே ஊர் மிளகாயை ஊறவைத்து ஒரு நல்ல நாளில் அதற்கு மோர் மிளகாய் என்று பெயர் வைத்துப் பளபளப்பான பாக்கட்டுகளில் அடைத்து விற்கிறார்கள். அதுதான் நீர் மிளகாய்," என்றான். "ஏன்டா இப்படி உண்மையைச் சொல்லிக் கெட்டுப் போகிறாய்?" என்று அவனைக் கட்டிப்பிடித்துக் கதறி அழவேண்டும் போல மீண்டும் தோன்றியது. கண்ணீர் வராததால் விட்டுவிட்டேன். "அய்யய்யோ! வியாபார ரகசியத்தை வெளியே சொல்லக்கூடாது. முதலாளி முதலையாய் மாறி உன்னை விழுங்கிவிடுவார்" என்றேன்.

"நீங்கள்தானே சேர், பொய் சொல்லக்கூடாது என்று பாடம் நடத்தினீர்கள்," என்று என்னையே மடக்கினான் பாஸ்கரன்.

"'வரும். ஆனால் வராது' என்ற ஜோக்கைக் கேள்விப்பட்டிருக்கிறாயா? அப்படித்தான் பொய் பேசலாம் ஆனால் பேசக்கூடாது," என்றேன். சிறிது நேரம் யோசித்த பாஸ்கரன், "பொய் சொல்லலாம் என்கிறீர்களா? கூடாது என்கிறீர்களா?" என்று கேட்டான். "சொல்லலாம்; ஆனால் சொல்லக்கூடாது," என்றேன்.

பாஸ்கரன் குழம்பிப் போனான். "இதனால் வரக்கூடிய பாவ புண்ணியம் யாருக்கு?" என்று கேட்டான்.

"புண்ணியம் என்னவோ உனக்கும் உனது முதலாளிக்கும்தான். பொய் சொல்லக்கூடாது என்று உனக்குப் பாடம் எடுத்த நான்தான் பாவம்" என்றேன்.

"மூன்று மட்டன் பிரியாணி" என்று சொல்லிவிட்டு எங்களையெல்லாம் பெருமையுடன் திரும்பிப்பார்த்தார். மூன்று ஆட்டுப் பண்ணைகளையே முழுதாக விலை பேசிய பெருமிதம் அவருடைய பார்வையில் ஜொலித்தது. இந்த அற்ப சந்தோஷம் அவருக்கு....

'இன்றைக்குக் குழாயில் தண்ணீர் வராததால் கடைகளில் பாலுக்கும் மோருக்கும் தட்டுப்பாடு வரும்' என்று தமிழ்நாட்டில் சாதாரணமாகச் சொல்வார்கள். 'ஏனப்பா, பால் நீராக இருக்கிறது?' என்று கேட்டால், பால்காரன், "நேற்றுப் பசமாடு மழையில் நனைந்து விட்டது" என்பானாம். இந்த மோரைப்பற்றியும் நீரைப் பற்றியும் ஒரு பழைய பாடல் உண்டு. நீர் ஆகாயத்தில் இருக்கும்போது அதற்கு மேகம் என்ற பொருளில் கார் என்று பெயர். மழையாக நிலத்தில் இறங்கியவுடன் நீர் என்று பெயர். அதே நீர், மோர் விற்கும் பெண்களின் பானைக்குள் வந்ததும் மோர் என்று பெயர். அதனால் கார், நீர், மோரென்று நீருக்கு மூன்று பெயர்கள். இதோ அந்தப் பாடல்:

கார் என்று பேர் படைத்தாய் ககனத் துறும்போது
நீர் என்று பேர் படைத்தாய் நெடுந்தரையில் வீழ்ந்ததன் பின்
வாரொன்று மென்முலையா ராய்ச்சியர்கை வந்ததன் பின்
மோர் என்று பேர் படைத்தாய் முப்பேரும் பெற்றாயே!

சுவையகம் உணவகத்தில் இன்னமும் வரிசையில் நின்றிருந்தேன். எனக்கு முன்னால் நின்ற ஒரு அகலசகலமான பருத்த பெண்மணி தனது உணவுப் பார்சலை வாங்கிக் கொண்டு மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலின் கட்டுத்தேர் திரும்பியதுபோல திரும்பி நடந்தார். அந்தப் பெண்ணைப் பார்த்துவிட்டு, எனது காய்ந்த நாட்பட்ட புழுக்கொடியல் போன்ற ஒல்லி உடம்பைக் குனிந்து பார்த்ததும் சிரிப்பு வந்தது. சிரித்துவிட்டேன். நான் தனியே நின்று சிரிப்பதைப் பார்த்த, எனக்குப் பின்னால் நின்றவர் சற்றுத் தள்ளிப் போய் நின்று, கொஞ்சம் பயத்தோடு என்னை வித்தியாசமாகப் பார்த்தார். சுவையகத்தில் நின்ற பெண், "உங்களுக்கு என்ன வேணும்?" என்று கேட்டார். நான், "ஒரு சைவச் சாப்பாடு. கறிகளைத் தனித்தனிச் 'சட்டி'களில் தாருங்கோ" என்று பவ்வியமாகச் சொல்லிப் பளபளப்பான புதிய ஐம்பது டொலர் நோட்டு ஒன்றைக் கொடுத்தேன். அந்தப் பெண் அந்த நோட்டை உயரத் தூக்கி 'லயிற்' வெளிச்சத்துக்கு நேராகப் பிடித்துப் பார்த்தார். "எங்கட வீட்டு மெசின் பழுதாகிப் பத்து வருஷம் ஆச்சு" என்று பத்துக் கிலோ அப்பாவித்தனத்தைப் பத்து லிற்றர் பச்சைத் தண்ணீரில் கரைத்து முகத்தில் பூசியதுபோல் முகத்தைப் பாவமாக வைத்துக் கொண்டு பரிதாபமாகச் சொன்னேன். "எந்த மெசின்?" என்று அந்தப் பெண், நோட்டை உயரத்தில் பிடித்தபடியே என்னைத் திரும்பிப் பார்த்துக் கேட்டார். "காசடிக்கிற மெசின்" என்றேன். அந்தப் பெண் ஓரடி பின்னால் நகர்ந்து நின்று, கொஞ்சம் கலவரத்துடன் என்னைப் பார்த்தார்.

பாஸ்கரன் கேட்ட 'பொய் சொல்லலாமா, கூடாதா?' என்ற கேள்வி மனதில் சுழன்று கொண்டிருந்தது. புரை தீர்ந்த நன்மை பயக்குமாயின் பொய் சொல்லலாம் என்று திருவள்ளுவரே 'ஓ.கே' பண்ணியிருக்கிறார். மகாபாரதத்தில் இரண்டு பொய் நாடகங்கள் வரும். இவற்றைப் பொய் என்று சில பேரறிஞர்கள் ஒப்புக் கொள்வதில்லை. 'உண்மையை மறைத்தார்கள்' என்று பூசி மெழுகிப் பூமாலை போட்டுப் பொன்னாடை போர்த்தி மூடிவிடுவார்கள்.

பன்னாட்டு ஓநாய்களின் சூழ்ச்சியுடன் சிறு நரிகள் வீர வேங்கைகளை வீழ்த்தியதுபோல, பாரதப் போரில் வீரன் அபிமன்யு வீழ்த்தப்பட்டான். "பொழுது சாயுமுன் அபிமன்யுவைக் கொன்ற ஜயத்ரதனைக் கொல்வேன் அல்லது நானும் இறப்பேன்" என்று அருச்சுனன் சபதம் செய்கிறான். ஜயத்ரதன் என்ன செய்வது என்று தெரியாமல், பெண் சொல் கேட்ட பிரதமரைப் போல, வெள்ளைத் தாடியை விறாண்டிக் கொண்டு நின்றான். கிருஷ்ணன் சுதர்சன சக்கரத்தால் சூரியனை மறைத்து, பொழுது சய்ந்தது போன்ற மாயை உண்டாக்கி ஜயத்ரதனைக் கொல்ல வழி வகுக்கிறார். இது ஒரு பொய்யான நாடகம் என்பது நாலு பேர் கருத்து.

மகாபாரதத்தில் வரும் இன்னொரு பொய் இது. கிருஷ்ணனின் ஆலோசனைப்படி பீமன் கவுரவர் பக்கத்தில் அஸ்வத்தாமான் என்ற ஒரு யானையைக் கொன்றுவிட்டு, "கொன்றேன் அஸ்வத்தாமனை" என்று கூவுகிறான். துரோணரின் மகனுக்கும் பெயர் அஸ்வத்தாமன். வீமனின் கூற்று உண்மையா பொய்யா என்று துரோணர் தடுமாறுகிறார். தர்மரின் நாவில் பொய்யே வராது. எனவே, தர்மரைப் பார்த்துத் துரோணர் கேட்கிறார், "தர்மா, என் மகன் அஸ்வத்தாமன் இறந்தது உண்மையா," என்று. கிருஷ்ணனின் தூண்டுதலால் தர்மர் உரத்த குரலில் "இறந்தது அஸ்வத்தாமன்..." என்று கூறிவிட்டுத் தயக்கத்துடன் மெதுவாக "...என்னும் யானை" என்கிறார். கடைசி வார்த்தைகள் துரோணரின் செவிகளில் விழவில்லை. துரோணர் போரை நிறுத்திவிட்டுத் தேரை விட்டு இறங்கிவிடுகிறார்.

ராமாயணத்தில் சீதாதேவி ஒரு கட்டத்தில் பொய் சொன்னதாக என் பாட்டி சாகும்வரை சொல்லிச் சொல்லிச் சிரித்துக் கொண்டே செத்தாள். இந்தப் பாட்டிக்கு அவளுடைய பாட்டி சாகும்போது சொன்னாளாம். அந்தப் பாட்டிக்கு எந்தப் பார்ட்டி (party) சொன்னதென்ற விபரம் கிடைக்கவில்லை. சீதையைத் தேடி இலங்கைக்குச் சென்ற ஆஞ்சநேயர், சீதையைச் சந்தித்த பின்னர் அசோக வனத்தை அழித்தாராம். அரக்கப் பெண்கள் சீதையிடம் வந்து, "அந்தக் குரங்கு உன்னிடம் பேசியதாமே. அது எங்கிருந்து வந்ததென்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்களாம். சீதை தனக்குத் தெரியாது என்று பொய் சொல்லி ஆஞ்சநேயரைக் காப்பாற்றியதாக இரண்டு பாட்டிகளும் பேசிகொள்வார்களாம்.

மகாத்மா காந்தி உண்மையைப் பேசு என்றார். ஒரு பொய் சொன்னால் அதனை உறுதிப்படுத்த ஒன்பது பொய்களைச் சொல்ல நேரிடும் என்றார்கள். பொய் சொல்லலாம், ஆனால் பொருந்தச் சொல்ல வேண்டும் என்று யாரோ சொன்னார்கள். 'ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தைச் செய்துவை' என்றும் சொன்னார்கள். அந்தப் பழமொழி தவறானது. 'ஆயிரம் முறை போய்ச் சொல்லியாவது ஒரு கல்யாணத்தைச் செய்துவை' என்பதே இப்படி மருவிற்று என்று பின்னர் சொன்னார்கள். இவற்றில் யார் சொன்னது பொய்? யார் சொன்னது மெய்? 'மெய் வருத்தம் பாரார், கண் துஞ்சார்...' என்னும் அடியில் மெய் என்பது அழிந்து போகக்கூடிய மனிதனின் பொய்யான உடலைக் குறிக்கும். பொய்யான இந்த உடலை மெய் என்று ஏன் பொய் சொன்னார்கள்?

இது ஒரு விறகுவெட்டியின் பழைய கதை. அவனுடைய இரும்புக் கோடாலி குளத்தில் விழுந்துவிட்டது. ஒரு தேவதை வந்து, ஒரு தங்கக் கோடாலியைக் குளத்திலிருந்து எடுத்து வந்து "இதுவா உனது கோடாலி?" என்று கேட்டது. அவன் "இல்லை" என்றான். பின்னர் வெள்ளிக் கோடாலியைக் காட்டிய போதும் "இல்லை" என்றான். தேவதை அவனுடைய சத்தியத்தை மெச்சி, முதுகிலே தட்டி, ஒரு உம்மா கொடுத்துவிட்டு மூன்று கோடாலிகளையும் அவனுக்கே அளித்துவிட்டுப் போய் விட்டது. இந்தக் கதையின் அடுத்த பாகம் பலவிதமாகச் சொல்லப்படுகின்றது. அவரோடு எனது கைச்சரக்கையும் சேர்த்துக் கலக்கலாக ஒரு கதை சொல்கிறேன். ஒரு நாள் அதே விறகுவெட்டியின் பெண்டாட்டி அதே குளத்தில் மூழ்கிப் போனாள். வழக்கம் போல தேவதை வந்து, "ஹலோ" சொன்னது. விறகுவெட்டி 'உம்'மென்று உட்கார்ந் திருந்தான். தேவதை நீரில் மூழ்கி, உலக அழகி ஐஸ்வர்யாராயைத் தூக்கிக் கொண்டு வந்து, "இவளா? உன் பெண்டாட்டி?" என்று கேட்டது. விறகுவெட்டி "ஆமாம்" என்று கூறிவிட்டுக் 'கம்'மென்று இருந்தான்.

"ஏம்பா பொய் சொல்கிறாய்?" என்று தேவதை தலையைச் சொறிந்து கொண்டே கவலையோடு கேட்டது. "நான் உண்மை பேசினால், ஐஸ்வர்யாராயை அடுத்து நடிகை ஸ்ரேயாவையும் பின்னர் நயன்தாராவையும் கொண்டு வந்து காட்டுவீர்கள். பிறகு எனது சத்தியத்தை மெச்சி இந்த மூன்று பேரோடு என் பழைய பெண்டாட்டியையும் தந்துவிட்டுப் போய்விடுவீர்கள். ஒரு பெண்டாட்டியுடன் வாழ முடியாமல்தானே அவளைக் கூட்டிக் கொண்டு வந்து நானே குளத்தில் தள்ளிவிட்டேன்" என்ற உண்மையைச் சொல்லித் தாரை தாரையாகக் கண்ணீர் வடித்து வீர்வீரென்று கதறி அழுதான் விறகுவெட்டி.

தேவதைக்கும் கண் கலங்கிவிட்டது. தேவதையின் கண்களிலிருந்து கடகடவென்று கண்ணீர் கொட்டியது. தனது சட்டைப் பையிலிருந்து ஒரு 'டிஷ்யூ' பேப்பரை எடுத்து மூக்கைச் சிந்தி 'மூஞ்சி'யைச் சுத்தமாகத் துடைத்துக் கொண்டு, "ஐயா, உனது சத்தியத்தை மெச்சினேன். இந்த நால்வருடன் இலவச இணைப்பாக நடிகை தமன்னாவையும் உனக்கு தருகிறேன். ஐந்து பேரோடும் ஆனந்தமாக

61ம் பக்கம் பார்க்க...

வாழ்வாயாக'' என்று அழுதழுது ஆசீர்வதித்து விட்டுப் போய்விட்டது தேவதை. விறகுவெட்டி, "ஒருத்தியோடு வாழ்ந்து நொந்து நொடித்துப் போன எனக்கு ஐந்து பெண்டாட்டிகளா? ஆண்டவனே, எனக்கு மட்டும் ஏனிந்தச் சோதனை? உனக்கு இரக்கமே இல்லையா? நான் அப்படி என்ன பாவம் செய்தேன்?'' என்று விக்கிவிக்கி அழுதுவிட்டுக் குளத்தில் குப்புறக் குதித்துக் காணாமல் போய்விட்டான்.

சிறு வயதில், சந்திரனில் அவ்வைப் பாட்டி வடை சுட்டது போன்ற பல பொய்க் கதைகளைச் சொல்லியே எம்மை வளர்த்தார்கள். 'அம்மாவின் பொய்கள்' என்ற தலைப்பில் ஞானக்கூத்தன் ஒரு கவிதை எழுதினார். அதிலிருந்து சில அடிகள் இதோ:

பெண்ணுடன் சினேகம் கொண்டால்
காதறுந்து போகும் என்றாய்
தவறுகள் செய்தால்
சாமி கண்களை குத்தும் என்றாய்
தின்பதற் கேதும் கேட்டால்
வயிற்றுக்குக் கெடுதல் என்றாய்
ஒருமுறை தவிட்டுக்காக
வாங்கினேன் உன்னை என்றாய்
எத்தனை பொய்கள் முன்பு
என்னிடம் சொன்னாய் அம்மா.

ஐம்பதுகளில் 'நாடோடி' 'பொய் சொல்லலாமா?' என்றொரு நகைச்சுவைக் கதையை எழுதியிருந்தார். அந்தக் கதை அநேகமாக இப்படித்தான் இருக்கும்.

அவனுக்குப் பெயர் ஆனந்தன். மனைவி ஆனந்தி. அவ்வப்போது வீட்டுக்கு வரும் வேலைக்காரி வசந்தி. வசந்தி இளம் வயதுக்காரி. வழவழ தளுதளு என்று இருப்பாள். வசந்தி சிரித்தால் ஆனந்தனுக்குச் சொர்க்கத்துக்கே போய் வந்ததுபோல இருக்கும். ஆனந்தனும் வசந்தியும் கொஞ்சம் அப்படியிப்படி ... ;

ஆனந்தன் அரிச்சந்திரன் நாடகத்தை அடிக்கடி பார்த்ததால் தானும் பொய் சொல்லக் கூடாது என்று தீர்மானித்தான். ஆனால் ஒவ்வொரு நாளும் எங்கேயாவது ஏதாவது பொய்யைச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது. சரி, வாழ்க்கை முழுவதும் பொய் சொல்லாமல் வாழ்வது முடியாத காரியம். ஒரு நாளைக்காவது பொய் சொல்லாமல் இருப்போம் என்று சபதம் எடுத்தான்.



ஒரு நாள்..., இன்று என்னதான் நடந்தாலும் பொய்யே சொல்ல மாட்டேன் என்று உறுதி எடுத்துக் கொண்டு மன வைராக்கியத்துடன் வீட்டைவிட்டுப் புறப்பட்டுப் போனான். வழக்கமான பஸ்ஸில் ஏறினான். சனத்தோடு சனமாக நின்றான். பஸ் கண்டக்டர் வந்து, "டிக்கட் எடுத்தீர்களா?'' என்று கேட்டார். அவன் 'இன்றைக்குப் பொய் பேசக்கூடாது.' என்ற சபதத்தை நினைத்துக் கொண்டான். எனவே, "நான் எப்போதுமே டிக்கட் எடுப்பதில்லை,'' என்றான்.

"இந்த பஸ்ஸிலா? நான் முன்னர் உங்களைப் பார்த்ததே இல்லையே,'' என்றார் கண்டக்டர்.

"சனத்தோடு சனமாக மறைந்து நின்றுவிட்டு இறங்கிப் போய்விடுவேன்'' என்று சொன்னான் ஆனந்தன்.

கண்டக்டர் அவனுக்கு நாலு சாத்துச் சாத்தி கீழே இறக்கிவிட்டார். அதனால் அவன் அலுவலகத்துக்கு நடந்தே போனான். வாசலில் மனேஜர் காத்துக்கொண்டு நின்றார். "ஒரு மணித்தியாலம் லேட். மாமியார் வீட்டுக்கு விருந்துக்கா வருகிறாய்?'' என்று கேட்டார் அவர்.

"நான் வழக்கமாக அரை மணித்தியாலம் லேட்டாகத்தான் வருவேன். நீர் வேட்டை நாய் மாதிரி நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு முன் வாசலில் நிற்பீர் என்று தெரியும். உமது கழுகுக் கண்களில் படாமல் பின் வாசல் வழியாக உள்ளே நுழைந்து விடுவேன். இன்றைக்கு ஏதோ ஞாபக மறதியாக முன் வாசலால் வந்துவிட்டேன்,'' என்று உண்மையைச் சொன்னான் ஆனந்தன். அதோடு அவனுக்கு வேலை போய்விட்டது.

வீட்டுக்கு வந்தான். "என்ன, அரை நாளிலேயே வேலையிலிருந்து வந்துவிட்டீர்கள்?'' என்று மனைவி ஆனந்தி கேட்டாள்.

"ஆமாடி, காலையில் வேலைக்குப் புறப்பட்ட போதே குரங்கு மாதிரி வாசலில் வந்து நின்றாய், மூதேவி! உனது பீடை பிடித்த முகத்தில் விழித்துப் போனால் எந்தக் காரியம்தான் உருப்படும்? இருந்த வேலையும் போய்விட்டது,'' என்று மனதில் பட்ட உண்மையைச் சொல்லிச் சத்தியத்தைக் காப்பாற்றினான். அவள் தலையில் அடித்துக் கதறிக் கொண்டு, "நான் ஊருக்குப் போகிறேன்'' என்று உள்ளே ஓடிப் போனாள்.

அவளுடைய தகப்பனார் வெளியே வந்தார். "என்ன மருமகனே, மகள் உள்ளே ஓடிப் போய் ஓலமிட்டு அழுகிறாள்?''

மருமகன் பொய் சொல்லக் கூடாது என்று சத்தியம் எடுத்திருப்பதால் மனதில் இருந்த உண்மையை அப்படியே சொன்னான். "நீர் என்ன பெரிய யோக்கியனா? பத்தாயிரம் ரூபா சீதனம் தருவதாகச் சொன்னதால் இந்தச் சனியனின் கழுத்தில் தாலி கட்டினேன். கடைசியில் சீதனமும் தந்தபாடில்லை. பத்து மாதமாக நடுவீட்டில் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீர். இது உமக்கே நியாயமாகப் படுகிறதா?''

உண்மை பேசிச் சத்தியத்தைக் காப்பாற்றிய மருமகனை மாமனார் மெச்சவில்லை. மகளைக் கூட்டிக் கொண்டு ஊருக்குப் புறப்பட்டார். "போடி ஆனந்தி, போ! இங்கே நான் வேலைக்காரியோடு சிரித்துப் பேசினால் உனக்குக் கோபம் வருகிறது. உன்னோடு சிரித்துப் பேசினால் அவளுக்குக் கோபம் வருகிறது. போய்த் தொலை!,'' என்றான். இந்த 'ஒரு நாள்' அரிச்சந்திரனின் கதை இதுதான்.

என்றோ எங்கேயோ கேட்ட படித்த துணுக்குகளையும் சம்பவங்களையும் கோத்துத் தோரணம் கட்டியிருக்கிறேன். நகைச்சுவைக்காக எழுதப்பட்ட இந்தக் கட்டுரையை சுவைத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். அல்லவென்றால், தவறு என்னுடையதாகவும் இருக்கலாம். ஏனென்றால் சிலசமயங்களில் சி(வலி)ங்கத்திற்கும் step slip ஆகலாம்!

uthayanan@thaiveedu.com

■ ■ ■




mobilicity
Exclusive Dealer
Sun Tel Mobility
Sun Tel Mobility
We are Mobilicity, a new mobile phone company that offers unlimited and uncomplicated plans.
- NO CREDIT CHECK
- NO CONTRACT
$25 Per Month
UNLIMITED !!!
INCOMING & OUTGOING
UNLIMITED ASIA
$20 per month
* CHINA
* HONG KONG
* SINGAPORE
* INDIA
Please note:
your Mobilicity plan needs to have a minimum value of $35 or higher.
Hurry, this add-on is only available for purchase until July 31, 2010
FREE !
EXCLUSIVE OFFER
Car charger
or
Phone case
or
Headset
With new Activation
2375 Eglinton Ave. East,
Eglinton Ave/Kennedy Rd
416.750.7299
5B - 2950 Birchmount Rd
Birchmount / Finch Ave
416.490.9099
1468 Victoria Park Ave.,
Victoria Park Ave/ Eglinton Ave
416.757.9199
9005 Leslie Street
Leslie street / Highway 7
905.709.2229

# வேலை செய்யும் இடங்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

- என். மிலான் -

## வேலை செய்யும் இடங்களில் நீங்கள் வன்முறைகள் மற்றும் துன்புறுத்தல்களை எதிர்நோக்கு கின்றீர்களா?

எங்களில் பலர் வேலை இல்லாமல் மன உழைச்சலுக்குள் வாழுகின்றோம். இன்னும் சிலரோ வேலை தேடித் தேடி அது கிடைக்காமல் போய் சோர்வடைந்து போகின்றோம். ஆனால் மீதியாக உள்ள, தொழில் கிடைத்து தொழில் புரிந்து கொண்டிருக்கும் பலரோ தொழில் புரியுமிடங்களில் நிம்மதி இழந்து தினமும் விருப்பமின்றியே தொழில் செய்து நாட்களைக் கடக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளோம். ஒரு கணிசமான அளவினரே தாங்கள் செய்யும் தொழிலை விரும்பி முழு மனதுடன் செய்கின்றார்கள். அந்த வகையில் இன்று, வேலை கிடைத்தும் நிம்மதியைத் தொலைத்து வேலையிடங்களில் வன்முறைகளையும் துன்புறுத்தல்களையும் எதிர்நோக்கியபடியே மிகவும் மன உழைச்சலுடன் வேலை புரிபவர்களிற்கு நீங்கள் வேலை செய்யுமிடங்களில் நடை பெறக்கூடிய வன்முறைகள், துன்புறுத்தல்கள் பற்றியும் அவற்றில் இருந்து உங்களைப் பாதுகாப்பது எவ்வாறு என்பது பற்றியும் இது தொடர்பான உதவிகளை எங்கே பெறவது என்பது பற்றியும் தொழிலாளர்களிற்கான நடவடிக்கை நிலையம் என்ன கூறுகின்றது என்று பார்ப்போம்.

## வேலை செய்யும் இடத்தில் வன் முறை மற்றும் துன்புறுத்தல் ஆகிய இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

### வேலை செய்யும் இடத்தில் வன்முறை(Violence):

நீங்கள் வேலை செய்யும் போது ஒரு மனிதர் தன் உடல் வலிமையால் உங்கள் தேகத்திற்கு தீங்கிழைப்பது இந்த வகை வன்முறையாகும். ஒரு தொழிலாளி வேலை செய்யும் போது வேலை செய்யும் இடத்தில் அவருடைய தேகத்தற்கு தீங்கிழைத்தல் அல்லது அதற்கான மிரட்டல் வார்த்தை வன்முறை என்று கருதப்படும்.

### வேலை செய்யும் இடத்தில் துன்புறுத்தல்(Harassment):

நீங்கள் ஒரு இடத்தில் வேலை செய்யும் போது ஒரு மனிதர் உங்களை கேலியும், கிண்டலும் செய்தல், பெரும் சத்தமிட்டு உங்களை பரிகாசம் செய்தல், கோபத்துடன் உங் களை பயமுறுத்துதல், உங்களை பற்றி ஆபாசமான நகைச்சுவைகளை கூறுதல் போன்றவை உங்களை கொடுமை செய்தல் ஆகும். மனித உரிமைகள் சட்டத்தின் படி இந்த வகை நடத்தையை தண்டிக்க முடியாது என்றாலும் உங்கள் மீது பாகுபாடு காட்டப் படுகிறது என்பதை நிரூபித்தால் சட்டப்படி தண்டனை கிடைக்க வழி இருக்கிறது.

### மனித உரிமைகள் ரீதியான பாகுபாடு:

இனம், நிறம், மொழி, பிறப்பிடம், வயது, பாலினம், கலப்பு திருமணம், உடல் ஊனம், திருமணம் மற்றும் குடும்ப அந்தஸ்து, மதம், குடியுரிமை மற்றும் மன்னிக்கப்பட்ட குற்றவியல் செயல்கள் ஆகியவற்றின் அடிப்படை யில் வேலை செய்யும் இடத்தில் பாகுபாடு காட்டப்படுவதை மனித உரிமைகள் சட்டம் தடை செய்கிறது. தான் கொடுமை மற்றும் பலாத்காரம் செய்யப்படுகிறோம் என்று ஒரு தொழிலாளி உணர்ந்தால் அதுபற்றி மனித உரிமைகள் தீர்ப்பாயத்திடம் அவர் புகார் செய்யலாம். Ontario Human Rights Tribunalக்கு புகார் செய்ய சம்பவம் நடந்த தேதியிலிருந்து உங்களுக்கு ஒரு வருடம் கால அவகாசம் உண்டு.

இந்த சட்டப்படியான புதிய பாதுகாப்புகள் 2010 ஜுன் மாதத்திலிருந்து அமுலுக்கு வரு கின்றன.

Ontarioவில் உள்ள அனைத்து வேலை நடக்கும் இடங்களில் உள்ள தொழிலாளர்கள் மீது காட்டப்படும் பாகுபாடு மற்றும் வன்முறை சம்பந்தமாக Occupational Health and Safety Actல் கொண்டு வரப்பட்ட மாற்றங்கள் தெளிவாக விவரிக்கின்றன. கொடுமையிலிருந்தும் மற்றும் வன்முறையிலிருந்தும். இந்த சட்டத்தின் மாறுதல்கள் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்றன. வேலை நடக்கும் இடத்தை பாதுகாப்புடன் வைத்திருக்க வேண்டும் என்று உங்கள் முதலாளியை இந்த சட்டம் வலியுறுத்தும். உங்கள் மீது காட்டப்படும் பாகுபாட்டை எதிர்கொள்ள நீங்கள் என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதையும் இந்தச் சட்டம் விளக்கும்.

> “ பாதுகாப்புடன் இருங்கள்
>
> உங்களுக்கு ஏதாவது ஆபத்து வரும் என்று
>
> நீங்கள் உணர்ந்தால்
>
> உடனே காவல்துறையை துணைக்கு அழையுங்கள்.
>
> வேலை செய்யும் இடத்தில் நடக்கும்
>
> அவசரகால சம்பவங்களை எதிர்கொள்ள
>
> அவர்கள் மட்டுமே சரியானவர்கள். ”

### புதிய சட்டத்தின் கீழ், முதலா ளிகள் தங்கள் நிர்வாக செயல் பற்றி சரியான விளக்கம் அளிக்க வேண்டும்.

- வேலை செய்யும் இடத்தில் காட்டப்படும் கொடுமை மற்றும் வன்முறையைத் தடுக்க சரியான கொள்கைகளும் மற்றும் செயல் திட்டங்களும் உருவாக்கப்பட வேண்டும்.
- இந்த கொள்கைகள் மற்றும் செயற்திட்டங்கள் சம்பந்தமான தகவல்கள் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.
- வேலை செய்யும் இடத்தில் காட்டப்படும் கொடுமை மற்றம் வன்முறை சம்பவங்கள் பற்றி தொழிலாளர்கள் புகார் செய்ய உதவும் வழிமுறைகள் அறிவிக்கப்பட வேண்டும்.
- துன்புறுத்தல் அல்லது வன்முறை சம்பவங்கள் பற்றி ஏதவாது புகார்கள் இருந்தால் அவற்றை புலன் விசாரணை செய்ய உதவும் வழிமுறைகள் தெரிவிக்கப்பட வேண்டும்.

### வேலை செய்யும் இடத்தில் வன் முறையை தடுக்கும் செயல் திட்டங்கள்.

- வன்முறை சம்பவம் நடந்தேறிய பின் அல்லது நடக்கும் தருவாயில் அவற்றை தடுக்க அவசர கால பாதுகாப்பு முறைகள் தீர்மானிக்கப்பட வேண்டும். உதாரணமாக அவசர கால சூழ்நிலையை சமாளிக்க உடனடியாக உதவி எப்படி வரவழைக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும்.
- வேலை செய்யும் இடத்தில் நிகழ இருக்கும் வன்முறை சூழ்நிலைகளை முதலாளிகள் முன்கூட்டியே கணக்கிட்டிருக்க வேண்டும். அதற்கான தடுப்பு நடவடிக்கைகளையும் அவர்கள் தீர்மானித்திருக்க வேண்டும்.
- நீங்கள் வேலை சம்பந்தமாக சந்திக்கும் சக மனிதர் வன்முறை நடத்தை என்ற பின்னணிச் சரித்திரத்தை கொண்டிருந்தால், உங்கள் முதலாளி அவரை பற்றி உங்க ளிடம் முன்கூட்டியே தெரிவித்திருக்க வேண்டும். அப்போது தான் உங்கள் உடலிற்கு தீங்கு ஏற்படாமல் அவரிடமிருந்து உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

### வேலை செய்யும் இடத்தில் ஒவ்வொரு தொழிலாளரின் உடலிற்கும் தீங்கு ஏற்படாமல் பாதுகாப்பது ஒரு முதலாளி யின் கடமையாகும்.

உங்களுக்கு தீங்கிழைப்பவர் உங்கள் சக தொழிலாளியாக இல்லாமல் இருந்தாலும் நீங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

### இத்துன்புறுத்தல்கள் மற்றும் வன்முறைகளில் இருந்து உங்களை நீங்களே எப்படிப் பாதுகாத்துக் கொள்ளுவது?

- பாதுகாப்புடன் இருங்கள் உங்களுக்கு ஏதாவது ஆபத்து வரும் என்று நீங்கள் உணர்ந்தால் உடனே காவல்துறையை துணைக்கு அழையுங்கள். வேலை செய் யும் இடத்தில் நடக்கும் அவசரகால சம்பவங்களை எதிர் கொள்ள அவர்கள் மட்டுமே சரியானவர்களாக உள்ளார்கள்.
- நீங்கள் வேலை செய்யும் இடத்தில் வன் முறையால் ஏதவாது ஆபத்து உங்களுக்கு நேரிடும் என்று நீங்கள் உணர்ந்தால் Occupational Health and Safety சட்டத்தின் படி நீங்கள் வேலை செய்ய மறுக்கக் கூட முடியும். அதை காரணம் காட்டி உங்கள் முதலாளி உங்களை தண்டிக்க முடியாது. (போலீஸ் அதிகாரிகள் மற்றும் தீயணைப்பு படை அதிகாரிகள் போன்ற சில ஊழியர்கள் மட்டும் ஒரு வரையறைக்கு உட்பட்டே வேலை செய்ய முறுக்க முடியும்.)
- முதலில் உங்கள் முதலாளி அல்லது மேற்பார்வையாளரிடம் பேசி பாருங்கள். நீங்கள் பாதுகாப்புடன் வேலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவர்கள் பொறுப்பு உங்கள் முதலாளி எடுத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி எழுதிவையுங்கள். பிரச்சினைக்கு அவர் சரியான தீர்வு காணவில்லை என்றால் அவரைப் பற்றி Ministry of Labourக்கு புகார் செய்யுங்கள்.

Occupational Health and Safety Actன் படி அனைத்து நடைமுறைகளையும் உங்கள் முதலாளி சரியாக கடைப் பிடிக்கிறாரா என் பதை Ministry of Labour முடிவு செய்யும். இந்த புதிய சட்ட மாற்றங்களின் கீழ் முதலாளிகள் பல விதிகளையும் மற்றும் வழிமுறைகளையும் பின்பற்ற வேண்டும்.

உங்கள் மீது காட்டப்பட்ட பாகுபாடு, கொடுமை அல்லது வன்முறை பற்றிய ஒவ்வொன்றையும் தெளிவாக எழுதி வைத்திருங்கள். பின்னர் ஒரு புகார் கொடுக்க இவை உங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். நீங்கள் வேலையை விட்டு விலக எண்ணினால், உங்களுக்கு Employment Insurance மற்றும் termination and Severance pay கிடைக்க வழிவகை செய்யும்.

## வன்முறை மற்றும் துன்புறுத் தல்களால் பாதிக்கப்படின் இது பற்றிய உதவிகளிற்கு நீங்கள் தொடர்பு கொள்ளக் கூடிய இடங்கள்.

### Worker's Action Centre:

நீங்கள் வேலை செய்யும் இடத்தில் உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கவும் மற்றும் ஒரு திட்டத்தை வகுக்கவும் தேவையான உதவிகளை பெற நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண் 416 531 0778 அல்லது www.workersactioncentre.org என்னும் இணையத்தளத்திலும் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அனைத்து அழைப்புகளும் இரகசியமாக வைக்கப்படும்.

### Toronto Worker's Health and Safety Legal Clinic:

உடல் நலம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமாக மேலும் கூடுதல் விபரங்கள் பெற 416-971-8832 அல்லது www.workerssafety.ca என்னும் இணையத்தளத்திற்குச் சென்று பாருங்கள்.

### Ministry of Labour Occupational Health and Safety Branch:

வேலை செய்யும் இடத்தில் உடல் நலம் மற்றும் பாதுகாப்பை பேணுதல் மற்றும் சட்டத்தின் புதிய மாற்றங்களை செயலாற்றுதல் சம்பந்தமான மேலும் கூடுதல் விபரங்களுக்கு இலவச தொலைபேசி எண் 1 800 268 8013 or www.labour.gov.on.ca/english என்னும் இணையத்தளத்தைப் பாருங்கள்.

### Human Rights Legal Support Centre:

நீங்கள் பாகுபாட்டுடன் நடத்தப்படுகிறீர்கள் என்பதை உணர்ந்தால் மனித உரிமைகள் சட்ட சேவை மையத்தின் உதவிகளை நீங்கள் நாடலாம். இலவச தொலைபேசி எண் 1-866-625-5179 அல்லது www.hrisc.on.ca என்னும் இணையத்தளத்தைப் பாருங்கள்.

### Assaulted Women's Helpline:

பெண்கள் முரட்டுத்தனமாக தாக்கப்பட்டு வன்முறைக்குள்ளாக்கப்பட்டால் தொடர்பு கொள்ளவேண்டிய பலமொழி தொலைபேசி எண் 1-866-0511.

milan@thaiveedu.com

■ ■ ■

# G 20, G 8 மாநாடுகள்

**கனடாவில் நடந்த G 20, G 8 மாநாடுகள்:**

இம்முறை கனடாவில் G 20, G- 8 ஆகிய இரு மாநாடுகளை நடத்தியதில் கனடிய மக்கள் மிகவும் பெருமைப்படுகிறார்கள். ஒரே நாட்டில், ஒரே காலப்பகுதியில் வேறு எப்பொழுதும் இப்படியான இரண்டு மாநாடுகள் நடந்ததில்லை. எனவே இந்த இரண்டு மகா நாடுகளையும் ஒரே சமயத்தில் நடத்திய பெருமையை முதன்முதலாகக் கனடா தட்டிக் கொள்கிறது. யூன் மாதம் நடந்த இந்த மகாநாட்டில் G - 8 மாநாடு 25ம் 26ம் திகதி களில் ஹன்ஸ்விலியிலும், G - 20 மாநாடு 26ம், 27ம் திகதிகளில் ரொறன்ரோவிலும் நடைபெற்றன. 175 வருட பழமை கொண்ட ரொறன்ரோ பெரும்பாகத்தில் (GTA) 5.5 மில்லியன் மக்கள் வசிக்கிறார்கள். சுமார் 140 மொழிகளைப் பேசும் இனத்தவர்களின் பல்கலாச்சாரத்தைக் கொண்ட புகுந்தவீடாக இது இருக்கின்றது. இவர்களில் இரண்டில் ஒரு பங்கினர் வெளிநாடுகளில் பிறந்து இங்கே வந்து வாழ்பவர்கள். எனவே ரொறன்ரோ இத்தகைய மாநாடுகள் நடப்பதற்கு எல்லா விதத்திலும் சிறந்த பல்கலாச்சாரம் கொண்ட ஒரு இடமாக இருக்கிறது.

G - 20 என்றால் என்ன என்று முதலில் பார்ப்போம்.

1997ல் ஏற்பட்ட ஆசியாவின் பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து அதற்கு உதவ முன் வந்த சில நாடுகளின் நிதி அமைச்சர்களும், மத்திய வங்கி ஆளுநர்களும் ஒன்றாகச் சேர்ந்து 1999ல் ஏற்படுத்திய அமைப்பே G 20 அமைப்பாகும். (The Group of 20 Finance Ministers and Central Bank Governors) சர்வதேசப் பொருளாதார நிலைபற்றியும், உலகப் பொருளாதாரச் சந்தைபற்றியும் அதன் சாதக, பாதகங்கள் பற்றியும் ஆராய்வதே முக்கியமான நிகழ்ச்சியாக இருந்தது. இந்த அமைப்பில் ஆஜன்டீனா, அவுஸ்ரேலியா, பிறேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, யப்பான், மெக்சிக்கோ, கொரியா, ரஸ்யா, சவூதிஅரேபியா, தென்னாபிரிக்கா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் ஆகியன அங்கம் வகிக்கின்றன. அங்கத்துவ நாடுகளைவிட எதியோப்பியா, மாலாவி, நெதர்லாந்து, நைஜீரியா, ஸ்பெயின், வியட்நாம் போன்ற நாடுகளும் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டிருக்கின்றன. தொடக்கத்தில் அந்தந்த நாட்டு நிதி அமைச்சர்களும், மத்திய வங்கி ஆளுநர்களுமே சந்தித்துத் தீர்மானங் களை எடுத்தனர். ஆனால் இந்த அமைப்பின் முக்கியத்துவம் கருதி அந்தந்த நாட்டுத் தலைவர்களும் சந்தித்துத் தீர்மானங்களை எடுப்பதற்கு ஏற்றவாறு நிகழ்ச்சி நிரல்கள் மாற்றி அமைக்கப்பட்டிருந்தன.




படம்: Reuters

G-20 அமைப்பிற்கு 1999-2001 வரை கனடா தலைமைதாங்கியது. அதைத் தொடர்ந்து 2002ல் இந்தியாவும், 2003ல் மெக்சிக்கோவும், 2004 ஜெர்மனியும் 2005ல் சீனாவும், 2006ல் அவுஸ்ரேலியாவும், 2007ல் சவூதி அரேபியாவும், 2008ல் பிறேசிலும், 2009ல் இங்கிலாந்தும், தலைமை தாங்கின. 2010ம் ஆண்டிற்கு தென் கொரியா தலைமைதாங்குகிறது. இந்த அமைப்பின் கூட்டத்தொடரின் முதற் கூட்டம் 2008ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் 15ம் திகதிகளில் அமெரிக்காவில் உள்ள வாஷிங்டனில் நடைபெற்றது. இரண்டாவது தடவையாக 2009ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் 2ம் திகதிகளில் லண்டனில் நடைபெற்றது. முன்றாம் முறையாக அமெரிக்காவில் உள்ள பிற்ஸ்பேர்க் மாகாணத்தில் 2009ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 24ம் 25ம் திகதிகளில் நடைபெற்றது. நாலாவது தடவையாக கனடாவில் உள்ள ரொறன்ரோ மாநிலத்தில் 2010ம் ஆண்டு யூன் மாதம் 26ம் 27ம் திகதிகளில் நடைபெற்றது. ஐந்தாவது கூட்டத் தொடர் 2010ம் ஆண்டு நவம்பர் மாதம் கொரியாவில் உள்ள சியோல் நகரத்தில் நடைபெற இருக்கின்றது.

G-8 என்ற அமைப்பின் மாநாடும் கனடாவில் உள்ள ஹன்ஸ்விலி என்ற இடத்தில் 2010 யூன் மாதம் 25ம் 26ம் திகதிகளில் நடைபெற்றது. 1975ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட இந்த அமைப்பில் பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகள் அங்கம் வகித்தன. 1976ல் கனடாவும், 1998ல் ரஸ்யாவும் இதில் இணைந்து கொண்டன. 1981ம் ஆண்டு ஐரோப்பிய யூனியனும் இதில் இணைந்து கொண்டது. G-8 என்று சொல்லப்படுகின்ற இந்த அமைப் பிற்குத் தலைமைதாங்கிய பிரான்ஸ் 2011ம் ஆண்டு G-20 அமைப்பிற்கும் தலைமைதாங்க இருக்கிறது.

இந்த மகாநாட்டிற்கு அதி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதற்கு முக்கியமான காரணம் இருக்கிறது. ஏனென்றால், இதில் உள்ள அங்கத்துவ நாடுகள் உலகின் மொத்த தேசிய உற்பத்தியில் 85 வீதத்தையும், உலகச் சந்தையில் 80 வீதத்தையும், மூன்றில் இரண்டு பங்கு உலகச் சனத்தொகையையும் கொண்டிருக்கின்றன. முக்கியமான வல்லரசுகள் இதில் அங்கம் வகிக்கின்றன. உலகப் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் முக்கிய நாடுகளாகவும் இவை இருக்கின்றன. இதைவிட இந்த இரண்டு மாநாடுகளுக்கும் பல நாடுகளின் முக்கிய அரசதலைவர்கள் வருகைதந்திருந் தார்கள். குறிப்பாக கனடிய பிரதமர் ஸ்ரீபன் ஹாப்பர், தென் கொரியத் தலைவர் லீமையுங்பாக், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஓபாமா, ஐக்கிய இராச்சியப் பிரதமர் கோடன் பிரவுன், பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் ஷாக்கோஷி போன்ற தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள். எனவேதான் இந்த அமைப்பின் மகாநாட்டிற்கு அதி முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருந்தது.

இந்த அமைப்பின் மகாநாட்டிற்கு சர்வதேச ரீதியாக எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதேபோல சர்வதேச ரீதியிலான எதிர்ப்புக்களும் இருந்தன. கனடாவும் ஜனநாயக நாடு என்பதால், அமைதியான முறையில் மக்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கக்கூடிய முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இத்தகைய எதிர்ப்புக் களைச் சமாளிப்பதற்கு பல மில்லியன் டொலர்கள் செலவு செய்து பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதுவரை நடந்த பலகூட்டத் தொடர்களின்போது மக்கள் அமைதியான முறையில் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தாலும், அதற்குரிய பலன் கிடைக் காததால் அந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் இறுதியில் வன்முறையில் சென்று முடிந்திருக்கின்றன. அதன் காரணமாக மாகாநாடு நடைபெறும் இடங்களில் பொருள் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இத்தகைய அனுபவத்தை மனதில் கொண்டு, அப்படியான சேதங்களைத் தவிர்ப்பதற்காகவும், வெளிநாட்டுத் தலைவர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும் பல மில்லியன் செலவில் கனடாவிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இதன் ஒரு அங்கமாக, மூன்று மீற்றர் உயரத்திற்குப் பாதுகாப்பு வேலிகள் சுற்றிவரப் போடப்பட்டிருந்ததால், உள்ளே செல்பவர்கள் ஐந்துவிதமான பாதுகாப்புத் தடைகளைக் கடந்துதான் உள்ளே செல்லவேண்டி இருந்தது. நகர்பாதுகாவலர் ஒருவர் இதைப் பற்றிக் குறிப்பிடும்போது, ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியின்போது ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் தான் இதுவரை கனடாவிலே பெரிதாக இருந்தது, ஆனால் G-20க்கான ஏற்பாடுகள் அதையும் மிஞ்சி விட்டன என்றார். விமான நிலையத்தில் இருந்து மகாநாட்டு மண்டபத்திற்குச் செல்லும் பாதைகளும் அதிபாதுகாப்புக்குள் உட்படுத்தப்பட்டிருந்தன. பொலிஸார், பாதுகாப்பு அதிகாரிகள், இராணுவ அதிரடிப் படையினர், குதிரைப்படையினர் போன்றோர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஒரு சில அசம்பாவிதங்கள் ஆங்காங்கே நடந்தாலும், தகுந்த பாதுகாப்புக் காரணமாக அவை முறியடிக்கப்பட்டன. ஒரு சிலரால் ஏற்படுத்தப்பட்ட அசம்பாவிதம் காரணமாக, பொலிஸ் வண்டிகள் எரியூட்டப்பட்டதால், அமைதியான முறையில் தமது வேண்டுகோளைச் சொல்ல வந்தவர்களாலும் அதைச் சொல்ல முடியாமற் போய்விட்டது. 30,000 மேற்பட்டவர்கள் இந்த எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்டிருக்கலாம் என்று மதிப்பிடுகின்றனர். தற்பாதுகாப்புக் கருதி இவர்களில் சுமார் 550கும் மேற்பட்டவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். யார் இந்த அசம்பாவிதத்திற்குக் காரணம் என்பது இதுவரை புரியாத புதிராகவே இருக்கிறது.

- குரு அரவிந்தன் -



kuruaravindan@thaiveedu.com

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...

**Uthayan Alex Sivasambu** B.Sc. (Hons), M.B.A

Broker

**Ottawa: 613.276.SALE (7253)**

**Toronto: 416.659.SELL (7355)**

alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com

COLDWELL BANKER



# LOOKING FOR A NEW CAREER

A GREAT OPURTUNITY




- Full refund of **ALL COST** (Apx. $600.00 upon passing exam)
- Direct contract from **RBC** (Only tamil managing general agency)
- No contract. No obligation
- Top of the line supporting web access
- High compensation. Lowest price guaranteed for customer
- You can choose the Company what is good for the client.



ROYAL BROKERS CORPORATION

# Siva Kandiah

CEO & Managing General Agent

Cell: **416.315.8100**

80 Nashdene Rd., Unit 25&26, Toronto, ON M1V 5E4
Tel: 416.298.4722, Fax: 416.298.4664
E-mail: sivakandiah@royalbrokers.com

RBC Insurance
Manulife Financial
Canada Life
Assumption Life
Industrial Alliance

# "சரிதானே?"

## குமார் புனிதவேல் பக்கம்


'ரிச்மன்ட்' கனடாவின் தலைநகரான ஒட்டாவாவிலிருந்து சில மைல் தொலைவில் உள்ள ஒரு சிறுநகரம். நான் நகரம் என்று கூறாமல் சிறு நகரம் என்று குறிப்பிட்டதன் காரணத்தை தெரிவிக்கு முன், நகரம் எனும் பெயரைப் பார்போம். முன்னைய காலத்தில் மக்கள் ஆற்றுப்படுக்கைகளை நோக்கி நகர்ந்து வந்து ஒன்றாக குடியிருந்தமையால் இக் குடியிருப்புகளை நகரம் என்று குறிப்பிட்டார்கள். ஊர்ந்து வந்து அமைத்த குடியிருப்புகளை ஊர் என்று குறிப்பிட்டார்கள்.

ஆனால் நவீன காலத்தில் பெருவீதிகளை நோக்கி நகர்ந்து வந்து அமைத்த குடியிருப்புகள் தான் அதிகம். "ரிசமன்ட்" சிறுநகரம் "பேத் அவனியு" என்ற பாதையை நோக்கி வந்து நகர்ந்து வந்து குடியேறியதால் தோன்றிய ஒரு குடியிருப்பு. இதில் கவணிக்க வேண்டிய இன்னுமொருவிடயம் இந்த நெடுஞ்சாலைகள் ஒவ்வொரு இடத்தில் வெவ்வேறு பெயர் எடுக்கும். உதாரணத்திற்கு ரொறன்ரோவிலுள்ள High way 48இனை எடுத்தால் அதை டொரன்டோவில் மார்க்கம் வீதி என்பார்கள். மார்க்கம் எனும் நகரத்தில் அதனை 'பெயின் ஸ்ரீட்' என்பார்கள். இன்னும் தள்ளிப்போனால் ஒரு இடத்தில் 'ஹைஸ்ரீட்' என்ற பெயரும் உண்டு. ஆனால் ஆக மொத்தம் இது High way 48 தான். அதேபோலவே 'பேத் அவனியு' ரிச்மன்ட் ஸ்ரீட் என்று பொதுவாக குறிக்கப்படும்.

பாதை ஓர நகரங்களுக்கு ஒரு வரைவிலக்கணம் உண்டு. ஒரு நகரம் என குடியிருப்பு அழைப்பதற்கு இரண்டு சங்கிலித்தொடர் கடைகள் (Chain Stores) ஒரு LCBO, இறுதியாக ஒரு ரிம் ஹோடன்ஸ் (Tim Hortons) இருப்பதவசியம். இது மரபுவழி ஏற்றுக் கொண்ட வரைவிலக்கனமே. ரிச்மன்ட். சிறு நகரத்தைப் பொறுத்த மட்டில் இங்கு இரண்டு சங்கிலித்தொடர் கடைகளும் LCBOவும் உண்டு ஆனால் 'ரிம் ஹோடன்ஸ்' கிடையாது. எனவே தான் இதனை நான் சிறுநகரம் என்று சொன்னேன். இந்த சிறு நகரத்தை சுற்றி சோளம் பெருமளவில் விவசாயம் செய்யப்படுகிறது. இவ் விவசாயம் நீர்ப்பாய்ச்சல் இல்லாது மழையை நம்பி சாகுபடி செய்யும் விவசாயமாகும். இலங்கையில் சேனைச் சாகுபடி என்று குறிப்பிடுவர்.

அது துளிர் காலமாகையால் எங்கும் பச்சையாக பார்ப்பதற்கு குளிச்சியாய் இருக்கும். முறையான கோடை இன்னும் துவங்காத நிலையில் காற்று சில் என்று குளிர்ந்த வண்ணமிருந்தது. முதல் நாள் பெய்த மழையில் இந்தச் சிறு நகரமே பொங்கலுக்கு முன் கழுவிய வீடு போல் அழகாக காட்சிதந்தது. மனதில் உற்சாகம் உந்தித்தள்ள ஒரு நடை போடுவோம் என்று புறப்பட்டேன்.

முதல் நாள் மழையில் நீரை எல்லாம் இறைத்துவிட்டு, வானம் முகில்கள் ஏதும் இல்லாத கோலத்தில், நீல நிறத்தில், நிர்வானமாகக் காட்சி தந்தது. ஆனால் அதிலும் மியாமி பீச்சில் அங்கத்தில் ஒரு சில அவயத்தை மறைக்கும் நீச்சல் உடைபோல் இரண்டு முகில்கள் மட்டும் மிதந்து வந்தது. அதில் ஒன்று சற்று பெரியது பார்க்கையில் அவுஸ்திரேலியா காண்டத்தினைப் போல் காட்சி தத்தது. மற்றைய முகில் சிறியதாய் நீண்டு மெல்லியதாக நியூசிலாந்து போல் காட்சி தந்தது. வாணத்தில் அழகிற்கு பொட்டு (Beauti spot) வைத்தது போல் ஓரிரு குருவிகளும் காட்சி தந்தன.



'ரிச்மன்ட்' சிறு நகரம் இருகூறாக பிரித்துக் கொண்டு செல்லும் பிரதான வீதி 'பேத் அவன்யூ' வழியாக நடந்துவரலாம் என வெளியில் காலை வைத்தபோது, அசரீதி போல் அடுத்த வீட்டு அம்மையார் 'Good Morning' என்று காலை வணக்கத்தைத் தெரிவித்தார் நானும் பதிலிக்கு சொல்லிவிட்டு அன்றைய காலநிலை பற்றி சில கருத்துகள் பரிமாறிவிட்டு புறப்பட்டேன். எனது பாத யாத்திரையில் அதிகம் தெரியாதவர்களிடம் இரண்டு விடயங்கள் அச்சமின்றி கதைக்கலாம். முதலாவது சௌக்கியம், இரண்டாவது கால நிலை எனவே அன்று நல்ல காலநிலை பற்றி பிரஸ்தாபித்துவிட்டு அதை அனுபவிப்பதாக கூறி புறப்பட்டேன்.

'பேத் அவனியு' இரு பக்கமும் அழகாக சிமென்தினால் நடைபாதை போட்டிருந்தார்கள். அந்த நடைபாதையில் அதிகம் சன நெருக்கடி இருக்கவில்லை. சற்றுத் தூரத்தில் நடைபாதையில் ஒரு கறுப்புக் குறுவி "கீச்சு, கீச்சு" என்று ஆரவாரித்துக்கொண்டு எதனையோ கெத்திச் சாப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த 'கீச்சு கீச்சு' சத்தம் பெரும் மகிழ்ச்சியை பிரதிபலிப்பதாக தோன்றியது எனக்கு. (நீங்கள் எனக்கு குருவிப் பாசையும் தெரியுமா என்று கேட்காதீர்கள். இது விக்கரமாதித்தன் கதையோ அல்லது பஞ்சதந்திரக் கதையோ அல்ல ஏதோ குருவி மகிழ்ச்சியில் ஆரவாரிப்பது போல்பட்டது. அதைத்தான் சொன்னேன்.)

சற்று நெருங்கியபோது குருவி ஒரு மன் புழுவை கெத்தி உண்பதும், அந்த உயிருடன் உள்ள புழு வேதனை தாங்காமல் துடிப்பதும் தெரிந்தபோது எனக்கு அந்த காட்சி வேதனை தந்தது. என சிறு வயதில் கதாநாயகன் அனலில் இட்ட புழுபோல் துடித்தான் என்று வாசித்த ஞபகம். ஆனால் அனலில் போட்ட புழு ஒரிரு செக்கனில் இறந்துவிடும். அதன் அவஸ்த்தை சில செக்கன்களுக்கே இந்தப் புழுவோ அனுவனுவாக மாண்டுகொண்டிருந்தது. இனி யாரும் கதை எழுதுவதானால் கதாநாயகன் குருவி வாயில் அகப்பட்ட புழு போல் துடித்தான் என்று தான் எழுத வேண்டும்.

இதை எல்லாம் பார்த்த எனக்கு மனப்போராட்டம் ஒன்று தோன்றியது. குருவியை கலைத்து புழுவைக் காப்பாற்றிய வீரனாவதா அல்லது பாவம், தேடி எடுத்த குருவி தனது உணவை உண்ணட்டும் என்று வீதியின் மறுபக்கத்திற்கு செல்வதா என்று. புழுவைக் காப்பாற்றினால் குருவியின் உணவை பிடுங்கிய கொடியவனாவேன். அப்படி அல்லாது குருவி சாப்பிடட்டும் என்று விட்டுவிட்டால் புழுவின் கொலைக்கு உடந்தையான குற்றம் என்னை வாட்டும். இந்த மனப்போராட்டம் எல்லாம் சில கனப் பொழுது தான்.

ஆடுகளையும், மாடுகளையும், கோழிகளையும் லொரி லொரியாக கொல்வதற்கு கொண்டு செல்வதை பார்த்து மரத்துப்போன நான் போயும் போயும் ஒரு புழுவின் வேதனையை பார்த்து கவலைப்படவா போகிறேன். ஆனாலும் பாதையை கடந்து அடுத்தப் பக்கத்திற்கு போய் கொலைக்கு உடந்தையாக இருக்காமல் தொடர்ந்து நடந்தேன். மனதில் என்ன தான் நடக்கும் நடக்கட்டுமே... என்ற பாட்டு ஞாபகத்திற்கு வந்தது. நான் சற்று நெருங்கியவுடன் குருவி கொத்துவதை நிறுத்தி விட்டு 'கீச்சு' என்று சத்தமிட்டப்படி பாதையின் நடுவில் சென்று நின்று கொண்டு என்னைப் பார்த்தது.

இப்போ எனக்கு ஒரு புது மனப்போரட்டம் தோன்றியது வாழ்க்கை என்றால் மனப்போராட்டங்கள் தானே. என்ன கதையளந்து கொண்டிருப்பதை விட்டு என்ன நடக்கிறது என்று நீங்கள் கோவிப்பதற்கு முன் அடுத்த மனப் போராட்டம் என்ன என்பதை சொல்கின்றேன். நடுவில் நின்ற குருவியை நோக்கி வேகமாக 'பேத் அவனியூவில்' ஒரு வாகணம் வந்து கொண்டிருந்தது. குருவியின் கவனமெல்லாம் புழுவையும் என்னையும் பற்றித்தான் இருந்தது. எங்கே நான் புழுவை அபகரித்து விடுவேனோ என்று அது அஞ்சி இருக்கவேண்டும். குருவியை 'சூ' என்று கலைத்து காப்பாற்றுவதா என்ற எனது மனப்போராட்டத்தில் முடிவு எடுக்கு முன் வேகமாக வந்த வாகணம் குருவியை அடித்து குருவியின் வாழ்க்கைக்கு முடிவு எடுத்துவிட்டு வேகமாக தொடர்ந்து சென்று கொண்டிருந்தது. இறந்துபோன குருவியின் சிறகுகள் பறக்க குருவி துடித்துத் துடித்து இறந்தது.

நான் முடிவு எடுக்கு முன் முடிவுக்கு வந்த குருவி எனக்கு ஒரு புது மனப்போராட்டத்தை தந்தது. மன அமைதிக்காக நடை புறப்பட்ட நான் தொடர்ந்தும் மன உலைச்சலுடன் குருவியின் சாவிற்கு காரணம் நான் தானா என்று யோசித்தேன். நான் வாகணம் வருவது தெரிந்தவுடன் குருவியை 'சூ' என்று கலைத்திருக்கலாமல்வா?

இப்படி மனம் சஞ்சலப்பட்டிருக்கும் வேளையில் சென்ற நூற்றண்டின் நடுப்பகுதியில் அதாவது 1950ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பெரும் யோகியின் ஞாபகம் எனக்கு வந்தது. அவர் பல சந்தர்ப்பங்களில் கூறிய வாசகம் 'எப்போ ஆகிய விடயம்.' அப்படியானால் குருவி இப்படி சாகவேண்டும் முன்பே தீர்மாணிக்கப்பட்டிருந்தால் நான் எப்படி அந்த சாவிற்கு காரணமாக முடியும். எனவே என்னை நான் தேற்றிக் கொண்டு நடையை தொடர்ந்தேன். சிமெந்தில் குருவி கொத்தி காயப்படுத்திய புழு துடித்துக் கொண்டிருந்தது. அதை ஒரு குச்சியால் பாதையின் கரையில் இருந்த புல்தரைக்கு தட்ட குணிந்த வேளை அந்த யாழ்பான யோகி சென்ன 'சும்மா இரு' என்ற வாசகம் என் ஞாபகத்திற்கு வந்தாலும் நான் புழுவை கரைக்கு தட்டிவிட்டு நடையை தொடர்ந்தேன். நான் யோகின் வாசகத்திற்கு எதிராக கரைக்கு தட்டிவிட்டது சரிதானே?

kumarpunithavel@thaiveedu.com

■ ■ ■

கனடா இந்து மாமன்றமும் பாப்பா பாரதி மன்றமும் இணைந்து நடத்தும்

கோடைகால பாசறை 2010
(SUMMER CAMP)
ஜுலை 5 முதல் ஒகஸ்ட் 20வரை

யோகாசனம், இநதுசமயப் பண்ணிசை, கொம்பியூட்டர், கைத்திறன், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்றவை கற்பிக்கப்கடும்.


416 451 8427, 416 492 4908,
905 294 0623, 416 797 1517.

வீடு வாங்குவதற்கும் விற்பதற்கும்




Century 21
Service Plus
5855 Taschereau Blvd (Office)
Brossard, Quebec. J4Z 1A5
Email : sugumaran@sympatico.ca

Office : (514) 299-3186
(450) 926-1881



Sugumaran Sinnaiah
Chartered Real Estate Broker



The Theory of Reliability.
Proven by Honda
0.9%† PURCHASE FINANCING FOR UP TO 60 MONTHS
Civic
LEASE FOR /APR $148# @2.9%£ PER MONTH FOR 48 MONTHS WITH $3,868 DOWN ON APPROVED CREDIT
$17,420‡ MSRP For Civic DX Sedan Includes Freight & Fees
"What no competitor matches is this compact's particular fusion of engineering, style, value and reputation for reliability…"
Consumer Guide – Sept. 2009
Civic DX Sedan model FA1E2AEX
PROVEN: Civic is Canada's best-selling car for the 12th straight year.*
0.9%† PURCHASE FINANCING FOR UP TO 60 MONTHS
Accord
LEASE FOR /APR $248# @2.9%£ PER MONTH FOR 48 MONTHS WITH $5,507 DOWN ON APPROVED CREDIT
$26,475 MSRP For Accord LX Sedan Includes Freight & Fees
"…what so reliably sets the Accord apart is its platform – as solid and unyielding as a shotgun barrel."
Car and Driver/10Best – Jan. 2010
Accord LX Sedan model CP2E3AE
PROVEN: Accord has won more Car and Driver 10Best awards than any other vehicle.
STARTING FROM 0.9%† PURCHASE FINANCING
Odyssey
LEASE FOR /APR $388# @1.9%£ PER MONTH FOR 48 MONTHS WITH $7,206 DOWN ON APPROVED CREDIT
$39,515 MSRP For Odyssey NHL® SE Includes Freight & Fees
"Top 10 Family Cars"
Kelley Blue Book – Feb. 2010
Odyssey NHL® SE model RL3H5AE
PROVEN: Odyssey is a true friend of the family.
0.9%† PURCHASE FINANCING FOR UP TO 48 MONTHS
CR-V
LEASE FOR /APR $268# @3.9%£ PER MONTH FOR 48 MONTHS WITH $5,734 DOWN ON APPROVED CREDIT
$28,015 MSRP For CR-V LX 2WD Includes Freight & Fees
"Residual Value Award - Best Compact Utility"
Automotive Lease Guide – Feb. 2010
CR-V LX 2WD model RE3H3AEY
PROVEN: CR-V value starts high, and stays there.
HONDA
அதீசன் (SHAN) சர்வானந்தன்
CELL (416) 720-1184
FORMULA HONDA
2240 MARKHAM ROAD, SCARBOROUGH, ONTARIO M1B 2W4. TEL:416-754-4555 EXT.2705, FAX:416-754-9465
#Limited time lease offers based on new 2010 Honda models. Lease examples based on new 2010 Civic DX Sedan, model FA1E2AEX / 2010 Accord LX Sedan, model CP2E3AE / 2010 CR-V LX 2WD, model RE3H3AEY / 2010 Odyssey NHL SE, model RL3H5AE available through Honda Financial Services on approved credit. £2.9% / 2.9% / 3.9% / 1.9% lease APR for 48 / 48 / 48 / 48 months. Monthly payment (includes freight and PDI, environmental fees and OMVIC fee) is $148 / $248 / $268 / $388. Down payment or equivalent trade of $3,868.30 / $5,506.71 / $5,734.36 / $7,205.74, first monthly payment and $0 / $0 / $0 / $0 security deposit due at lease inception. Total lease obligation is $12,433.70 / $19,809.10 / $21,051.15 / $29,322.61. Taxes, license, insurance and lien registration (if applicable) are extra. 96,000 kilometre allowance; charge of $0.12/km for excess kilometres. Retailer may lease for less. Retailer order / trade may be necessary. †Limited time financing offers based on new 2010 Honda models. Available for 60 months on 2010 select Civic and Accord models; available for 36 months on 2010 Odyssey and available for 48 months on 2010 CR-V models. Finance example based on new 2010 Civic DX Sedan, model FA1E2AEX available through Honda Financial Services on approved credit. ‡MSRP is $17,420 (includes $1,430 freight and PDI, and environmental and OMVIC fees) financed at 0.9% APR equals $297.02 per month for 60 months. Cost of borrowing is $401.43 for a total obligation of $17,821.43. Taxes, license, insurance and lien registration (if applicable) are extra. Retailer may sell for less. Retailer order / trade may be necessary. #/£/†Offers valid from May 2nd, 2010 through May 31st, 2010 at participating Honda retailers. Offers valid only for Ontario residents at Ontario Honda Dealers. Offers subject to change or cancellation without notice. See your Honda retailer for full details. *As reported by Canadian manufacturers for calendar year 2009. NHL and the NHL Shield are registered trademarks of the National Hockey League. © NHL 2010. All rights reserved.


Beat the heat
PRIME MINUS - 60
5 Variable Closed
1.65%
WINNER
CMP Canadian Mortgage Awards 2010
Residential and Commercial
Mortgages - Pivate Funds - Investments
SUGANTHAN THAVARAJASINGAM
BUSINESS DEVELOPMENT MANAGER
MORTGAGE AGENT #M08010501
416-283-2377 Ext 116
35 GRAND MARSHALL DRIVE, SCARBOROUGH ON M1B 5W9


S.P.IMPORTERS
Furniture
SP
அனைத்து தளபாடங்களும் மிக மிக மலிவு விலையில்
NO PAYMENT INTEREST for 1 YEAR 416-266-3077
கொள்வனவு விலையில்
மலிவு விற்பனை
Sealy Posturepedic
Special Sealy Mattress on SALE
ஒரே பிளாசாவில் 4 தனிப்பெரும் ஸ்தாபனங்கள்...
2861 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8
(Brimley & Lawrence சந்திப்பில்)


MARKHAM GATES
Golden Opportunity!
Affordable 2 and 3 bedrooms luxury townhomes starting from $229,000
Top 10 reasons to buy NOW!
1. Breakthrough pricing
2. In-suite laundry
3. Laminate flooring
4. 5 Free appliances
5. Parking included
6. Low maintenance
7. Quality Builder
8. Great Location
9. Close to 401
10. New TTC proposal
Excellent location
Markham Road and Sheppard Avenue,
new subway proposal,
minutes away from shopping centres, hospitals,
schools, university, college, libraries, and more.
Coming soon!
Booking by invitation only.
Register for your invitation now!
www.idealdevelopments.com
Tel: 416-754-3500
IDEAL Developments
Building a Future Together


American Standard உபகரணங்கள் நகரிலேயே
மிகச்சிறந்த விலையில்...
Government Rebate
$1715.00
AC - From $24.99
Furnace - From $24.99
Tankless - From $29.99
Raman Chelliah
105 Kennedy Road, Unit 6 (2nd floor)
Brampton, ON.
(Kennedy & Steeles)
Tel: 647-893-4414
3021 Markham Rd., Unit 51&52,
Scarborough, ON.
(McNicoll & Markham)
Tel: 416.332.1989
Grand Opening Brampton Location
Fax: 416.332.4967, E-mail: info@raheatingcooling.com
Raman Appliances Inc.


வீடு தரம் உயர்த்துதலுக்கான
வங்கிக் கடனுதவி...
Roofing
Heating & Air conditioning
Flooring & Kitchen
Landscaping (including Drive way)
Windows & Doors etc...
இந்த சேவைகளுக்கான
கட்டணத்தை
ஒரு வருடம் வரை
செலுத்தத்தேவையில்லை.
போன்றவற்றை உங்கள் வீடுகளில் தரமுயர்த்தும்போது,
இந்த சேவைகளுக்கான வங்கிக் கடனைப் பெறுவதற்கு
ஒழுங்குசெய்து தருகிறோம்.
Raman Appliances Inc.
3021 Markham Rd., Unit 51&52, Scarborough, ON.
Tel: 416.332.1989, Cel: 647-893-4414
Fax: 416.332.4967, E-mail: info@raheatingcooling.com
- digi Media -

# சேவைத் தரம்

## (Quality of Service)

- பொன் குலேந்திரன் -

வணிகத்தில் சேவைத்தரம் முக்கிய அங்கமாகும். வருமானம் அதிகரிக்கிறதா அல்லது குறைகிறதா என்பது சேவைத்தரத்தில் தங்கியுள்ளது. வாடிக்கைக்காரரின் மதிப்பைப் பெற்று மேலும் மேலும் வாடிக்கைக்காரர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் சேவைத் தரம் முக்கிய பங்கு வகிக்கிறது. இதை ஆங்கிலத்தில் சுருக்கமாக Q.O.S என அழைப்பர். பொருளை விற்றால் மட்டும் போதாது. அதன் பின் அப்பொருளை பாவிக்கும் வாடிக்கையாளருக்கு பிரச்சினைகள் ஏற்படின் அதை அவரின் மனது திருப்தியடையும் வகையில் வாடிக்கைக்காரர் சேவை (Customer service) தரமுள்ளதாக இருக்க வேண்டும். சேவை ஒப்பந்தம் சட்டப்படி சில தொலைதொடர்பு ஸ்தாபனங்களால் அமுல்படுத்தப்பட வேண்டும். அதை ஆங்கிலத்தில் SLA (Service Level Agreement) என்பர். உதாரணத்துக்கு ஒரு தொலைகாட்சிப் பெட்டியை 1,000 டொலருக்கு விற்றால் மட்டும் போதாது. அதன் பின் ஏற்படும் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட பிரச்சினையோ அல்லது பொருளை பண்டகசாலையில் இருந்து குறிப்பிட்ட நேரத்துக்குள் கொண்டு போய் வீட்டில் ஒப்படைப்பதோ சேவைகளில் ஒன்றாகும். சேவைத் தரத்தை பின்வரும் சேவைகளிலிருந்து கணிக்கலாம்.

- கடைக்கு வந்த வாடிக்கையாளருடன் பழகிப் பேசும் விதம்.
- குறைந்த நேரத்தில் அவரது தேவையை பூர்த்தி செய்வது.
- விற்கும் சேவையினால் (உதாரணத்துக்கு மின்இணையச்சேவை, Internet) ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்துவைக்கும் முறை.
- தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் முறை. உரையாடும் விதம்.
- முறைகளைக் கவனித்து தீர்த்துவைக்க எடுக்கும் நேரம்.
- சேவைக்காக காத்திருக்கும் நேரம்.
- பண்டகசாலையில் இருந்து வாங்கிய பொருளைப் பட்டுவாடா செய்வதில் எடுக்கும் தாமதமும் முறைகளும்.
- வாடிக்கையாளர்களின் சந்தேகங்களை தீர்த்துவைப்பது.

வாடிக்கைகாரர்கள் எதிர்பார்க்கும் சேவைகளை ஒரு ஸ்தாபனம் வழங்குவதில் கீழ்க் கண்ட இடைவெளிகளைக் காணலாம்.

வாடிக்கைகாரார் எதிர்பார்த்த சேவை வேறு, ஸ்தாபனத்தின் மேலாண்மை (Management) நினைத்திருப்பது வேறு. உதாரணத்துக்கு எயார் கனடா விமானச் சேவையில் பெரும் பாலும் பயணிகள் எதிர்பார்ப்பது குறிப்பிட்ட நேரத்துக்கு விமானம் போய் சேர்வதையே யாகும். ஆனால் மேலாண்மை, விமானத்துக்குள் பரிமாறப்படும் உணவின் தரத்தை பொறுத்தது சேவையின் தரம் என நினைக்கக் கூடும். இத்தகைய இடைவெளியை நீக்குவதற்கு விமானத்தில் பயணம் செய்பவர்களிடம் சேவையைப் பற்றிய சில கேள்விகளைக் கேட்டு அவர்கள் கருத்தை அறியலாம்.

தமிழர்கள் நடத்தும் வியாபாரத் ஸ்தாபனங்களில் வாடிக்கைக்காரார்களிடம் தம் ஸ்தாபனத்தின் சேவையைப் பற்றிய கருத்தை அறிந்து அதை எப்படி மேம்படுத்தலாம் என்று திட்டமிடல் குறைவு. தம்மைப் போன்று வியாபாரம் நடத்தும் போட்டியாளர்கள் விடும் குறைகளை சுட்டிக்காட்டுபவர்களைத் தவிர தம் சேவையில் உள்ள குறைகளை கணித்து நடவடிக்கை எடுப்பவர்கள் குறைவு. பொருட்கள் வாங்க வரும் போது வாடிக்கையாளர்கள் முக்கியமாக எதிர்பார்ப்பது இலகுவில் வாகனங்களை தரிக்க இடவசதி. பஸ் சேவை அல்லது ரெயில் சேவையை நாடுபவர்கள் கிழமைகளில் ஏழு நாட்களிலும் பயன்பெறக்கூடிய இடம். ஆனால் அதைக் கருத்தில் கொள்ளாமல் போட்டியாளரை விட சற்று விலை குறைவாகப் பொருட்களை விற்றால் மட்டும் போதாது. போக்குவரத்து வசதிக்கு வாடிக்கையாளர்கள் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பதை அறிந்து அதுக்கேற்றவாறு வியாபாரம் செய்யும் இடத்தை தெரிந்தெடுக்க வேண்டும்

> “ வியாபார நிறுவனங்களில், வாடிக்கையாளர்களிடம் சேவையைப் பற்றிய கருத்தை அறிந்து அதை மேம்படுத்தும் திட்டம் குறைவு. மாறாக, வியாபாரம் நடத்தும் போட்டியாளர்கள் விடும் குறைகளை சுட்டிக்காட்டுபவர்களே அதிகம். ”

மேலாண்மை வாடிக்கையாளர்களின் சேவை சரியாக அறிந்திருந்தாலும் அது எவ்வளவுக்கு இருக்க வேண்டும் என்பதை குறிப்பாக ஊழியர்களுக்கு எடுத்துச் சொல்ல மாட்டார்கள். உதாரணத்துக்கு தொலைபேசியில் கொடுக்கப்படும் தொழில் நுட்ப சேவைகள் பலவுண்டு. மின்னிணைப்பு வேலை செய்யா விட்டாலோ அல்லது வாங்கிய சில பொருட்கள் சரியாக செயல்படாவிட்டாலும் உத்திரவாதத்தின்படி வாங்கியவர்கள் பொருளை வாங்கிய இடத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தம் பிரச்சினையைத் தீர்க்கப் பார்ப்பார்கள். அரை மணிநேரம் தொலைபேசியில் வீணாக்க விரும்பமாட்டார்கள். தொலைபேசியில் வரும் அழைப்புகளை எவ்வளவு நேரத்துக்குள் கவனிக்கப்பட வேண்டும். வாடிக்கையாளர்களுடன் உரையாடும்போது எத்தகைய வார்த்தைகளை பாவிக்க வேண்டும் என்ற வரைமுறைகளை ஊழியர்களுக்கு அறிவுறுத்தல் அவசியம். இதில் ஊழியர்களுக்கு தேவையான பயிற்சி கொடுப்பது அவசியம். அவர்கள் வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொள்ளும்போது எத்தகைய பிரச்சினைகளை சந்திக்கிறார்கள். அதை எவ்வாறு சுருங்கிய நேரத்துக்குள் தீர்த்து வைக்க முடியும் போன்றவைகளை பயிற்சியின்போது விளங்கப்படுத்துவது அவசியம். வேலை பழுவினால் சில சமயம் ஊழியர்கள் தம்மை மறந்து வாடிக்கையாளர்களுடன் முரட்டுத்தனமாக நடப்பது சாத்தியம். ஆகவே அதை தவிர்க்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தொலைபேசியில் வரும் அழைப்புகளுக்கு மறுமொழி கொடுப்பவர்களின் குரல் இனிமையாக இருப்பது அவசியம். இதற்காக பெரும்பாலும் பெண்களை அந்த ‘அழைப்பு மையம்’ (Call center) என அழைக்கப்படும் இடத்தில் வேலைக்கு நியமிப்பார்கள். ஒரு அழைப்பு காலை நேரத்தில் வந்தவுடன் “காலை வணக்கம். தயவுசெய்து நான் எவ்வாறு உங்களுக்கு உதவலாம்” (Good morning. How can I help you please). அழைப்பு முடிவில் “நன்றி. மேலும் மேலும் பிரச்சினைகள் இருந்தால் எங்களுடன் தொடர்பு கொள்ளத் தயங்க வேண்டாம். (“Thank you. If you have further problems please do not hesitate to contact us). நன்றி, தயவுசெய்து போன்ற சொற்களுக்கு சேவைத் தரத்தில் முக்கிய பங்குண்டு. சேவையில் திருப்தியடையாதவர்களும், கோபமாக பேச ஆரம்பித்தவர்களும் இவ்வார்ததைகளால் கவரப்பட்டு சாந்தமடைவார்கள். இங்கிலாந்தில் இந்த வார்த்தைகளுக்கு பெருமதிப்புண்டு. அச்சொற்களைப் பாவிக்காதவர்கள் நாகரிகமற்றவர்களாகக் கருதப்பட்டுவார்கள். அரபு நாடுகளில் “அஸ்லாமலைக்கும்” என ஆரம்பித்து எப்படியிருக்கிறீர் என சம்பாஷனையை ஆரம்பிப்பார்கள். சிலர் நேரடியாக பிரச்சினைக்கு வராமல் கால நிலையைப் பற்றியோ, அல்லது வாழ்க்கைச் செலவு, செய்யும் தொழில் ஆகியவற்றைப் பற்றி சில வினாடிகள் பேசி வாடிக்கையாளரை தன் வழிக்கு கொண்டுவந்த பின் பிரச்சினைக்கு வருவார்கள்.

சில சமயங்களில் ஒரு ஸ்தாபனம் நல்ல நோக்கத்துடன் சேவைக்குப்பின் செயற்பட்டால் சேவைபெற்றவர்கள் அதை வேறு தப்பான எண்ணத்துடன் கருதக் கூடும். உதாரணத்திற்கு பல் வைத்தியரின் உதவியாளர் “நாளை நீங்கள் டாக்டரை பார்க்க வேண்டிய நாள்” என நினைவூட்டினால் அதற்கு “இதென்ன டாக்டர் பிஸ்னசுக்கு என்னை விடமாட்டார் போல இருக்கிறது” என கருதுவோருமுண்டு.

சேவைத்தரத்தில் எதை மக்கள் முக்கியமாக எதிர்பார்க்கிறார்கள் என்பதை பற்றி சந்தை ஆராய்ச்சி நடத்திய போது 100க்கு கீழ் கண்ட புள்ளிகள் கொடுக்கப்பட்டது

**பொருளின் மேல் நம்பிக்கை:** பொருள் தரக் கூடிய சேவையை வாங்கும் போது விற்பனை செய்தவர் கூறியவாறு இருத்தல்.
– 31 புள்ளிகள்.

**விடையளிக்கும் முறை:** வாடிக்கையாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு விளக்கமாகவும் மரியாதையாகவும் விடையளித்தல்.
– 23 புள்ளிகள்.

**உறுதி செய்தல்:** ஊழியர்களின் அறிவும் அவர்கள் தங்களுக்கு நல்ல சேவையைத் தருவார்கள் என்ற வாடிக்கையாளரின் உறுதி.
– 19 புள்ளிகள்.

வாடிக்கைக்காரர்களின் உணர்வைப் புரிந்து கொள்ளும் ஊழியர்களின் திறமை
– 16 புள்ளிகள்.
தெளிவாகத் தெரியும் பொருட்கள் (Tangible Products)
– 11 புள்ளிகள்.

மெக்டொனெல் சேவைத்தரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. தமது கடைகளில் இருந்து வரும் வரும்படிகளை மட்டும் கணிக்காமல், சேவைத்தரம், துப்பரவு, பெறுமதி ஆகியவற்றை தொடர்ந்து கணித்து ஒரு குறிப்பிட்ட தரத்தை அடையாத கடைகளை மூடிவிடுவர். இவ்வாறே சுவிஸ் எயர், சிட்டி வங்கி ஆகிய ஸ்தாபனங்கள் தம் தரத்தை தம் போட்டி ஸ்தாபனங்களைவிட உயர்ந்த அளவில் எதிர் பார்க்கிறார்கள்.

ஒரு தொலைபேசி அழைப்பிற்கு 10 செக்கன்டுக்குள் விடை கொடுத்தாக வேண்டும்.

தொலைபேசி சேவை, தகவல் பரிமாறும் சேவை (Data Communication) சேவைத்தரம் முக்கிய இடம் பெறுகிறது. ஒரு தொலைபேசி அழைப்பு தேவையான இடத்தை எத்தனை செக்கனில் போய் அடைய வேண்டும் என்பது முக்கியம். அவ்வாறே ஒரு மின் அஞ்சலோ அல்லது தகவலோ ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைய எடுக்கும் நேரம் முக்கியம். அதுவுமன்றி போய் சேர்ந்த தகவலில் எத்தனை பிழைகளுண்டு என்பதும் முக்கியம். இதை அளப்பதற்கு கருவிகளுண்டு.

சேவைத்தரத்துக்கும் பொருளின் விலைக்கும் தொடர்புண்டு. தரம் கூடும்போது விலையும் கூடுகிறது. காரணம் - கொடுக்கப்படும் சேவைத் தரத்தைக் கூட்ட அதிக பயற்சி பெற்ற ஊழியர்கள் தேவை. ஆகவே முதலீடு அதிகரிக்கும். மலிவு விலைப் பொருட்களின் சேவை தரம் குறைவு.

தமிழ் வர்த்தகச் சம்மேளனம் கனடா, இந்த தலையங்கத்தை வைத்து ஒரு கருத்தரங்கை ஒழுங்கு செய்து வணிகர்களின் சேவைத் திறனைப் பற்றிய அறியாமையை போக்க வேண்டும்.

pon.kulendiran@thaiveedu.com

■ ■ ■




வீடு வாங்க, விற்க மற்றும் முதலீடு செய்வதற்கு
அனுபவம் உள்ள என்னை தொடர்பு கொள்ளுங்கள்
சுஜன் ஷான்
Real Estate Broker
416 402 1040
Bus: 416 321 2228
E mail: sujan.shan@gmail.com
RE/MAX
Vision Realty Inc.
www.NewReleaseCondos.com

# CTR தகவல் பலகை

## ROOMS / BASEMENT RENT

**DONMILLS & SHEPPARD**
3 bedroom basement
(near all facilities)
Pathie : 416-502 8053

**WESTON & FINCH**
3 bedroom house for rent
(single rooms are available as well)
Rajitha: 647 456 9332

**MCCOWAN & STEELE**
2 bedroom basement for rent from July 1st
Selvakumar: 905 472 6866
(Shanmugarajah)

**MORNINGSIDE & MCLEIVN**
1 room for rent – upper level
Raja Iprakim: 647 295 9655

**NEILSON & ELLESMERE**
House for rent from Aug 1 st
(4 bedroo + 1 bed room basement
)Ariyaratnam : 416 283 9332

**BRIMLEY & LAWRENCE**
2 bedroom basement
Kokulan: 416 616 8200

**MARKHAM & STEELE**
2 bedroom basement
Alfred: 905 471 4727

**GOLF CLUB & LAWRANCE**
2 bedroom basement/ separate entrance
Sri: 647 802 1599

**LIVEPOOL & BAILEY**
Commercial Unit for rent
Kumar: 905 554 2568

**BRIMLEY & ELLESMERE**
1 room from 2 bedroom basement rent.
Raj: 647 456 3144

**VICTORIA PARK & ELLESMERE**
Basement 2 bedroom with
separate entrance
Mrs. Ari: 416 441 1830

**MARKHAM & STEELE**
1 bedroom basement with
separate entrance
Vimala: 905 554 2463
647 302 5993

**MEDOWVILLE & ELLESMERE**
2 bedroom basement
Mrs. Anton: 416 847 9817

**BRAMPTON**
Basement- 2 bedroom with
separate entrance
Tharsini: 647 401 2219

**DENISION & MIDDLEFIELD**
2 room for rent
Mrs. Sioa : 905 201 9901/
416 647 1987

**NEED A ROOM**
(including Vege food)
Near Warden/ Sheppard
Aanandarajah:647 456 9260

## AUTO

**2009 TOYOTA COROLLA**
5000K for $ 12 900
Raja: 416 451 6895

**1990 TOYOTA COROLLA**
(good condition)
647 444 2862

**1994 MAZDA**
Nirmalan: 905 502 8359

**1990 HONDA ACCORD**
Running condition
Thilagu: 416 840 9762

**1996 HONDA CIVIC**
Gana: 647 898 7161

**1995 TOYOTA CAMRY**
Varan: 647 204 0680

**1994 NISSAN VAN**
with 7 seats
David: 647 996 6977

**VAN SERVICES**
Airport/ Niagar/USA –
Van Services
Also moving available
Kumar: 647 287 0731

**THAIYAL CLASSES**
Sandra: 416 431 8655

**DVD WITH STAND**
Bala: 647 339 1636

**MALLIKAI**
Sri: 416 823 3552

CTR
கனடியத் தமிழ் வானொலி
416 264 8798

**LADDER, PLANTS FOR GARDENING AT HOME, ARTIFICIAL FLOWER**
Thillainathan: 416 297 7633/ 416 877 4518

**PAINTING**
Home/Comm
Geeva: 416 754 2096

**LAND FOR SALE**
2 parappu land for sale in Nallur area
Raji: 416 335 5201

**VEEDU VELAIKAL**
Sepastian: 647 295 3202

**GERRAD /COXWALL**
Coin laundry
for sale (Gerrad /Coxwall)
Thava: 416 332 8650

**BABY CRIB, DIAPER TABLE, KEYBOARD, HOME THEATRE**
Selvan: 416 732 8615

**COOLER-WATER HEATER/ FRIDGE/FAN FOR LOW PRICE (NEW)**
647 444 2862

**அச்சுவேலி**
அச்சுவேலி சந்நிதிக்கருகாமையில்
8 பரப்பு காணி விற்பனைக்கு
Rajah: 416 289 2206

**McGowan & Lawrence**

2 Bedroom Basement for rent

Separate entrance

Gnanam 647 829 8082

**A Z வாகன சாரதிகள் தேவை**

கனடாவிற்குள் கனரகவாகனம் செலுத்துவதற்கு மூன்றுவருடத்திற்கு மேல் அனுபவமுள்ள A Z வாகன அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் சரதிகள் தேவை.

தொடர்புகட்கு:
பிரபா: 416 716 6785


## வீடு விற்பனைக்கு

**தமிழ்நாடு**

பல்லாவரத்தில் மீனம்பாக்கம் விமான நிலையத்தக்கு அருகாக மூன்று அறையும் இரண்டு குளியலறையும் கொண்ட இரண்டு மாடித் தனிவீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
416 880 9613

# துயர் பகிர்வோம்



### திரு. தனிநாயகம் ஜீவரட்ணம்(ஜீவா)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும், தற்போது பிரான்சில் வசித்து வந்தவருமான தனிநாயகம் ஜீவரட்ணம் அவர்கள் 10.06.2010 அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சுப்பிரமணியம் தனிநாயகம் (பொலிஸ் அதிகாரி) பராசக்தி(இந்தியா) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமநாதர் கமலம் (நெடுந்தீவு கிழக்கு) தம்பதிகளின் அன்பு மருமகனும், சரோஜாவின் அன்புக் கணவரும்,

இராஜரட்ணம்(ராஜன் -கனடா), யோகமங்களம் (கனடா), காலஞ்சென்றவர்களான துரைரட்ணம், பஞ்சரட்ணம் மற்றும் ஜீவமங்களம் (வவுனியா), அரசரட்ணம் (பிரான்ஸ்), மேனகா-தேவி (இந்தியா), அகிலேஸ்வரி (கனடா), மகேந்திரன் (இந்தியா) ஆகியோரின் சகோதரரும், சாமினி (கனடா), ஜதீஸ் (கனடா), சிறிதரன் (பிரான்ஸ்), றஞ்சினி (சுவிஸ்), கலாதேவி (கனடா), மனோகரன் (கனடா), யோகமலர் (இந்தியா), இரவீந்திரன் (சுவிஸ்), ரட்ணராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு 21.06.2010 அன்று பிரான்சில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| ரட்ணராஜா(ரகு) | பிரான்ஸ் | 3360 998 3322 |
| சரோஜா | பிரான்ஸ் | 3314 739 9106 |
| அரசன் | பிரான்ஸ் | 3365 953 4886 |
| சசிகுமார்(சசி) | பிரித்தானியா | 44777 157 4561 |



### திருமதி. தேவாம்பிகை பாலச்சந்திரன்

கோப்பாயை பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் தற்பொழுது கனடாவில் வசித்து வந்தவருமான தேவாம்பிகை பாலச்சந்திரன் அவர்கள் 23.06.2010 அன்று பிரான்சில் காலாமானார்.

அன்னார் தில்லையம்பலம் தங்கம்மா தம்பதிகளின் புதல் வியும், சுப்பிரமணியம் நாகம்மா தம்பதிகளின் மருமகளும், காலம்சென்ற UK பலச்சந்திரன் அவர்களின் மணைவியும், தேவபாலன் (இந்தியா), றஜீதா (கனடா), ரவிச்சந்திரன் (கனடா), விஜிதா (கனடா), ராம்மோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் தாயாரும், சிவநாதன் (பிரான்ஸ்), கனகாம்பிகை (பிரான்ஸ்), லலிதாம்பிகை (பிரான்ஸ்), சிவகுருநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், வனிதாதேவி (இந்தியா), வேல்றைதன் (சகாப்தன்-கனடா), சசிமாலா (கனடா), கிருபாகரன் (கனடா), சுகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், விஜயராணி (பிரான்ஸ்), சுந்தரம்பிள்ளை (பிரான்ஸ்), யோகானந்தன் (பிரான்ஸ்), ஜஸ்மின் ரதி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் சா்மிலன், நிருஷன், நிவேதா, நித்தியா, பிரகாஷ், சகாப்தன், கவினா, டெனிஷா, கினிஷா, ஜெனித்திரன், ஜதுஷா, அபிஷா, ஆகாஸ், ஆரணி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு பிரான்சில் நடைபெற்றது.

| | | |
|---|---|---|
| றஜிதா | - | 1 905 789 9222 |
| ரவி | - | 1 905 789 0146 |
| விஜிதா | - | 1 416 751 0029 |
| மோகன் - பிரான்ஸ் | - | 33 162 769 6755 |

# எம்மிடையே வாழ்ந்த முன்னோடித் திறனாய்வாளர்

# நோத்றொப் ஃப்றை 1912-1991

விமர்சகர்களைக் கண்டு பயப்படும் படைப்பாளிகள் பலர் எம்மிடையே உள்ளனர். அவர்களின் பயம் தேவையற்றது. விமர்சகர்கள் பல கற்ற, தேர்ந்த, நுட்பமான வாசகர்கள் என்பதே உண்மை. அத்துடன், விமர்சகர்கள் படைப்பாளிகளை பிடித்துத் தின்னும் பூதமும் அல்ல. மாறாக, அவர்கள் படைப்பாளிகளின் படைப்புக்களின் திறன்களை நுட்பமான ஆய்வுக்குட்படுத்துபவர்களே. விமர்சனத்திற்கான தமிழ்ப் பதம் திறனாய்வு. அத் தமிழ்ப் பதம் விமர்சனத்தின் பணியை அருமையாக வெளிப்படுத்துகிறது.

அந்த இலக்கியத் திறனாய்வை ஒரு துறையாக ஆக்கிய பெருமைக்கு உரியவர் எம்மிடையே வாழ்ந்த நோத்றொப் ஃப்றை (Northrop Frye). அவர் இலக்கியத் திறனாய்வுக்கு ஆற்றிய பணியைப் பற்றிச் சுருக்கமாகப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

நோத்றொப் ஃப்றை கனேடிய இலக்கியத் திறனாய்வாளர். இலக்கியத் திறனாய்வுக் கொள்கையாளர். இருபதாம் நூற்றாண்டில் சிறந்த திறனாய்வாளராக உலகில் பெரும் செல்வாக்குச் செலுத்தியவர்களுள் ஒருவர். அவரின் புகழ் கனேடிய எல்லைகளைத் தாண்டியது.

வில்லியம் ப்ளேக்கின் கவிதைகளை வியாக்கியானப்படுத்தி எழுதிய அவரின் முதலாவது நூல் Fearful Symmetry (1947). அது அவருக்குப் பெரும் புகழைக் கொணர்ந்தது. ஆனால் அவருக்கு அழியாப் புகழைக் கொண்டு வந்த நூல் - திறனாய்வு உடற் கூற்றியல் - Anatomy of Criticism (1957). அது அவருடைய இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகள் பற்றியது. இலக்கியத் திறனாய்வு பற்றி இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த மிக முக்கிய நூல்களுள் ஒன்று அது.

அமெரிக்கத் திறனாய்வாளரான ஹரோல்ட் ப்ளூம் அதைப்பற்றிக் கூறும்போது, 'இந்த நூல், இப்போது வாழ்பவர்களில் ஃப்றையை மேல் நாட்டு இலக்கியத்தின் முன்னணி மாணவனாக ஆக்கியுள்ளது' என்கிறார். பண்பாட்டுத் திறனாய்வு, சமூக திறனாய்வில் அவரின் பங்களிப்பு நீண்ட காலம் தொடர்ந்தது. அது அவருக்குப் பெரும் புகழையும் கொணர்ந்தது. கூடவே, அவருக்குப் பல விருதுகளையும் கொண்டு சேர்த்தது.

குவெபெக்கில் பிறந்த அவர், வளர்ந்தது நியு பிறண்ஸ்விக்கில். படித்தது ரொறொன்ரோப் பல்கலைக் கழகத்திலும் ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்திலும். நீண்ட காலம் பேராசிரியராக இருந்தது ரொறொன்ரோப் பல்கலைக்கழகத்தில். அவரின் உடல் மவுண்ட் ப்ளெசென்ற் மயானத்தில் அடக்கம் செய்யப் பட்டுள்ளது.

ஃப்றை இலக்கியத்தைப் புதிய முறையில் கற்பது எப்படி என்பதைக் காட்டினார். அவரின் செல்வாக்குக்கு உட்பட்டவர்கள் அமெரிக்க திறனாய்வாளரான ஹரோல்ட் ப்ளூமும், கனடிய எழுத்தாளரான மார்கரெட் அற்வுட்டும் ஆவர்.

முதலாவது, அவர் இலக்கியத் திறனாய்வுக்கு ஓர் ஒழுங்கான திறனாய்வுக் கொள்கைகள் தேவை என்பதை வலியுறுத்தினார். அத்துடன், அதைச் செய்தும் காட்டிய முதலாவது திறனாய்வாளரும் அவரே. அதாவது, திறனாய்வை ஓர் ஒழுக்கப் பயிற்சி அல்லது துறை என்ற அந்தஸ்துக்கு அதை உயர்த்தினார். அதற்கு எல்லைகள், கொள்கைகள், தத்துவங்கள், உத்திகள் ஆகியவை இருக்க வேண்டும் என்றும் கூறினார். அவற்றை - Anatomy of Criticism - திறனாய்வு உடற் கூற்றியல் - என்ற நூலில் ஆராய்ந்தார்.

இரண்டாவது, திறனாய்வு என்ற ஒழுக்கம், விஞ்ஞானமாகவும் அதேவேளை கலையாகவும் இருந்தால் என்ன செய்வது? என்ற கேள்வியையும் கேட்கிறார். எப்படி விஞ்ஞானம் தர்க்கத்தின் மூலம் முரண்பாடற்ற துறையாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறதோ அதே போல கற்பனையை அடிப்படையாகக் கொண்ட இலக்கியமும், அதை அதை ஆராயும் இலக்கியத் திறனாய்வும் அப்படி முரண்பாடற்ற துறையாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முயல்கிறது என்றார்.

மூன்றாவது, அது தன்னை முரண்பாடற்ற துறையாக நிறுவிக்கொள்ள அதற்குத் தனித்தியங்கக் கூடிய தன்மை இருக்க வேண்டும். அதாவது, இலக்கியம் வேறான கல்விப்புலமாகவும், திறனாய்வு வேறான கல்விப்புலமாகவும் இயங்க வேண்டும். அதாவது, திறனாய்வுக்குத் தனித்த வாழ்வு இருக்க வேண்டும். அதேவேளை இலக்கியமின்றி இலக்கியத் திறனாய்வு இயங்கவும் முடியாது என்பதையும் ஏற்றுக் கொள்ளவும் வேண்டும் என்றார்.

வேறு வார்த்தைகளில் கூறினால் ஒரு கவிஞனுக்குத் தான் என்ன எழுதுகிறான் என்று தெரியாது என்பதல்ல. ஆனால், அவனால் அவற்றை தன் கவிதையிலோ ஆக்கத்திலோ சொல்ல முடியாது. அதற்கு ஒரு திறனாய்வாளனே வரவேண்டும். ஆகவே தான் திறனாய்வு தனித்த கல்விப்புலம். அதாவது, திறனாய்வுக்கென்று ஓர் அமைப்புத்தன்மையும், அறிவும், அதேவேளை இலக்கியத்திலிருந்து விடுபட்ட சுயாதீனமும் இருக்க வேண்டும், இருக்கின்றது என்றும் சொன்னார்.



திறனாய்வுக்கென்று இருக்கும் இச்சுயாதீனம் இதுவரை இருந்து வந்த இலக்கியத் திறனாய்விலிருந்து வேறுபடுகிறது. அது முக்கியம். அதுவே அவரின் பங்களிப்பின் முக்கியத்துவம். இலக்கியத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் புல்லுருவி என்ற நிலையிலிருந்து, கருத்திலிருந்து அது வேறுபடுகிறது. சிருஷ்டியாளன் சிறந்தவன். திறனாய்வாளன் அவனின் நிழல். அல்லது புல்லுருவி என்ற நிலையிலிருந்து வேறாகி அவனும் இன்னொருவகையில் சிருஷ்டியாளனே என்ற நிலைக்குத் திறனாய்வாளன் உயர்வடைகிறான். இது நோத்றொப் ஃப்றை திறனாய்வுக்குச் செய்த பங்களிப்பில் முக்கியமானது. ஏனென்றால், சில படைப்பாளிகள், திறனாய்வாளர்கள் தங்கள் படைப்புக்களில் தேவையற்றுத் தலையிடுபவர்கள், தங்களில் படைப்புக்களை வைத்தே பிழைப்பு நடத்துபவர்கள் என்ற பிழையான கருத்தை, மாயையை உடைத்து, அவர்களும் கொள்கைகள், தத்துவங்கள், உத்திகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே விஞ்ஞான ரீதியில் தங்கள் திறனாய்வைச் செய்கிறார்கள் என்ற கருத்தை முன் வைக்கிறார் அவர்.

நாலாவது, திறனாய்வு தனித்து சுயாதீனமாக இயங்க முடியுமாயினும், இலக்கியத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது என்பதும் உண்மையே. ஆகவே, திறனாய்வாளனுக்கு திறனாய்வுக்குரிய முரண்பாடின்மையும், திறனாய்வு நேர்மையும், திறனாய்வுக்குரிய அறிவும் வேண்டும். அதாவது, 'இலக்கியத்தை பரிசீலிக்கும்போது இலக்கியப் பரப்பினை தொகுப்பாய்வு செய்து பெற்ற கருத்துருச் சட்டகம் திறனாய்வுக்குத் தேவை' என்கிறார்.

'திறனாய்வுக்குரிய நேர்மை என்பது, திறனாய்வின் அடிக்கோள்கள், வெளிப்படை உண்மைகள் அனைத்தும் அது கையாளும் கலையூடாகவே வளரவேண்டும்' என்பதையும் வலியுறுத்துகிறார்.

ஐந்தாவது, கருத்துருச் சட்டத்தை வரையறை செய்கையில் அதன் முறைமை– methodology- தொகுப்பாய்விலிருந்தே, அதன் இயற்கை ஒழுங்கை கடைப்பிடித்தும், மூலக்கூறு மெய்ம்மைகளிலிருந்துமே ஆரம்பமாக வேண்டும் என்கிறார்.

இந்தத் தொகுப்பாய்வு முறைமையியல் கருத்தியல் சட்டகத்துடன் ஆரம்பிக்க வேண்டும். அது இயற்கை ஒழுங்கை பின்பற்ற வேண்டும். அத்துடன், அது மூலக்கூறுகளிலிருந்தும் ஆரம்பிக்க வேண்டும் என்கிறார். இங்கே மூலக்கூறுகள் என்பவை இலக்கியங்களே. இவற்றைத் தொகுத்தாய்வு செய்வதால், இலக்கியங்களில் அடிப்படைத் தன்மை அல்லது தரம் ஒன்று இருப்பதை அறியலாம். அந்த ஆதாரக் கருத்து, மற்ற விஞ்ஞானங்கள் போல, இலக்கியமும் பூரணத்தில் ஒரு பகுதி என்பதை நிரூபிக்கும். அதாவது, இலக்கியத்திற்கும் ஓர் ஒழுங்கு முறை இருக்கிறது என்பதைக் காட்டும்.

இந்த ஒழுங்குமுறை, இலக்கியத்தை ஒரு வாசகன் அணுகுவதற்குத் தேவையான கற்பனை, இலக்கிய, பண்பாட்டு, சமூக பின்னணி என்ற பெரும் பார்வைக்கூடாக அவனுக்குக் கிடைக்கிறது.

கருத்தியல்ரீதியான நிலைப்பாட்டிலிருந்து இலக்கியத்தை வியாக்கியானப்படுத்தாமல், இலக்கியத்திற்குள்ளிருந்தே திறனாய்வு தன்னைக் கண்டு கொள்ள வேண்டும்.

**- என்.கே. மகாலிங்கம் -**

ஆக, திறனாய்வு மதிப்பீட்டைச் செய்யும் செயலல்ல. அதாவது, ஒரு படைப்பை நிராகரிப்பதோ ஏற்றுக் கொள்வதோ அல்ல. மாறாக, இலக்கியத்தை அதற்காகவே ஏற்றுக் கொள்வதும், பிற இலக்கியங்களுடன் ஒத்துப் பார்த்து அதைப் புரிந்து கொள்வதுமாகும் என்கிறார்.

ஆறாவது, உண்மையான திறனாய்வு படிப்படியாக இலக்கியத்தை புரிந்து கொள்வதற்கு உதவுகிறது. ஆதலால் திறனாய்வு இறுதியில் இலக்கியத்தை மதிப்பீடு செய்வதற்கல்ல, அதை அறிந்து கொள்வற்கே பயன்பட வேண்டும் என்றும் சொல்கிறார்.

ஏழாவது, ஒரு படைப்பை வாசித்து முடிக்கையிலே தான் திறனாய்வு ஆரம்பமாகிறது. உண்மையில், திறனாய்வாளர் இலக்கியப் படைப்பை வரலாற்றுப் பின்னணிக்குச் சென்று வாசிப்பதாலோ, வாசகனுக்குக் கிடைத்த உடனடி அனுபவத்தை சொல்வதாலோ அல்ல, ஒருவர் இலக்கியத்தின் தன்மையை உணர்கிறார். மாறாக, இலக்கியத்தின் கட்டமைப்பை இலக்கியத்திற்குள் பார்ப்பதாலும், இலக்கியத்தை பண்பாட்டுக்குள் வைத்துப் பார்ப்பதாலும் தான் திறனாய்வாளனால் இலக்கியத்தை அறிய முடிகிறது என்கிறார்.

எட்டாவது, கற்பனை பற்றிய அவரின் கோட்பாடு வித்தியாசமானது. (இமாஜினேசன் என்ற சொல்லுக்குத் தமிழ்ப் பதமான கற்பனை அத்தனை ஆழமானதல்ல. கற்பனை என்றாலே பொய்யும் புனைசுருட்டும் என்ற எண்ணமே பலருக்கும் ஏற்படுகிறது. அதுவல்ல அதன் பொருள். கவிஞனின் கற்பனை பொய்யல்ல. மெய்யிலிருந்தும், அனுபவத்திலிருந்தும், இன்னும் பிறவிலிருந்தும் பிறப்பவை என்று சுருக்கமாக மேலெழுந்தவாரியாக வேண்டுமானால் அதைப்பற்றிக் கூறலாம். ஆனால் அது பொய்யல்ல)

கற்பனையால் கிடைப்பது இலக்கியப் படைப்புக்கள். அதற்குள் இலக்கியத்திற்கு முந்திய வகைகளான சடங்குகள், புராணங்கள், நாட்டார் கதைகள் ஆகியவை உள்ளடங்கிய ஒருங்கமைந்த கற்பனை உண்டு. அந்த கற்பனை அனுபவத்தால் இலக்கியம் உருவாக்கப்படுகிறது என்றார்.


முடிவாக, அவரின் சர்வதேசப் புகழ் கனடிய இலக்கியத்தை உலக அரங்கில் காட்சிப் படுத்த உதவியது. கனடிய இலக்கியத்தின் தரம் எப்படி இருந்தபோதிலும் அதன் கற்பனையையும் கனடியச் சூழலையும் அறிந்து கொள்வதற்கு கனடிய இலக்கியத்தை அறிந்து கொள்வது மிக முக்கியம் என்றார். கனடிய இலக்கியக்காரர் ஒருவகை காவலரண் மன நிலையிலிருந்து – garrison mentality- தான் இலக்கியம் படைத்திருக்கிறார்கள் என்றார். காவலரண் மனநிலை ஒருவித மனப்பாங்கு. அது பண்பாட்டு மையங்களிலிருந்து தனிமைப் பட்டும், பகைமையான இயற்கைச் சூழலால் முற்றுகையிடப்பட்டும் உள்ளமையால் வந்த மனநிலை அது. அது படைக்கும் இலக்கியமும் முதிர்ச்சியற்றதாக இருக்கிறது. அத்துடன் அது தன் 'நாகரிகமற்ற' என்று கருதும் மன அசௌகரியத்தையும் வெளிக்காட்டும். அதன் கதையாடல் சமூக விழுமியங்களையும் கட்டளைகளையும் உறுதிப்படுத்தும் என்றும் சொன்னார். அதனால் கனடிய இலக்கியம் இயற்கை பற்றிய பயம், வந்தேறி குடிகளின்

தொடர்தல் 75ம் பக்கம்

# கடந்த மாதத்தில்... நினைவில் நிற்கும் நிகழ்வுகள் சில...




**Downsview Park**இல் நடைபெற்ற செந்தியின் 'வர்த்தகச் சோலை' நிகழ்வில். (ஜுன் 26 மற்றும் 27, 2010)



வைத்தியசாலை நிதி சேர்ப்பிற்காக கனடியத் தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் நடைபவனி நிகழ்வில் (ஜுன் 05 2010)



இலங்கை பற்றி அக்கறையுள்ள கனடியர்கள் அமைப்பினால் நடாத்தப்பட்ட கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கருத்து பரிமாற்ற நிகழ்வில். - (ஜுன் 11, 2010)




இலக்கிய ஆர்வலர்களினால் நடாத்தப்பட்ட ஸ்ரீரஞ்சனி விஜேந்திராவின் 'நான் நிழலானால்' நூல் வெளியீட்டு நிகழ்வில். - (ஜுன் 06, 2010)




**Robbie Mini-Soccer Festival**இல் பங்குபற்றிய **Cheetahs Soccer Club** வீரர்கள். (ஜுன் 26, 27, 2010)



**IMHO Canada** அமைபினர் நடாத்திய நலம் காப்போம் நிகழ்வில். (ஜுன் 05 மற்றும் 06, 2010)




**Sick children** வைத்தியசாலை நிதி சேர்ப்பிற்கான நடைபவனி நிகழ்வு. யாழ்/மத்திய கல்லூரியும் வேம்படி மகளிர் கல்லூரியும். (ஜுன் 19, 2010)



**Ontario Science Centre**இல் இடம்பெற்ற கனடிய தமிழர் வலுவளர் அமைப்பினரின் கலை நிகழ்வின்போது (ஜுன் 19, 2010)



பொன். சிவகுமாரன் நினைவு நிகழ்வில் 8 வயதிற்குட்பட்டோர் வெற்றிகிண்ணத்தை சுவீகரித்த **Cheetahs Soccer Club** வீரர்கள்.



**God's Own Children Foundation** அமைபினர் நடாத்திய நிதிசேர் நிகழ்வில் (ஜுன் 05, 2010)



கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆதரவுடன் கந்தசாமி கோவில் மண்டபத்தில் திரு. சபா. அருள் சுப்பிரமணியம் அவர்களின் மூன்று நூல்கள் வெளியிட்டு விழா நிகழ்வில் (ஜுன் 12, 2010)

நிழற்படங்கள்: தாய்வீடு பத்திரிகைக்காக கணா ஆறுமுகம் – **www.ninaivukal.com**

உங்கள் விழாக்களின் படங்களும் இங்கு இடம்பெறவேண்டுமாயின், விழா பற்றிய விபரங்கள் மற்றும் தொடர்பிலக்கங்களுடன் **events@thaiveedu.com** என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

# பண்டிதர் மா. குமாரசுவாமி வாத்தியார்



ஏ.எஸ். மகாலிங்கம்

வடபுலம் சுன்னாகத்தின் தமிழ், சைவம் படித்த அறிவாளிகளுள் ஒருவர் மாணிக்க தியாகராஜா பண்டிதர் அவர்கள். தமிழ் பெருமகன் சேர். பொன். இராமநாதன் அவர்களின்



சமய ஆலோசகராவும் அவர் குடும்பத்தின் சமய அனுஷ்டானங்களின் குருவாகவும், சைவ மக்கள் பேரசானாகவும், சைவப்பிரசாரகராகவும் விளங்கிய, தென்னிந்திய மடாதிபதிகளினால் பாராட்டுப்பெற்ற, திரு. மாணிக்க தியாகராஜா பண்டிதர் அவர்களின் கனிஷ்ட புத்திரனாக 25.10.1913ம் ஆண்டு திரு. குமாரசுவாமி அவர்கள் பிறந்தார். இவர் தாயார் பெயர் வள்ளியம்மை (சீனியம்மா) ஆகும்.

இவர் தந்தை தனது குருவாகிய சுன்னாகம் தந்த பெருமகன் குமாரசுவாமிப்புலவர் அவர்களின் பெயரை தனது மகனுக்கு சூட்டி மகிழ்ந்தார். இவர் தனது இளம் வயதிலே தாயை இழந்ததினால், தந்தையின் அன்பான அரவணைப்பில் பண்பாக வளர்ந்து வரலானர். இவருக்கு தமிழ் மொழி அறிவும், சைவப் புலமையும் தந்தை வழியால் தானகவே வரப்பெற்று இருந்தது. வித்துவசிரோன்மணி கணேசையர் அவர்களிடம் பண்டிதர் வகுப்பு பாடம் முறையாகக் கற்று தேர்ந்து பண்டிதரானார்.

1932ம் ஆண்டு சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலத்தில் தனது ஆசிரியப்பணியை ஆரம்பித்து 1956ம் ஆண்டு அதிபராக உயர்வு பெற்று 1970ம் ஆண்டு தனது சேவையிலிருந்து இளைப்பாறும் வரை அதே வித்தியாலயத்திலேயே கடமையாற்றி, தனது சேவைக் காலத்தில் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினர்.

ஆஜானுபாகுவான உடல்வாகு – நல்ல உயரம், அதற்கேற்ற உடல் அமைப்பு. வெள்ளை வேட்டி – நாஷனல் - தோளில் சால்வை – பார்த்தாலே பண்டிதர் என்ற எண்ணம் மனத்தில் பதியும். கதாப்பிரசங்கம், சங்கீத கதாப்பிரசங்கம் கைவரப் பெற்ற இவர் பல கோவில்கள், பாடசாலைகள் சென்று உபன்யாசங்கள் நிகழ்த்தி வரலானர். கவிதை, வெண்பா, சிலேடை வெண்பா, வாழ்த்துப்பாடல்கள் ஊஞ்சல் பாடல்கள் எனவும் பல இயற்றியுள்ளார். இவரது சொல்லாற்றல் மொழித்திறன், சொல்விளங்க வைக்கும் பாங்கு இவற்றினால் பலரும் மகிழ்வுற்று ரசித்து கேட்டனர். எங்கும் தமிழ், எல்லாம் தமிழ், என்று பெரு விருப்பம் கொண்டிருந்த பெரியார் பண்டிதர் குமாரசுவாமி அவர்கள் பக்திமயமான அருட் பாடல்கள், ஊஞ்சல் பாடல்கள், ''மாவை கந்தன் வெண்பா'' என பல பாடல்கள் இயற்றி தந்துள்ளார்.

மாவை ஆதீன வித்துவானகத் திகழ்ந்த இவர் பெருமக்கள் பொதுமக்கள் அறிவியலாளர்கள், அரசியல் அறிஞர்கள் சூழ ''செஞ்சொற் புலவர்'' என்ற பட்டமும் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். மாவை ஆலயத்தின் மாண்புக்கும், மேன்மைக்கும் தனது வாழ்வையே அர்ப்பணித்தது போன்று ஈழம் வாழ் சைவ உலகு பல புண்ணிய சீலர்களால் நிறைந்திருக்க வேண்டும் என்ற அவாவினல் அயராது உழைத்தவர்.

''மாவை கந்தர் வெண்பா'' எனும் பெயரில் நூற்றியொரு வெண்பாக்களை இயற்றி மாவை கந்தனின் தல சிறப்பு சிறக்க மாலையாக சூட்டி மகிழ்ந்தார். தந்தையார் மாணிக்க தியாகராஜா பண்டிதர் ஆக்கிவைத்த ''வண்ண சிலேடை வெண்பா''க்களை சீர் செய்து சிறப்புடன் கற்றோரும் மற்றோரும் மிளிர்ந்த சபையில் அரங்கேற்றி தந்தையின் சிறப்பை மேலும் மெருகேற்றி வைத்தார்.

திருமதி. சுகிர்தம் அவர்களை மணம் முடித்தபின் காங்கேசன் துறையில் இணைந்து இல்லறம் பேணி இனிது வாழ்ந்து வருகையில், மனைவி சிறிது காலம் முன்னே இறைவனடி சேர்ந்துவிட பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் கூடி குலாவி வாழ்ந்து வந்த ''ஐயா'' அவர்கள் புரட்டாதி திங்கள் 5ம் நாள் 1999ம் ஆண்டு கந்தன் இறையடி இணைந்தார்.

மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரியவராக அறிவும், ஆற்றலும் பெற்றவராக வாழ்ந்து வந்த பண்டிதர் குமாரசுவாமி அவர்களின் இழப்பு சைவ உலகிற்குப் பேரிழப்பேயாகும்.

as.mahalingham@thaiveedu.com

■ ■ ■

# எம்மிடையே வாழ்...

73ம் பக்கத் தொடர்ச்சி...

வரலாறு, சமுதாயத்திற்கு கேள்வி கேட்காத அடங்கி நடத்தல் போன்றவையால் வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கனடிய இலக்கியம் இந்த அடையாளங்களுக்கு அப்பால் போக வேண்டும் என்றார். காவலரண் மனநிலைக்கு அப்பால் போவதற்கு நகரமயமாக்கம் தேவை என்றார். அத்துடன், நல்ல மேம்பட்ட இலக்கியம் படைக்க படைப்பாளிகளுக்கு போதிய மனத் திடம் ஏற்பட வேண்டும் என்றும் சொன்னார்.

அவர் சொன்னது போலவே அத்திடம் ஏற்பட்டு இன்று மார்கறெற் அற்வுட், திமொதி ஃபின்லி, மொடெகி றிச்லெர், மாகெறெற் லொறென்ஸ், றொபெட்சன் டேவிஸ், ஸ்ரீபன் லீகொக், கரோல் ஷீல்ட்ஸ், அலிஸ் மன்றொ, லெனெட் கொகென், ஃபாளி மொவற், யான் மாட்டெல், ஒண்டாச்சி போன்றோர் படைப்புக்கள் சர்வதேசப் புகழ் பெற்றிருக்கின்றன.

ஃப்றையின் திறனாய்வுக் கொள்கைகள் பலவற்றை இன்று எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்கள் என்றில்லா விட்டாலும் அவர் திறனாய்வுக்குச் செய்த பணியை எல்லோருமே ஏற்றுக் கொள்கிறார்கள்.



mahalingam.k@thaiveedu.com



# உருசியின் இரகசியம்

Sri Lankan தமிழ் கனடியர்களுக்கு Sri Lanka செல்லத்தடை வந்துவிடுமோ என்ற அச்சத்தில் அவசர அவசரமாக எம்மவர் இங்கு பிறந்த பிள்ளைகளை Sri Lanka கூட்டிச் சென்று Muttonனின் உரிமையாளர் ஆடு என்றும், Beefஇன் உரிமையாளர் மாடு என்றும், Porkஇன் உரிமையாளர் பன்றி என்றும் அந்தந்தப் பிராணிகளின் இல்லங்களைக் காட்டி, அவர்களின் வாழ்க்கை முறையையும் புகட்டி வருகிறார்கள். இப்படி செல்லும் பிள்ளைகளுடன் உரையாட விரும்பும் பேரன்பேத்திமார், பூட்டன்பூட்டிமார் தாங்கள் ஆங்கிலம் கற்கத் தவறிவிட்டோமே என்று வேதனைப்படுகிறார்கள்.

●

ஆண்கள் செவிமடுக்கும் போது தமது இடது பக்க மூளையையே பெரும்பாலும் பாவிக்கிறார்கள்.

- பேராசிரியர் *Loritto* – விஞ்ஞானம்.

காலங்காலமாக திருமணமான மறுகணம் கணவனின் இடது பக்கத்தில் மனைவியை அமரச்செய்கிறார்கள்.

- பார்வதி பரமேஸ்வரன் - மெஞ்ஞானம்.

●

இலங்கையில் பேச்சுத் திருமணம் என்று வரும்போது ஆண்களும் பெண்களும் விரும்புவது ஆங்கிலம் பேசத் தெரிந்த பெண்களையும் ஆண்களையும். இங்கு பேச்சுத் திருமணம் என்று வரும் போது ஆண்களும் பெண்களும் விரும்புவது தமிழ் பேசத் தெரிந்த பெண்களையும் ஆண்களையும்.

அங்கு ஆங்கிலம் பேசப்படுவதில்லை.
இங்கு தமிழ் பேசப்படுவதில்லை.

●

எம்மவர் வீட்டு விருந்து உபசாரங்களிலும் வீட்டு ஒன்று கூடல்களிலும் கேட்டவை...

1980களில்...
அரசிமா எங்கை வாங்கினீர்கள்? கோதுமை மா எவ்வளவு கலந்தீர்கள்? இடியப்பம் பிட்டு இவ்வளவு மெதுமையாக (Soft) என்னெண்டு செய்தீர்கள்?

1990களில்...
இடியப்பம் பிட்டு வாங்கியிருப்பீகள். கத்தரிக்காய் பிரட்டல் என்ன மாதிரி செய்தனீர்கள்? இறைச்சிக் கறிக்கு என்ன தூள் போட்டனீர்கள்? சொதிக்கு என்ன % பால்விட்டனீர்கள்?



2000இன் பின்...
எந்தக் கடையில் (Take out) சாப்பாடு எடுத்தனீர்கள்? ஆர் கேற்றறிங் (catering)? சாப்பாடு கொண்டு வந்தவையோ போய் எடுத்ததோ? எவ்வளவு எடுக்கினம்?

(சாமான் வாங்குவது பற்றியோ சமையல் பற்றியோ கதை கிடையவே கிடையாது)

●

Scarborough பாடசாலைகளில், தமிழர்கள் நடத்தும் தமிழ் விழாக்களில், தமிழர்களைத் தமிழர்களிடம் இருந்து காப்பாற்ற தமிழ் கனடிய பாதுகாவலர்கள் போதாது என்று 'கனடிய நகர்காவலர் சேவை தேவை' என்று Toronto கல்விச்சபை இன்னமும் வற்புறுத்துகிறது என்பது பலருக்குத் தெரியாது.

●

Restaurantல் சாப்பிடும் போதும், Take out சாப்பாட்டை வீட்டில் எடுத்துச் சாப்பிடும் போழுதும் இவை வீட்டுச் சாப்பாட்டைவிட உருசியாக இருக்கிறதே என்று வியக்கிறோம். Restaurant ம் Take out கடைகளும் அன்று நாங்கள் ஊரில் சமையல் செய்த மாதிரியே சமைக்கிறார்கள். ஆனால் நாங்கள் எங்களுக்கு வந்த நோய்களுக்காகவும், வரப்போகும் நோய்களுக்காகவும் பயந்து சமையல் முறையையும், சேர்க்கும் பொருட்களையும் குறைத்தும் நிறுத்தியும் வருகிறோம்.

**- கதிர் துரைசிங்கம் -**

**இரத்த அழுத்தம் - Blood Pressure**
VP உயர்ந்து இருந்தால - உப்பு இல்லை
VP உயர்ந்து விடும் என்று - உப்பு குறைவு

**நீரிழிவு – Diabetes**
வந்துவிட்டது - சீனி இல்லை அல்லது சீனி இல்லா சீனி. கிழங்கு இல்லை, Ice Cream இல்லை, வெள்ளை அரசிசோறு இல்லை...
...வந்து விடும் - ஒரு சீனி அல்லது இல்லை.

**மாரடைப்பு – Heart Attack**
வந்துவிட்டது வரப்போகுது - இறைச்சி இல்லை, பொரியல் பிரட்டல் இல்லை, முட்டை இல்லை, பால் 0 %, தேங்காய் இல்லை, சம்பல் இல்லை, சொதி இல்லை.

**வயித்தெரிச்சல், குடற்புண்: Gastritis, Ulcer:**
வந்துவிட்டது வந்துவிடும் - மிழகாய் இல்லை, உறைப்பு இல்லை, புளி இல்லை ஊறுகாய் இல்லை...

இப்படிச் சாப்பிட்டு செத்த நாக்கிற்கு எந்த Restauarnt சாப்பாடும், எந்த Take out சாப்பாடும் நல்ல உருசியாகவே இருக்கும்.

kathir.thuraisingam@thaiveedu.com

■ ■ ■




N.K.S
Drapery & Blinds Fabric LTD

திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.



கேதா நடராஜா
416.321.6420

Ketha Nadarajah
(President)
Tel: 416.321.6420, 905.944.0218
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9

# செம்மொழி
# (Classical Language)

> தமிழின் மொழி வளம், அதன் இலக்கிய வளம் ஆகியனவற்றை ஏனைய செம்மொழிகாளாகிய சமஸ்கிருதம், லத்தின், சீனம், பரசீகம், அரபு மொழிகள், அதன் பழங்கால இலக்கியங்களுடன் ஒப்பிடுகையில் மிக மிக உயர்ந்ததாகவும் எதுவிதத்திலும் குறைவடையாததுமாய் உள்ளது.
>
> *- Prof George L Hart*

முருகேசு
பாக்கியநாதன்



செம்மொழி என்ற பதம் ஏறத்தாள ஐந்து ஆறு வருடங்களாகவே பொது வாசகர்களிடையே அறியப்பட்ட சொல்லாகவும் ஆனால் அது கல்வியாளர்களிடையே பல்லாண்டு காலமாகவே மிகவும் அறியப்பட்ட சொல்லாகவும் இருந்துவந்துள்ளது. குறிப்பாக செம்மொழி என்கின்ற பதம்பற்றிய பாவனை கடந்த ஒருவருடமாக பல பத்திகைகளிலும் இணையத்தளங்களிலும் பாவிக்கப்படுவதனை பலரும் பார்த்து செம்மொழியென்பது என்ன வென்று அறிய ஆவலாகவேயிருக்கின்றனர். காரணம் தமிழ் செம்மொழி மகாநாடு இந்த ஜுன் மாதம் 23 தொடக்கம் 27ம் திகதி வரை தமிழ் நாட்டின் கோயம்புத்தூர் நகரில் நடைபெற்றதேயாகும். இம்மகாநாட்டின் காரண காரியங்களை ஆராய்வதோ அன்றி அதனை கலைஞர் கருணாநிதி தலைமையில் இன்றைய காலகட்டத்தில் நடாத்துவது சரியானதா அன்றி தவறானதா என்பது பற்றி விவாதிப்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல. மாறாக செம்மொழியென்றால் என்ன தமிழ் மொழிக்கு ஏன் அந்த அந்தஸ்து வழங்கப்பட்டது. (இது பற்றிய எனது ஒரு கட்டுரை கடந்த வருடம் நவம்பர் மாதம் 'தாய்வீடு' பத்திரிகையில் வெளியாகியிருந்தது. இக்கட்டுரையானது செம்மொழி மகாநாடு என்ற எண்ணக்கரு தோன்றமுன்பே 2006ம் ஆண்டு என்னால் எழுதப்பட்டு 2009திலேயே பிரசுரம் செய்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. கடந்த எட்டு மாதங்களாக தமிழ் மொழி, அதன் தொன்மை அதன் வரலாறு, தமிழன், அவன் வரலாறு அவன் காலாசாரம் பற்றி மட்டுமே பல கட்டுரைகளை குறிப்பாக தமிழும் தாயகமும், தமிழ் எழுத்து வரிவடிவத் தோற்றம், தமிழே பல மொழிகளுக்கு மூல வரிவத்தோற்றம், தமிழனின் ஆதித்தாயகம், லெமூறியாக் கண்டம் (இரண்டு கட்டுரைகள்), தமிழனின் சிறப்புமிக்க ஆசியாவின் குறிப்பாக இந்தியாவின் நாகரிகத்திற்கு வழிகாட்டிய திராவிடன் வாழ்ந்த சிந்து வெளி நாகரிகம் (மூன்று கட்டுரைகள்) ஆகிய வற்றை எழுதியிருந்தேன், பலர் அவைகளை வாசித்துச் சுவைத்திருப்பீகள் என்று எண்ணு கின்றேன்.)

செம்மொழியென்றால் என்றால் என்ன? அது எவ்வாறு வகைப் படுத்தப்படுகிறது? உலகில் ஏற்கப்பட்ட செம்மொழிகள் யாவை? ஏன்பன பற்றி விரிவாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

செம்மொழி எனும்போது அம்மொழியானது மிகவும் அநாதியானதாக இருக்க வேண்டும். அம்மொழியில் தோன்றிய இலக்கியங்கள் செழுமையானதாகவும், அநாதியானதாகவும், அந்த மொழியின் மூலத் தோற்றுவாயில் தனித் தன்மையான பாரம்பரியம் கொண்டதாக, வேறொரு மொழின் தாக்கம் அற்றதாக அத்தோடு பரந்த, ஆழமான, செழிப்பான, பழமையான இலக்கிய வளம் கொண்டதாக இருக்க வேண்டும். மேலும் ஒரு மொழியானது காலத்தால் தொன்மையானதாகவும், பழமையான இலக்கிய, இலக்கணத்தினைக் கொண்டவையாகவும், மொழித் தோற்றத்தின் போது எந்த மொழிகளின் வழித்தோன்றல்களாக அல்லாமல் தனியே தனித் தன்மையுடன் தோன்றிய மொழியாக அமைய வேண்டும். அத்தோடு பன்நெடுங்காலமாக செழுமை யாகவும் வளமுடன் வாழும் அல்லது வாழ்ந்த மொழியாக இருக்க வேண்டும் என்பதே இன்று உலகினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட செம்மொழிக்குரிய வரைவிலக்கணமாகும். இத்தகைய வரைவிலக்கணங்கள் கொண்ட மொழிகள் என நோக்கும்போது அதில் தமிழ் முதன்மை வகிக்கின்றது.

இந்த வரைவிலக்கணம் தமிழ் மொழிக்கு முற்றிலுமாகவே பொருந்தும். தமிழ் அனாதி யானது, 6000 ஆண்டுகால மொழிப் பாரம்பரியம் உள்ளது. தமிழ் எந்த மொழியிலிருந்தும் தோன்றாமல் தமிழர்களாலேயே தோற்றப்பட்டது. தமிழே இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பல மொழிகள் தோன்ற வழிகோலியது. தமிழின் முதன் நூலானது கி.மு 300ஆம் ஆண்டு தோன்றிய தொல்காப்பியமாகும். சங்க காலத்து நூல்கள் போல வேறு எந்த மொழியிலும் தொன்மையாகத் தோன்றியிருக்கவில்லை.

தமிழ் செம்மொழியென்ற கருத்தினை முதலில் தெரிவித்தவர் தமிழறிஞர் தேவநேயர் அவர்களாகும். இவரை மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் என அறிஞர் பெருமக்கள் அழைத்தனர். மனிதன் தோன்றிய லெமூறியா எனப் படும் கடல்கொண்ட குமரிக்கண்டமேயென்றும் உலகின் முதல் மொழி தமிழேயென்றும் ஆதாரபுர்வமாக ஆராந்து பல ஆராச்சி நூல்களை வெளியிட்டவர். தமிழ் மொழியை ஆதாரபூர்வமாக ஆராந்து தொல்காப்பியத்திற்கும் முந்திய காலங்களைப்பற்றி ஆராந்து பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். பலர் தொல்காப்பியத்திற்கு அகத்தியரே ஆசிரியர் என்று சொன்ன காலம் ஒன்று இருந்தது. அதனை மறுத்து தொல்காப்பியருக்கு முன்பு 200 வருடங்களுக்கு முன்பே அகத்தியர் வாழ்ந்தவர் என்பதனை நிரூபித்தார். தொல்காப்பியர் காலத்தே வடமொழிக்கு எழுத்தோ இலக்கணமோ இருந்ததில்லை என்னும் கருத்தினையும் நிறுவியவரும் இவரேயாகும். உலகில் தமிழ், ஹுப்புறு, லத்தீன், கிரேக்கம், சீனம் மற்றும் எகிப்தியம் ஆகிய ஆறு மொழிகளே எல்லா மொழிகளும் உருவாகக் காரணமாய் அமைந்து என்றும், அதில் தமிழே மூத்த முதல் மொழியாக விளங்குகின்றதென்றார். இம்மொழிகள் யாவற்றிலும் தமிழ் சொற்கள் உள்ளதனை நிறுவியவரும் இவரேயாகும். உதாரணமாக தமிழில் காண் என்றால் பார் என்று அர்த்தப்படும். சீன மொழியில் கண் என்றால் பார் என்று அர்த்தப்படும். தமிழில் ஆ என்பது மாடு என்ற பொருள் படும் எகிப்திய மொழியில் ஆ என்றால் மாடு எனப்படும்.

உலகமொழிகளில் முதன்முதலாக லத்தின் மொழியும் கிரேக்க மொழியுமே செம்மொழி களாகக் கருதப்பட்டன. 1800-1900 ஆண்டுக் காலப்பகுதியில் வில்லியம் யோன்ஸ் அவர்களும் மாக்ஸ் முல்லர் போன்றவர்கள் வட மொழி நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டதனால் சமஸ்கிருதமும் செம்மொழியென ஏற்கப்பட்டன. வடஇந்தியா வினை சுற்றியே இந்திய அரசியலும் ஆங்கிலேய ஆட்சியாளர்களும் இருந்ததனால் அவர்கள் சில்வதனையும் அங்குள்ள இலங்கியங்களுமே அவர்களது கண்களுக்குப் பட்டதனால் முதலில் ஆங்கிலேயர் வடமொழி பற்றியே கவனம் செலுத்தினர். இதனால் தமிழின் செழுமை ஆரம்பத்தில் அவர்களுக்குத் தெரியவில்லை.

பரிதிமார் கலைஞர் என்று தனித் தமிழால் அழைக்கப்படுபவர் வி.கே. சூரியநாராயண சாஸ்திகள். அவர் எழுதிய “தமிழ் மொழியின் வரலாறு எனும்' நூலில் தமிழ் மொழி உயர் தனிச் செம்மொழி என்ற கருத்தினை வலியுறுத்தினார். இவர்களைத் தொடர்ந்தே வேதச்சலம் என்ற இயற்பெயர் கொண்டதும் தனித்தமிழ் பெயரான மறைமலை அடிகள் தனித்தமிழ் இயக்கத்தினைத் தொடங்கினார். இவ்வியக்கத்தினை மொழிஞாயிறு தேவநேய பாவாணர் அவர்களும் பேணிவளர்த்து The Primary Classical Language of the world உலகின் முதன்மொழி தமிழ் என்றும் அத்தோடு அதுவே உலகின் முதல் செம்மொழி தமிழ் மொழியென்ற கருத்தினையும் வலியுறுத்திக் கூறினார்.

காலடுவல் காலத்திற்கு முன்பே பல அறிஞர்கள் தமிழை ஆய்ந்து அதன் தனி இயல்புகள் அதன் சொற்பிறப்புக்கள் ஆகியனவற்றிளை 18ம் நூற்றாண்டிலேயே சிவஞான முனிவர் கண்டறிந்து வெளியிட்டார். வடமொழியில் இல்லாத பல தனிச்சிறப்புக்கள் அகம் புறம் என்ற தமிழுக்கேயுரித்தான வாழ்க்கை முறையினை வெளிப்படுத்தினர். வினைக்குறிப்பு வினைத்தொகை ஆகிய சொல் இலக்கணங்களும் உயர்திணை அஃறிணை முதலிய சொற் பாகுபாடுகளும் வெண்பாவிற்கான செய்யுள் இலக்கணமும் தமிழுக்கேயுரித்தான தனிச் சிறப்பாகும். இவைகள் எதுவும் வட மொழியில் இல்லை. தமிழானது தமிழ்மண் வாசைனை கொண்ட இலக்கியச் சிறப்பியல் புகளையும் யாப்பியல், பாவியில் மற்றும் அணியியல் ஆகிய இலக்கணங்களை கொண்டதாக திகழ்கின்றது.

தமிழ் இந்தியாவினால் பிரகடனப்படுத்தப்பட்ட இரண்டாவது செம்மொழியாகும். முன்னரே சமஸ்கிருதம் ஆகிய ஆரிய மொழி செம்மொழியாக அரசினால் ஏற்கப்பட்டிருந்தது. ஆனால் இந்திய அரசினால் சட்டரீதியாக பிரகடனப்படுத்தப்பட்ட முதல் மொழி தமிழே. பல இந்திய, வெளிநாட்டு மொழியியல் ஆராச்சியாளர்களாலும் மற்றும் தமிழ்நாட்டு தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட வேண்டுதல்களை அடுத்து இந்திய அரசினால் பல ஆண்டுகளின் பின்பாவது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது பன்னெடுங்காலத்திற்கு முன்பே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாக இருந்தும் பற்பல அரசிற் காரணங்களினால் அது பிற்போடப்பட்டே வந்தது என்று அமெரிக்க கலிபோனியா பல்கலைக் கழக தமிழ் துறைத் தலைவர் பேராசிரியர். ஜோச் எல் ஹாட் அவர்கள் 2000ஆம் ஆண்டில் குறிப்பிடுகின்றார். இந்தியாவில் இவைகள் அரசியல் சார்ந்தே நடக்கின்றது.

தமிழின் மொழி வளம் அதன் இலக்கிய வளம் ஆகியனவற்றை ஏனைய செம்மொழிகாளாகிய சமஸ்கிருதம், லத்தின், சீனம், பரசீகம், அரபு மொழிகள் அதன் பழங்கால இலக்கியங்களுடன் ஒப்பிடுகையில் மிக மிக உயர்ந்ததாகவும் எதுவிதத்திலும் குறைவடையாததுமாய் உள்ளது. அத்தோடு தமிழ் நீண்ட தொரு செம்மொழிப் பாரம்பரியத்தையும் இலக்கிய வளத்தினையும் கொண்டுள்ளதாக குறிப்பிடும் பேராசிரியர் ஜோச் எல் ஹாட் (Prof George L Hart ) மேலும் உலகின் தலை சிறந்த படைப்பாகிய திருக்குறள் பலப்பல பரிமாணங்களைக் கொண்டதாகவும் மிகச் செழிப்பான உயர் நாகரீக வாழ்கையினை அது எழுதப்பட்ட காலத்தில் தமிழன் எப்படியாக வாழ்ந்தான் என்பதைப் படம்பிடித்துக் காட்டுவதாகக் கூறுகின்றார். உலகில் இன்று காணப்படும் இந்திய வேற்று மொழிகளின் ஆரம்பகால நூல்களுடன் ஒப்பு நோக்கும் போது தமிழ்ப் படைப்புகளே முதலில் தோன்றியதாக பல மொழியியல் ஆராச்சியாளர்கள் குறிப்பிடுவர்.

### செம்மொழியாக அறிவிக்கப்பட்ட மொழிகள்:

இன்று உலகினால் செம்மொழியாக ஏற்கப்பட்டு அறிவிக்கப்பட்ட மொழிகளை நோக்குவேமாயின்

- கிரேக்க மொழி.
- சமஸ்கிருதம்.
- தமிழ் (திராவிடக்குடும்பத் தலை மொழி)
- லத்தீன்.
- பாரசீக மொழி.
- ஹீப்புறு.
- சீன திபெத்திய மொழி.
- சீன மொழி.
- அரபு மொழி.

### உலக மொழிகளும் அவை தோன்றிய காலங்களும்.

| | | |
|---|---|---|
| பிராமி | - | கிமு.6000 ஆண்டு |
| பிராமி தமிழ் | - | கிமு.2000 ஆண்டு |
| சமஸ்கிருதம் | - | கிமு.2000 ஆண்டு |
| சீனம் | - | கிமு.1600 ஆண்டு |
| ஹீப்புறு | - | கிமு.1000 ஆண்டு |
| அரபு | - | கிமு. 800 ஆண்டு |
| லத்தின் | - | கிமு. 600 ஆண்டு |
| நவீன கால தமிழ் | - | கிமு. 500 ஆண்டு |
| பாளி | - | கிமு. 100 ஆண்டு |
| ஹிந்தி | - | கி.பி. 400 ஆண்டு |
| ஆங்கிலம் | - | கி.பி. 500 ஆண்டு |
| கிரந்தம் | - | கி.பி. 500 ஆண்டு |
| தெலுங்கு | - | கி.பி. 600 ஆண்டு |
| கன்னடம் | - | கி.பி. 700 ஆண்டு |
| மலயாளம் | - | கி.பி. 900 ஆண்டு |
| சிங்களம் | - | கி.பி. 900 ஆண்டு |
| தாய்லந்து | - | கி.பி.1300 ஆண்டு |
| குஜராத்தி | - | கி.பி.1600 ஆண்டு |

இந்திய மொழிகளிலும் அதன் பாரம்பரியத்திலும் தமிழ் ஒரு முதன்மையான நவீன மொழியாகும். இது சமஸ்கிருதத்தின் செய்யுள் பாரம்பரியத்திற்கூட தமிழ் இலக்கண ஆதிக்கம் காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றார் பேராசிரியர் ஜோச் எல் ஹாட். இந்திய செம்மொழிகளில் சமஸ்கிருதம், பாளி ஆகியவை இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை ஆனால் தமிழ் மட்டுமே தனி இந்திய மொழிக் குடும்பத்தைச் சார்ந்ததாகும். இப்படியான ஒரு மொழி ஏன் முன்பே செம்மொழியாக அங்கீகரிக்கப்படவில்லையெனில் அதற்கு முழுக்க முழுக்க அரசியற் காரணமும் அது சார்ந்த இந்திய நடுவன் அரசுமே காரணம் என்று கூறமுடியும்.

உலகிலே கிரேக்கம் செம்மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது ஆனால் ஐரோப்பிய மொழிகாளாகிய பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகியன ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

packiyanathan.m@thaiveedu.com

■ ■ ■

வட அமெரிக்காவிலிருந்து முதல் முறையாக நேரடி இணையப் பல்கலைக் கல்லூரி ஆரம்பம்

# VARNAM VIRTUAL ACADEMY

## Save Money ! Save Time ! Save Energy !

Save 1500$ to 6500$ per year

உங்கள் வீடுகளில் இருந்தே இணையம் மூலம் நேரடியாக கற்றுக்கொள்வதோடு மேலும் பல சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்

* Grade 1 - 12 Tutoring
* Kids & Adult Computer
* Western Music
* Indian Music

Further information visit -: www.varnamonline.com

You Can Learn From Your Home Face to Face ( Live )

*Any Where in the World !!!*

* Vocal ( Carnatic ) * Violin * Veena* Mirudhangam * Tabla
* Piano * Keyboad * Guitar * Drums * Music Theory * Dance

வகுப்புகள் நடைபெறும் இடங்கள்

* Midland & Ellesmere
* McCowan & Denison
* Nellson & Finch
* Dundas & Hwy 10
* Dixie & Meyer side
* Dixe & Bovaird

Contact : Varna.Rameswaran 647.893.4010 / 416.265.8884

## நாடகத்தின் வேரும் வளர்ச்சியும்:

# கிரேக்க நாடகங்கள் - சரித்திரச் சுருக்கம்

**தொடர் 4**

**- ஞானம் லேம்பட் -**

கிரேக்க நாடகங்களின் பகைப்புலம் அவர்களது அறிவுக்கெட்டாத, ஒரு மாய ஆவிக்கு (கடவுள்) ஒப்படைக்கப்படும் ஒரு வித வழிபாட்டுச் சடங்காகும்.

இக்கடவுள் வழிபாடானது டையோனிஸ் (Dionysus) வழிபாடு என அழைக்கப்படும். இவ் டையோனிஸ்சஸ் வழிபாடு 'மைசீனியன்' (mycenean) நாகரீகம் அதாவது கிரேக்க நாட்டில் கிரேக்க நாகரீகத்திற்கு முன் கி.மு. 1400இற்கும் கி.மு.1100ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் நிலவிய வழிபாடாகும்.

இவ்வழிபாடு பாடல்களும், ஆடல்களும் நிறைந்தவை. இவ்வழிபாட்டு முறைகள் காலம் செல்லச் செல்ல சமயத்தன்மை குறைந்து மனிதத்தன்மை பெறவே சமயச் சடங்குகள் கலைத்தன்மை பெறலாயிற்று.

கிரேக்க நாடகங்களின் திருவிழா நகரான டையேனிசியாவை கி.மு. 534ஆம் ஆண்டு 'ஏதென்ஸ்' (Athens) மன்னன் பிசிஸ்ராறஸ் (Pisistratus) உருவாக்கினான். இங்கு பாக்கஸ் (கிரேக்க கடவுள்) கடவுள் வழிபாடும், நாடக மேடையேற்றம் நடாத்துவதுமே மன்னனின் நோக்காய் இருந்தது. இதற்கு முன்னைய நூற்றாண்டில் கிரேக்க நாட்டின் டோறியன் (Dorian) பகுதியில் ஒரு விதநாட்டிய நாடகம் வளர்ந்திருந்தது. கி.மு. 534இல் கவிஞனும் ஆடற்கலைஞனுமான திஸ்பிஸ் நடன நாடகத்தை, அற்றிக்காவைச் சூழவிருந்த கிராமப் பகுதிகளில் உருவாக்கியிருந்தான். இவரே பாயிரம், முகவுரை என்பவற்றையும் நடனங் இணைத்துச் செயற்படுத்தியிருந்தார்.

கி.மு. 537இல் பிசிற்ரஸ் மன்னன் இறந்து போகவே அவரது இரு மகன்களான ஹிப்பாச்சஸ் (Hipparchus) ஹிப்பியாஸ் (Hippias) என்போர் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றுத் தந்தை வளர்த்த கலையைத் தொடர்ந்தும் வளர்த்து வந்தனர். இதே காலத்தில் கிரேக்க நாட்டின் நான்கு பெருங் கவிஞர்களில் ஒருவராக ஈக்கிலஸ் (Aeschylus) பிறந்தார். கி.மு. 514இல் ஹிப்பாச்சஸ் கொலை செய்யப்பட, ஹிப்பியாஸ் ஆட்சிப் பொறுப்பைத் தனியே ஏற்று நடாத்தினான். ஆனால் ஹிப்பாச்சஸ் கொலை செய்யப்பட்டதனால் ஆட்சியைக் மிகக் கொடுமையானதாக மேற்கொண்டான். இதனால் நாட்டில் செல்வாக்கு மிக்க உயர் மத்தியதரக்குடியினர் இவரை, கி.மு. 510இல், அரசுக் கட்டிலிருந்து துரத்தி, ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தினர். இவ்வாட்சியினர் மக்களுக்குக் கூடிய சுதந்திரம் கொடுத்ததோடு, கலையையும் வளர்த்தனர். இதனால் கலை மிக வேகமாக வளர்ந்தது.

கி.மு. 480இல் ஏதென்ஸ் நாட்டு மன்னனான தெமிஸ்ரக்கல் (Themistocles) பாரசீகருக் கெதிராகப் போர் தொடுத்தான். இப்போரில் ஈஸ்கிலஸ் ஏதென்ஸ் நாட்டுப்படையில் பகுதி நேரப் போர் வீரனாகப் பணிபுரிந்தார். இப்போரில் ஏதென்ஸ் நாட்டுப்படை வெற்றி பெற்றதனால் ஈக்கிலஸ் பெருமிதம் கொண்டார். கி.மு. 484இல் நடைபெற்ற கலைவிழாவிலே வெற்றி பெற்று, நாட்டு மன்னர் தெமிஸ்ரக்கல்ஸின் நண்பரானார். ஆனால் தெமிஸ ரக்கல்ஸ் நாட்டைவிட்டு துரத்தப்பட அவனைக் காக்குமுகமாக பிரினிக்காஸ் (Phrynichus) என்பவனுடன் சேர்ந்து பாரசீகர்களை வென்றதைக் கொண்டாடும் நாடகங்களை தயாரித்தார். பிரினிக்கஸ் கி.மு. 476இல் போயெனிசன் பெண்கள் (The Phoenician Women) என்ற நாடகத்தையும், கி.மு. 472இல் ஈஸிகிளஸ். பாரசீகர்கள் (Persians) என்ற நாடகத்தையும் தயாரித்தனர். பாரசீகர்கள் என்ற நாடகத்திற்கு இரண்டு நடிகர்கள் தேவைப்பட்டபடியால், கிரேக்க நாடகத்தில் முதன்முறையாக



இரண்டாவது நடிகர் புகுத்தப்பட்டார்.

தெமிஸ்ரக்கல்ஸ் அரசியல் அஞ்ஞாத வாசம் பூண்டதும் ஈஸிக்கிளஸ் அரசியலில் ஆர்வம் காட்டாது ஒதுங்கிக் கொண்டார். இதே காலத்தில் சிசிலி நாட்டில் இப்பிச்சாமஸ் (Epicharmus) இன்பியல் கவிதைகளை நாடகங்களை ஆக்கிக் கொண்டிருந்தார். இவரது நாடகங்கள் புராணக் கதைகளைக் கொண்டதாயும் கிண்டல்கள் நிறைந்தவையாயும் இருந்தன.

கி.மு. 495இல் கிரேக்க நாட்டின் இரண்டாவது பெருங்கவியான 'சோபக்கிளஸ் (Sophocles)' பிறந்தார். இவர் தனது 15ஆவது வயதில், அங்கு நடைபெற்ற ஒரு வெற்றிவிழாவிலே நிர்வாணமாக நடனமாடித் தனது கலைப் பிரவேசத்தை ஆரம்பித்தார். இவர் சிறப்பாக நடனமாடக் கூடியவராயிருந்தும், குரல் வள மின்மையால் நடிப்புத்துறையிலிருந்து ஒதுங்கி எழுத்துத் துறையில் தன்னை வளர்த்துச் கொண்டார். இவர் தனது தொடக்க காலங்களிலேயே மூன்று நடிகர்களைக் கொண்ட நாடகங்களைத் தயாரித்தார்.

தெமிஸ்ரக்கல்ஸ் அஞ்சாத வாதம் பூண்டதும் அந்த வெற்றிடத்தை 'பெரிக்கிளஸ்' நிரப்பினார். பெரிக்கிளஸ் தனது நண்பனான சோபக்கிளசை அரசவைப் பேச்சாளராக நியமித்தார். கி.மு. 463இல் ஈக்கிலஸ் குடியாட்சியைக் கருவாகக் கொண்ட 'வேண்டதல் செய்வோர்' (The Suppliants) என்ற நாடகத்தையும், கி.மு. 458இல், 'பெரிக்கிளஸ்' நாட்டில் ஏற்படுத்திய சீர்திருத்தங்களைக் கருவாகக் கொண்ட 'ஓறெஸ்ரியா'' (Oresteia) என்ற நாடகத்தையும் தயாரித்தார்.

இக்காலங்களில் செல்வம், ஏதென்ஸ் நாட்டில் செழிக்கவே, கலை சிறப்பாக வளரலாயிற்று. ஏதென்ஸ் கலைகள் வளரும் இடமாயிற்று நாட்டின் எல்லாப் பாகங்களிலுமிருந்தும் சிந்தனையாளர்கள், தத்துவவாதிகள், விஞ்ஞானிகள், கலைஞர்கள் ஆகியோர் ஏதென்ஸில் குடியேறலாயினர். இதன் போதே கிரேக்க நாட்டின் மூன்றாவது பெருங்கவி யூறிப்பிடஸ் (Euripides) பிறந்தார்.

'ஒறிஸ்ரியா' மேடை யேற்றத்தின் பின், கி.மு. 457இல் 'புறோமெதன்ஸ் பவுண்ட் (Promethens Bound)' என்ற நாடகத்தை ஈக்கிலஸ் தயாரித்தார். இந்நாடக மேடை யேற்றத்தின் பின் ஈக்கிலஸ் மரணமடைந்தார். இவரது மரணத்தின் பின் கிரேக்க நாடகத்தில் முக்கியமான மாற்றம் நிகழலாயிற்று. இதுவரை காலமும் நாடகங்களில் பிரதான பாத்திரத்தை கவிஞர்களே ஏற்று நடித்துவந்தனர். ஆனால் சோபகிளஸ் இதை மாற்றி பிரதான பாத்திரத்திற்கு நடிகர்களைப் புகுத்தினார். இம்மாற்றத்தின் பின்னரே அதாவது கி.மு. 449இல் நடிகர்களின் முக்கியத்துவம் அங்கீகரிக்கப்படலாயிற்று.

கி.மு. 455இல் யூறிப்டஸ் நாடகப் போட்டிகளில் பங்கு கொள்ளத் தொடங்கினார். கி.மு. 441இல் அவர் தனது முதலாவது வெற்றியைப் பெற்றுக் கொண்டார். கி.மு. 440இல் சோபக்கிள்ஸ், ஏஜெக்ஸ் (Ajax) என்ற நாடகத்தையும், 'அன்ரிக்கோன்' (Antigene) என்ற நாடகத்தையும் தயாரித்தார். இவ்விரு நாடகங்களிலும் இவர் கண்ட வெற்றியின் காரணமாக, யூறிப்டஸ் இராணுவத் தளபதிகளில் ஒருவராக நியமிக்கப்பட்டார். அத்தோடு அரசியல் கொள்கை வகுப்பாளராகவும் பணிபுரிந்தார்.

கி.பி. 446இல் கிரேக்க நாட்டின் நான்காவது பெருங்கவி அரிஸ்ரோபின்ஸ் (Aristophones) பிறந்தார். இக்காலங்களில் பெரிக்கிள்ஸ் கோயில்களையும் நாடக அரங்குகளையும் கட்டினான். இவனே நாடக அரங்குகளில் இருந்த மர இருக்கைகளுக்குப் பதிலாக கல்லாலான இருக்கைகளை அமைத்தான். கி.மு. 443இல் ஓடியன் (Odeian) நாடக அரங்கை நிறுவினான். கி.மு. 429இல் காலமானான்.

கி.மு. 420இல் 'ரெறெச்சிஸ் பெண்கள்' (The women of Trachis) என்ற நாடகத்தையும் கி.மு. 420இன் மத்திய பகுதியில் 'ஓடிபஸ் அரசன்' (Oedipus the king) என்ற நாடகத்தையும் சோபசிளஸ் தயாரித்தார்.

பெலப்போனேசியின் போர் நடைபெற்ற காலங்களில் சமூகத்தின் கீழ் மட்டத்திலிருந்தோர் கிடைத்த சந்தர்ப்பங்களை நழுவ விடாது. தங்கள் சக்திகளைத் திரட்டி தமது செல்வாக்குகளை உயர்த்தினர். இதனைத் தொடர்ந்து கீழ்மட்டக் குடிமக்களில் முக்கியமானவரான 'கிளெயொன்' (Cleon) ஏதென்ஸ் நகரில் மிகச் சக்தி உள்ளவனாகத் திகழ்ந்தார். இக்காலங்களில் போருக்கெதிரான கருத்துகளைக் கொண்டிருந்த ஈறுடிப்சும், அரிஸ்ரோபானும் போருக் கெதிரான கருத்துகளை வெளியிட்டனர். அரிஸ்ரோபனின் 'பபிலோனியர்கள்' (The Babylonians) என்ற நாடகம் போருக்கெதிரா குரல் கொடுத்ததோடு கிளெயோனுக்கு எதிராகவும் கருத்துகளைக் கூறியது. அரிஸ்டோபனை அரசியற் காரணங்களுக்காகப் பழிவாங்க எண்ணிய கிளெயோன், சமயத்திற் கெதிராகக் குற்றமிழைத்தார் என்ற காரணங் காட்டி அரிஸ்ரோபனைத் தண்டித்தான். தண்டனைகளுக்கு அஞ்சாத அரிஸ்ரோபன் கிளெயோனுக்கு எதிராக 'வீரத்திருத்தகை' (The Knight) என்ற நாடகத்தை மேடையேற்றினார். இவ்விரு நாடகங்களும் முறையே கி.மு. 426, கி.மு. 424 ஆகிய ஆண்டுகளில் முதலிடத்தைத் தழுவிக் கொண்டன. இதனால் சமூகத்தில், அரிஸ்டோபனின் செல்வாக்கு

80ம் பக்கம் பார்க்க...




கேளுங்கோ கேளுங்கோ

ஆனந்தமான அனுபவம் ! தகவல்களின் சுரங்கம்

இசையும் ஆழ்ந்த அறிவும் தமிழின் பலமே!

கலசம்

www.KALASAM.com

தமிழின் சுவைகூறும் இணையத்தள ஒலிபரப்பு

# செல்வம் உங்களுக்குத் துன்பத்தை வரவழைப்பதில்லை

**பொருள் சேர்க்கத் துவங்கி விட்டால் வாழ்க்கையில் துன்பங்களும் சேர்ந்துவிடுமா?**

பணம் உங்களுக்குத் துன்பத்தை வரவழைப்பதில்லை. முட்டாள்தனம் தான் உங்களுக்குத் துன்பத்தை வரவழைக்கிறது. பணம் உங்கள் வாழ்க்கையில் நுழையும்போது முட்டாள் தனமும் உங்கள் வாழ்க்கையில் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். அந்த நிலையில் துன்பமும் சேர்ந்து வரலாம். அதற்காக பணம் வந்துவிட்டாலே துன்பமும் வந்தாக வேண்டும் என்று கிடையாது. பணம் உங்களுக்கு நிச்சயமாக வசதிகளைக் கொண்டுவருகிறது.

ஆனால் வசதிகள் ஏன் துன்பமாக மாற வேண்டும்? நாம்தானே வசதியை நாடினோம்? அப்படியிருக்க, நாம் விரும்பியதே நமது துன்பத்திற்கு ஏன் காரணமாக வேண்டும்? மனிதர்களின் பெரிய பிரச்சினை இது. பல நேரங்களில் இரண்டு விஷயங்கள் சேரும் போதுதான் சமநிலை கிடைக்கிறது. ஆனால் நாம் ஒன்றை வைத்துக் கொள்கிறோம். அதனுடன் இணைந்த மற்றொன்றை முழுவதுமாய் மறந்து விடுகிறோம். காலையில் சாப்பிட உட்கார்கிறீர்கள். ஊறுகாய் மிகவும் சுவையாக இருக்கிறது. இப்போது மற்றவற்றை மறந்து விடுகிறீர்கள். ஊறுகாய் மட்டுமே வயிறு நிரம்ப சாப்பிடுகிறீர்கள். மாலையே பிரச்சினை ஆரம்பித்து விடுகிறது. அடுத்த நாள் காலை வரை கூட அது காத்திருக்காது.

அதே போலத்தான் செல்வமும் செழுமையும். அவை உங்கள் வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் வரும்போது மிகவும் அழகாக இருக்கும். உங்களிடம் போதுமான பணம் இருந்தால் அடுத்த நாள் வேலை செய்வதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. நீங்கள் விரும்பினால் கண்ணை மூடிக் கொண்டு தியானத்தில் உட்கார்ந்து விடலாம். இன்று சம்பாதித்தால்தான் நாளை உணவு என்ற நிலையிலிருப்பவர் விரும்பினாலும் அப்படி தியானத்தில் உட்கார முடியாது. எனவே பணம் உங்களுக்கு துன்பத்தை வரவழைப்பதில்லை. முட்டாள்தனம்தான் எப்போதுமே துன்பமானது. நீங்கள் ஆன்மீக ரீதியாக முட்டாளாக இருக்கிறீர்களா, அல்லது பொருளாதார ரீதியாக முட்டாளாக இருக்கிறீர்களா என்பதெல்லாம் ஒரு பொருட்டல்ல.

ஏராளமானோர் தினமும் கோவில், மசூதி, மாதா கோவிலுக்குச் செல்கிறார்கள். அவர்கள் அங்கிருந்து திரும்பிவரும்போது அவர்கள் முகத்தைக் கவனித்திருக்கிறீர்களா? அவர்கள் முகம் மகிழ்ச்சியாக மாறியிருக்கிறதா? நான் 11 வயதாக இருக்கும்போது இது என்னை மிகவும் குழப்பியிருக்கிறது. அந்த வயதில் நான் ஒரு பெரிய கோவில் வாசலில் நிறைய நேரம் உட்கார்ந்து கொண்டு கோவிலிலிருந்து திரும்பி வருபவர்களைப் பார்த்துக் கொண்டேயிருப்பேன். கடவுளைப் பார்த்து வந்த பின் அவர்கள் முகம் பிரகாசமாக மாறியிருக்கிறதா என்று கவனிப்பேன். கோவிலிலிருந்து திரும்பிவரும் போது ஒருவருக்கொருவர் 'கிசுகிசு'வோடு திரும்பி வருவதைத்தான் அதிகம் கவனித்திருக்கிறேன். கடவுளைப் பற்றி பேசுவதை விட கோவிலில் பார்த்த மற்ற மனிதர்களைப் பற்றிக் கிசுகிசுவோடு வெளிவருவதைத்தான் நான் அப்போது கவனித்தேன். அல்லது அவர்கள் விட்டுச் சென்ற செருப்பு வேறு யாரோடாவது நடந்து போய் விட்டால் இந்த உலகத்தையே, ஏன் கடவுளைக் கூட சபிக்க ஆரம்பித்து விடுவதைப் பார்த்திருக்கிறேன்.

கோவிலிலிருந்து வெளிவரும் மனிதர்களின் முகத்தைவிட ஹோட்டலிலிருந்து வெளிவரும் மனிதர்களின் முகம் அதிகப் பிரகாசமாக இருக்கிறது. அதிக மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் வெளிவருகிறார்கள். இது மிகவும் வெட்கக்கேடானது, இல்லையா? தெய்வீகத்தை விட தோசை அவர்களுக்கு அதிக திருப்தியைத் தந்திருக்கிறது. எனவே தெய்வீகமா, செழுமையா, தோசையா என்பதல்ல கேள்வி. மனிதர்கள் விஷயங்களை மோசமாகக் கையாண்டால் எப்படியும் துன்பம் நிச்சயம் வருகிறது.

துன்பம் செழுமையால் வரவில்லை. பணம் அவர்களின் சட்டைப் பைக்குள் போவதற்கு பதிலாக அவர்கள் தலைக்குள் போனதால் தான் துன்பம் வருகிறது. அதை சட்டைப் பைக்குள் மட்டும் வைத்துச் கொண்டால் அது மிகவும் அற்புதம். பணம் இருக்க வேண்டிய இடம் அதுதான், உங்கள் தலை இல்லை. பணத்தை சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு இவ்வுலகில் அற்புதமான பணிகள் பலவற்றை செய்யமுடியும்.

> “ ஊறுகாய்
>
> மிகவும் சுவையாக இருக்கிறது என்பதற்காக
>
> மற்றவற்றை மறந்து
>
> ஊறுகாயை மட்டும் வயிறு நிரம்பச் சாப்பிட முடியுமா?
>
> அதுபோலவே தான் பணமும் ”

பணம் உங்களுக்கு துன்பத்தை கொண்டு வருகிறது என்றால் அதை என்னிடம் கொடுத்து விடுங்கள். அதை வைத்து இந்த உலகில் பல விடயங்கள் செய்ய முடியும். அது என்னை துன்பத்தில் ஆழ்த்தாது. ஏனெனில் பணம் என் தலைக்குள் இறங்குவதில்லை. நீங்கள் வசதியாக இருப்பதற்கும்,



- சத்குரு வாசுதேவ் -

மற்றவர்களுக்கு தேவையான வசதிகள் செய்து தருவதற்கும் பணம் வழி செய்து கொடுக்கிறது. பல வழிகளில் அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கிறது.

உலகில் மனிதர்களுக்கிடையே இதுதான் ஒரு பெரிய போராட்டமாக இருக்கிறது. உலகின் மேற்கு பகுதியையும், கிழக்கு பகுதியையும் பார்த்தீர்கள் என்றால், மேற்கு பகுதியில் உள்ளவர்கள் உள்நிலையை சரியாகக் கையாள்வதில்லை. அமெரிக்க நாட்டில் உள்ளவர்களில் 40 சதவீத மக்கள் அவர்களின் வாழ்க்கையில் ஏதாவது ஒரு முறையாவது மன அழுத்தத்திற்கான மருந்தை எடுத்துக் கொள்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. சம நிலையில் இருப்பதற்கு 40 சதவீத மக்கள் மருந்து உட்கொள்கிறார்கள். இது மனித நலனுக்கு உகந்த விடயமாக இல்லை. உலகின் மேற்கு பகுதியில் உள்ளவர்கள் வெளியில்தான் அனைத்தும் இருக்கிறது என நினைத்து உள்சூழ்நிலையைக் கவனிக்க மறந்து விடுகிறார்கள். எனவே அவர்களுக்கு வாழ்க்கை ஒரு குழப்பமாகி விடுகிறது.

இங்கு, இந்தியாவில் வேறு விதமான தவறு நடக்கிறது. எல்லாவற்றையும் சொர்க்கமாக நினைத்து தற்போதைய வாழ்க்கையை மறந்து விடுகிறார்கள். இங்கு பெரிய கோவிலைக் கட்டுவார்கள், ஆனால் சரியான கழிவறை இருக்காது. இது இந்தியர்களின் பிரச்சினை. எல்லாமே சொர்க்கத்தில் இருக்கிறது என்று நினைத்து தற்போது தாங்கள் வாழும் உலகை மறந்து விடுகிறார்கள், எனவே அதற்கான விலையைக் கொடுக்கிறார்கள். எனவே எப்போதும் இந்த இரண்டிற்கும் இடையிலான ஒரு சமநிலையைக் கொண்டிருக்க வேண்டும்.

sathkuru@thaiveedu.com

■ ■ ■

# கிரேக்க நாடகங்...

79ம் பக்கத் தொடர்ச்சி...

அதிகரிக்கவே கிளியோன் இவரைத் தண்டிக்க முடியாமலாயிற்று. போருக்கெதிரான கருத்தைக் கொண்டிருந்த ஈரிடிப்ஸ் கி.மு. 425இல் 'ஹிகியூபா (Hecuba) என்ற நாடகத்தையும் கி.மு. 420இல் 'வேண்டுதல் செய்யும் பெண்கள்' (Suppliant women) என்ற நாடகத்தையும் தயாரித்தார். கி.மு. 423இல், 93 வயது நிரம்பிய அரிஸ்ரோபன் தயாரித்த மேகங்கள் (Clouds) மூன்றாவது இடத்தைப் பெற்றது.

போரிலும், ஆக்கிரமிப்பிலும் ஈடுபட்டிருந்த ஏதென்ஸ் நீண்ட ஐந்து வருட அமைதி கண்டபின் திரும்பவும் மற்றைய நாடுகள் மீது போர் தொடுத்து ஆக்கிரமிக்கும் வெறிக் குணத்திற்கு ஆளானது. 'மெலோஸ்' (melos) என்ற தீவின் மீது போர்தொடுத்து வெற்றிகரமாக அதைக் கைப்பற்றிய பின் இங்கிருந்த எல்லா ஆண்களையும் கொலை செய்யும் முயற்சியில் இறங்கினர். இவ்வெற்றியைத் தொடர்ந்து 'சிறக்கியூஸ்' (Syracuse) மீது தொடுத்த போரில் ஏதென்ஸ் மோசமான தோல்வியைத் தழுவி படைமுழுவதையும் இழக்க நேரிட்டது.

கி.மு. 415இல் யூரிப்டிஸ் கொடிய போருக்கெதிராக 'ரோஜன் பெண்கள்' (The Troge Women) என்ற நாடகத்தைத் தயாரித்து இரண்டாவது இடத்தைப் பெற்றார். போர்களுக்கெதிராக எழுதப்பட்ட நாடகங்களில் இதுவே முதன்மையானது. கி.பி. 414இல் அரிஸ்ரோபன் 'பறவைகள்' (The Birds) என்ற நாடகத்தைத் தயாரித்தார். இந்நாடகம் இன்பியலாக இருந்த போதும், ஏதென்ஸ் நாட்டின் ஆக்கிரமிப்புக் கெதிரானதாகவும் இறை எதிர்ப்பாகவும் இருந்தது.

கி.மு. 408இல் 'ஒறெஸ்ரஸ்' (Orestes) என்ற நாடகத்தை தயாரித்த பின் ஏதென்சை விட்டு வெளியேறிய யூரிப்டஸ், மெசிடோன் என்ற இடத்தில் 'பெச்சன்ஸ்' (The Bacchants) என்ற நாடகத்தை மேடையேற்றி, கி.மு. 406இல் காலமானார். தொடர்ந்து நடந்த போரினால் விரக்தியுற்ற 90 வயதுடைய சோபக்கிளஸ், 'கொலனசில் ஒடிபஸ்' (Odipus at Colonus) என்ற நாடகத்தை எழுதி, அது மேடையேறமுன் காலமானார்.

யூரிப்டஸ், சோபக்கிளஸ் ஆகிய இருபெருங் கவிகளின் இறப்பைத் தாங்க மாட்டாத அரிஸ்டோபன் ஏதென்ஸ், ஸ்பாட்டா ஆகிய நாடுகளுக்கிடையே சமாதானமும் ஒற்றுமையும் வேண்டி, தவளைகள் (Frogs) என்ற நாடகத்தை கி.மு. 405இல் தயாரித்து முதல் இடத்தைப் பெற்றுக் கொண்டார். ஆனால் அவர் வேண்டிய சமாதானமும், ஒற்றுமையும் கிட்டவில்லை.

நீண்ட போரினால் பாதிப்புற்றிருந்த ஏதென்ஸ் பொருளாதார வீழ்ச்சியைக் கண்டது. மக்கள் பசியால் வாடினர். அங்கிருந்த ஆட்சியாளர்கள் விரக்தியுற்றிருந்த மக்களைக் கொலை செய்தனர். இவ்வரிசையிலேயே கிரேக்க தத்துவ ஞானி சொக்ரீஸ் நஞ்சூட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். இதனால் மனமுடைந்த அரிஸ்ரோபன் கி.மு. 393 வரை எந்தவொரு நாடகமும் தயாரிக்காது இருந்தார். அரிஸ்ரோபனுடைய கடைசி இரு நாடகங்களும் இறைவணக்கம், வேண்டுதல் வழிபாட்டு நடனம், வழிபாட்டு முறைகள் என்பன அற்றுக் காணப்பட்டன என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று.

காலாகாலமாக கடவுள் வழிபாட்டுக் கொண்டாட்டங்களும், கேளிக்கைகளும் நிறைந்திருந்த நகரம் சோபை இழந்து, வழிபாடுகள் அற்ற நகரமாயிற்று அறிஞர்கட்கும் சாமானியர்கட்குமான இடைவெளி அதிகாிக்கலாயிற்று. அவர்களுடைய வழிபாட்டு முறைகளும், திருவிழாக்களும் நடைமுறை வாழ்க்கையிலிருந்து தூரவிலகிச் சென்றன. வழிபாட்டுக் கவிதைகளில் மூழ்கியிருந்த மக்கள் தத்துவ சித்தாந்தங்களை நோக்கிச் செல்லலாயினர். நாடக உலகில் முக்கிய இடத்தை பிடித்திருந்த நாடக ஆசிரியர்களான கவிஞர்களின் இடத்தை நடிகர்கள் பெறலாயினர்.

இவ்வாறாக கிரேக்க அரசுகள் போரிட்டு அழிந்து போக, மசிடோனிய மன்னன் பிலிப்பின் தலைமையில் கி.மு. 388இல் ஏதென்சாம், தீபெசும் தோற்கடிக்கப்பட்டு மசிடோனிய ஆட்சி நிறுவப்படலாயிற்று. இக்காலங்களில் 'லீக்ககஸ்' (Lycurgus) என்பான் அழிந்து போன நாடக கொட்டகைகளை மீளப் புதுப்பித்தான். இதுவே மிகச் சக்தி வாய்ந்ததும், பெருமைக்குரியதாயும் கோலோச்சிய துன்பியல் நாடகத்தின் மறைவின் தொடக்கமாகி 'புதிய இன்பியல்' நாடகத்தின் ஆரம்பமாகியது.

தொடரும்...

உசாத்துணை நூல்கள்:

The Deamatic Festivals of Athens
*- John Gould and D.M. Lewis.*
The Theatre of Dionysus.
*- John Gould and D.M. Lewis.*
The Plays and Fragments - *Sophocles.*
Sophocles the Play wright
*– Adams, Sinclair and Mac Lardy.*
The Style of Aeschylus – Earp, F.R.
The Style of Sophocles – Earp, F.R.
The Antique Greek Dance
*– Emmanuel, Maurice.*
Essays on Greek History and Literature
*– Gomme, A.W.*

ganam.lambert@thaiveedu.com

■ ■ ■

# வர்த்தக நிறுவனங்கள் வாங்க, விற்க



**Home Life**

GTA Realty Inc., brokerage

205-1711 McCowan Road, Scarborough, ON. M1S 3Y5

Bus: 416-321-6969 Fax: 416-321-6963

**Baskaran Sinnadurai**

Commercial & Residential Sales Representative

**416-880-8585**



**Asking 2.5million**

Well Maintained Corner Location In Downtown Lindsay,
All Brick With 20 Apartments
And 5 Main Floor Comm/Retail Tenants




**1.3 million**

Space Banquet hall ,coin laundry and
7 office units, Scarborough



**Asking 370,000**

Restaurant space with zoning
New Delhi Dr ,markham



**Asking 229,000**

Restaurant in rockwood
50,000 monthly sales

# வீட்டுக்கடன் காப்புறுதி திட்டம்

## Mortgage Life Insurance

### வங்கிக் கடன் காப்புறுதி

01. வங்கியே உடமைக்காரர்.
02. வங்கியின் அதிகாரத்தில் இருக்கிறது.
03. கடன் தவணைகள் தவறினால் காப்புறுதி செயலிழந்து விடும்.
04. வங்கியே பாத்தியக்காரர்.
05. உங்கள் காப்பு தொகை குறைந்துகொண்டே வரும்.
06. காப்புறுதிக்கு திரும்பவும் விண்ணப்பிக்கவேண்டும்.
07. காப்புறுதி தொகை, கடன் தொகையை தாண்டக்கூடாது.
08. கடனை முற்றிலும் தீர்க்கவேண்டும்.
09. நீட்டவோ மாற்றவோ முடியாது.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை இல்லை.
11. காப்புறுதி எடுத்தவர் இறந்த பிற்பாடே வங்கி அதன் தராதரங்களை முற்றாக ஆராயும்.
12. வங்கி காப்புறுதி மிகவும் கூடிய செலவு.
13. வங்கி காப்புறுதியை எப்பவும் லண்டன் லைஃப் காப்புறுதிக்கு மாற்றலாம்.
14. முடிவு உங்களுடையது, வங்கியுடையது அல்ல.

### லண்டன் லைஃப் காப்புறுதி

01. காப்புறுதி எடுத்தவரே உடமைக்காரர்.
02. காப்புறுதி எடுத்தவரே அதிகாரம் கொண்டவர்.
03. கடன் தவணைகள் தவறினாலும் காப்புறுதி செயலிழக்காது.
04. உங்கள் பாத்தியக்காரராக யாரையும் நீங்கள் நியமிக்கலாம்.
05. உங்கள் காப்பு தொகை நிரந்திரமானது, காப்புறுதி தவணையும் ஒரே அளவானது.
06. கடன் உதவியவரை மாற்றினாலும் காப்புறுதி தொடரும்.
07. காப்புறுதி தொகையை உங்கள் தேவைப்படியும், வசதிப்படியும் தீர்மானிக்கலாம்
08. உங்கள் உரிமைக்காரர் பணத்தை தக்கவைத்துக்கொண்டு அதன் வருமானத்தில் தவணைகளைக் கட்டலாம்.
09. உங்கள் காப்புறுதியை மிண்டும் புதுப்பிக்கலாம் மாற்றலாம்.
10. திட்டமில்லாத வைப்புகளுக்கு சலுகை உண்டு.
11. காப்புறுதிகளின் தராதரம் விண்ணப்ப சமயத்தில், தீர்மானிக்கப்படும்.
12. எங்களுடையது போட்டிகளை எதிர்த்து நிற்கும் வல்லமை கொண்டது.
13. மேற்சொன்ன காரணங்களினால் இதுவே சிறந்தது.

Freedom 55 Financial

A division of London Life Insurance Company



**பாலா பாலசுந்தரம்** B. Eng


சிறந்த விற்பனையாளருக்கான விருது பெற்றவர்

**Office: 416-291-0451 Ext.227**

**Cell: 416-518-9489**

**300-2075 Kennedy Rd, Toronto. ON M1T 3V3**

**E-mail: bala.balasundaram@freedom55financial.com | Now Representing Manulife, Sunlife & Greatwest Life.**


25 Trothen Circ
16th Ave / Fincham Ave
Bedroom
Dining
Fireplace
Backyard
Coffee Table
Taxes: $3,349.95/2009
Lot Size: 39.12X98.43 ft
4 Bedroom Link Detached Home In Excellent Condition And In Very Nice Neighbourhood. All Newer Windows & Patio Door(3 Years), Roof(7 Years), Furnace(7 Years), Oak Stairs & Hardwood Landing, Finished Basment W/ Wet Bar And 3 Pc Washroom, Enclosed Porch, Double Garage, Close To Brother Andre High School And All Other Amenities.
Extras: Fridge, Stove, B/I Dishwasher, Newer Washer/Dryer, Microwave, Bar Fridge In Basement, All Alfs, All Window Coverings, Pool Table.
Kitchen
$459,000
Staircase
Living Room
Rudy Ruthran
416-587-5583
rudy@ruthran.com
COLDWELL BANKER
COLDWELL BANKER EXCEPTIONAL REAL ESTATE SERVICES Brokerage
Each office is independently owned and operated
3107 Sheppard Ave East, Toronto, ON. M1T 3J7
Tel: 416.497.9794, Fax: 416.497.5949
Logan Velumailum
416-410-1620
vlogan599@yahoo.com

# கிணற்றடி வேலியில் கொள்ளை கொள்ளையாய் செம்பருத்திப் பூ

எமது கிணற்றினைச் சுற்றிவர பாதுகாப்பு வேலி. அப்படி என்ன பாதுகாப்பு என்கிறீர்களா? வீட்டிலே உள்ள பெண்பிரசுகள் குளிப்பதனால் செவ்வையாக கிடுகினால் அடைத்த வேலி. இந்த வேலியைத் தாங்கி நிற்பவை முள்முருங்கை மரங்கள். ஆனால் இடையிடையே செம்பருத்திச் செடிகள். முள்முருங்கை நமது ஆடுகளின் தேவையை நிறைவு செய்யும். செம்பருத்திகள் உல்லாசமாக தினசரி பூத்துக் குலுங்கும். கிணற்றடிப் பானாவில் இருந்து வெளியேறும் நீர் போவதற்கான வாய்க்கால் இந்த வேலி அருகாகவே தான் செல்கின்றது என்பதால் இந்த வேலியின் முருங்கை மரங்களுக்கும் செம்பருத்திச் செடிகளுக்கும் தண்ணீர்ப் பஞ்சம் என்ற கதைக்கே இடமில்லை. எனவே புஷ்டியாக வளர்ந்து செம்பருத்திகள் நாளாந்தம் பூத்துக் குலுங்குகின்றன. செம்பருத்திகளை அந்தப் பெயர் சொல்லி அழைப்பதில் அர்த்தம் உள்ளது. பருத்திச் செடியும் (Gosypium Herbacium) செம்பருத்தியும் (Hibiscus Rosa Synensis) ஒரே குடும்பத்தினைச் சேர்ந்தவை (Malvaceae) ஆனால் செவ்வரத்தையும் பரவாயில்லை. ஆனால் அச்செடியினை செம்பரத்தை என்பது கொடுமையல்லவா. பரத்தை என்பவர் யார்? சப்பாத்திப் பூ (Shoe flower) என்று கூட அழைக்கின்றனர் செம்பரத்தை எனப் பெயரிட்ட புண்ணியவான் யாரோ? முதலில் அயன மண்டலத் தாவரமாக இருந்தது (Tropical) இப்போ காணாத உலகின் பகுதி இல்லை என்ற நிலைக்கு வந்தமையால்தான் இப்பெயரோ?

அடுக்கு ஒற்றை, விதையில் முளைப்பவை, பதியமுறையால் தான் உண்டாக்கக் கூடியவை என 200க்கும் அதிகமான இனங்கள் உலகெங்கிலும் காணப்படுகின்றன. இத்தாவரம் அயன மண்டலத்துக்குரியதென்றாலும் இப்போது குளிர் பிரதேச நாடுகளுக்கும் பரவியுள்ளது ஸ்ரீலங்காவில் பேராதனை தாவரவியல் பூங்காவில் நான் 118 இனங்கள் வரை பார்த்துள்ளேன். என் வீட்டில் ஏறக்குறைய 60 வகை வைத்திருந்தேன். நமது ஊரினிலே சிவப்பு ஒற்றையிதழ் அடுக்கு மற்றும் தொங்கு செம்பருத்தி சாதாரணம். சில வீடுகளிலே வெள்ளை நிறத்திலேயும் காணப்படும். கனடாவில் பூச்சாடிகளில் வைத்து குளிர்காலத்தில் வீட்டின் உள்ளே கொண்டு போகின்ற இனங்களைத் தவிர விதைகளில் முளைக்கும் இனங்கள் பிரபலம் (Rose of Sharon) இன்னும் ஒருவகையில் குளிர் காலத்தில் தரை மேல் உள்ள பகுதிகள் இறந்து விட வசந்த காலத்தில் மண்ணின் கீழே வேரில் இருந்து புதிய கிளைகள் வருவதைக் காண முடியும். மிகவும் பெரிய அழகான பூ.

செம்பருத்திப் பூ அதிக மருத்துவக் குணங்களைக் கொண்டது. இவற்றின் இலை, பூ, வேர் என அனைத்தும் மருத்துவத் தன்மையுள்ளவை என்கிறார்கள். ஆனால், நான் அறிய எனது அம்மா அதன் இலைகளை சிறிது நீருடன் சேர்த்து அரைத்துச் சளியம் (Mucilage) கொண்ட பசையாக்குவார் அதனை அக்காள் தலையில் தேய்த்து முழுக வார்ப்பதைக் கண்டுள்ளேன். அக்காவிற்கு அடர்த்தியான சுருள் கூந்தல். சனிக்கிழமை அரப்பு வைத்து முழுகவேண்டும் இடையிடையே இந்த செவ்வரத்தை இலைத் தோயல் என்பது அம்மாவின் எழுதாத இல்லத்துச் சட்டம். இந்தச் சளியம் மயிர் உதிர்வதைத் தடுப்பதுடன் நரை ஏற்படுவதையும் தடுக்கும் என்பது ஆயுர்வேதம் அறிந்தவர்கள் சொல்லி வருவது. எனது அக்காவினது தலைமயிரின் அடர்த்தி யையும் கருமை நிறத்தினையும் இப்போது பார்ப்பவர்கள் செம்பருத்தி இலையில் ஏதோ விசயம் இருக்கத்தான் வேண்டும் என்பதை உணர்வார்கள். இன்னும் பல கூறலாம், அடியில் சில உள்ளன. நம்புகின்றவர்களுக்காக மாத்திரம்.

செம்பரத்தை மேகவெட்டை தீராப்பிரமியொடு
வம்பிரத்த வெள்ளை வழுவழுப்பும் - வெம்பும்
பெரும்பாடு ரத்தபித்த பேதம் அகற்றும்
கரும்பா மொழி மயிலே காண்.

- அகத்தியர் குணபாடம்

தினசரி காலை வேளையில் நம் வீட்டிற்கு ஓர் அழையா விருந்தாளி. அவர் நேரடியாகவே கிணற்றடி வேலிப்பக்கம் தான் போவார். அவரது ஒரு கையில் தென்னோலையால் ஆன பூக்கூடை மறு கையில் மேலே கொழுக்கியைப் போலக் கிளையுள்ள ஒரு நீண்ட தடி இருக்கும். கிணற்றடி நோக்கிப் போகும் அவர் பெயர் தம்பி ஐயர். ஆனால் எல்லோர் வாயிலும் அடிபடும் பெயர் 'சாத்துப்படி ஐயர்' என்பது. அந்தக் காலங்களிலே ஆலயத் திருவிழாக்களின் போது எழுந்தருளி விக்கிரகங்களுக்கு போலியான கை மற்றும் கால்கள் எல்லாம் வைத்து சோடித்தே வீதி உலாக் கொண்டு வருவார்கள். அழகாகத்தான் இருக்கும் இப்படி அழகுபடுத்தலைச் சாத்துப்படி என்பார்கள். சாத்துப்படி செய்வதில் தம்பி ஐயர் பெரும் கில்லாடி. தீவுப் பகுதிகள் முதல் வல்வெட்டித்துறை போன்ற இடங்களில் உள்ள ஆலயங்களுக்கே இவரை அழைத்துப் போவது அவரது திறமைக்கு எடுத்துக் காட்டு.



தம்பி ஐயர் ஒரு 5 அடி உயரம் இருப்பார். நிறத்தளவில் கொஞ்சம் பொது நிறத்திற்குச் சற்று மேலே. உடல் எங்கும் அடர்த்தியான மயிர். உயரத்துக்குத் தக்க பருமன் என்றாலும் அந்த வயிறு மாத்திரம் கொஞ்சம் பேழை போன்று இருந்தமையால் அவர் உடுத்துகின்ற நாலு முழ வேட்டி எப்பொழுதும் அரைஞாண் கயிற்றடியில் தான் சங்கமமாகி நிற்கும். இதனால் அவர் நடக்கும் போதும் நிற்கும் போதும் வேட்டி நிலத்தினைத் தடவிக் கொடுக்காமல் இருப்பதற்காக ஐயர் ஒரு தலைப்பினைக் கைகளில் தூக்கிப் பிடித்த வண்ணமே நடப்பார். எனவே கொஞ்சம் வேகமாக நடந்தார் என்றால் கௌபீனம் மின்னல் போன்று இடையிடையே காட்சிதரத் தவறுவதில்லை. ஆலயத்தில் பூசை பண்ணும் போது இரண்டு கைகளும் தேவை என்றமையால் ஒருபக்கத்து முனையினை மேலே கொண்டு வந்து செருகி இருப்பார். ஆகவே சுவாமிக்கு ஐயருடைய மறைந்த பாதி, மறையாத பாதி எல்லாம் தெரிந்த பகுதி.

முன்னே மழித்த தலையும் பின்னே வாரி இழுத்த குடுமியும். அதில் இடையிடையே தோன்றும் வெள்ளிக் கம்பிகள் போன்ற நரை மயிர். தினசரி எங்களுக்கு ஐயரின் தரிசனம். ஊர் விவகாரம், தான் தொழிலுக்காகச் சென்ற இடம் பற்றி பேசிக்கொண்டே கருமத்தில் கண்ணாயிருப்பார் ஐயர். போதிய பூப்பறித்ததும் நடையைக் கட்டிவிடுவார்.

ஐயருக்கு கோவில் புரோகிதம் ஆலங்குளாய்ப் பிள்ளையார் என்பார்கள். ஆனால் அங்கே எழுந்தருளி முருகமூர்த்தி. எப்படி இரண்டு பேரும் சண்டை சச்சரவில்லாமல் இருக்கிறார்களோ தெரியாது. மாருதப்புரவல்லி வழுக்கை ஆற்றுக் கரையிலே ஸ்தாபித்த ஆறு பிள்ளையார் கோவில்களில் இதுவும் ஒன்று என்பார்கள். வழுக்கை ஆறு ஆலங்குளாய் வயல்வெளி ஊடாகத்தான் ஓடுகிறது. இந்தக் கோவிலும் முன்னே உள்ள வயல் வெளியைப் பார்த்தபடியே தான் உள்ளது.

அவர்கள் இருவரையும் மோதவிடப்படாது என்ற காரணத்தினாலோ தெரியாது அலங்கார உற்சவம் அங்கே நான் அறிந்த வரையில் நடைபெறுவதில்லை. ஆனால் ஒரு காலத்தில் அக்கோவில் கொஞ்சம் நல்ல பவிசான நிலையில் இருந்திருக்க வேண்டும் என்பதற்கான அறிகுறியாக பாழடைந்த யாகசாலையும் மடப்பள்ளியும் ஆலயத்தின் உள்வீதியினைச் சுற்றி மதிற்சுவரும் இருப்பதைக் கொண்டு உணரலாம். இப்போ நிலமை மாறிவிட்டது.

**- பொ. கனகசபாபதி -**

சும்மா இருக்க இடமில்லாமல் ஆலமரத்திற்கும் அரச மரத்துக்கும் கீழே குந்தியிருந்த வைரவரும், பிள்ளையாரும் நிம்மதியாக மாளிகை வாசம் செய்கிறார்கள் என்றால் வெளிநாட்டுப்பணம் உதவி உள்ளதைக் காண முடிகிறது இந்தக் கோவிலும் இப்போது திருத்தப்பட்டு அலங்கார உற்றசவம் எல்லாம் நடைபெறுகிறது.

ஆலங்குளாயில் ஐயரின் குடும்பம் ஒன்றுதான் பிராமணக்குடும்பம். கோவிலுக்குப் பெரிதாக வருமானம் இல்லை. ஆனால் ஊரவர்கள் எல்லோரும் விவசாயிகள் என்பதால் அறுவடை காலத்தில் ஐயர் வயல் வெளிக்குப் போவார். ஊரவர்கள் சாகுபடி நெல்லில் ஐயருக்குத் தாராளமாக வழங்குவார்கள். ஐயரது குடும்பம் சற்றுப் பெரியது ஆறு பிள்ளைகள் அதில் மூன்று பெண்கள் மூன்று ஆண்கள். ஆனால் இரண்டு இளைய பெண்பிள்ளைகள் நடக்க முடியாமல் இருந்தார்கள் பேச்சிலும் தெளிவில்லை. ஐயருக்குக் கொஞ்சம் கஷ்ட ஜீவனம் தான். கோவில் வீதிக்கு அருகே தான் அவர் வீடு. ஆகவே கோவில் மடப்பள்ளியைப் பாவிக்க வேண்டியதில்லை.

எங்களது வீட்டிற்கும் ஐயர் வீட்டிற்கும் இடையே வேறொருவருக்கான காணி ஒன்று இருந்தது. மற்றப்படி பார்த்தால் அருகருகான வீடுகள். ஆனால் ஐயர் வீட்டிற்கு நாங்கள் போவதானால் ஒழுங்கை வழியாகத்தான் போக வேண்டும். ஐயருடைய மூத்தமகன் எனது அண்ணருக்கு நண்பன். எழுத்தறிவித்தவன் இறைவன் என்பார்கள். அப்படி என்றால் நான் ஐயரின் மகனை எப்படி அழைக்கலாம். சினிமா நட்சத்திரங்கள் பற்றியும் அவர்கள் பிரத்தியேக வாழ்க்கையை பற்றிய அறிவினையும் நான் பெறக்காரணமாயிருந்தவர் இந்த மகன் தான். அப்போ மிகப் பிரபலமாயிருந்த மஞ்சள் பத்திரிகை 'இந்து நேசன்'. அதன் ஆசிரியர் லஷ்மிகாந்தன். தாராளமாக சினிமா நடிகைகள் பற்றிக் கன்னா பின்னா என எழுதுவார். மெய்யோ, பொய்யோ தெரியாது என்றாலும் வாசிப்பவர்களுக்குக் கிளர்ச்சியையூட்டும். லஷ்மிகாந்தனின் தொல்லை தாங்கமுடியாமையால் இறுதியில் கொலை செய்யப்பட்டார். அவரைக் கொலை செய்வதில் உடந்தையாக இருந்தவர்கள் என அக்காலத்தில் மிகப் பிரபலமாயிருந்த நடிகர்கள் M.K தியாகராஜ பாகவதர், N.S கிருஷ்ணன் ஆகியோரை சம்பந்தப்படுத்தி மறியலுக்கு அனுப்பப் பட்டனர். அப்போது எனக்குப் பத்து வயது தான் இருக்கும். 'இந்து நேசன்' வாசகர்களில் எனது அண்ணாவும் ஐயரின் மூத்த மகனும் பங்காளிகள். அண்ணா வாங்கினால் தான் வாசித்தபின்னர் அவருக்குக் கொடுப்பார். அவர் வாங்கினால் இவருக்குக் கொடுப்பார்.

எனது அண்ணாவின் கணிப்புப்படி நான் விபரம் தெரியாத சின்னப் பையன். ஆகவே அவர் இந்து நேசனை வாசித்தபின்னர் எனது சகோதரிகள் கண்ணில் பாடாவண்ணம் இருப்பதற்காக உடனடியாக என்னிடம் தந்து ஐயரின் மகனிடம் கொண்டு போய்க் கொடுக்குமாறு பணிப்பார். நானும் கோவில் வீதி வரும் வரை அப்பாவிப் பிள்ளையாக நடந்து கொள்வேன். மெல்ல கோவில் படிக்கட்டில் இருந்து வரிக்கு வரி வாசித்த பின்னர் ஐயரின் மகனிடம் கொண்டு போய்க் கொடுப்பேன். அன்று சினிமா நடசத்திரங்களின் பிரத்தியேக வாழ்க்கை பற்றி அறிவதற்காக எழுந்த ஆவல் இன்று வரை, இந்த வயதிலும், என்னை விட்டுப் போனபாடில்லை என்றால் அதற்கான வித்தினை இட்ட ஐயருக்கு நான் எவ்விதம் கைமாறு செய்யலாம்.

தம்பி ஐயர் மிக நல்லவர்தான் ஆனால் பிடிவாதக்காரர், கோபம் வந்தால் அவர் வாயில் இருந்து உதிர்க்கப் படுவது வடமொழியா அல்லது வசை மொழியா என்பதை வித்தியாசம் காணமுடியாது. அது ஆலயத்தில் உள்ளேயும் தொடரும். ஐயர் பூசிக்கிறாரா அல்லது தூசிக்கிறாரா என்பது எமக்குப்

தொடர்தல் 84ம் பக்கம்

தாய்வீடு பத்திரிகை பற்றிய
விமர்சனங்களை
எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர்
ஆரோக்கியமான
பாதையில் இட்டுச்செல்லும்.

*E-mail:thaiveedu@gmail.com*
*Fax: 416-849-0594*
*Tel: 416-646-3422*

புரியாவிட்டாலும் பிள்ளையார் தனக்குத் தேவையானதை மாத்திரம் கேட்டுக்கொள்வார். அது போதும் தானே?

ஆலயத்தின் உள்வீதி விசாலமானது. வடக்குப் புறத்தில் ஒரு திருமஞ்சனக் கிணறு மாத்திரம் உண்டு. கிணற்றினைச் சுற்றி சதுரவடிவில் ஒன்றரை அடி உயரத்தில் தடுப்புச் சுவர் உள்ளது. உள்வீதி நமது மாணவர் குழுவுக்குக் கிட்டிப் புள்ளு விளையாடுவதற்கு நல்ல மைதானமாக இருந்தது. கிட்டியும் புள்ளும் பன்னைத் தடியினில் தான் செய்வோம். அது தான் வெடிக்காது. பூவரசு எல்லாம் உதவாது.

வெடித்து விடும் ஒரு நான் இரு கன்னைகள் பிரித்து விளையாடிக் கொண்டிருந்தோம். எனது அணியில் இருந்த ஒருவர் அடித்த அடியினால் புள்ளு பறக்குது... பறந்து கொண்டே போகிறது. எதிரணியினுக்கு எனது உறவினன் மகாதேவன் நன்றாகக் காச் பிடிப்பான் இன்றைய இந்திய அணி அவனிடம் பயிற்சி பெற்றிருந்தால் உன்னதமாக விளையாடும். மகாதேவன் விட்டபாடில்லை. பின்னோக்கி ஓடினான் ஓடிக்கொண்டிருந்தவன் அப்படியே தலைகீழாகத் திருமஞ்சனக் கிணற்றின் உள்ளே. எமது நல்லகாலம் கிணற்றிலே அவ்வளவாகத் தண்ணீர் இருக்கவில்லை. அவன் ஒரு தேங்காய் கோம்பையின் மேலே நின்று கொண்டிருந்தான். நிம்மதியாகப் பெருமூச்சு விட்டோம். எப்படியோ கூக்குரலிட்டு ஆட்களை வரவழைத்து மகாதேவனை மேலே எடுத்தோம். அனால் ஐயரோ பிரச்சினைப்படுத்திவிட்டார் கோவில் கிணறு தீட்டுப் பட்டு விட்டமையால் அந்தக் கிணற்று நீரைப் பூசைக்கு உபயோகிக்க முடியாது எனத் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். கிணற்றினை ஒருமுறை வற்ற இறைத்துத் தரவேண்டும் என அடம் பிடித்தார்.

ஊரிலோ இறைக்கும் எந்திரம் இல்லை, கோவிலுக்கோ துலா இல்லை. என்ன செய்வதாம். கடைசியில் எனது அண்ணர் தன்னோடொத்த சிலரை அழைத்து வந்து தூக்கு வாளியால் எப்படியோ வற்ற இறைத்துக் கொடுத்தார். ஐயர் இனிமேல் நாம் அங்கே விளையாடுவதற்குத் தடையுத்தரவு போட்டார்.

திடீரென ஒரு நாள் செய்தி ஒன்று ஊரில் கிளம்பியது. ஐயர் வீட்டில் எறிமாடனாம்... எனக் கிளம்பிய கதை மெல்ல மெல்ல ஊர் முழுவதும் பரம்பி விட்டது. யாரோ செய்வினை செய்து விட்டார்களாம் அதனால் அந்த ஏவல்பேய் ஐயர் வீட்டின் மேல் கல் எறிகிறதாம் என்பதே ஊரெல்லாம் பேச்சு. நடு நிசியின் மேல்தான் அந்த எறிமாடன் தனது வேலையைக்காட்டுவதாகச் சொன்னார்கள். 'உது விசர்க்கதை' என்றவர்கள் கூட இரவினில் ஐயர் வீட்டுப்பக்கமாகப் போவதற்குத் துணை தேடினார்கள். ஊர்வாசிகளில் சிலர் நடுச்சாமத்தில் ஐயர் வீட்டிற்குப் போய் பார்த்தார்கள். எனது அண்ணனும் போய்ப் பார்த்தவர்களில் ஒருவர். ஊர் அல்லோலகல்லோலப் பட்டது. கல்வந்து பொலபொல என விழுவது உண்மை. எறிமாடன் தான் என்றார்கள். இன்னும் சிலர் அந்தச் சொத்தி அம்மாதான் எறியுது என்றார்கள். எனது அம்மா அந்தப் பக்கம் போகவில்லை. எனது அண்ணர் அம்மாவுக்கு கல் வந்து வீழ்ந்த விதத்தினை வருணித்ததைக் கேட்க எனக்கும் போய்ப் பார்க்க வேணும் என்ற ஆசை எழுந்தது. "அப்படியே குருவி ஆகாசம் போலப் பொல பொல என வந்து விழுகிறது. எங்கிருந்து அத்தனை கற்கள் விழுகின்றன எனத் தெரியவில்லை" என வருணித்தார் அண்ணன். நான் போய்ப் பார்க்க ஆசைப்பட்டேன். அந்தப் பக்கம் கால் வைத்தாய் என்றால் காலை முறித்து விடுவேன் என்றார் அம்மா இப்பிடிக் கனடாவில் நானே என் நடத்தைப் பிழையினால் காலை முறித்துக் கொள்வேன் என அன்று தெரிந்திருந்தால் போயப் பார்த்து உண்மையை அறிந்திருக்கலாம். காலை முறித்த பெருமையை எனது அம்மாவிற்குக் கொடுத்திருக்கலாம் என்ன செய்வது? பின்னே வருவதை முன்னே அறியும் திறன் எனக்கிருக்கவில்லையே!

இரண்டு வாரங்கள் வரை இது தொடர்ந்தது. ஆகவே ஊரவர்களின் ஆலோசனைப்படி பேயினை விரட்டுவதற்கென ஒரு மாந்திரீகன் அழைக்கப்பட்டார். அவருடன் ஓர் உதவியாளன். அவர்கள் இருவருக்கும் ஒரு வாரம் ஐயர் வீட்டிலேயே ஜாகை. ஐயர் தினசரி காலையில் வருவது தவறவில்லை. ஆனால் எல்லாப் பூக்களும் ஐயர் கூடையுள் புகுந்த தோடல்லாமல் இலைகளும் போயின. இதில் ஒரு பகுதி மந்திரவாதி எறிமாடனை விரட்டுவதற்காகவாம். என்ன மாயமோ? ஒரு வாரத்தில் ஐயர் வீட்டில் கல் விழுவது முற்றாகவே நின்றுவிட்டது. ஊரவர்கள் மாந்திரீகனைப் பாராட்டினார்கள். ஊர் பழையபடி அமைதி நிலைக்கு வந்துவிட்டது. எனக்கு மாத்திரம் அம்மாவின் தடை உத்தரவு இன்னும் நீக்கப் படவில்லை.

சில நாட்களின் பின்னர் அண்ணர் இந்து நேசனை என்னிடம் தந்து ஐயரின் மூத்த மகனிடம் கொடுக்குமாறு சொன்னார். நானும் நல்ல பிள்ளையாக அதனைப் பெற்றுக்

**கோவில் கிணறு தீட்டுப் பட்டு விட்டமையால் அந்தக் கிணற்று நீரைப் பூசைக்கு உபயோகிக்க முடியாதெனத் திட்டவட்டமாகக் கூறி, கிணற்றினை ஒருமுறை வற்ற இறைத்துத் தரவேண்டும் என அடம் பிடித்தார்.**

கோவில் உள்ளே சென்று வாசித்து முடித்தேன். கொஞ்சம் இருள் கவியத் தொடங்கியது. எறிமாடன் ஞாபகம் வந்து உதறல் எடுத்தது. கொஞ்சம் பயமும் உதயமாயிற்று. அவசர அவசரமாக ஐயர் வீட்டுக்குப் போனேன். சொத்தி அம்மாவின் அவலக்குரல் கேட்டது. எனக்குப் பயமெடுத்தது. சொத்தியம்மாவை ஐயர் வீட்டு விறாந்தையில் ஒருவன் ஏதோ செய்வது தெரிந்தது. அவன் கைகளில் சொத்தி அம்மா திமிறிக் கொண்டிருந்தார். எனக்கோ பயமெடுத்தது இந்து நேசனை அங்கே எறிந்து விட்டு வீட்டிற்கு ஓடிவிட்டேன்.

சொத்தி அம்மாவைத் தனியே விட்டுவிட்டுப் போன ஐயர் குடும்பம் வந்த பொழுது அம்மாவுக்கு நடந்த அலங்கோலம் தெரியவந்தது. ஐயர் கொதித்தார். பொலிசார் வரவழைக்கப் பட்டனர். அம்மா குழறிக்குழறி விசயத்தைச் அரையும் குறையுமாகச் சொன்னார். ஆனால் நடந்த அம்மாவைப் பார்த்தவுடனேயே புலனாகியது. சொன்னார். மந்திரவாதியின் உதவியாள் தான் அந்தக் கொடிய காமுகன் என அம்மா சொன்னதோடு நிற்காமல், செம்பருத்திப் பூப் பெடியன் கண்டவன் என்றும் பொலிசிடம் கூறிவிட்டார். பொலிஸ் என்னிடம் வந்தது. நான் ஐயர் வீட்டுப் பக்கம் போகவேயில்லை என அம்மா அடிச்சுச் சத்தியம் பண்ணினார். நான் முழி பிதுங்கி நின்றேன். வார்த்தை வரத் தவறியது. அண்ணாவுக்கே வேர்த்துக் கொட்டியது. தான் என்னை அனுப்பியதாக அண்ணா சொல்ல அம்மா அண்ணாவை ஒரு பார்வை பார்த்தாரே அதை அண்ணா சீவிய காலம் வரை மறந்திருக்க மாட்டார். நான் பொலிசுக்கு கண்டதைக் கூறினேன். என்ன நடந்தது என்பதன் அர்த்தம் புரியாத எனக்கு சில வருடங்கள் பின்னரே காவாலி துரைராஜசிங்கத்தின் விளக்கம் கிடைத்தது. வழக்கு நடந்தது. அவனே குற்றத்தினை ஒப்புக் கொண்டான். இது போன்று முன்னொரு முறை வழக்கு நடந்த போது பிரபல வக்கீல் G.G.பொன்னம்பலம் ஊசி ஆட்டினால் நூலினை உள்ளே செலுத்தலாமா எனக் கேட்டாராம். இங்கே அப்பிடிக் கேட்பார் ஒருவரும் இல்லை என்பதால் மாந்திரீகனின் உதவியாளருக்கு இரண்டு வருடம் கடுங்காவல் தண்டனை கிடைத்தது.



kanagasabapathy.p@thaiveedu.com




## வயிற்றுப்புண், வாய்ப்புண் நீங்க

அஜீரணக் கோளாறால் வயிற்றில் வாய்வுக்கள் சீற்றமடைந்து வயிற்றின் உட்புறச் சுவர்களைத் தாக்குகின்றன. இதனால் வாயிலும் புண்கள் உருவாகின்றன.

இப்படி வயிற்றுப்புண், வாய்ப்புண்ணால் பாதிக்கப் பட்டவர்கள் தினசரி 5 அல்லது 10 செம்பருத்திப் பூக்களின் இதழ்களை சாப்பிட்டு வந்தால் புண்கள் குணமாகும்.

## பெண்களுக்கு...

கருப்பை பாதிப்பினால் கருவுறாமல் இருப்பவர்களுக்கும், வயது அதிகம் ஆகியும் ருதுவாகாமல் இருக்கும் பெண்களுக்கும் செம்பருத்திப்பூ சிறந்த மருந்து.

10 செம்பருத்திப் பூவின் இதழ்களை அரைத்து மோரில் கலந்து தினமும் கொடுத்துவந்தால் வெகுவிரைவில் கருப் பையில் உள்ள நோய்கள் குணமாகும். பூப்பெய்தாத பெண்களும் பூப்பெய்துவார்கள்.

சிலருக்கு மாதவிலக்குக் காலங்களில் அடிவயிற்றில் அதிக வலி உண்டாகும். மேலும் அதிக இரத்தப்போக்கு உள்ளவர்களுக்கு மயக்கம், தலைவலி ஏற்படும். இவர்கள் செம்பருத்திப் பூவை நிழலில் உலர்த்தி பொடி செய்து கசாயமாக காய்ச்சி அருந்தி வந்தால் மாதவிலக்குக் காலங்களில் ஏற்படும் உபாதைகள் குறையும்.

சில பெண்கள் வெள்ளைப் படுதலால் அதிக மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். செம பருத்தியின் இதழ்களை கசாயம் செய்து அருந்தி வந்தால் வெள்ளைப்படுதல் குணமாகும்.

## தலைமுடி நீண்டு வளர...

சிலருடைய தலையில் பொடுகு, பேன், ஈறு தொல்லைகள் அதிகமாக இருக்கும். இவர்கள் எவ்வளவுதான் மருந்துகள், ஷாம்புகள் உபயோகித்துப் பார்த்தாலும் அவர்கள் முழுமையாக இந்த தொல்லை யிலிருந்து விடுபடமுடிவதில்லை. இதற்கு அருமையான மருந்து செம்பருத்திதான். செம்பருத்தி பூவின் இதழ்களை அரைத்து தலையில் தேய்த்து குளித்து வந்தால் பேன், பொடுகு நீங்கும்.

செம்பருத்தி இதழ்களை நிழலில் உலர்த்தி எடுத்து வெந்தயப்பொடி, கறிவேப்பிலைப் பொடி கலந்து எண்ணெயில் கொதிக்க வைத்து எடுத்து பாட்டிலில் அடைத்து வைத்து தினமும் தலைக்குத் தேய்த்து குளித்து வந்தால் தலைமுடி உதிர்தல் நீங்கி, முடி நன்கு வளரும்.

செம்பருத்திப் பூவை காயவைத்து பொடி செய்து கோப்பி, ரீ போல காலை மாலை கசாயம் செய்து அருந்தி வந்தால் இரத்தம் தூய்மையடையும், உடல் பளபளப்பாகும்.

## நீர் சுருக்கு நீங்க

நீர் சுருக்கைப் போக்கி சிறுநீரைப் பெருக்கி உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றுவதற்கு செம்பருத்திப் பூவின் கஷாயம் மருந்தாகிறது.

## இருதய நோய்க்கு

இருதய நோயாளிகள் செம்பருத்திப் பூ இதழ், வெள்ளைத் தாமரையின் இதழ் எடுத்து கஷாயம் செய்து பாலில் கலந்து அருந்தி வந்தால் இரத்தக் குழாயில் உள்ள அடைப்பு நீங்கி இருதய நோய் குணமாகும்.

# ATTIC INSULATION

There are over 1 million homes without enough attic insulation!

## INSULATE YOUR ATTIC NOW

**For a limited time government will pay rebate for insulating your attic**

**Provincial (750) + Toronto (200) = $ 950**

from existing R-12 insulation to raise it up to R50

### How can attic insulation help me?

-Reduce the heat loss through attic

-Save on heating & cooling cost

-Prevent roof rot and mold in a well

-insulated & vented attic

Energy Audit செய்தபின் உங்கள் வீட்டின் Attic ஐ Insulate செய்வதனால் அரசாங்கத்திடமிருந்து rebate பெறுவதோடு மட்டுமல்லாமல் உங்கள் மாதாந்த கட்டணங்களையும் குறைத்துக்கொள்ளுங்கள்.

**Call for no obligation free quote**

மேலதிக விபரங்களுக்கு அளையுங்கள்

ENERecon INSULATION

Tel 416-847-7171 | Fax 416-847-7181 | info@enerecon.com

Stay warm in winter. Be cool in summer

## வாத்தியார் வீட்டிலிருந்து வன்கூவருக்கு... 11

K.S. பாலச்சந்திரன்

# அந்த மரத்தில் என்பார்



“எத்தனையோ பிரசங்கங்கள் செய்யாததை ஒரு நாடகம் செய்து விடும்” என்று எங்கோ வாசித்திருக்கிறேன். மகாபாரதத்தின் கிளைக் கதைகளில் ஒன்றான “அரிச்சந்திரா” நாடகம், மகாத்மா காந்தியின் வாழ்வில் சத்தியத்தின் மீதான அழுத்தமான நம்பிக்கையை உருவாக்கியதென்று சொல்லப்பட்டது.

நான் சொல்லப்போவதும் நம்பிக்கையைப் பற்றிய ஒரு நாடகந்தான். கேரளத்தைச் சேர்ந்த வரும், இலங்கையில் ஆசிரியராக இருந்து நீண்டகாலம் வாழ்ந்து மறைந்தவருமான, டொக்டர் ஆபிரகாம் கோவூர், மூடநம்பிக்கைகளுக்கு எதிராக பெரிய பிரச்சார யுத்தம் நடத்தியவர். பேய், பிசாசு பிடிப்பது என்றெல்லாம் இல்லை என்று வலியுறுத்தி, மனோதத்துவரீதியாக அவற்றை சுகப்படுத்தியவர். அவை தொடர்பான தன்னுடைய அனுபவங்களை “மனக்கோலங்கள்” என்ற பெயரில் நூலாக வெளியிட்டார்.

இதில் குறிப்பிடப்பட்ட ஒரு அனுபவத்தை அடிப்படையாகக்கொண்டு நாடகாசிரியர் வரணியூரான் ஒரு நாடகத்தை எழுதினார். வெளிநாடு போன கணவன் நீண்டநாட்களாக திரும்பிவராமல்போக அவன் இறந்து விட்டான் என்று முடிவுகட்டி, அவன் மனைவிக்கு வேறு திருமணம் செய்து வைக்கிறார்கள். ஆனால் அவள் குற்ற உணர்வினால் மனோவியாதிக்கு உட்பட்டவளாய் நடந்து கொள்வதை, அவளுக்கு பேய்பிடித்துவிட்டது என்று நம்பி வைத்தியம் செய்கிறார்கள். மந்திரவாதிகள், பேயோட்டிகள் வருகிறார்கள். அவையெல்லாம் பயனற்றுப் போக கடைசியில் கோவூர் வந்து மனோதத்துவரீதியாக சுகமடையச்செய்து உண்மையையும் விளக்குகிறார். இதுதான் நாடகம்.

கடைசிக்காட்சியில் கோவூராக மேடையில் தோன்றி நடித்தவர், அண்மையில் காலமான வானொலி அறிவிப்பாளரும், எழுத்தாளருமான ஜோர்ஜ் சந்திரசேகரன். கொழும்பில் ஒரு மேடையேற்றத்தின்போது, உண்மையான கோவூரும், (சந்திரசேகர்) கோவூரும் சம காலத்தில் மேடையில் தோன்றியதோடு, யார் உண்மையான கோவூர் என்று கண்டுபிடிக்கும்படி போட்டியும் வைத்தார்கள். எங்கள் ரசிகர்களை ஏமாற்றிவிடமுடியுமா, என்ன? எதிர்பார்த்ததைப்போலவே ஏராளமான ரசிகர்கள் ஜோர்ஜ் சந்திரசேகரனைத்தான் உண்மையான கோவூர் என்று “கண்டுபிடித்து” பாராட்டுப்பெற்றார்கள்.

இந்தநாடகத்தில் முக்கியபாத்திரத்தில் வரும் பெண்ணை இரண்டாந்திருமணம் செய்து கொள்ளும் பயந்தாங்கொள்ளி கணவனாக நான் நடித்தேன். திடீர், திடீர் என்று அவளுக்கு பேய் பிடிக்கும் நினைப்பு வந்துவிட, அவள் எழுப்பும் அலறலில் கதிகலங்கி, “மாமீஈஈஈஈ” என்று கத்திக்கொண்டு, பாய்ந்துபோய் மேடையின் மற்றப்பக்கத்தில் நிற்கும் அவளின் தாய் (என் மாமி) பின்னால் நடுநடுங்கி நிற்பேன். அரங்கமே சிரிப்பில் அதிரும்.

இலங்கையின் பலபாகங்களிலும் மேடையேறிய இந்த நாடகம், யாழ்மாவட்டத்தின் தென்மராட்சிப்பகுதியில் உள்ள “எழுதுமட்டுவாள்” கிராமத்தில் உள்ள மகாவித்தியாலயத்தில் மேடையேறுவதற்கு ஏற்பாடாகியது. கல்லூரி திறந்தவெளியரங்கில்தான் நாடகம்.

மேடைக்கு சற்றுத்தள்ளி ஒரு பக்கமாக ஒரு மாமரம். வெறும் மரமல்ல. காயும், பழமும், பிஞ்சுமாக, கொத்துக் கொத்தாக மரம் முழுவதுமே, இலைகளே தெரியாத அளவிற்கு காய்த்துக்கொட்டியிருந்தது.

நாடகத்தன்று பகல், அந்த வித்தியாலயத்தின் அதிபர் எங்களைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார். பேச்சினிடையே அந்த மாமரத்தைப் பற்றிச்சொல்லி, வருடாவருடம் அந்த மரம் இப்படித்தான் காய்த்துக்கொட்டுகிறது என்றும், ஆனால் பள்ளிக்கூடத்திற்கு அதிலிருந்து ஒரு பிரயோசனமும் கிடைக்காவண்ணம், பிள்ளைகள் காயும், பிஞ்சுமாக பிடுங்கி மரத்தை மொட்டையடித்து விடுகிறார்கள் என்றும் சொன்னார்.

எழுதுமட்டுவாள் மாமரம் மொட்டையடிக்கப் படுவதற்கு, கொழும்பிலிருந்து நாடகம் போட வந்து ஒரேயொரு நாள் தங்கப்போகும் நாங்கள் என்ன செய்ய முடியும் என்று எங்களுக்குப் புரியவில்லை. கடைசியில் எங்கள் இயக்குனர் எங்கள் சந்தேகத்தை பள்ளிக்கூட அதிபரிடம் கேட்கவும் செய்தார்.

அவர் சொன்ன பதில்தான் எங்களை விழுந்து, விழுந்து சிரிக்கவைத்தது.

“உங்கள் நாடகத்தை நான் முன்னர் பார்த்திருக்கிறேன். அதில் பேய் விரட்டும் காட்சி வருகிறதல்லவா. அந்த காட்சியின்போது இப்படிச் செய்து விடுங்களேன்” என்று ஒரு வழி சொன்னார். இதைக்கேட்ட நாங்கள் எல்லோரும் சிரித்து அடங்கிய பின்னர், இயக்குனர் என்ன நினைத்தாரோ, அவரது வேண்டுகோளுக்கு சம்மதித்தார்.

இரவு நாடகம். திறந்தவெளியரங்கில் பரவிக் கிடந்த வெண்புழுதிமணலில் முன்வரிசைகளில் மாணவர்களும், பின்னே பெரியவர்களுமாக, பார்வையாளர்கள் நிரம்பிவழிந்து இருந்தார்கள்.

மேடையை பார்த்து நின்ற மாமரத்துக்கும் ‘லைற்’ போட்டிருந்தார்கள். மெதுவாக வீசிய இரவுக்காற்றில் தன் இலைகளைச் சிலுப்பிக் கொண்டு அது ‘சாது’வாக நின்றது. நடிகர்களாகிய எங்கள் முகத்தில் ஒரு நமுட்டுச் சிரிப்பு. அடிக்கடி ஓரக்கண்ணால் மரத்தை பார்த்துக்கொண்டோம்.

கடைசி, கடைசியாக அந்தக்காட்சியும் வந்தது. நாடகத்தில் என் மனைவியின் மீது தங்கி விட்டதாக நம்பிய பேயைவிரட்ட பேயோட்டி வருகிறார். பேயோட்டியாக நடித்தவரைப் பார்த்தால் நாங்கள் பயப்பிடுவதற்கு முதல் பேய் நிச்சயமாகப் பயப்படும். அத்தகைய உக்கிரமான தோற்றம். சிவந்த கண்களும், வளைந்து தொங்கிய “அரிவாள்” மீசையும், நெற்றியில் குங்குமப்பொட்டும், அடிக்கடி “ஓம்.. கிறீம்.. கிறீம்” போன்ற ஒலியெழுப்பலுமாக மேடையைக்கலக்கியதோடு, முன்வரிசைகளில் இருந்த மாணவர்களை பயத்தினால் நெளியவும் வைத்தார்.

வழக்கமாக இந்தக்காட்சியில், பேயோட்டி பேயை ஒருமாதிரி கைப்பற்றிக்கொண்டதாக பாவனை செய்து, மேடையின் பக்கப்பாட்டில் இறங்கி, ஓய்வு எடுத்துவிட்டு, “பேயை மரத்தில் அறைந்து விட்டேன்” என்று சொல்லிக் கொண்டு மீண்டும் மேடைக்கு வருவார்.

இதில்தான் அதிபர் கேட்டுக்கொண்டபடி மாற்றம் நிகழ்ந்தது. கையில் குங்குமம் பூசிய ஒரு நீளமான ஆணி, சுத்தியல் சகிதம், பேயோட்டி நடிகர், மேடையிலிருந்து முன்னால் “தொப்”பென்று குதித்தார். பார்வையாளர்கள் மிரண்டு விலக, மந்திர உச்சாடனங்களுடன், நான் முதல் குறிப்பிட்ட மாமரத்தை நோக்கி நடைபோட்டார். கூடவே மணி “கிலுக்கியபடி” அவரது உதவியாளர்.

ஆணியை மரத்தில் வைத்து, “சளார்.. சளார்” என்று அவர் அறைந்தது, அந்த இரவில் திறந்தவெளியரங்கெங்கும் எதிரொலித்தது. பார்வையாளர்கள் மூச்சு விட மறந்திருந்தார்கள்.


மீண்டும் அதே நடை. மேடையில் பாய்ந்தேறி, “பேயை அந்த தரத்தில் அறைந்துவிட்டேன்” என்று உரக்கச்சொல்லியாகிவிட்டது. நாடகம் தொடர்ந்து நடந்து முடிந்தது.

அதிபர் பின்பக்கமாகவந்து இயக்குனருக்கும், பேயோட்டி நடிகருக்கும் நன்றி சொன்னார்.

நீண்டநாட்களுக்குப் பிறகு அந்த வித்தியாலய ஆசிரியர் ஒருவரை தற்செயலாகச் சந்தித்தேன். மாமரத்தைப்பற்றி விசாரித்தேன். அவர் சொன்ன பதில்தான் இது..

“பிள்ளைகள் அந்த மாமரப்பக்கமே போவதில்லை. ஆனால் மரத்தின் பழங்களை விலைக்கு வாங்கி அதை பிடுங்குவதற்கும் ஒருவரும் முன்வருகிறார்களில்லை. பேய் அறைந்த மரமாம் என்கிறார்கள்”

அந்த நாடகத்தின் பெயர் “நம்பிக்கை”



ksbala@thaiveedu.com


**ABC Private Tutoring & Homework Help**

**French -** For grade 4 to grade 10 By a native French speaking teacher from France **Math -** For grade 5 to grade 12 In English or French medium Intersection

**Victoria park & Ellesmere**

**Mr. Shanthakumar**

**647 262 9430**



Formula Honda
Where You're Treated like Family
Rajah Tharmalingam
Dir: 647-833-4998
All are HONDA Certified Used Vehicles
2240 Markham Road (at Finch), Scarborough
www.formulahonda.com
Email: rajah@formulahonda.com
2011 COMING SOON
2011 Honda
Odyssey
2011 Honda
CR-Z Sport Hybrid
2011 Honda
Accord
2011 Honda
P-Nut Concept
2011 Honda
FC Sport
More Demo Cars Are Available
0.9% Purchase Financing for upto 60 Months On Selected Models
USED CARS



from the firm foundations of creative photos
la photographie est un art
Karuna Photography
digimedia Creations Photography
• Wedding Photography
• Complete Online Workflow
• Online Slideshows
• DVD Slideshows
• Custom Designed Digital Albums
• Parent Albums/ iPhone Galleries
• Online Digital Proofs and Online albums Proofs
• E-Com Site
• Canvas and Metal Printing
facebook
www.facebook.com/digimediaphoto
elegant memorable real
www.digimediaphoto.com
416.467.4952


TRIDEL
BUILT FOR LIFE
Kennedy & HWY 401
Toronto.
VENTUS2
At MetroGate
Special VIP Preview
On Saturday July 3, 2010
Time: 11:00am - 5.00pm
Starting From $199,900 Completion Spring 2013
1st BMW
2nd Cuba Visit for two
3rd 42"LCD TV
10 Other Prizes
BUY THROUGH OUR BROKERAGE,YOU HAVE A CHANCE
TO WIN...
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE GTA REALTY INC., *BROKERAGE
1711 McCowan Rd., #206, Toronto, ON M1S 3Y3 419.321.6969
*Independently Owned and operated. *some conditions may apply

**பேரழிவினைக் கொண்டுவரும் நீரழிவு நோயினை**
**இரண்டே இரண்டு மாதங்களில் முற்றும் முழுதாக கட்டுப்படுத்த முடியும்!**

**ஊமைச் சதை பெருகுவதை தடுக்கிறது!**
**வாத வலியை நீக்குகிறது!**
**உடலுக்கு புதுத்தென்பைக் கொடுக்கிறது!**




**டயபீனா** தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் கூருக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.

**க்லூட்டியலா** பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊமைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லூட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.

**இயற்கை மூலிகையின் உதவியுடன் உங்கள் கேசத்தை பராமரியுங்கள்!**

The **ERVAMATIN™ HAIR LOTION**
உங்கள் முடியுதிர்வை தடுக்கவும் மீண்டும் தலைமயிர் வளரவும் மிக உன்னதமாக தொழில் புரிகிறது எவமாட்டின் மூலிகை ஒளடதம்! உலகெங்கும் பல்லாயிரக்கணக்கானவரின் பாராட்டுதலைப் பெற்ற மூலிகைத் தயாரிப்பு. இப்போது எவமாட்டின் சாம்பூவும் கிடைக்கிறது.







**இயற்கை மூலிகையிலான தலை முடி மை**
இயற்கை மூலிகையான மருதாண்டி கொண்டு செய்யப்படும் இவ் மை உங்கள் தலை முடியையும் நன்கு பராமரிக்கிறது.

The **ERVAMATIN HAIR LOTION** provides effective and fast therapy for hair loss and its treatment ensures excellent therapeutic results. Recommended as a treatment for hair loss, hair regeneration, dandruff, alopecia, baldness, fragile and dry hair.



SABONA & Gift
Amazon Health Care
BBB ACCREDITED BUSINESS

Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)

**Send gifts** to your loved ones in Sri Lanka on their birthday, anniversary and other special occasions. Choose from a range of flowers, cakes, food items, groceries, baby items, computers and many more.
**www.egiftsender.com**

JayaCS•416 275 0070

# கலாபன் கதை 13

# கைவிடப்பட்ட கப்பல் வழக்கு

- தேவகாந்தன் -

காலம் எதனையும், எவரையும் மாற்றுகின்றது. கலாபனும் மாறியிருந்தான் என்பதை அவன் போனதடவை வந்திருந்தபோது நான் கண்டிருந்தேன். வீட்டு நிலைமை குறித்த அவனது கவனம் அதிகமும் என்னைக் காண திருமலை வந்திருந்த அவனது பேச்சில் இழையோடிக் கொண்டிருந்தது. பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள், தான் கூடவிருந்தால்தான் கல்விச் சிரத்தையும், ஒழுக்க மேம்பாடும் ஏற்படுமென்று அவ்வப்போது சொல்லிக்கொண்டிருந்தான். எனக்கு அதிசயமாகவிருந்தது. ஆனாலும் ஆச்சரியப்படவில்லை. காலம் எவரையும் மாற்றுகின்றதுதான்.

'கொழும்பு செல்கிறேன், கப்பல் வேலையெடுப்பதொன்றும் முன்புபோல் சுலபமானதாக இல்லை, கடலிலே மிகப் பெரும் நவீன கப்பல்களின் வருகை, ஓடிக்கொண்டிருந்த ஆயிரக் கணக்கான சிறிய சிறிய பழைய கப்பல்களை இரும்பு விலைக்கு விற்கும்படியாக ஆக்கிவிட்டது, கன காலமில்லை, கொழும்பில் ஒரு மாதம்வரை தங்கி முயற்சித்துப் பார்ப்பேன், முடியாவிட்டால் பம்பாய் போய்விடுவேன், அங்கேயும் என்ஜினியர் வேலைதான் வேண்டுமென்று காத்திருக்க மாட்டேன், என்ஜின் றூம் வேலை எதுவானாலும் சேர்ந்துவிடுவதே எனது எண்ணம்' என்று சொல்லிவிட்டுச் சென்றவன், ஒரு மாதத்திலேயே பம்பாய் சென்றுவிட்டதாக, அவன் எழுதிய கடிதத்தின்மூலம் தெரியவந்தது.

முன்பெல்லாம் தசைச் சுகத்தின் அதீத விழைச்சல்கள்பற்றிய வெறிகொண்ட எழுத்துக்கள் அதிகமும் அவனது கடிதங்களில் காணக்கிடக்கும். இந்தமுறை அவன் மாதுங்காவிலுள்ள அஷ்டலட்சுமி கோவில்பற்றியும், புகழ்பெற்ற செம்பூர் முருகன் கோவில்பற்றியும் எழுதியிருந்தான்.

காலம் எதனையும், எவரையும் மாற்றியே விடுகின்றது.

●

கலாபன் பம்பாயில் அதிக நாட்கள் காத்திருந்தானென்று சொல்லமுடியாது. பம்பாயை அடைந்த மூன்றாவது கிழமையிலேயே அவனுக்காகவேபோல் எம்.வி.சென்.கப்ரியேல் என்ற கப்பல் தன் புகைபோக்கியிலிருந்து கரும்புகையினைக் கக்கியபடியே துறைமுகம் வந்துசேர்ந்தது. திலீப்சிங் என்று அவனுக்கு அண்மையில் அறிமுகமாகியிருந்த ஒரு குஜராத்திக்காரன் துறைமுகத்திலே பைலட்டுகளுக்கான படகோட்டியாய் இருந்தான். ஆறு மணியளவில் கப்பல் துறை சேர்ந்த செய்தியை கலாபனுக்குச் சொன்னது அவன்தான். எட்டு மணிக்கு உள்நுழைய சிரமமிருக்கும் துறைமுக வாசல் வழியே அறிமுகங்களின் துணையோடு உள்ளே சென்ற கலாபன், கப்பலுக்குள் ஏறி நேரே கப்ரினுடைய அறையை அடைந்தபோது, கப்பல் கொம்பனி, சாமான் ஏற்றவிருந்த கொம்பனியின் முகவர்கள் என கப்பலின் உச்சத் தளம் தடல்புடலாகத்தான் இருந்தது. ஆனாலும் ஒரு தாமதத்தை அவன் செய்தமை அவனிடமிருந்த ஏதோவொரு நம்பிக்கை அல்லது ஏதோவொரு விரக்தி தூக்கியெறிந்துகொண்டிருந்தது.

சீருடையில் நின்றிருந்த கப்ரின் அறை வாசலில் நின்றிருந்தான். கிரேக்கனாய் இருக்கவேண்டுமென கலாபன் அனுமானித்துக்கொண்டான். ஆனால் அவன் முன்னால் நின்று கிரேக்கமும் ஆங்கிலமுமாகப் பொழிந்து தள்ளிக்கொண்டிருந்த நெடிதுயர்ந்த அந்த மாவண்ண நிற மனிதன் எங்கத்தையவன் என்பதை அவனால் அனுமானம்செய்ய முடியவில்லை. நிச்சயமாக ஆசியன், குறைந்தபட்சம் இங்கிலாந்தில் குடியுரிமைபெற்று வாழும் ஆசியனாக இருக்கவேண்டுமென எண்ணிக்கொண்டான்.

அவன் சிறிது தாமதிக்க எண்ணிய வேளையில், 'பொருத்தமான ஆள் அகப்படவில்லையென்றால் அவன் இல்லாமல்கூட அடுத்த துறைமுகம் சேரும்வரை என்ஜினை ஓட்ட என்னால் முடியும். இங்கேயே அவனைத் தூக்கு அல்லது நான் இறங்குகிறேன்' எனச் சொல்லிவிட்டு விறுவிறுவென கப்பல் பிரதம பொறியாளன் என ஆங்கிலத்திலே நிலையில் பொறிக்கப்பட்டிருந்த பெயர்ப் பலகையிருந்த அறைக்குள் நுழைந்தான் அந்த மனிதன்.

பொருத்தமற்ற வேளையில் வந்துவிட்டதால் திரும்பிப் போய்விட்டு சிறிதுநேரத்தில் வரலாமோ என எண்ணிய கலாபன் அதைச் செயலாக்க முனைகையில், கப்ரினின் முகத்தை ஒருமுறை பார்த்தான். அதில் கோபமே இல்லை. தன் பிரதம பொறியாளனின் கோபத்தைத்தான் தன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என்ற விபரத்தைத் தெரிவித்துக்கொண்டிருந்த ஒருவகையான இளஞ்சிரிப்புத்தான் தவழ்ந்துகொண்டிருந்தது.

கலாபன் சிறிது தயங்கினான். அது அவன் திரும்பி ஓடவேண்டிய வேளையில்லை.

கலாபனைக் கண்ட கப்ரின் என்ன என தலையசைப்பில் வினவினான். விரைந்து கப்ரினை அணுகிய கலாபன், தான் வேலை தேடிக்கொண்டிருக்கும் விபரத்தைக் கூறி தனது கப்பல் அனுபவங்களையும் விறுவிறுவென




கிரேக்கத்திலேயே சொல்லி முடித்தான். அவன் காட்டிய கப்பலோட்டியின் அடையாளப் புத்தகம் மற்றும் தகுதிச் சான்றிதழ்களைப் பார்த்துவிட்டு, 'இவையெல்லாம் மெய்யானவைதானே?' என பதிலை எதிர்பார்க்காத ஒரு வினாவை உதிர்த்துவிட்டு, 'நான் அனுப்பியதாக முதன்மைக் கப்பல் பொறியாளரைச் சென்று பார்' எனக் கூறி அனுப்பினான்.

மிகுந்த நம்பிக்கையோடு முதன்மைப் பொறியாளரின் அறையை அணுகினான் கலாபன். கதவு திறந்திருந்தது. உள்ளே நின்றிருந்த முதன்மைப் பொறியாளர் திரும்பி அவனைப் பார்த்தார். 'யார்?' என்றார். கப்ரின் அனுப்பியதாகக் கூறி தனது சான்றிதழ்களைக் கொடுத்தான் அவன். மேசையில் அவற்றை வைத்து ஒரு கையில் மதுக் கிளாஸ் இருந்தவகையில் மறு கையினாலேயே அசிரத்தையாக அவற்றைப் புரட்ட ஆரம்பித்த முதன்மைப் பொறியாளர், பின்னர் மதுக் கிளாஸை மேசையில் வைத்துவிட்டு சிரத்தையுடன் கவனித்தார். 'மூன்றாம் நிலை என்ஜினியராக ஆறு ஆண்டுகள் வேலை செய்திருக்கிறீரா?' என்றார். அவரது தமிழ் அவனுக்கு அடுத்த ஆச்சரியமானது. சர்வதேச கடலில் ஓடும் சில கப்பல்களில் சில இலங்கையர் முதன்மைப் பொறியாளர்களாக வேலைசெய்வதை அவன் கேள்விப்பட்டிருந்தான்தான். ஆனாலும் இப்போதுதான் சந்திக்கிறான். ஆச்சரியத்தின் விகாசம் தெரியும்படி புன்னகைத்தவாறே 'யெஸ், சீ.ஃப்' என்றான்.

தொடர்ந்து, அது பழைய கப்பலானதால் வேலை அதிகமென்றும், அந்தச் சிறிய கப்பல் கொம்பனியில் மூன்றாம் நிலைப் பொறியாளருக்கு வழங்கப்படும் சம்பளம் குறைவானதுதானென்றும் பல விஷயங்களை முதன்மைப் பொறியாளர் அவனுக்கு எடுத்துரைத்தார். ஆனாலும் அதைத் தீர்மானிப்பது கப்ரினின் கையில்தான் இருக்கிறது என்பதையும் சொல்ல அவர் மறக்கவில்லை. கப்பலில் ஏறிவரும் பொழுதே அவற்றைத் தான் உணர்ந்துகொண்டதாக கலாபன் கூறினான்.

அப்பொழுது உள்ளே வந்த கப்ரின் தனியாக முதன்மைப் பொறியாளருடன் கதைத்துவிட்டு கலாபனிடம் கூறினான்: 'உனக்கு வேலை தருகிறேன். ஆனாலும் உனக்கான இடத்தை நான் இனிமேல்தான் ஏற்பாடு செய்யவேண்டும். நாளைக்கு மாலையில் வா. நமது முகவருடன் பேசி மற்றவைகளை ஏற்பாடு செய்யலாம்.'

பதினாறு நாட்களின் பின் எம்.வி.கப்ரியேல் பம்பாய்த் துறைமுகத்தைவிட்டுக் கிளம்பிய போது, மூன்றாம் நிலைப் பொறியாளனாக கலாபன் அதில் வேலைசெய்துகொண்டிருந்தான்.

அந்தக் கப்பலில் அவனது முதல் பயணம் சிங்கப்பூருக்கானதாய் இருந்தது.

அந்தப் பதினாறு நாட்களில் கலாபன் செய்த வேலை மற்றைய கப்பல்களில் ஒரு வருடத்தில் செய்யும் பாதி வேலையளவாக இருந்தது. அவன் களைத்துப் போனான். அவன் மட்டுமில்லை, எந்திர அறையில் வேலைசெய்த அனைவருமே ஒரு களைப்போடுதான் பம்பாயைவிட்டு நீங்கியிருந்தனர்.

தரையிலோடும் வாகனங்களுக்குப் போலவே ஆகாயத்திலும், கடலிலும் ஓடும் விமானங்களுக்கும் கப்பல்களுக்கும் விதிகள் உண்டு. இச் சர்வதேச விதிகள் அனுசரிக்கப்பட்டாக வேண்டும். உதாரணமாக கப்பலின் காப்புறுதி, அதன் கடலோடக்கூடிய தகுதிச் சான்றிதழ், அதிகாரிகளின் தகைமை போன்ற விஷயங்கள் முக்கியமானவை. அவைபோல் அது வெளியிடும் புகை சுற்றுச் சூழலை மாசுபடுத்தாத அளவுக்கும், Bilge எனப்படும் கப்பலின் எந்திரப் பகுதிக் கிடங்குகளிலிருந்து அவ்வப்போது வெளியேற்றப்படவேண்டிய கழிவுநீர், எண்ணெய் மாசற்றதாய் இயற்கை வளங்களை அழித்துவிடாதபடியும் இருக்கவேண்டும் என்பன முக்கியமானவை. பம்பாய்த் துறைமுகத்துள் அந்தளவு புகையை வெளியேற்றியபடி நுழைய முடிந்த கப்பலினால், சிங்கப்பூர்த் துறைமுகத்துள் நுழைந்துவிட முடியாது. அதனால்

தொடர்தல் 92ம் பக்கம்

# கலாபன் கதை 13

91ம் பக்கத் தொடர்ச்சி...

அவற்றை நிவர்த்திப்பதற்கான வேலைகளைச் செய்துவிட்டே கப்பல் புறப்படவேண்டி இருந்தது. அவற்றையும் சாமான்கள் ஏற்றி முடிப்பதற்கான கால எல்லையில் அவர்களுக்குச் செய்ய வேண்டியிருந்தது.

சிங்கப்பூர் கேளிக்கைகளுக்கு ஏற்ற நாடல்ல. ஆனாலும் அங்கேயும் குடி, நடனம், அனுமதி பெற்ற விபச்சார நிலையமென்று இடங்கள் இருக்கவே செய்தன.

இரண்டாண்டுகளுக்கு முன்பு பாங்கொக்கிலிருந்து சொரியல் தானியமாக நெல்லை ஏற்றிவந்தபோது, Fumigation என ஆங்கிலத்தில் சொல்லப்படும் தானியப் பூச்சிகளின் நீக்கத்துக்கான மருந்துப் புகை அடிப்பதற்காக கப்பல் சிங்கப்பூரில் ஒரு தனித்த துறைப் பகுதியில் நிறுத்தப்பட்டது. கப்பலில் வேலை செய்த அனைவரும் ஹோட்டல் ஒன்றில் தங்கவைக்கப்பட்டார்கள். நித்திரை வரும் வரை வெளியே உலவிவிட்டு வரலாம் என வெளியே சென்ற கலாபன் திரும்பி வந்தபோது நள்ளிரவு கடந்திருந்தது. அனுமதியின்றியோ அனுமதியுடனோ இயங்கும் சில விபச்சார வீடுகள் சிங்கப்பூரின் புறநகர்களில் இயங்கின. அங்கெல்லாம் விலைமாது இருந்து விடமாட்டாள். சென்ற வாடிக்கையாளருக்கு ஒரு புகைப்பட அல்பம் காட்டப்படும். அதிலுள்ள பெண்களின் படங்களைப் பார்த்து ஒருவர் தனது தேர்வைச் செய்துகொள்ள வேண்டும். அந்தப் பெண்ணை அந்த வீட்டு நிர்வாகி தொலைபேசி செய்து அழைப்பார். அன்றைக்கு அந்தச் சுகமும் அனுபவமும் நூற்றைம்பது சிங்கப்பூர் வெள்ளி செலவில் அவனுக்குக் கிடைத்திருந்தது.

சிங்கப்பூரைச் சேரும்வரை அதுமாதிரி எந்த வகையான சபலமும் கலாபன் மனத்தில் எழவில்லை. ஆனாலும் சிங்கப்பூரை ஓரிரவு அடைந்த கப்பலில் இருந்தபடி அதன் கரையின் நிறம்நிறமான மின்விளக்குகளைக் கண்டு ரசித்துக்கொண்டிருந்தவனது மனத்தில் அவை சொல்லமுடியாத தாபத்தைக் கிளர்த்திவிட்டன. அன்று அவன் நூறு அமெரிக்க டொலர்கள் முன்பணம் எடுத்திருந்தான். அது ஏறக்குறைய இருநூறு சிங்கப்பூர் வெள்ளிக்குச் சமானம். அவன் வெளியே சென்று கப்பலுக்கு மீண்ட போது அவனிடம் சில சிங்கப்பூர் வெள்ளிகளே மீதமாக இருந்தன.

மூன்று நாட்கள் சிங்கப்பூரில் தங்கிய கப்பல் ஐக்கிய அரபுக் குடியரசின் ஷார்ஜாவை நோக்கிப் புறப்பட்டது.

ஐக்கிய அரபுக் குடியரசிலுள்ள இன்னொரு அங்கத்துவ நாடான துபாய்போலத்தான் ஷார்ஜாவும். ஆனாலும் துறைமுகம் மட்டும் துபாய்போன்று பெரிதானதில்லை. எம்.வி. கப்ரியேல் ஷார்ஜாவைச் சென்ற சமயம் வளைகுடாவில் மையம் கொண்டிருந்த புயல் கடலைப் புரட்டிக்கொண்டிருந்தது. கடலிருந்து துறைமுகத்தை அரண்செய்த தடுப்பணையில் அலைகள் மோதியதில் நீர் இருபது இருபத்தைந்து அடி உயரத்துக்கு எழுந்து விழுந்து கொண்டிருந்தது. துறைமுகத்திலும் ஏற்றுமதி இறக்குமதி தாமதம். அதனால் வந்த கப்பல்கள் தமது முறைக்காக துறைமுகத்துக்கு வெளியே நங்கூரமிட்டுக் காத்திருந்தன.

சிறிது நேரம் முதன்மைப் பொறியாளரின் அறையிலிருந்து உரையாடியும் மதுபானம் அருந்தியும் பொழுதைக் கழித்த கலாபன், தனது அறைக்குத் திரும்பியபோது, பதினொரு மணி. தொலைக்காட்சியில் ஒரு அராபிய மாதுவின் கிறங்கவைக்கும் காதல் சோகசீதமொன்றைக் கண்டும் கேட்டும் கொண்டே மேலும் போதையேறிக்கொண்டிருந்தான் கலாபன் தனது அறையில்.

வெளியே ஆக்ரோஷமான அலைகள் கப்பலை மோதிக்கொண்டிருந்தன. அவ்வப்போது அறையின் கண்ணாடி ஜன்னல்வரை வந்து, அறை வெளிச்சத்தில் வெள்ளியலையாகி மீண்டு கொண்டிருந்தன கருநீர்ப் பாளங்கள். கப்பல் சரிவதும் நிமிர்வதுமாயிருந்தது. இருபத்தேழாயிரம் தொன் மொத்த எடையுள்ள கப்பலிலும் வேலைசெய்திருக்கிறான் கலாபன். அந்தக் கப்பலையே அல்லாட வைத்திருக்கிறது சினம்கொள்ளும் கடல். இதன் மொத்த நிறையே மூவாயிரம் தொன். நடுக்கடலானால் அலை தூக்கி எறிந்துவிடும். கரையானதால்



**வளைகுடாவில் மையம் கொண்டிருந்த புயல் கடலைப் புரட்டிக்கொண்டிருந்தது. கடலிருந்து துறைமுகத்தை அரண்செய்த தடுப்பணையில் அலைகள் மோதியதில் நீர் இருபத்தைந்து அடி உயரத்துக்கு எழுந்து விழுந்துகொண்டிருந்தது.**

சரித்துச் சரித்துவிட்டு திரும்பிப் போய்க்கொண்டிருந்தது.

அப்போது வெளியே முதன்மைப் பொறியாளர் வந்துநின்றார். 'கலாபன், காலநிலை சரியில்லை. இந்தப் புயற் காற்றில் நங்கூரத்தையும் இழுத்துக்கொண்டு கப்பல் சென்று எந்தக் கப்பலிலாவது அல்லது பாறையிலாவது மோதிவிடக்கூடுமென்று கப்ரின் பயப்படுகிறான். அதனால் புயல் ஓயும்வரை என்ஜினை உடனடியாக இயக்கக்கூடிய விதமாக (Stand-By) தயார்நிலையில் வைத்திருக்கச் சொல்லியிருக்கிறான். பன்னிரண்டு மணியாகிறதுதானே, உனது கடமை நேரம் தொடங்குகிறது, அதனால் கீழே சென்று எந்திரத்தைத் தயார் நிலையில் வைத்துவிட்டு வா. இது தூக்கமற்ற இரவாகப் போகிறது. தூக்கமில்லாமல் போனால் பரவாயில்லை, கெட்ட இரவாக இல்லாமலிருந்தால் சரிதான்' என்றுவிட்டுச் சென்றார்.

கீழே இறங்கி என்ஜினைத் தயார்நிலையில் வைத்துவிட்டுத் திரும்பிய கலாபன் உண்டிச்சாலையில் தொலைக்காட்சியை பார்த்தபடி பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தான். நான்கு மணியானது. எதுவித அசம்பாவிதமும் சம்பவிக்கவில்லை. கலாபன் படுக்கை சென்றான்.

ஐந்து மணியளவில் மீண்டும் கதவு தட்டப்பட்டுக் கேட்டது. கலாபன் எழுந்து வந்து கதவைத் திறந்தான். முதன்மைப் பொறியாளர். 'ஏதேனும் ஆபத்தா?' என்று அவசரமாய்க் கேட்டான் கலாபன். 'ஆபத்துத்தான். எங்களுக்கில்லை. எங்களுடைய கொம்பனியின் மற்றக் கப்பலுக்கு. அதுவும் ஷார்ஜா வந்திருக்கிறது நேற்று. ஆனால் எப்படியோ ஒதுங்கிப்போய் கரையில் ஏறிவிட்டது. வெளிக்கிட்டு எனது அறைக்கு வா, எல்லாம் சொல்கிறேன்' என்றுவிட்டுச் சென்றார்.

முதன்மைப் பொறியாளரின் முகத்திலிருந்த யோசனை, கொம்பனியின் கப்பல்களில் ஒன்று கரையிலேறிவிட்டதால் ஏற்பட்டதாய்த் தோன்றவில்லை கலாபனுக்கு. அவன் விரைந்து வெளிக்கிட்டுக்கொண்டு முதன்மைப் பொறியாளரின் அறைக்குச் சென்றான்.

கப்ரினின் அறை திறந்திருந்தது. கப்ரினைக் காணவில்லை. மேலே சுக்கான் தளத்தில் நின்றிருக்கக்கூடுமென கலாபன் எண்ணினான்.

அவன் முதன்மைப் பொறியாளரின் அறைக்கு வந்தான். 'இரு' என்றார். அவன் எதிரே அமர்ந்ததும் சொன்னார்: 'அரை மைல் தூரத்துக்கு கப்பலை இழுத்துப் போயிருக்கிறது புயல். யாரும் கவனிக்கவில்லை. இப்போது கப்பல் பின்புறமாக கரையிலேறி நிற்கிறதாம்.'

'என்ன செய்யப்போகிறார்கள்? இழுவைப் படகின்மூலம் இழுத்தெடுக்க முடியாதா?'

'முடியும். ஆனால் கொம்பனி அதை விரும்பவில்லை. ஏனென்றால் அது மிகவும் சிக்கலான நிலைமையை உருவாக்கக்கூடியது. அதனால் எங்களை இழுத்துவிடக் கேட்டிருக்கிறார்கள்.'

'முடியுமா? நாங்களே சாமான்களோடு நிற்கிறோம். அந்தக் கப்பலும் சாமானோடுதான் நிற்கும்.'

'கடினம்தான். ஆனாலும் முடியும். இருந்தாலும் அதை நாங்கள் செய்யப்போவதில்லை. அது எங்களுக்கு ஆபத்தானது. கப்பலை இழுப்பதற்கான முயற்சியில் இந்தக் கப்பல் அதனோடு மோதி ஏதாவதொன்று அல்லது இரண்டுமே சேதமடையும் வாய்ப்பிருக்கிறது. மேலும் இதுவே கரைதட்டிவிடும் அபாயமும் நேரலாம்.'

'கப்ரின் என்ன சொல்கிறார்?'

'கப்ரினுக்கும் விருப்பமில்லை. ஆனாலும் செய்யச்சொல்லி மிகுந்த அழுத்தம் கொம்பனியிலிருந்து வந்துகொண்டிருக்கிறதாம். மேலும் துபாயில் கொம்பனியின் அதிகாரமுள்ள போர்ட் கப்ரினாக ஒரு அமெரிக்கன் இருக்கிறான். அவன் வருவதாக இருக்கிறது. அவன் கப்பலுக்கு வந்து கப்பலின் பயண விபரங்கள் பதியப்படும் லொக்புக்கில் கப்பலுக்கு எதுவும் ஆபத்து நேர்கிற சமயத்தில் தனக்கு அதில் எவ்வித பொறுப்புமில்லை, தான் கம்பெனியின் நிர்ப்பந்தத்திலேயே அவ்வாறு கருமமாற்றியதாக எழுதி கையெழுத்திட்டுத் தரவேண்டும் எனக் கேட்கும்படி கப்ரினிடம் சொல்லியிருக்கிறேன்.'

புயல் தணிந்திருந்தது. ஆனாலும் சிறிய ஒரு கப்பலுக்கு அது இடைஞ்சல் செய்யப் போதுமானதுதான். இருந்தும் ஒரு இழுவைப் படகில் போர்ட் கப்ரின் பத்து மணியளவில் வந்து சேர்ந்தான்.

அவனது எந்தக் கோரிக்கையும் கப்ரினிடமோ, முதன்மைப் பொறியாளரிடமோ பலிதமாகவில்லை. கடைசியில் கப்பலை இழுக்கும் அனுமதியையும், அதனால் இடரேதும் ஏற்படின் அதில் கப்ரினுக்கோ பொறுப்பான மற்றவர்களுக்கோ பங்கில்லையென்றும் லொக்புக்கில் எழுதி கையெழுத்திட்டான் ஜோன் பலற்ரோனி என்ற அந்த போர்ட் கப்ரின்.

கப்பல் தன் சகோதரக் கப்பலை கடலில் இழுத்துவிட பதினொரு மணியளவில் புறப்பட்டது. கலாபன் தன் கடமையைப் பொறுப்பெடுத்து ஒரு மணத்தியாலத்துக்கிடையிலேயே எல்லாம் முடிவடைந்துவிட்டன.

எதிர்பார்த்ததுபோல் பெரிய சிரமங்கள் ஏதுமின்றி எம்.வி.ஸ்மூத்வேவ் என்ற கொம்பனியின் மற்றக் கப்பல் கடலுள் இழுத்துவிடப்பட்டு விட்டது. எம்.வி.கப்ரியேல் அதற்கு அடுத்த நாள் துறைமுகத்துக்குள் புகுந்தது. அதற்கு முன்னதாகவே எம்.வி.ஸ்மூத்வேவ்.

இரண்டு நாட்களாக கப்ரினுக்கும், முதன்மைப் பொறியாளருக்குமிடையே மிகுந்த தணிந்த குரலிலான பேச்சுக்கள் நடந்துகொண்டிருந்தன. கலாபன் சென்ற வேளைகளிலெல்லாம் அறை, ஒன்றில் வெறுமையாக இருந்தது, இல்லையேல் முதன்மைப் பொறியாளரையும் கப்ரினையும் ஒன்றாகக் கொண்டிருந்தது.

ஷார்ஜாவைவிட்டுப் புறப்பட்ட கப்பல் பாஹ்ரினை அடைந்தது. கப்பல் துறைமுகத்தை அடைந்த மறுநாள் தனது கடவுச்சீட்டை புதுப்பிக்க வேண்டியிருப்பதாகக் கூறிக்கொண்டு முதன்மைப் பொறியாளர் ஒருமுறை வெளியே சென்றுவந்தார்.


எல்லாம் சுமுகமான நிலையில் காலம் ஓடிக்கொண்டிருந்தது.

முதலில் முதன்மைப் பொறியாளர் தனது ஒப்பந்த காலம் முடிந்து விலகிச்சென்றார். கொழும்பு வோட் பிளேஸில் உள்ள தனது வீட்டு முகவரி கொடுத்து அடுத்த மாதமளவில் ஒப்பந்தம் முடியவிருந்த அவனை இலங்கை வந்ததும் சந்திக்கக் கேட்டிருந்தார்.

நிறைய பங்களாதேஷிகள், பாகிஸ்தானியர், இந்தோனிஷியராக மாலுமிகள் இருந்த அந்தக் கப்பலில் ஏதோவொரு காரணத்தைச் சுட்டி

தொடர்தல் 93ம் பக்கம்


கனடிய தமிழ் வழக்கறிஞர்



The Law Office of
**Raphael Maharaja**
**Barrister & Solicitor**

Tel: 416-847-7077
416-847-7093 (Injury Claims)
Fax: 416-847-7088

GTA SQUARE
5215 Finch Ave, East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2 (Middlefield & Finch)

www.maharajalaw.com

எப்போதும் சண்டைகள் நடந்துகொண்டிருந்தன. கலாபனுக்கு முன்னர் மூன்றாவது பொறியாளனாக இருந்த பாகிஸ்தான்காரனின் முதன்மைப் பொறியாளருடனான வாக்குவாதமும் சரீரத் தாக்குதல் அளவுக்கான முனைப்புமே அவனை பம்பாயில் இறக்கிவிட வைத்தது. இவ்வாறு ஒரு சுமுகமான நிலை அற்றதாகவே கப்பல் தொடர்ந்து இருந்துவந்தது. கலாபனே முந்திய மூன்றாம் பொறியாளனான தனது நண்பன் வேலையிழக்கக் காரணம் என்பதுபோல் இன்னொரு பாகிஸ்தானி கொஞ்சக் காலம் அவனோடு முறுகல் காட்டிக்கொண்டு திரிந்தான். இவை காரணங்களாய் நீண்டகாலம் அந்தக் கப்பலில் வேலைசெய்ய கலாபனும் பிரியமிழந்திருந்தான். ஒரு சித்திரைப் புத்தாண்டில் வீடு செல்லக்கூடியமாதிரி தனது விடுப்பைக் கோரி ஒரு மாதத்தின் முன்பாக கொம்பனிக்கு அறிவிப்புச் செய்தான் கலாபன்.

எண்பத்தொன்பதாம் ஆண்டு சித்திரையில் அவன் தன் வீட்டிலிருந்தான். பின்னர்தான் தனது பழைய முதன்மைப் பொறியாளரைச் சந்திக்க அவன் கொழும்பு பயணமானது.

பழைய கப்பல் முதன்மைப் பொறியாளர் சொன்ன தகவல்கள் அவனை தூக்கியெறிந்து விட்டன. ஒரு கப்பலை இன்னொரு கப்பலோ இழுவைப்படகோ இழுத்துக் கரைசேர்க்கிற பட்சத்தில், அந்த ஆபத்துக்குள்ளான கப்பலின் பெறுமதியினதும் அதிலுள்ள சாமான்களின் பெறுமதியினதும் பாதியை கோரிக்கொள்ள உதவிசெய்த கப்பலுக்கு உரிமையுண்டு என்பது அவன் இதுவரை கேள்விப்படாதது. தனது கடவுச்சீட்டைப் புதுப்பிக்க வேண்டியிருப்பதாகச் சொல்லிக்கொண்டு பாஹ்ரினை கப்பல் அடைந்ததும் தான் வெளியே சென்றது கப்பல் லொக்புக்கை பிரிட்டிஷ் தூதுவராலயத்தில் சமர்ப்பித்து அதை அவர்களிடம் உறுதி செய்து பெற்றுக்கொள்வதற்காகவே என்றும் அவர் சொன்னார்.

எல்லாம் ஒரு குழப்ப நிலையில் கலாபனைத் தள்ளிவிட்டன. அவன் பதில் சொல்லவே முடியாது திண்டாடிக்கொண்டிருந்தான். கப்பல், கரைதட்டிய கப்பலைக் கடலில் இழுத்துவிட்ட சமயத்தில் இருந்த அத்தனை பேருக்குமே அந்தத் தொகையில் பங்கு உண்டென்றும், அவனது பதவியைப் பொறுத்து அவனுக்கும் இருபத்தைந்து லட்சங்கள்வரை கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டென்றும் அவர் சொன்ன போது அவன் திகைத்துப்போனான்.

எத்தனை நாட்கள் அவன் கொழும்பில் நிற்பான் என அவர் கேட்டதற்கு அவன், ‘இரண்டு மூன்று நாட்களில் திரும்புவதாக எண்ணிக் கொண்டுதான் வந்திருந்தேன். தேவையானால் சில நாட்கள் கூடுதலாக நிற்கலாம்’ என்றான்.

‘அது போதும். முந்திய கப்ரினிடமிருந்து எந்தவிதமான தகவலும் இல்லை. இந்த ஈட்டுக் கோரலை அவர்தான் முன்னெடுக்கவேண்டும். எவ்வளவோ ஆர்வமாக இருந்த அவரிடமிருந்து ஒரு சேதியும் இல்லாத நிலையில், நானே இந்த முயற்சியைத் தொடரவிருக்கிறேன். அதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. லொக்புக்கின் ஒரு பிரதியெடுத்து அதிலும் பிரிட்டிஷ் தூதுவராலயத்தில் கொடுத்து உறுதி செய்து வைத்திருக்கிறேன். சட்ட நிபுணர்களுடன் கலந்தாலோசித்ததில் இது போதுமென்றே கூறினார்கள். விரைவில் வழக்கைத் தொடுக்கவுள்ளேன். நீ ஒரு சாட்சியாக எனக்குத் தேவை. அதனால் வழக்கு விபரம் தெரியும் வரை நீ எந்த கப்பலேறும் முயற்சியையும் மேற்கொள்ளாமலிருக்க வேண்டும். சுமார் கால் கோடி ரூபா வரவிருக்கிற நிலையில் சில ஆயிரங்களுக்காக நீ அவசரப்படத் தேவையில்லையல்லவா?’ என்றார் அவர்.

அவன் சம்மதித்தான்.

வழக்கு தொடுத்துவிட்டதாக அவன் யாழ்ப்பாணம் திரும்பிய ஒரு வாரத்தில் கடிதம் வந்தது அவரிடமிருந்து. பின்னர் ஒரு மாதத்தில் கொழும்பு போன கலாபன் அவரையும் சென்று சந்தித்தான். வெகுநம்பிக்கையோடு அவனுடன் பேசி அனுப்பினார்.

முந்தியமுறை கொழும்பிலிருந்து யாழ் திரும்பியபோது சிறிது அவநம்பிக்கையும், சிறிது கலக்கமும் அவனிடத்தில் இருந்திருந்தன. அந்த முறை அவன் அவரை முழுதாகவும் நம்பிவிட்டிருந்தான். ஒருவகையில் ஒரு லட்சாதிபதி ஆகிவிட்ட மனநிலையே அவனிடம் ஏற்பட்டுவிட்டது.

வீட்டில் சிறிது உல்லாசமாகவே இருந்தான் கலாபன். உல்லாசம் அவனது சிறிய சேமிப்பையும் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைத்துக் கொண்டிருந்தது. பிள்ளைகளுடன் இருப்பதான மனநிறைவைத் தவிர வேறை அவன் அந்த நாட்களில் அறிந்ததில்லை. ஆறு மாதங்களாயின. ஒன்பது மாதங்களாயின. பழைய முதன்மைப் பொறியாளர் வீட்டில் இருப்பதை உறுதிப்படுத்திக்கொண்டு ஒரு முறை கொழும்பு சென்றான்.

அவரது பதில் அவனது கனவுகளைச் சுக்கு நூறாக நொருக்கியது.

ஒரு கப்பல் கொம்பனியென்பது அதன் சொந்த தேசத்தில் அத்திபாரம் கொண்டதுதான், ஆனாலும் அதன் வியாபார வலைப் பின்னல் உலகமளாவியது, தனக்கெதிரான எந்த எதிர்ப்பையும் அது அந்த வலைப் பின்னல் மூலமாகவே நிர்மூலமாக்கிவிடுகிறது எனவுரைத்தவர், ‘இது எனது நாடு, இருந்தும் என்னையும் என் குடும்பத்தையும் இங்கேயே அழித்தொழித்து விடுவதாக இங்குள்ள ரௌடிகள் மூலமாகவே எச்சரிக்கைவிடுக்க அதனால் முடிகிறது. என் இரண்டு பெண்பிள்ளைகளையும் விபச்சாரிகளாக்கி தெருவில் அலைய வைத்துவிடுவதாகச் சொன்ன எச்சரிக்கையோடு நான் கலங்கிப்போனேன், கலாபன். வழக்கைத் திரும்பப் பெறுவதைத் தவிர எனக்கு வேறு வழியே இருக்கவில்லை’ எனத் தொடர்ந்து கூறி அந்த உரையாடலுக்கு முற்றுப் புள்ளியிட்டார்.

கலாபன் மெல்லிய சிரிப்பையாவது காட்டி தனது ஏமாற்றத்தை மறைக்க முயன்று தோற்றுக்கொண்டிருந்தான்.

வழக்கு தொடரப்பட்டதோ, பின்னர் அது கைவிடப்பட்டதோ பத்திரிகையுலகத்துக்குத் தெரியவேயில்லை. அத்தனைக்கு சர்வதேச ரௌடிசம் வலுவானதாயே இருந்தது.

இந்தக் கைவிடப்பட்ட கப்பல் வழக்கில் வழக்காளியோ குற்றஞ்சாட்டப்பட்டவரோ யாருமே பாதிக்கப்படவில்லை. சாட்சியே பாதிக்கப் பட்டிருந்தான்.

கலாபனது மனத்தில் அந்த ஏமாற்றம் நீண்ட காலமாக இருந்தது.

அதையும் காலம் மாற்றுமா?



devakanthan@thaiveedu.com


**Tution Classes**

**(McCowan & Dennison சந்திப்பிற்கருகில்)**

தமிழ், ஆங்கிலம் (English), கணிதம் (Math), ஓவியம் (Art), விஞ்ஞானம் (Science), வீட்டுவேலை உதவி (Homework Help).

இளமழலை முதல் தரம் 12 வரையான மாணவர்களுக்கு.

1 to 1 or Group classes

**905-554-2496, 416-522-3314**

**ஆயுட் காப்புறுதி**

Universal Life • Whole Life • Term Life • Non Medical

RESP + 20% Government Grant 15% Company Bonus

RRSP Loan Aproved Even SIN Number 9

CRITICAL ILLNESS Upto 25 Illness



**VASANTH VINAYAGAMOORTHY**

Insurance Broker

**647-885-3012**

www.vvinsurance.ca

759 Warden Ave., Toronto, ON M1l 4B5

Office: 416-759-5453, Fax: 416-759-6220


VENTUS2
At MetroGate
TRIDEL
BUILT FOR LIFE
KENNEDY & HWY 401- TORONTO, CANADA
Book your Units at Pre-Construction Price
Price Starting From
$199,900
Completion Spring 2013
Buy Through Us And Get A Chance to WIN A Brand New BMW CAR**
Special VIP Preview
Office Space $680
Mccowan/Sheppard
$469,000
BurOak/Markham Rd
$465,000
BurOak/Markham Rd
Appartment Building for sale
$985,000
Lakeshore/Islington
gas station for sale with & without property
Call For Details
$339,900
E.Bellamy/N. Eglinton
$309,900
Danforth/Eglinton
$259,900
Mccowan/Eglinton
$229,800
Mccowan/Eglinton
$499,000
Markham/16th Ave
புதிய வரவு
Corner of Hwy 427 & Eva Rd.
westvillage
Book your Units at Pre-Construction Price
அழையுங்கள்
Kathir
416 856 6900
HomeLife / GTA Realty Inc. Brokerage
416 321 6969
S Kathirgamanathan P. Eng.
Sales Representative

## - அ. முத்துலிங்கம் -

# ஆச்சரியம்



நான் சில மாதங்கள் ஒரு அச்சகத்தில் வேலை பார்த்திருக்கிறேன். ஒரு பெரிய கம்பனியில் அச்சகம் என்பது சிறிய பிரிவு. அந்தப் பிரிவில் கணக்காளர் பகுதியில் எனக்கொரு சின்ன வேலை. கம்பனியின் முதன்மை இயக்குநர் கொழும்பு மேல்தட்டு வர்க்கத்தை சேர்ந்தவர். பரம்பரை செல்வந்தராக இருக்க வேண்டும். அவருக்கு இந்த அச்சகம் தேவையில்லாத ஒன்று. அச்சகத்துக்கு பொறுப்பான மேலாளர் சகலதையும் கவனித்தார். ஆனாலும் முதன்மை இயக்குநர் தினமும் வந்து இரண்டு மணி நேரமாவது அச்சகப் பிரிவில் செலவழிப்பார்.

அவர் வந்து ஆட்சி நடத்தும் அந்த இரண்டு மணிநேரமும் முழு அலுவலகமும் பரபரப்பாகும். என் வாழ்க்கையில் நான் அப்படியான காட்சியை கண்டதே கிடையாது. மேலாளரிலிருந்து கடைசி ஊழியர் வரை நடுங்குவார்கள். முதன்மை இயக்குநர் பார்ப்பதற்கும் அப்படித்தான் இருப்பார். நல்ல உயரம், அத்துடன் முன்னுக்கு தள்ளி நிற்கும் வயிறு. எந்தக் கோடை எந்தச் சூரியன் எரித்தாலும் மடிப்புக் கலையாத விலையுயர்ந்த ஆடைக்குமேல் கோட்டு அணிந்துதான் காட்சியளிப்பார். அவரிடம் விதவிதமான தோல் சப்பாத்துக்கள் இருந்தன. நாளாந்தம் பளபளவென்று மினுக்கியெடுத்த கறுப்பு சப்பாத்தில் டக்டக்கென ஒலியெழுப்பி நடந்து வருவார்.

அவர் தூரத்தில் வருவது தெரிந்ததும் அலுவலக கோப்புகள், பேரேடுகள், நாள் கணக்கு புத்தகங்கள் ஆகியவற்றின் பக்கங்களை இடமிருந்து வலமாக திருப்பும் சத்தம் கேட்கும். பின்னர் வலமிருந்து இடமாக திருப்பும் சத்தம் எழும். முழு அலுவலகமும் பதற்ற நிலையை எய்தும். யாரையாவது கூப்பிட்டு ஏதாவது விசாரிப்பார். மற்றவர்கள் காற்றுக்குள் மறைந்துகொள்ள முயற்சி செய்வர். விசாரிக்கப்படுவருக்கு வாய் குளறும். முதன்மை இயக்குநர் மூன்றாவது கேள்வி கேட்கும்போது முதல் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுவார். “சரி போ” என்று சொன்னதும் பாய்ந்துபோய் தன்னுடைய இருக்கைக்குள் புதைந்து கொள்வார்.

அவருடைய அந்தரங்கக் காரியதரிசி ஒரு நாற்பத்தைந்து வயது மதிக்கக்கூடிய பெண். மணமுடிக்கவில்லை, ஒரு காலத்தில் அவர் அழகான பெண்ணாக இருந்திருக்கலாம். சற்று அதிகமாக பால் கலந்த தேநீர் கலர். நீளமான கண்கள். அவருக்கு ஒரு காதலன் இருந்தார். திருமணத்துக்கு அழைப்பிதழ்கள் அனுப்பிய பின் மணமுடிக்க முடியாது என்று சொல்லி ஓடிவிட்டார். இனிமேல் திருமணமே வேண்டாமென்று அப்போது தீவிரமான முடிவெடுத்தார் என்று அலுவலகத்தில் பேசிக்கொண்டார்கள். கடந்த 25 வருடகாலம் முதன்மை இயக்குநருக்கு விசுவாசமாக வேலை பார்க்கிறார். இப்பொழுது மெலிந்து வளைந்துபோய் அவருடைய தாடை எலும்புகள் வெளியே தள்ள கேவலமாக தெரிவார். எந்த ஒரு காலத்திலும் ஒப்பனையை காணாத முகம். ஒரு வாரம் முழுக்க இரண்டு பருத்தி சேலைகளை மாறிமாறி கட்டி வருவார். கம்பனிக்கு காலையில் முதலில் வந்து கடைசியில் போவது அவர்தான். அப்படி திறமையுடன் கடுமையாக உழைக்கும் அவருக்கு அந்தக் கம்பனியில் தெரியாத விசயங்களே இல்லை. ஆனாலும் ஒவ்வொரு நாளும் முதன்மை இயக்குநர் வந்து போனதும் அழுதுகொண்டிருப்பார். இத்தனை வருடங்களில் இந்தப் பெண் வேறு வேலை தேடிக்கொள்ளாதது இன்னொரு ஆச்சரியம்.

முதன்மை இயக்குநர் வந்ததும் அவருடைய அறையை நோக்கி பிரதானமான முடிவுகள் எடுக்கவேண்டிய கோப்புகளை தூக்கிக்கொண்டு அந்தரங்க காரியதரிசி ஓட்டமும் நடையுமாக செல்வார். பத்தடி தூரம்தான் என்றாலும் அவர் ஓடித்தான் கடப்பார். அவர் கழுத்திலே இருந்து வழியும் வியர்வையை சேலை தலைப்பினால் ஒற்றியபடியே அவருக்கு பக்கத்தில் நிற்பார். புதிதாகப் பிறந்த குழந்தையை அவர் கையிலே கொடுத்துவிட்டு நிற்பதுபோல கொஞ்சம் பெருமையும் இருக்கும். அவர் செய்த வேலையையும், குறிப்புகளையும் முதன்மை இயக்குநர் படித்து தன் முடிவுகளை எழுதுவார். கோப்புகளின் மேல் மட்டையில் ‘அவசரம்’ ‘மிக அவசரம்’ ‘உடனே’ போன்ற ஒட்டுப்பேப்பர் குறிப்புகளை அவரே ஒட்டி அனுப்புவார். அவருடைய கட்டளைகளை ஊழியர்கள் அவர் விதித்த காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டுமானால் அவர்கள் அன்று வீட்டுக்கு போக முடியாது. அடுத்தநாளும் முடியாது. அவர்கள் கோப்புகள் கைகளில் கிடைத்ததுமே ஒட்டுப்பேப்பரை அகற்றிவிடுவார்கள். உடனே அவை சாதாரண கோப்புகளாக மாறிவிடும்.

எவ்வளவுதான் கவனமாக காரியதரிசி தன் வேலையைச் செய்தாலும் முதன்மை இயக்குநர் ஏதாவது ஒரு பிழையை கண்டுபிடித்து விடுவார். பேச்சு வரப்போகிறது என்பது அவளுக்கு ஒரு நிமிடம் முன்பாகவே தெரிந்து போகும். சண்டை மாடு மூச்சு விடுவதுபோல வேகமாக மூச்சு விடுவார். பின்னர் வாய் திறந்ததும் அதே வேகத்தில் வசவுகள் வெளிப்படும். அந்தரங்க காரியதரிசியை தினமும் வையாமல் அவரால் வீட்டுக்கு திரும்ப முடியாது. “உன்னுடைய மூளை முழுமையடையாத மூளை” என்பதுதான் அவர் திரும்ப திரும்ப சொல்லும் வசை. எப்போவாவது அளவற்ற கருணை சுரந்தால் மட்டும் அன்றைக்கு அந்தப் பெண்ணை அப்படி திட்டாமல் விட்டுவிடுவார்.


அச்சுக்கூடத்தில் ஒரு புதுப் பையன் சேர்ந்திருந்தான். பெயர் சண்முகவடிவேல். அவனுடைய மாமா கொடுத்த கடிதத்தை தூக்கிக் கொண்டு கிராமத்திலிருந்து நேராக மேலாளரைப் பார்க்க வந்திறங்கிய பையன். “அப்பா எங்கே?” என்று மேலாளர் கேட்டார். “அவரை முதலை சாப்பிட்டிட்டுது, சேர்” என்றான். “சரி, அம்மா எங்கே?” என்றார் மேலாளர். “அவ மறியல் வீட்டிலே சேர்”. வேறு ஒரு கேள்வியும் அவர் கேட்கவில்லை. அப்பாவித்தனமாக இருக்கிறான், நல்லாய் வேலை செய்வான் என்று நினைத்துத்தான் அவனை வேலையில் சேர்த்தார். அவனோ ஏமாளி, மற்றவர்களின் சந்தோசத்துக்காக கடவுளால் படைக்கப்பட்ட சீவன். பொழுது போகவில்லை என்றால் அவனை பந்துபோல உருட்டுவதுதான் அடுத்தவர்களுக்கு வேலை. அவனுக்கு கவலை என்பது இல்லை. எந்த நேரமும் அவனைச் சுற்றியுள்ளவர்களுக்கு அவனிலிருந்து மகிழ்ச்சி வீசிக்கொண்டிருக்கும்.

அந்த அச்சுக்கூடத்தில் மூன்று மாதத்துக்கு ஒருமுறை இடதுசாரிக்கட்சியை சேர்ந்த ஒரு சங்கம் இதழ் ஒன்று தயாரிக்கும். அதில் நிறையக் கட்டுரைகள் இருக்கும். அவை எல்லாவற்றையும் அவன் வாசிப்பான். பெரிய பெரிய வார்த்தைகள் வரும்போது வாயில் ஒருமுறை உச்சரித்து பார்ப்பான். அவனுக்கு பிடித்த திறமான வார்த்தை பூர்சுவா. அதற்கு அடுத்த வார்த்தை நிலப்பிரபுத்துவம். சொல்ல நல்லாயிருக்கும். ஒருநாள் அந்த வார்த்தைகளின் பொருளை கண்டுபிடிக்கவேண்டும் என நினைத்துக்கொள்வான். எல்லா கட்டுரைகளிலும் “என்னே கொடுமை! என்னே துன்பம்! பாட்டாளி மக்களே! விழித்தெழுங்கள்!” போன்ற வாசகங்கள் நிறைந்திருக்கும். இந்த ஆச்சரியக் குறிகளை அகற்றிவிட்டால் கட்டுரை அரை சைசுக்கு வந்துவிடும்.

அப்பொழுதெல்லாம் கம்புயூட்டர் வசதிகள் கிடையாது. ஒவ்வொரு எழுத்தாக அச்சுக் கோர்த்துதான் அச்சடிக்கவேண்டும். அவையோ தலைகீழாக இருக்கும், அச்சடித்ததும் சரியான எழுத்தாக மாறிவிடும். சண்முகவடிவேலுவுக்கு அங்கு நடப்பவை எல்லாமே புதினம்தான். அங்கே வேலை செய்தவர்களில் தொழில் பக்தி கொண்டவன் என்றால் அது அவன்தான். சிலவேளை அச்சுக்கோர்க்கும் போதே படித்ததை நினைத்து சிரிப்பான். பக்கத்தில் வேலை செய்யும் பையனிடம் “ஆகிருதி” என்ற ஆங்கில வார்த்தைக்கு என்ன தமிழ் என்று கேட்பான். அவன் பதில் சொல்லுவான், ஆனால் அச்சு யந்திரத்தின் பெரிய ஓசையில் அது அவனுக்கு கேட்காமல் போகும்.

வெளியே என்ன வெப்பம் வீசுமோ அதுவே அச்சுக்கூடத்துக்குள்ளும் வீசும். எல்லோரும் சேர்ட்டைக் கழற்றி சுருட்டி இடுப்பிலே கட்டிக்கொண்டுதான் வேலை செய்வார்கள். இவனும் அப்படித்தான் வேலை செய்தான். ஒரு முறை இதழுக்கு அச்சுக்கோர்க்கும்போது ஆச்சரியக் குறிகள் முடிந்துவிட்டன. தன்னுடைய சுப்பர்வைசரிடம் அவன் போகமுன்னர் மற்ற அச்சுக் கோப்பவர்கள் எல்லாம் ஒன்று திரண்டுவிட்டார்கள். முதலாளியிடம் போய் ஆச்சரியக் குறிகள் முடிந்துபோனதை சொல்லச்சொல்லி ஏவிவிட்டார்கள். இந்த பெரிய கம்பனியில் ஆச்சரியக் குறிகள் இவ்வளவு விரைவில் தீர்ந்துபோனது அவனுக்கும் ஆச்சரியம்தான். இடுப்பிலே சுருட்டிக் கட்டிய சேர்ட்டை அவிழ்த்து உதறி அச்சுயந்திர மை மணம்

96ம் பக்கம் பார்க்க...



காதல் வாழ்க்கை - 19

# வனத்தின் வனப்பு

- வி. கந்தவனம் -

அவள் குறுநில மன்னனின் மகள். அவன் அரச பரம்பரையல்லன். ஆனால் அரசனை யொத்த அழகும் ஆற்றலும் உள்ளவன். அன்றொருநாள் தனது தோழியுடன் உலாச் செல்கையில் அவனை அவள் காண நேர்ந்தது. அவன் அழகு அவள் கண்களைப் பறித்தது.


ஓவியம்: சிவாஜினி பாலராஜன்

அவனும் நோக்கினான். இருவர் கண்களும் சந்தித்தன. தோழியின் உதவியால் அவர்கள் சந்திப்புகள் தொடர்ந்தன.

அவன் அவளைத் திருமணஞ் செய்ய முன்வந்தான். அவளின் பெற்றோர் எதிர்த்தனர். காலம் கரைந்தது. காதல் வளர்ந்தது. அரச குமாரன் ஒருவனுக்குத் தன்னைக் கொடுக்கத் தந்தை முயல்வதை அவள் அறிந்தாள். தோழி மூலம் செய்தியைத் தலைவனுக்குத் தெரிவித்தாள். தலைவன் இரவில் அவளை அழைத்துச் செல்ல வந்தான். அவளும் உடன் பட்டாள்.

பொழுது புலர்ந்தது. அவர்கள் அடர்த்தியான காட்டு வழியாகச் சென்றுகொண்டிருந்தனர். தனது காதலிக்கு வழிநடை வருத்தம் தெரியாமல் இருக்க, காட்டின் அழகினைக் கூறி அவளுக்குத் தென்பு ஊட்டினான் தலைவன்.

'எம் இளமகளே! நீ வாழ்வாயாக! அதோ அந்த முருக்கை மரத்தைப் பார்த்தாயா! வாள் போலும் வரிகளையுடைய வலிய புலியினது கொல்லும் நகத்தைப் போல உள்ளன அவற்றின் முட்கள். அவற்றின் சிவந்த முகைகள் இதழ் விரிந்தன. அவற்றில் வண்டு மொய்க்க, வாடிய பூக்கள் கீழே உதிர்ந்தன. செழித்த அழகும் சிறந்த அணியினையும் உடைய மகளிரது முலையினைப்போல முகைகள் விரிந்த கோங்கின் பூக்களோடு கொத்துக் கொத்தான புனலிப் பூக்களும் கூடிக் கலந்துள்ளன.

'பரவி வளர்ந்த இனிய குளிர்ச்சி பொருந்திய பாதிரி மரத்தினது அழகிய கிளைகளிலிருந்து உதிர்ந்த பூக்களோடு அயல் மரங்களின் பூக்களும் தாவிக் கலந்தன. மேலும் வெண்கடப்பம் பூக்களும் அவற்றோடு விரவிக் கலந்துள்ளன. தொழுவதற்குரிய தெய்வம் விளங்குகின்ற கோயிலினிடத்தே கலந்து கிடக்கும் பூக்களைப் போல, இக்காடும் நல்ல அழகுடன், எமக்கு விருப்ப மூட்டும் வகையில் விளங்குவதையும் காண்பாயாக.

'மேலும் உனது தந்தை பகைவரை எதிர்க்கும் போர்க்களத்திலே பாய்ந்த பூண் சிதைந்த தந்தங்களையுடைய களிறுகளைப் போன்று பெரிய குன்றுகளையும் அக்களிறுகளைச் சூழ்ந்த பெண் யானைகளைப் போன்று சிறிய குன்றுகளையும் இக்காடு கொண்டிருப்பதையும் காண்பாயாக!'

வாள்வரி வயமான் கோள் உகிர் அன்ன
செம்முகை அவிழ்ந்த முள்முதிர் முருக்கின்
சிதரார் செம்மல் தா அய் மதர் எழில்
மாண் இழை மகளிர் பூண் உடை முலையின்
முகைபிணி அவிழ்ந்த கோங்கமொடு அசைஇ நனை
அதிரல் பரந்த அம்தண் பாதிரி
உதிர்வீ அம்சினை தாஅய் எதிரிலீ
மராஅ மலரொடு விரா அய்ப் பராஅம்
அணங்குடை நகரின் மணந்த பூவின்
நன்றே கானம் - நீயவரும் அம்ம
கண்சின் வாழியோ – குறுமகள் நுந்தை
அடுகளம் பாய்ந்த தொடி சிதை மருப்பின்
பிடிமிடை களிற்றின் தோன்றும்
குறுநெடும் துணைய குன்றமும் உடைத்தே!

- அகநானூறு 99

வாள்வரி - வாள்போலும் கோடுகள், வயமான் - வலிய புலி, கோள் உகிர் - கொல்லும் நகம், அதிரல் - புனலிப் பூ, அணங்கு - தெய்வம், நயவரும் - விருப்பந் தரும், தொடி - யானையின் தந்தத்துக்கு அணியும் பூண், பிடி - பெண் யானை, குறுநெடுந் துணைய குன்றம் - சிறிதும் பெரிதுமான குன்றங்கள்.

காதலியின் வழிநடைக் களைப்பினைப் போக்க காட்டின் அழகைத் தலைவன் வருணித்தானாயினும் பூவினங்கள் கலந்து விழுந்திருப்பதைக் காட்டியதில் கருத்தொன்று கலந்திருக்கின்றது. அவள் அரச குலத்தவள். அவன் வேறு குலத்தவன். இருவரும் கூடி வாழ்வதில் குற்றமில்லை என்பதை உணர்த்தும் கருத்தாக உள்ளது அது. இந்தக் கருத்தும் அவளுக்குத் தென்பு ஊட்டியிருத்தல் வேண்டும்.

இலக்கியத்தில் தலைவி தனது வீட்டை விட்டுத் தலைவனோடு வாழச் செல்வது உடன்போக்கு எனப்படும். அவளது தந்தை படைகளோடு சூழ்ந்து அவர்களின் உடன் போக்கைத் தடுக்க முயன்றான். அது கண்ட மகளோ தந்தையின் செயலை எதிர்ப்பாள் போல தன் காதலனின் கரங்களைப் பற்றி நின்றாள். அவளது உறுதிப்பாடு தந்தையின் மனத்தை மாற்றியது. தனது மகளின் செயல் அறநெறிப் பட்டதாக இருந்ததை அவன் உணர்ந்தான். அதனால் அவர்கள் உடன் போக்குக்கு உடன்பட்டு தனது ஊர் திரும்பினான் மன்னன்.

தலைவியைத் தன் பதிக்கு உடன்கொண்டு சென்ற தலைவன் சில நாட்களின்பின் அவளை முறையாக மணந்துகொண்டு இல்லற வாழ்வில் ஈடுபட்டான்.

இப்பாடல் உணர்த்துவது போன்று களவொழுக்கத்துக்குரிய தலைவியை தலைவன் உடன்கொண்டு செல்லும் வழக்கம் பழந்தமிழர் மத்தியில் நிலவிற்று. எதிர்ப்புக்கள், பழிச்சொற்கள் என்பனவும் இருந்தன. அவற்றைக் காதலர்களின் உறுதிப்பாடும் பிற்பாடு அவர்கள் மேற்கொள்ளும் சிறந்த வாழ்வும் முறியடித்தன. உலகியலில் இதனை உற்றுணர்ந்த சான்றோர் உடன்போக்கும் அறநெறிப்பட்டதே என வலியுறுத்தினர். இதற்கு,

சுரநனி இனிய வாகுக தில்ல
அறநெறி இதுவெனத் தெளிந்த என்
பிறைநுதற் குறுமகள் போகிய சுரனே

– ஐங்குறுநூறு 371

என்னும் பாடல் நல்ல எடுத்துக்காட்டு.

மேலும், விரும்பிய ஆடவன் ஒருவனுடன் சென்று வாழ்க்கை நடத்தும் உரிமை அக்காலத் தமிழ்ப் பெண்களுக்கு இருந்ததையும் உடன்போக்கு வழக்கம் உணர்த்தி நிற்கின்றது.



kandavanam.v@thaiveedu.com

# ஆச்சரியம்...


95ம் பக்கத் தொடர்ச்சி...

இருக்கோ என்று மணந்து பார்த்தான். முதல் நாள் மணத்திலும் பார்க்க கொஞ்சம்தான் கூடியிருந்தது. பின்னர் சேர்ட்டை இழுத்து சுருக்கை நேராக்கி அணிந்தான். பொத்தான்களை ஒவ்வொன்றாக மேலிருந்து கீழாக போட்டு தயாரானான். மற்றப் பெடியன்கள் "போ, போ" என்று துரத்தினார்கள். இந்தப் பேய்ப்பெடியனும் விசயம் விளங்காமல் முதலாளியின் அறையை நோக்கி புறப்பட்டான்.

எப்பொழுதும் அவனுக்கு சந்தோசம்தான். முதன்மை இயக்குநர் அறையிலிருந்து கிட்டத்தட்ட 200 அடி தூரத்தில் அச்சுக்கூடம் இருந்தது. அவன் முதன்மை இயக்குநரைப் பார்த்தது கிடையாது. அவருடைய அறை எந்தப் பக்கம் இருக்கிறது என்பதும் தெரியாது. அவனுடன் வேலை செய்தவர்கள் காட்டிய திசையில் ஒருவித பயமோ, தயக்கமோ இல்லாமல் நடந்தான். மகிழ்ச்சி அவனிலிருந்து வீசியது. எம்.ஜி.ஆர் நடித்த நாடோடி மன்னன் படத்துக்கு இலவச டிக்கட் கிடைத்ததுபோல கைகளை வீசி நடந்தான். அந்தப் பெண்ணுடைய முகம் தெரிய முன்னர் பற்களிதான் தெரிந்தன. தாடை எலும்புகள்மீது கண்ணீர் வழிந்தது. ஒரு பறவை எழுப்புவதுபோல மெல்லிய ஒலி அவரிடமிருந்து புறப்பட்டது. அதுதான் காரியதரிசிப் பெண் என்று ஊகித்தான். அவரையும் இப்பொழுதுதான் முதன்முறையாக பார்க்கிறான். லேஞ்சியால் அவர் கண்களை துடைக்க துடைக்க நீர் பெருகிக்கொண்டே இருந்தது. இவன் திடுக்கிட்டுப் போய் என்ன செய்வதென்று தெரியாமல் நின்றான். வழக்கமாக முதன்மை இயக்குநரைப் பார்க்க யாரும் சடுதியில் உள்ளே போகமுடியாது. காரியதரிசிப்பெண் யார், என்ன வேண்டும், உங்களுக்கு முன்அனுமதி உண்டா போன்ற விவரங்களை அறிந்த பின்னர்தான் எவரையும் அனுமதிப்பார். அன்று பாதி அழுகையில் இருந்தார். அதை முடிவுக்கு கொண்டுவர சில நிமிடங்கள் பிடிக்கும். எனவே கதவை சுட்டிக் காட்டிவிட்டு தன் அழுகையை தொடர்ந்தார்.

முதன்மை இயக்குநருக்கு கீல்வாதம் (gout) என்றொரு வியாதி. பெருவிரல்கள் வீங்கி வேதனையில் உழல்வார். இது அடிக்கடி வரும். அதுவரும் நாட்களில் எவரும் கிட்ட அணுகமுடியாது. அன்றைக்கு அவருக்கு வேதனை உச்சத்தில் நின்றது. அவர் பளபளக்கும் இரண்டு தோல் சப்பாத்துகளையும் கழற்றிவிட்டு தன் கால்களை மேசையில் வைத்து ஆராய்ந்துகொண்டிருந்தார். சுவாசத்தை நிறுத்திவிட்டு எல்லாக் கண்களும் அவனை பார்க்க, கதவை தட்டாமல் திறந்து சண்முகவடிவேல் உள்ளே நுழைந்தான். ஒரு கணம் இரண்டு தொக்கையான கால்பெருவிரல்களை பார்த்து பின்வாங்கினான். உடனேயே கிராமத்து தைரியத்தை வரவழைத்துக்கொண்டு "ஐயா, ஆச்சரியக் குறி எல்லாம் முடிஞ்சு போச்சுது. உங்களிட்டை வேற குறி இருக்கோ என்று கேட்டு வரச் சொன்னார்கள்" என்றான்.

நான் வேலை செய்த அந்த மூன்று மாதங்களில், வார விடுமுறை, போயா விடுமுறை, பொங்கல் விடுமுறை, கிறிஸ்மஸ் விடுமுறை, நோய் விடுப்பு எல்லாவற்றையும் கழித்து மீதியான அத்தனை பணி நாட்களிலும் காணாத ஒரு காட்சி அது. முதன்மை இயக்குநரின் கதவு பட்டென்று பெரும் சத்தத்துடன் திறந்தது. வெறி நாய் துரத்தியது போல அவன் அலறிக்கொண்டு வெளியே வந்தான். முதன்மை இயக்குநர் அன்று என்ன சொன்னார் என்பதோ, என்ன செய்தார் என்பதோ என்னால் இங்கே எழுத்திலே பதியக்கூடியது அல்ல. சண்முகவடிவேல் அடுத்த நாள் வேலைக்கு வரவில்லை. கிராமத்துக்கு ஓடிவிட்டான். அலுவலகத்தில் ஒரு முட்டாள் குறைந் துவிட்டான் என்று பேசிக்கொண்டார்கள்.



muththulingam.a@thaiveedu.com

பசுந்தீவு கோவிந்தனின்

'தீர்ப்பு'

(நாவல்)

பசுந்தீவு கோவிந்தன்: 416 431 6587


வீடு, வியாபாரம், காணி
வாங்க விற்க அழையுங்கள்!
Mortgage 2.19% ..Refinance also.
416- 490-7653
SOLD
SOLD
SOLD
SOLD
Century 21
416-290-1200
416-894-1187
email: rpushpakanthan@trebnet.com
NEED MORE HOMES FOR BUYERS
selling commission only 1.25%
sell your home
with less commission
EXPERIENCE! COMMITMENT! RESULTS!
Pat Pushpakanthan
Real Estate BROKER
CENTURION AWARDS 6 yrs
Top producer 7 years
Masters Hall of Fame 07
Fully Occupied,Industrial/Multi Unit/
Automobile Repair Legal Zoning/Newer 6
For lease auto Garage
markham/steeles
Middle field /finch
Commercial retail for rent only 1400/ - month best for lots of business in door mall hightraffic area...be your own boss ...consult for business idea...
0% Downpayment
Security, executive living
Nielson/ mclevin
2 BM /2wsrm CONDO
APT FR SALE
$153 900
0% down pymnt
670/- mo pymnt mortgage call fr detail
33 acres farm
with barn and horse paddocks
North west Ontario
Markham rd north
100+ Acre
100+ acres with water front & farm
14 th ave/9 th line
Excellent arista home with bsmnt finished w/o close to school
Well kept home rented bsmnt fr 800/
Harwood...ajax
325000
Excellent location 3 bm/ 3 wsrm close to 401, school, shoping
Mccowan Finch
Excellent location 4 bm/ 4 wsrm, with sep entrance,
Cottage 249 k
simco lake front call..
Store plus apt
Rent store and live $349k
58 acre farm
25 minute drive north fro sale ....600000/-
78, 101 acres also avail
Condo for sale..
newer also
2bm 2 wm in Scar 139000/-
2bm 2 wm in Scar 147000/-
Studio newer in Scar 169000/-
1 bm 1 wm in Scar 185 000/-
1+1 newer in Scar 229 000/-
Monthly payment start from
$670/- /month*
Business
Bar for sale
Be your own boss
4 bar available
Cafetaria
Rent is less ......high income
Located in High rise building
3 cafeteria available

**நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.**

**இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.**


*K.S.* பாலச்சந்திரன்

## ஆழத்து முத்துகள் 28

# 'எழுஞாயிறு' குழந்தை ம. சண்முகலிங்கம்

**- ப. ஸ்ரீஸ்கந்தன் -**

பெரும் கலைஞர்கள் எல்லோராலும் 'மாஸ்ரர்' என்று அழைக்கப்படும் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களைப் பற்றி எழுதுவது



பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. ஈழத்து தமிழ் நாடகத் துறையின் மாஸ்ரராகக் கருதப்படும் இவர் புகழ்ச்சிகள் எதுவும் விரும்பாத, மிக அமைதியாகவும், அடக்கத்துடனும் ஆனல் ஆழமாகப் பேசுகின்ற ஒரு அரிய மனிதர். நான் யாழ்ப்பாணம் செல்லும் ஒவ்வொரு தடவையும் சந்திக்கின்ற ஒருவராக அறிந்தவன் என்பதால் அவர் பற்றிய குறிப்புகளை இங்கு பதிவு செய்கிறேன்.

ஐம்பதுகளில் யாழ் திருநெல்வேலி ஐ.எம்.எச்.ஆர் மண்டபத்தில் உள்ளுர்க் கலைஞர் கே.எஸ். செல்வரத்தினம் போன்றோருடன் சேர்ந்து 'சந்தியிலே' போன்ற மகிழ்வூட்டும் நாடகங்களை மேடைபேற்றியது தான் இவரது ஆரம்ப கால நாடக அனுபவமாக இருந்தது. ஆயினும் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களுடன் சேர்ந்து நடிக்கும் அளவுக்கு தனது தேடலையும், நடிப்பாற்றலையும் பின்னாள் வளர்த்துக் கொண்டார். 1958இல் கலையரசு அவர்களின் தேரோட்டி மகன் நாடகத்தில் அருச்சுனனாக இவர் நடித்ததை பெரும் பாக்கியமாக கருதுகிறார். இதே நாடகத்தில் தற்போது பவள விழாக்காணும் கலைஞர் ஏ. ரகுநாதன் அவர்கள் கர்ணனாக வேடமேற்றிருந்தார்.

இவர் முதன் முதல் எழுதிய நாடகம் "அருமை நண்பன்" ஆகும். பள்ளிக்கூடம் செல்லாது கும்மாளம் போட்ட மாணவர்கள் பற்றிய இந் நாடகத்தை 1958இல் எழுதியிருந்தார். பின்னாளில் ஈழத்தமிழர்களின் மனங்களை உலுக்கிய, உறுத்திய பெரும் நாடகங்களை எழுதப்போவதை அவர் அப்போது அறிந்திருக்க நியாயமில்லை.

இதன் பின்னர் 1961இல் 'வையத்துள் தெய்வம்' என்ற நாடகத்தை இவர் எழுதினார். அதில் வள்ளுவராக இவர் பாத்திரமேற்றிருந்தார். 1974இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் இந்நாடகம் மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சில நாடக முயற்சிகளைச் செய்து வந்த சண்முகலிங்கம் மாஸ்ரர், 1976-77இல் கொழும்பு பல்கலைக்கழகத்தினரால் மேற்கொள்ளப்பட்ட நாடக டிப்ளோமா கற்கை நெறியில் பயிலும் வரை நாடகம் என்பது ஒரு கற்கைக்குறிய இயல் என்பதை தான் அறிந்திருக்கவில்லை என்பதை வெளிப்படையாகவே சொல்கிறார். பேராசிரியர்கள் வித்தியானந்தன், சிவத்தம்பி, ஆகியோர்களின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்ட நாடக அரங்க வியல் கற்கை நெறியில் இவருடன் தாசீசியஸ், சுந்தரலிங்கம், சிவானந்தன், குறமகள், கவிஞர் கந்தவனம், காரை செ.சுந்தரம்பிள்ளை போன்றோரும் பயின்றனர். பிரபல சிங்கள நாடகக் கலைஞர்களால் கண்டிய நடனம் போன்ற ஆட்டங்களும் அங்கு கற்பிக்கப்பட்டன.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் மேற்கொண்ட அரங்கவியல் கற்கை நெறியும், அந்நாட்களில் கொழும்பு நூலகத்தில் வாசித்த நாடகப் புத்தகங்களும், ஜேர்மன் நெறியாளர் ஒருவர் மேடையேற்றிய ஒரு சிறுவர் நாடகத்தைப் பார்த்த அனுபவமும் நாடகம் குறித்த அடுத்த கட்டத்திற்கு இவரை அழைத்துச் சென்றன.

ஈழத்துத் தமிழ் நாடக வரலாற்றின் மூலவேரைத் தேடும் நோக்கிலும், எமக்கென ஒரு நாடக வடிவத்தை தோற்றுவிக்கும் முகமாகவும், நடிகர்களுக்கான பயிற்சி (மூச்சுப்பயிற்சி, குரல் பயிற்சி, தளர்வுப் பயிற்சி, நடிப்புப் பயிற்சி) மற்றும் பிரதியாக்கம், நெறியாள்கை, ஒப்பனை, ஒளியூட்டல், ஒலியமைப்பு போன்றவற்றை கற்பிக்கும் நோக்கிலும் 1978 தை மாதம் 23ம் திகதி யாழ் நாடக அரங்கக் கல்லூரியை நிறுவிய மூலகர்த்தா இவர். சில கலைஞர்களின் குறிப்பாக, தாசீசியஸ் அவர்களின் ஆதரவுடன் அபரித வளர்ச்சி அடைந்த அரங்கக் கல்லூரி, ஈழத்துத் தமிழ் நாடகத்துக்குப் புத்துணர்ச்சி ஊட்டி அது புதிய திசையில் செல்ல வழி செய்தது.



"கூடி விளையாடு பாப்பா" என்ற சிறுவர் நாடகமே அரங்கக் கல்லூரி தயாரித்த முதல் நாடகமாகும். கொழும்பில் பார்த்த ஜேர்மன் நெறியாளரின் சிறுவர் நாடகத்தின் பாதிப்பால் இதன் பிரதியை எழுதியதாகச் சொல்கிறார். வீட்டில் தன்னைக் குழந்தை என்று அழைப்பதால் பிரதியாக்கம் குழந்தை ம.சண்முகலிங்கம் என்று தாசீசியஸ் அவர்களே விளம்பரங்களில் போட்டதாகவும் அதுவே பின்னாளில் தனது நிரந்தரப் பெயராகிவிட்டதாகவும் குறிப்பிடுகிறார்.

அரங்கக் கல்லூரி தனது ஆரம்ப நாட்களில் தாசீசியசின் பொறுத்தது போதும், மகாகவியின் கோடை, புதியதொரு வீடு, அம்பலத்தாடிகளின் கந்தன் கருணை, சுந்தரலிங்கத்தின் அபசுரம், மௌனகுருவின் சங்காரம், குழந்தை ம. சண்முகலிங்கத்தின் உறவுகள், வி.எம். குகராஜாவின் அவள் ஏன் கலங்குகிறள், தி.ஏ.சி. ஆனந்தராஜாவின் இருட்டில் குருட்டாட்டம் மற்றும் குருஷேத்திரோபதேசம், பாரதியின் பாஞ்சாலி சபதம் போன்ற நாடகங்களை மேடையேற்றியது. இதில் பொறுத்தது போதும் நாடகம் அகில இலங்கை நாடகப் போட்டியில் முதற்பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கது.

83 கலவரத்தின் பின்னர், பாதுகாப்பு நிலவரங்கள் காரணமாக பாடசாலை நாடகங்கள் பலவற்றை குழந்தை அவர்கள் எழுதினார். பரியோவான் கல்லூரிக்காக எழுதிய ஆச்சி சுட்ட வடை, நரகத்தில் இடர்ப்படோம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்காக மாதொரு பாகம், எங்கள் தவப்பயன், தாயுமாய் நாயுமானார், புழுவாய் மரமாகி, முயலார் முயல்கிறர், பஞ்சவர்ண நரியார், இடுக்கண் வருங்கால் என்பன இவர் எழுதிய நாடகங்களாகும். சிதம்பரநாதன் இந்நாடகங்கள் பலவற்றை நெறியாள்கை செய்திருந்தார்.

1985இல் யாழ். பல்கலைக்கழக கலாச்சாரப் பேரவை பேரவைக்காக இவர் எழுதி, பல்கலைக்கழக மாணவர்கள் நடித்த மண் சுமந்த மேனியர் என்ற நாடகம் குடாநாட்டின் கிராமமெங்கும் மண்டபங்களிலும், வீதிகளிலும் நடாத்தப்பட்டுப் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்நாடகமும், தொடர்ந்து இவர் எழுதிய ஏழு நாடகங்களும் ஈழத்தமிழரின் வரலாற்றை, விடுதலைக்கான வேள்வியில் ஏற்பட்ட அவலங்களை, அடக்குமுறை பற்றி, மக்களின் வாழ்வியல் அனுபவங்களைச் சொல்லியதோடு பல காத்திரமான கேள்விகளையும் எழுப்பின.

குழந்தை அவர்கள் எழுதிய "மண் சுமந்த மேனியர் - 2" ஈழத்தமிழரின் வரலாற்றைச் சற்று ஆழமாகவும், "அன்னை இட்ட தீ" போராட்ட உளவியல் அவலங்களையும், 87இல் நடந்த மாணவ வல்லுறவு சம்பவங்களை "வேள்வித் தீ" நாடகமும், மாதகல், மயிலிட்டி மக்கள் இடம்பெயர்க்கப்பட்ட முதலாவது இடப்பெயர்வை "ஆர்க்கெடுத்துரைப்பேன்", பிள்ளைகளின் புலம் பெயர்வு காரணமாக மண்ணில் பெற்றோர் படும் அவலங்களை "எந்தையும் தாயும்", இராமன் சீதையைத் தீக்குளிக்கக் கேட்டது போல் மக்களையும் கேட்காதீர் என்று அன்றைய அரசியலைக் கேள்விக்குறியாக்கிய "மனத்தவம்", மற்றும் இதன் தொடர்ச்சியாக இவர் எழுதிய "ஆர்கொலோ சதுரர்" என்ற நாடகம் எல்லாவற்றினதும் உச்சமாக, யுத்தத்தால் வெற்றி அல்லது முடிவு என்று ஒன்றுமில்லை, தோற்பது மனிதம் தான் என்பதை பாரதப் போரின் பதினான்காம் நாட் போரை மையப்படுத்தி எழுதியிருந்தார்.

"ஆர்கொலோ சதுரர்" நாடகத்தின் வீடியோ பிரதியைப் பார்க்கும் சந்தர்ப்பம் அண்மையில் எனக்குக் கிட்டியது. நடனங்களும், பாடல்களும் தொகையான நடிகர்களுமாக ஒரு பிரமிக்கத்தக்க தயாரிப்பாக இந்நாடகம் அமைந்தது.

இவரது நாடகங்களில் "கூடி விளையாடு பாப்பா" யாழ். பல்கலைக்கழக கலாச்சார அவை வெளியிட்ட ஆறு நாடகங்கள் என்ற நூலிலும், மேலும் நான்கு நாடகங்கள் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி வெளியிட்ட ஏழு நாடகங்கள் என்ற நூலிலும் பதிவுகளாக உள்ளன. மேலும் இவரது மூன்று நாடகங்கள் சோ. பத்மநாதனால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு "சண்முகலிங்கத்தின் மூன்று நாடகங்கள்" (Three Plays of Shanmugalingam) என்ற தலைப்பில் மான்செஸ்டர் பல்கலைக்களக கலையியல் பேராசிரியர் ஜேம்ஸ் தொம்சன் (James Thompsom) அவர்களின் ஆதரவால் வெளியிடப்பட்டுள்ளது.


இவர் ஈழத்தில் வெளிவந்த பொன்மணி திரைப் படத்தில் முக்கியமான அண்ணன் பாத்திரம் ஏற்று நடித்தது இங்கு நினைவு கொள்ளத்தக்கது. பண்ணை வீதியில் சைக்கிளில் வந்தவாறு உரையாடும் அந்த யதார்த்தமான நடிப்பு இன்றும் என் கண்ணுள் நிற்கிறாது.

தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்கு இணங்க நாடக அரங்கக் கல்லூரிக்கு அப்பால் ஈழத்து தமிழ் நாடகத்துறைக்கு இவர் செய்த முயற்சிகள் அளவிடமுடியாதவை.

யாழ். பல்கலைக் கழகத்தில் "நாடகமும் அரங்கியலும்" கற்கைத்துறை ஏற்படுவதற்கு பேராசிரியர் சிவத்தம்பி அவர்களுடன் இணைந்து உழைத்தது மட்டுமல்லாமல் சில வருடங்கள் அதன் விரிவுரையாளராகவும் பணியாற்றியமை, உயர்தரப் பாடசாலைகள் மற்றும் தேசியக் கல்வியியல் கல்லூரிகளில் "நாடகமும் அரங்கியலும்" என்ற கற்கைநெறியை ஏற்படுத்தியது, வட இலங்கை சங்கீத சபையில் நாடகமும் அரங்கியலும் ஒரு பாடமாக உட்புகுத்தியது போன்றவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லாம்.

நாடகத்துறைக்கு இவர் ஆற்றிய பணிக்காக மட்டக்களப்பு பல்கலைகழகம் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களுக்கு இலக்கிய கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

தமிழில் தரமான நாடகப் பிரதிகள் எழுதப் படுவதில்லை என்ற நெடுநாளைய குறையை நிவர்த்தும் வகையில் காத்திரமான நாடகப் பிரதிகள் பலவற்றை எழுதியும், ஈழ தமிழருக்கென ஒரு புதிய நாடக வடிவத்தை உருவாக்கியும், அதன் பல மேடையேற்றங்களைச் செய்தும், அரங்கவியல் என்பதை ஒரு கற்பித்தலுக்குரிய நெறியாக்கியும் நாடக உலகுக்குப் புதுமை சேர்த்த ஈழத்து தமிழ் நாடக எழு ஞாயிறு கலாநிதி ம.சண்முகலிங்கம் அவர்களை நீடு வாழ வாழ்த்துகின்றோம்.



sriskandan@thaiveedu.com

இணையத்தளத்திலும் 'தாய்வீடு'
www.thaiveedu.com

# குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி



**RESP SPECIAL!**

இம்மாதம் RESP செய்பவர்களுக்கு
3 விசேட சலுகைகள் உண்டு!
- Start from $25

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
RBC Insurance
Canada Life
Manulife Financial

தனா
மாணிக்கவாசகர்
*Broker*

**Life Insurance**

**Critical Illness Insurance**

Home Equity Line of Credit

**Disability Insurance**

**Mortgage Insurance**



RRSP - Start from $25
Loan approval within 24hrs - Bad credit no problem
RESP - Start from $25
(20%-40% Government Grant + 15% Company Bonus)

INSURANCE SERVICE INC.
Cell: 416-728-5772
Business: 416-290-1200

# THINKING OF BUYING OR SELLING

FOR SALE




3+1 Bedrooms, 3 washrooms

FOR SALE




4+1 Bedrooms, 4 washrooms

FOR SALE




3+1 Bedrooms, 2 washrooms

NEILSON & MCLEVIN




3+1 Bedrooms, 2 washrooms

MEADOWVALE & SHEPPARD




3+1 Bedrooms, 4 washrooms

NEILSON & MCLEVIN




2 Bedrooms, 2 washrooms

MONARCH & WESTNEY




3 Bedrooms, 2 washrooms


Also Contact in Regards to Investing in Newly Built
HOMES - CONDOS COMMERCIAL



**Raja V.S. Rajagopal**
Sales Representative
Dir : 416.727.8647
Email : sinnahrajagopal@gmail.com
www.sinnarajagopal.com

HomeLife/Future Realty Inc.,
Brokerage*
205-7 Eastvale Drive, Markham Road, Ontario L3S 4N8
B: 905.201.9977 F: 905.201.9229


*Independently Owned and Operated, REALTOR


மனம் விரும்பியது போல்
வீடு வாங்க, விற்க அழையுங்கள்
Gore/Ebenezer
For Sale
$399,900
Semi- Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
Warden/407
For Sale
$299,900
Condo Apt., 1+1 Bedrooms, 2 Washrooms
Veterans/Touchette (Barrie)
Sold
$279,000
Detached 2-Storey, 3 Bedrooms, 4 Washrooms
The Gore/Ebenezer
Sold
$699,900
Detached 2-Storey, 4 Bedrooms, 4 Washrooms
The Gore/Ebenezer
Sold
$535,000
Detached Bungalow
The Gore Rd/Ebenezer
Sold
$397,000
Semi-Detached 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
The Gore Rd/ Hwy 7
Sold
$1,100,000
Detached 2- Storey, 4+2 Bedrooms, 5 Washrooms
Brisdale/Sandalwood
Sold
$370,000
Detached 2-Storey
Bovaird/Worthington
Sold
$428,000
Detached 2-Storey
Cottrelle /Gore
Sold
$469,000
Detached 2-Storey
The Gore/Ebenezer
Sold
$680,000
Detached 2-Storey
Bellamy / Lawrence
Sold
$358,000
Detached Bungalow, 3+2 Bedrooms, 3 Washrooms
Markham Rd/14th Ave
Sold
$393,000
Link 2-Storey, 3 Bedrooms, 3 Washrooms
Markham/14th Ave
Sold
$421,000
Link 2 Storey, 3+2 Bedrooms, 4 Washrooms
Hwy 10/Bovaird
Sold
$272,750
Semi-Detached 2 Storey
Vankirk / Mayfield
Sold
$363,500
Detached 2-Storey
நல்ல நிலையில் இயங்கிவரும்
Banquet Hall விற்பனைக்குண்டு.
Please call for more details.
Call before you list,
See the Difference!!!
TOP PRODUCER - 2009
Top 5% Sales Person in Canada 2009
Ruby Thambiah
Sales Representative
Dir: 416-999-5337
Tel: 905-201-9977
Fax: 905-201-9229
rubysri@hotmail.com
www.buyandsellwithruby.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future
Realty Inc. Brokerage
Independently Owned and Operated
205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8

## ஆழத்து முத்துகள் 29

# 'நாடகச்செல்வர்' எஸ்.ரி. அரசு

ஈழத்து தமிழ் மேடை நாடக வரலாறானது காலத்திற்கு காலம் பல கலைஞர்களால் செதுக்கி எடுக்கப்பட்டு ஒரு உயர்ந்த கலை வடிவமாக வளர்ந்து வந்துள்ளது. அவ்வாறான



ஒரு கலைஞராக நாற்பதுகளின் பின் புதுமையான கண்ணோட்டத்துடன் செதுக்கிய சிற்பிகளில் ஒருவராக திகழும் திரு.எஸ்.ரி.அரசு எனப்படும் "அரசையா" அவர்களின் பதிவாக இன்றைய கலைஞர் பகுதி அமைகிறது.

1948ஆம் ஆண்டு "தூக்குமேடை" என்ற நாடகம் மூலம் ஒரு நடிகனாக அறிமுகமாகி இதுவரையில் ஏறத்தாள எழுபத்தி ஐந்து நாடகங்களுக்கு மேலான நாடகங்களில் தனது நடிப்புத்திறனை வெளிப்படுத்தியுள்ள அரசையா அவர்கள் நடிகனாக மட்டுமல்லாது நெறியாளனாக, ஒப்பனைக் கலைஞனாக, ஒரு புகைப்படக் கலைஞனாக, சிற்பக் கலைஞனாக, வில்லுப்பாட்டுக் கலைஞனாக என பல்முக கலைஞனாக மிளிர்கிறார்.

1961ஆம் ஆண்டு இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது எல்லோரும் சிதறியோடிய போதும் இவர்மட்டும் தனி மனிதனாக இராணுவ வாகனத்தின் முன் நிமிர்ந்து கிடந்தது தமிழர் நெஞ்சுறுதியை இந்த மண்ணில் பதிய வைத்த மாமனிதர்.

ஒரு மாமனிதராக சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நாடகவியலாளர் அரசையா (எஸ். திருநாவுக்கரசு) அவர்கள் யாழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாக கொண்டவர். பரம்பரை வைத்திய தொழில் படிப்போடு தனது ஆரம்பக் கல்வியை யாழ்/சென்ஜோன்ஸ் கல்லூரியில் மேற்கொண்டார். சிற்பத் துறையில் இருந்த நாட்டம் காரணமாக தென்னிந்தியா சென்று அக்கலையை பயின்றார். அக்காலகட்டம் இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தமையினால் நாலுவருட கட்டாய ராணுவ சேவையில் ஈடுபட்ட பின் நாடு திரும்பினார்.

இவர் தென்னிந்தியாவில் தங்கியிருந்த காலத்தில் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் புரட்சிகர கருத்துக்களால் கவரப்பட்டு அதன்பால் யாழ்ப்பாணம் திரும்பிய பின்னர் சில நண்பர்களுடன் இணைந்து ஒரு இளைஞர் கழகத்தை ஆரம்பித்து தமிழ் நாட்டில் அறிஞர் அண்ணா, கருணாநிதி ஆகியோர் எழுதிய புரட்சிகர நாடகங்களை யாழ்ப்பாணத்தில் நடித்து மேடையேற்றினார். "அடங்காப்பிடாரி" புகழ் வி.சி.பரமானந்தத்துடன் அரசையாவின் நாடகப் பணிகள் ஆரம்பித்தன. இவர் இயக்கிய, அரச, வரலாற்று நாடகங்களில் 'திப்புசுல்தான்', 'தமிழன் கதை', 'வீரமைந்தன்', 'வீரத்தாய்', குறிப்பிட்டு கூறக் கூடியவை.

> "ஒரு சுதந்திர நிலையில் உள்ள கலைப் படைப்புக்களை ஒரு கலைஞனால் வெளிப் படுத்தப்படும்போதுதான் அது ஒரு உண்மையான எண்ணப்படைப்புகளாகின்றன. கூலிக்கு மாரடிக்கின்ற மாதிரி மற்றவர்களுக்கு பயந்துசெய்கின்ற கலைகள் ஒரு நாளும் முழுமையான கலையாக வராது. அத்தோடு மக்களின் தேவைகளை உணர்வுகளை அறிந்து கலைகளை படைக்க வேண்டும். நாடகம் ஒன்றும் இதற்கு விதிவிலக்கல்ல."
>
> - அரசையா

கலையரசு சொர்ணலிங்கம் தயாரித்த 'தேரோட்டி மகனில்' அருச்சுனனாகவும், 'கோவலன்' நாடகத்தில் கோவலனாகவும் நடித்துப் புகழ் பெற்றவர். சொக்கனின் 'கவரி வீசிய காவலன்', 'ஞானக்கவிஞன்', 'தெய்வப் பாவை', 'கூப்பியகரங்கள்', பண்டிதர் சு.வேலுப் பிள்ளையின்(சு.வே.) 'வீரசிவாஜி', 'சைலாக்', 'ஒத்தொல்லோ' போன்ற நாடகங்களையும் மற்றும் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'வையத்துள் தெய்வம்', 'பாஞ்சாலி சபதம்' ஆகியவற்றையும் இயக்கி தனது முத்திரையை பதித்தவர்.

எழுபதுகளில் அரசாங்கத்தால் நாடகத்துறையில் டிப்ளோமா பயிற்சிநெறி ஆரப்பிக்கப் பட்ட பொழுது அதனைக் கற்பதற்கு ஆர்வம் கொண்டு, அவ் டிப்ளோமா பயிற்சிநெறியினை முடித்தவர்களாகிய காரை.சுந்தரம்பிள்ளை, கவிஞர். வி.கந்தவனம், தார்சீசியஸ், நா.சுந்தரலிங்கம், சிவானந்தன், வள்ளிநாயகி



ராமலிங்கம் போன்றவர்களை இணைத்து இவர்களுடன் குழந்தை ம.சண்முகலிங்கம், பிரான்ஸிஸ் ஜெனம் ஆகியவர்களுடன் இணைந்து யாழ் நாடக அரங்கக் கல்லூரி எனும் அமைப்பை உருவாக்கிய முன்னோடிகளில் ஒருவராக இன்றும் அந்த மண்ணில் வாழ்ந்து வருகின்றார். இவ்வாறு நவீன நாடக இயக்கத்துடன் இணைந்து குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'எந்தையும் தாயும்' நாடகத்தில் ஐயாத்துரை எனும் பாத்திரம் ஏற்று சிறப்புற நடித்தவர். இந்நாடகம், யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் தமிழக நகரங்களில் மேடையேற்றப் பட்டு பெரும் வரவேற்பை பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழத்து நாடக வரலாற்றில் குறிப்பிட்டு கூறக் கூடிய 'பொறுத்ததுபோதும்', 'புதியதோர் வீடு', 'எந்தையும் தாயும்' போன்ற நாடகங்களை தமிழக மேடைகளில் மேடையேற்றிய போது - ஈழத்தில் நாடகத் துறை இவ்வளவு வளர்ந்துள்ளதா என தமிழக அறிஞர்கள் தமது வியப்பை வெளிக்காட்டினர்" என தனது தமிழக கலைப்பயணம் தொடர்பான பதிவுக் குறிப்பில் அரசையா தெரிவித்துள்ளார்.

எப்பொழுதுமே நெற்றியில் விபூதிப் பூச்சு, தனது உள்ளம் போலவே வெள்ளை நிற நஷனல் வேட்டி, முறுக்கிய மீசை, திடகாத்திரமான உடல், எதையும் கூர்ந்து பார்க்கும் கண்கள், கம்பீரமான குரல் என்பனவே அவரது நடிப்புத்திறனுக்கு இன்னும் அணிசெய்பவையாக அமைந்து விடுகிறது. அவருடைய பேச்சிலும் சரி சிரிப்பிலும் சரி மற்றவர்களை கவரும் ஈர்ப்பு எப்பொழுதுமே கலந்திருக்கும்.

ஒரு நாடக கலைஞனாக மட்டுமல்லாது, தொழில்ரீதியாக ஒளிப்படவியல் கலைஞராகவும் வாழ்ந்த அரசையா சிற்பம் செய்யும் ஆற்றலையும் வெளிப்படுத்தியுள்ளார். தியாகி சிவகுமாரன், பருத்தித்துறை புற்றளை கந்த முருகேசனார், சதாவதானி புலோலியூர் கதிரவேற்பிள்ளை ஆகியோரது சிலைகளை உருவாக்க தனது மருகர் ரமணி, மற்றும் அன்ரன் மாஸ்டர் ஆகியோருடன் இணைந்து பணியாற்றியும் உள்ளார். இவரது இவ்விரு கலைத்திறமையும் நாடகத்துறையில் பாத்திரங்களை உருவாக்குவதிலும் ஒப்பனை செய்வதிலும் கைகொடுத்தன.

நடிப்புத்துறையில் மேடை நாடகத்துடன் மட்டும் நின்றுவிடாது 'குத்து விளக்கு', 'டாக்சி டிரைவர்', 'நிர்மலா' போன்ற ஈழத்து சினிமா படங்களில் நடித்ததோடு, 'கடமையின் எல்லை' எனும் படத்தில் உதவி நெறியாளராகவும் தனது கலைப்பயணத்தை பதிவு செய்துள்ளார். அத்தோடு திருப்பூங்குடி ஆறுமுகம், கலாவிநோதன் சின்னமணி கணபதிப்பிள்ளை ஆகியோருடன் இணைந்து வில்லிசை கலைஞராகவும் மிளிர்ந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகளில் மேடை நாடக வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ள இவர் தனது இளமை காலங்களில் பல பாடசாலை மட்ட நாடகங்களை இயக்கியுள்ளார். அரசையா அவர்கள் இடப்பெயர்வு காலங்களில் வவுனியாவில் தங்கியிருந்து - வவுனியா வளாகம், தேசிய கல்வியியல் கல்லூரி, மற்றும் பாடசாலைகள் பலவிட்கு தனது தன்னலம் பாராத சேவையினை வழங்கியுள்ளார். அத்தோடு கான்பர எனப்படும் சிறுவர் பாடசாலையில் 'சிறுவர் நாடகம்' தொடர்பான பயிற்சிப்பட்டறையினை தொடர்ந்து ஆறு மாதங்கள் வழங்கியுள்ளார். வவுனியா திருமறைக்கலா மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நாடகப் பயிற்சிப் பட்டறையினை அவரது நாடக வழி நண்பனாகிய திரு. பிரான்சிஸ் ஜெனத்துடன் இணைந்து வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

இன்று நான்கு தலைமுறைகளுக்கு நாடகப் பயிற்சியினை வழங்கி பல கலைஞர்களை உருவாக்கிய பெருமை அந்த மகோன்னத மனிதரை சேரும். அப்படிப்பட்ட ஒரு கலைஞ-

**- சேகர் தம்பிராஜா -**

னிடம் நானும் நாடகம் பயிற்ச்சியினை பெற்றேன் என்பதில் பெருமையும் மன நிறைவு மடைகின்றேன்.

நல்லூர் காமாட்சி நாடக மன்றம், அரியாலை சரஸ்வதி வாசிகசாலை, வட இலங்கை நாடக மன்றம், வண்ணைக் கலைவாணர் நாடக மன்றம், அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம், யாழ்/ஓரியன்ஸ் கிளப், மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றம், நாடக அரங்க கல்லூரி, தேசிய கலை இலக்கிய பேரவை, அரங்க செயற்பாட்டுக் குழு மற்றும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், மற்றும் இன்னும் பல இலக்கிய அமைப்புக்களுடன் இணைந்து தனது கலைப் சேவையாற்றி, இன்றும் சில அமைப்பில் தொடர்ந்து வருகிறார்.

குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களுடன் இணைந்து இன்றும் நாடக பயிற்சிகள் அளித்துவரும் அரசையா அவர்கள் மூன்று வருடங்களுக்கு முன்னர் யாழ் பல்கலைக் கழகத்தில் மேடையேற்றப்பட்ட 'காளிதாசன்' அவர்களின் 'அபிக் ஞான சகுந்தலம்' எனும் நாடகம் ஜுன் மாதம் 28 ஆம் திகதி யாழ் கல்வித்திணைக்கள அரங்கில் பராக்கிரம கிரியல்ல என்பவரின் நாடகக் குழுவின் அளிக்கை நிகழ்வில் மீண்டும் மேடையேறியது என்பதனைப் பகிர்ந்துகொண்ட அதேவேளை தற்பொழுது பல்கலைக்கழகத்தில் மேடை நாடகத்தின் வளர்ச்சியில் சற்று சரிவு காணப்படுவதாகவும் தனது கவலையை வெளிப்படுத்தினார். மேற்படி நிகழ்வில் "மக்கள் களறி விருது" என்னும் கௌரவமும் பெற்ற அரசையா அவர்கள் மேலும் பல அமைப்புகளின் கௌரவங்கள் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



sekar.thambyrajah@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

**இணையத்தளத்திலும் 'தாய்வீடு'**

**www.thaiveedu.com**

# ஆயுட் காப்புறுதி...

மனிதனின் வாழ்வில் தவிர்க்க முடியாத சில சம்பவங்களில் ஒன்று மரணம். மரணம் ஏற்படுவதை எங்களால் தவிர்க்க முடியாது. ஆனால் ஒருவரின் எதிர்பாராத மரணத்தால் ஏற்படும் பொருளாதாரப் பாதிப்பை அல்லது வருமான இழப்பை தவிர்ப்பதற்கு ஆயுட்காப்புறுதியைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் ஒருவருக்கு கொடிய நோய்கள் ஏற்பட்டால் அல்லது விபத்துக்கள் ஏற்பட்டு வேலை செய்ய முடியாத நிலை ஏற்படும் போதும் வருமான இழப்பு நேரிடும். இப்படிப் பட்ட சம்பவங்களால் ஏற்படும் வருமான இழப்பைத் தவிர்ப்பதற்கு காப்புறுதித் திட்டங்கள் மிகவும் உகந்தவை.

இவற்றில் மிக முக்கியமானது ஆயுட் காப்புறுதி யாகும். ஒருவரின் வருமானத்தில் ஒரு குடும்பம் தங்கி இருந்தால். அவர் இறந்தவுடன் அவர்களுக்கு தொடர்ந்து வாழ்வதற்கு தேவையான வருமானத்தை போதிய அளவு ஆயுட்காப்புறுதி செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆயுட் காப்புறுதி பெற்றுக் கொள்ளும் போது ஒருவரின் வருமான இழப்பை பாதுகாப்பாது முக்கியமானது. அத்துடன் அவருக்கு உள்ள கடன் தொகைகளையும் பாதுகாக்க வேண்டும். ஒருவரின் வருடாந்த வருமானத்தைப் பொறுத்தும். அவரது தற்போதய வயதைப் பொறுத்தும் அவருக்கு எவ்வளவு காப்புறுதித் தொகை தேவை என்பதை அறியமுடியும். ஆகக்குறைந்தது ஒருவரின் வருட வருமானத்தின் 10 மடங்கு தொகையாவது ஆயுட் காப்புறுதியாக இருக்க வேண்டும்.

அத்துடன் ஒருவருக்கு வீட்டுக் கடன் அல்லது வேறு கடன் தொகைகள் இருந்தால் அந்தத் தொகைக்கும் அதிகமாக ஆயுட் காப்புறுதியை பெற்றுக் கொள்வது சிறந்ததாகும்.

ஆயுட் காப்புறுதி ஒவ்வொருவரின் நிதித் திட்டமிடலுக்கு அத்திவாரமானதாகும். அதன் பின்பு ஒவ்வொருவரின் பொருளாதார வசதிக்கு ஏற்றவாறு ஏனையதிட்டங்களை பெற்றுக் கொள்வது சிறந்தது. உதாரணமாக புதிய நோய்களுக்கான காப்புறுதி, வலு இழந்தவருக்கான காப்புறுதி மற்றும் முதலீட்டுடனான சேமிப்புத்திட்டங்கள் என்பனவாகும்.

### ஆயுட் காப்புறுதித் திட்டத்தை ஒரு நிறுவனத்தில் இருந்து வேறு ஒரு நிறுவனத்திற்கு மாற்றம் செய்யும் போது கவனிக்க வேண்டியவை.

நீங்கள் ஆயுட்காப்புறுதித் திட்டம் ஒன்றை ஏற்கனவே வைத்திருந்தால் அது சரியானதா என்பதையும். உங்கள் தற்போதய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய திட்டமா என்பதையும் அடிக்கடி பரிசீலனை செய்வது அவசியம். காரணம் நீங்கள் காப்புறுதித் திட்டத்தை பெறும் போது இருந்த பொருளாதார தேவைகள் மற்றும் உங்கள் நிதி நிலைமைகள் காலத்துக்குக் காலம் மாறுபடுவதால் உங்கள் காப்புறுதித் திட்டம் அதற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

உதாரணமாக கனடாவிற்கு குடியேறிய ஒருவர் தனிமனிதராக இருக்கும் போது பெற்றுக் கொண்ட காப்புறுதித் திட்டம். அவரது அன்றய தேவைகளையும் வசதிகளையும் அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட திட்டமாக இருக்கும் சாதரணமா எம்மில் பலர் $100,000 டொலர் பெறுமதியான காப்புறுதித் திட்டம் வைத்திருப்பது வழக்கம். ஆனால் அதே நபர் இப்போது திருமணமாகி குழந்தைகள், சொந்தமான வீடு வசதிகளுடன் இருக்கும் போது. அவர் அப்போது பெற்ற காப்புறுதித் திட்டம் அவரது இன்றய தேவைகளை பூர்த்தி செய்ய போதுமானதாக இருக்க முடியாது. எனவே அவர் அந்தத் திட்டத்தை பரிசீலனை செய்து அந்த காப்புறுதி முகவருடன் தொடர்பு கொண்டு காப்புறுதித் தொகையை அதிகரிக்க வேண்டும்.

காப்புறுதித் திட்டம் ஒன்றைப் பரிசீலனை செய்து, எது சரியான திட்டம் என்பதை அறிந்து கொள்வதற்கு நீங்கள் காப்புறுதி முகவர் ஒருவரிடம் தொடர்பு கொள்ளலாம். காரணம் காப்புறுதித் திட்டத்தில் எழுதப்பட்டிருக்கும் சில வார்த்தைகள் எல்லோரும் விளங்கக்கூடிய அளவிற்கு தெளிவாக இருப்பதில்லை.

> “காப்புறுதித் திட்டத்தை பெறும் போது இருந்த பொருளாதார தேவைகள் காலத்துக்குக் காலம் மாறுபடுவதால், உங்கள் காப்புறுதித் திட்டம் அதற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கப்பட வேண்டும்.”

### காப்புறுதித் திட்ட பத்திரத்தில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள்:

எல்லாக் காப்புறுதித் திட்டங்களும் முதலாவது பக்கத்தில் உங்கள் பெயர், வயது அல்லது பிறந்த திகதி உங்கள் காப்புறுதியின் பலன் பெறுபவரின் பெயர், காப்புறுதியின் தொகை, மாதாந்தக் கட்டுப்பணம். அத்துடன் உங்கள் காப்புறுதி பெறப்பட்ட திகதி போன்றவை காணப்படும்.

### பலன் பெறுபவரின் பெயர்:

பலன் பெறுபவரின் பெயர் சரியாக உள்ளதா என்பதன் காரணம், நீங்கள் திருமணமாவதற்கு முன்பு காப்புறுதி பெற்றிருந்தால் அதில் பலன் பெறுபவராக உங்கள் தாய், தந்தையர் அல்லது சகோதரர்கள், நண்பர்களின் பெயரைப் பதிவு செய்திருந்திருக்கலாம். திருமணத்திற்கு பின்பு உங்கள் மனைவி அல்லது கணவனின் பெயரை பலன் பெறுபவராக மாற்றலாம். அத்துடன் உங்களுக்கு குழந்தைகள் பிறந்தால் அவர்களின் பெயரை சேர்த்துக் கொள்ளலாம். இந்த மாற்றங்கள் தொலைபேசி மூலம் செய்யமுடியாது. அதற்கான பத்திரங்கள் பூர்த்தி செய்யப்பட்டு காப்புறுதி உரிமையாளர் கையொப்பம் இட்டால் மட்டுமே மாற்ற முடியும்.

### மாதாந்தக் கட்டணம்:

மாதாந்தக் கட்டணம் எந்த முறையில் அமைக்கப் பட்டுள்ளது என்பனையும் கவனிக்க வேண்டும். உதாரணமாக மாதாந்த கட்டுப் பணம் ஒரே அளவாக இருக்கும் ஆயுட்காலம் முழுவதுக்குமான காப்புறுதித் திட்டம் (Whole Life), அல்லது ஒவ்வொரு வருடமும் மாதாந்த கட்டுப்பணம் அதிகரித்துச் செல்லும் (YRT) திட்டம் அல்லது முதலீட்டுடன் கூடிய நிலை யான மாதாந்த கட்டுப்பணம் உள்ள (Level Cost) திட்டம்.

### YRT:

YRT – (Yearly Renewable Term) என அழைக்கப்படும் திட்டத்தில் வருடாவருடம் காப்புறுதிக் கட்டுப்பணம் அதிகரிக்கும். இவற்றை விட சில நிறுவனங்கள் வழங்கும் தவணைக் காப்புறுதித் திட்டம் Cost of Insurance – Increasing எனக் குறிப்பிடப்பட்டிருந்தால் அதற்கான மாதாந்தக் கட்டுப்பணம் குறிப்பிட்ட காலத்துக்கு பின்னர் அதிகரிக்கும் அதாவது ஒவ்வொரு வருடமும் அதிகரித்துக் கொண்டு செல்லும்.

### Decreasing Benefit:

Decreasing Benefit எனப்படும் திட்டம் குறிப்பிட்ட காலத்திற்கு பின்பு காப்புறுதித் தொகை, அதாவது உங்களுக்கு கிடைக்கும் பணத் தொகை காலத்துக்கு காலம் குறைந்து கொண்டு செல்லும். இப்படியான திட்டங்கள் ஆரம்பத்தில் நீங்கள் காப்புறுதி செய்த தொகை இறக்கும் போது பெற்று கொள்ள முடியாது.

இப்படியான திட்டங்களை இலகுவாக பரிசீலனை செய்ய முடியாவிட்டால் நீங்கள் காப்புறுதி முகவர் ஒருவரின் உதவி பெற்றுக் கொள்வது சாலச் சிறந்தது.

நீங்கள் ஆயுட்காப்புறுதி பெற்றுக்கொள்வதற்கு சேவையாற்றிய முகவர், தொடர்ந்து அந்நிறுவனத்துடன் வேலை செய்யாவிட்டால், அதேவேளை நீங்கள் அந்த நிறுவனத்துடன் தொடர்பு கொண்டால் வேறு ஒரு முகவரை நியமிப்பார்கள். அல்லது எல்லா நிறுவனங்களுடன் தொழில்புரியும் ஒரு முகவருடன் நீங்கள் தொடர்பு கொள்வதன் மூலம் உங்கள் காப்புறுதித் திட்டம் சரியானதா என்பதை பரிசீலனை செய்து கொள்ளலாம்.

முகவர்கள் உங்கள் திட்டங்களை மாற்றம் செய்யும் போது உங்கள் புதிய திட்டத்துக்கும் பழைய திட்டத்துக்கும் உள்ள வேறுபாடுகளை நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -



எந்தக்காலகட்டத்திலும் புதிய காப்புறுதித் திட்டம் உங்கள் கையில் கிடைக்கும் வரை பழைய காப்புறுதித் திட்டத்தை இரத்துச் செய்யக்கூடாது. காரணம் உங்கள் வயது அதிகரித்திருந்தால் அல்லது உடல் ஆரோக்கியம், குறைந்திருந்தால், அல்லது நோய்கள் ஏற்பட்டிருந்தால் புதிய காப்புறுதி பெறுவது கடினமாக இருக்கும். அத்துடன், புதிய காப்புறுதித் திட்டம் பெறும்போது பழைய காப்புறுதித் திட்டத்திற்கும் புதிய காப்புறுதித் திட்டத்திற்கும் உள்ள வேறுபாடுகளை ஒப்பீடு செய்வதற்கான பத்திரம் ஒன்று பூர்த்தி செய்யப்பட்டு நீங்கள் கையொப்பம் இட்டபின்பு தான் புதிய காப்புறுதி பெற்றுக்கொள்ள வேண்டும். இப்பத்திரத்தின் பிரதி முதலில் உள்ள காப்புறுதி திட்ட முகவருக்கும் அந்த நிறுவனத்திற்கும் கிடைக்கும்.

எனவே ஒரு புதிய திட்டத்தை பெறும் போது பழைய முகவர், புதிய முகவர் இருவரினதும் ஆலோசனையை பெற்றுக் கொள்வதுடன் எது சரியானது என்பதையும் அறிந்து கொள்ள முடியும்.

எனவே ஒரு திட்டத்தை மாற்றி புதிய திட்டம் ஒன்றைப் பெறும்போது உங்களுக்கு எது சிறந்த திட்டம் என்பதை நன்றாக ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும்.

உங்களுக்கு யாராவது தொலைபேசியில் அழைத்து உங்களிடம் உள்ள திட்டம் தவறானது என்று சென்னால் அதற்கு தகுந்த முறையில் ஆலோசனை பெற்ற பின்பு மாற்றங்கள் செய்வது சிறந்தது.

உங்களிடம் இருக்கும் ஒரு காப்புறுதித் திட்டத்தை அதே நிறுவனத்தில் மாற்றம் செய்தால் உங்களுக்கு பல நன்மைகள் உண்டு. புதிய நிறுவனத்தில் புதிதாக ஒரு காப்புறுதி செய்யும் போது பழைய திட்டத்திற்கும் புதிய திட்டத்திற்கும் எதுவித தொடர்பும் இல்லை. நீங்கள் இருக்கும் திட்டத்தை இரத்து செய்துவிட்டு புதிதாக ஒரு திட்டம் பெற்றுக் கொள்வதாகவே இருக்கும்.

அண்மையில் சந்தித்த பலர், அவர்களிடம் இருந்த பல காலங்களுக்கு முன்பு பெற்ற சிறந்த காப்புறுதித்திட்டங்களை ரத்து செய்து புதிய காப்புறுதித்திட்டங்களை பெற்றுக்கொள்வதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அவர்களிடம் அது பற்றி கேட்டபோது அவர்கள் தங்கள் திட்டத்தை தங்கள் காப்புறுதி முகவர்தான் மாற்றித்தந்தார் என்று கூறினார்கள். உண்மையில் பலரிடம் எதுவும் மாற்றப்பட வில்லை. பழைய காப்புறுதியை ரத்து செய்து விட்டு புதிய திட்டம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதனால் முகவர் மட்டுமே இலாபமடைகின்றார்.

எனவே உங்களிடம் இருக்கும் காப்புறுதித் திட்டம் உங்களுக்கு உகந்தது இல்லை என்று நன்கு அறிந்த பின்பு, புதிய திட்டத்தை பெற்றுக் கொள்வது சிறந்தது.

sritharan.t@thaiveedu.com

■ ■ ■

இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

• நிரந்தர ஆயுட் காப்புறுதி
• கொடிய நோய்களுக்கான காப்புறுதி
• ஈட்டுக்கடன் காப்புறுதி
• வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி
• RRSP • RESP

சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர்
Member of Million Dollar Round Table | MDRT The Premier Association of Financial Professionals®
416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407
info@life100.ca



RBC Insurance
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Unity Life of Canada
Canada Life™

# உங்கள் அன்புக்குரியவருக்காக இன்றே செயற்படுங்கள்

**குறைந்த கட்டணத்தில் ஆயுட்காப்புறுதியும் கொடிய நோய்களுக்கான காப்புறுதியும்**

தாமதித்தால் மாதாந்தக்கட்டணம் அதிகரிக்கலாம்

- வயோதிபர்களுக்கான காப்புறுதி - **Non Medical Insurance**
  85 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் மருத்துவ பரிசோதனை வேண்டியதில்லை
- கொடிய நோய்களுக்கான காப்புறுதி - **Critical Illness Insurance**
  கொடிய நோய்கள் ஏற்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி

## "மில்லியன் டொலர் பெறுமதியான இலவச ஆலோசனை"

உங்களுக்குத் தேவையான அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கும், சேமிப்புத் திட்டங்களுக்கும்

**முதல்தர சேவையை**

**முதல்தர காப்புறுதி ஆலோசகரிடமிருந்து**

பெற்றுக்கொள்ளுங்கள்

- $ 200,000 வரை மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- ஆயுட்காலம் வரை மாதாந்தக் கட்டணத்தில் மாற்றமில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

### Critical Illness Insurance

25விதமான கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2மில்லியன் வரை பெறக்கூடிய காப்புறுதித் திட்டம் நோய் ஏற்படாவிடில் கட்டியபணம் முழுவதும் மீளப்பெறமுடியும்

### Universal Life Insurance

ஆயுட்காலம் வரை நீடிக்கும் நிரந்தர ஆயுட்காப்புறுதி

### RESP

குழந்தைகளின் உயர்கல்விக்கான சேமிப்புத்திட்டம்
20-40 வீதமான அரச மானியத்துடன்
15 வீத போனஸ்

### Mortgage Insurance

அடமானக் கடனுக்கான காப்புறுதி வங்கியில் பெற்றுக்கொள்வதை விட ஆயுட்காப்புறுதி நிறுவனத்தில் பெற்றுக் கொள்வது சிறந்தது. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

**TOPGUN AWARD WINNER 2008, 2009, MDRT QUALIFIER 2007, 2008, 2009**

## சிறீதரன் துரைராஜா

MDRT Member of Million Dollar Round Table

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407



Assumption Life · IA Industrial Alliance Insurance and Financial Services Inc. · Unity Life of Canada · Canada Life · RBC Financial Group · LiLand Insurance Inc.

இறுக்கமான சூழலில் ஓர் இலகுவான தீர்வு



















இம்மாதப் புகைப்படக் கலைஞர்

**அ. கணபதிப்பிள்ளை**

மார்க்கம் பகுதியில் வசிக்கும் எழுத்தாளரான இவர் தனது விடுமுறைப் பொழுதில் எடுத்த படங்களுள் சில...

**உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா? அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

